மொழியியல்

ரா. சீனிவாசன், எம். ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1.

ரூ. 5=00

முதற் பதிப்பு : 1960
உரிமை ஆசிரியர்க்கு

ஆசிரியரின் பிற நூல்கள் :

கதை :

தங்கம்

வழுக்கு நிலம்

இலக்கியம் :

அணியும் மணியும்

காக்ஸ்டன் அச்சகம், சென்னை-1.

T. 3071

முன்னுரை

மொழிக்கலை இப்பொழுது வளரும் கலையாக உள்ளது. புதிய புதிய கலைச் சொற்கள் அமைந்து மொழியியலை ஆராயும் நூல்கள் பல ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. அவை பொதுவாக ஆங்கில எடுத்துக்காட்டுகளோடு விளங்கி அம் மொழியின் இயலை எடுத்துக்காட்டுகின்றன.

மொழியியல் அடிப்படைகளைக் கொண்டு தமிழ் மொழியின் இயலை ஆராயும் நூலாக இதனை அமைக்க முயன்றுள்ளேன். புதிய கருத்துக்களோடு மொழியிலக்கணத்தைத் தொடர்புபடுத்தித் தமிழ் மொழியின் ஒலியமைப்பு சொல்லமைப்பு தொடரியல் முதலிய அமைப்புகளையும், மொழி பொருள் உணர்த்துமாற்றையும், திசை வழக்குகளையும் இந்நூல் ஓரளவு விளக்க முயல்கிறது.

சிறப்புத் தமிழ் பயிலும் எம். ஏ. மாணவர்களுக்கு மொழியியல் பயில்விக்கும் வாய்ப்பும் பேறும் யான் பணியாற்றிவரும் பச்சையப்பன் கல்லூரியில் எனக்கு வாய்த்தமையால் அம் மாணவர்க்கு மொழியியலைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழ் மொழியின் இயலைத் தெளிவாக அறியவேண்டும் என்ற ஆர்வமும் மாணவர்க்கு அதனைத் தெளிவுறுத்த வேண்டும் என்ற விருப்பும் இந்நூல் எழுதக் காரணமாக இருந்தன.

ரா. சீனிவாசன்.

உள்ளுறை

மொழியும் மொழியியலும்	—	5
மொழி ஒலிகள்	—	13
ஒலியன்கள்	—	44
மொழி மரபு	—	61
ஒலி மாறுதல்கள்	—	75
பொருளசைகள்	—	89
சொல்லியல்	—	104
பெயர்ச்சொல்	—	113
திணைபால் அமைப்பு	—	123
மூவிடப் பெயர்	—	139
சுட்டுவினா முதலியன	—	154
எண்ணுப் பெயர்கள்	—	167
வினைச்சொல்	—	175
வினை அமைப்பு	—	180
காலம் காட்டல்	—	187
தன்வினை, பிறவினை, இயக்குவினை	—	200
வினைப் பொருள்கள்	—	205
குறிப்பு வினை	—	210
எதிர்மறை வினை	—	218
செயப்பாட்டு வினை	—	222
ஒலிக்குறிப்புச் சொற்கள்	—	228
தொடரியல்	—	232
எழுவாய்த் தொடர்	—	242
பெயரடையும் வினையடையும்	—	248
வேற்றுமைத் தொடர்	—	257
பொருளியல்	—	271
திசை வழக்குகள்	—	283
பிறமொழிச் சொற்கள்	—	294

மொழியும் மொழியியலும்

கருத்தின் அறிகுறியே மொழி

மொழி என்பது வாயால் மொழியப்படும் ஒலியின் ஈட்டத்தையே குறிக்கும். இவ்வொலிகள் ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட அமைப்பைக் கொண்டு கருத்துக்கு அறிகுறிகளாக விளங்குகின்றன.*

அடையாளம் வேறு அறிகுறி வேறு

மொழி கருத்தின் அறிகுறி என்று கூறப்பட்டது. அறிகுறி (*symbol*) வேறு; அடையாளம் (*signal*) வேறு. சைகை, முகக்குறிப்பு முதலியன வெறும் அடையாளங்களேயன்றி அவை அறிகுறியாகா. 'கண்' என்ற ஒலி வாயசைவால் முகத்தில் உள்ள கண்ணைக் குறிக்கும்; பதிவுத்தட்டில் எழும் அதே 'கண்' என்ற ஒலி அதே பொருளை உணர்த்தும். அப்பொழுது கண் என்ற ஒலி முதலில் அடையாளமாக இருந்த ஒன்று அறிகுறியாக மாறிவிட்டது எனலாம். சூழ்நிலை மாறினாலும் உணர்த்தும் பொருள் பொதுவாக மாறாமல் இருந்தால் அதனை அறிகுறி என்கிறோம். அடையாளம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலேயே

---

* A language is a system of arbitrary vocal symbols by means of which a social group co-operates.

—Outline of Linguistic Analysis, Bloch and Trager, p.5.

Lingua — லத்தீன் சொல் நாவைக்குறிக்கும். அதிலிருந்துதான் language என்று அமைந்தது. மொழியப்படுவது மொழி—தமிழில்.

பொருள் உணர்த்தும். அதனால் இதனை மொழியாகக் கொள்வதில்லை. அதனால்தான் மிருகங்களின் ஒலிக் குறிப்பையும் மனிதர் செய்யும் சைகைகளையும் மொழியாகக் கொள்வதில்லை.

சொற்கள் இடுகுறியாகின்றன

பொருளுக்கும் ஒலிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகக் கூறமுடியாது.* நாம் கொடுக்கின்ற மதிப்புதான் ஒலிக்குப் பொருள் தொடர்பு உண்டாவதற்குக் காரணம் ஆகும். நன்னூலார் 'இடுகுறி காரணப்பெயர் பொதுச் சிறப்பின' † என்று சொற்கள் காரணம் பற்றியும் இடுகுறி பற்றியும் அமைவன என்பர். காரணப் பெயர்களும் இடுகுறியாக அமைந்தவற்றின் திரிபுகளேயாகும். திரிந்து காரணமாக அமைவனவும் காலப்போக்கில் சொல்லின் பொருட் காரணம் மறக்கப்பட்டு விடுகிறது. சொல்லின் வரலாறு மறைந்து மீண்டும் அது இடுகுறியாகவே வழங்கத் தொடங்கும். அதனால் தோற்றத்திலும் இடுகுறியாக வழங்கின; வளர்ச்சியிலும் இடுகுறியாக அமைகின்றன எனலாம்.

மொழியின் இலக்கணம்

இந்த ஒலிகள் தொடர்ந்து பொருளை உணர்த்தும் அமைப்பை எடுத்துக் காட்டுவதே மொழியின் இலக்கணமாகும். இதன் விதிகள் தனிமனிதர் அமைக்கும் விதிகள் என்று கூறுவதற்கு இல்லை.‡ மொழியின் இயல்பை விவரிப்

* There is no necessary or philosophically valid connection between a vocal utterance and its meaning. — Bloch and Trager, p. 7.

† நன்னூல் சூத்திரம், 62.

‡ The grammar of a language is simply an orderly description of the way people in a given society talk. Ibid p. 6.

பதே (*description*) இலக்கணம் என்பர். மொழி எப்படி இயங்கவேண்டும் என்று விதிப்பது (*prescription*) இலக்கணமாகாது. சிறப்பாக நன்னூலும் தொல்காப்பியமும் மொழியின் இயல்பை விளக்கும் விளக்க நூல்களாகும்; விதி நூல்களாகா. அவர்கள் தம் விருப்பப்படி அமைப்பவை அல்ல; மொழியின் இயல்பை அறிந்து சுட்டுவன அவர்கள் அமைத்துள்ள இலக்கணங்கள் எனலாம்.

மொழியின் நன்மை

மொழி கருத்தை உணர்த்துவதால் ஒருவரை ஒருவர் தெரிந்துகொண்டு கூட்டமாக ஒன்றுபட்டு வாழ அது உதவுகிறது; மக்களின் நாகரிகம், பண்பாடு, கலை, வாழ்வு இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்கித் தனிப்பட்டவர் வாழ்வைச் சமுதாயத்தோடு பிணைக்கிறது.

ஓர் இடத்தில் இருந்துகொண்டே பிறரை ஏவித் தொழில் இயற்றவல்லது; கருத்து இடம்விட்டு இடம் செல்லவும் காலம்விட்டுக் காலம் இயங்கவும் அமைவது; காலத்தையும் இடத்தையும் சுருக்கி அவற்றைக் கடந்து கருத்துக்கள் வாழ மொழி பெரிதும் உதவுகிறது.

வரிவடிவம் மொழியாகாது

மொழி என்பது ஒலிவடிவத்தையே உணர்த்தும். வரிவடிவம் ஒலிவடிவத்தின் நிழற்படம் போன்றது. கருத்துக்கு ஒலிவடிவம் அறிகுறி. ஒலி வடிவத்தின் அறிகுறி வரிவடிவம். மொழியின் ஒலியமைப்பு எளிதில் மாறாது. வரிவடிவம் அவ்வப்பொழுது மாற்றம் அடையலாம். புது வரிவடிவங்கள் எளிதில் மொழியில் இடம் பெற்றுவிடும்.

மொழியியல் : (*linguistics*)

மொழியின் இயலை ஆராயும் கலைக்கு மொழியியல் (*linguistics*) என்பர். அதனை ஆராய்வோரை மொழியியலார் (*linguist*) என்பர். '*philology*' என்ற சொல் வழக்கிழந்து வருகிறது.

மொழியியல் அமைப்பு

ஒலியைப்பற்றி ஆராயும் ஆராய்ச்சியை ஒலியியல் (*phonetics*) என்பர். இவற்றுள்ளேயே மொழிக்கு எழுத்துக்களாகப் பயன்படும் ஒலிகளை மட்டும் ஆராயும் ஆராய்ச்சியை எழுத்தொலியியல் (*phonemics*) என்பர்.

பொருள்தரும் ஒலியசைகளை ஆராயும் இயலைப் பொருளசையியல் (*morphology*) என்பர்.

பொருளசைகள் சொற்களாக அமைய, அச்சொற்கள் தொடர்ந்து தொடர்நிலையாக அமைந்து பொருள் உணர்த்தும் இயலை ஆராய்வதைத் தொடரியல் (*syntax*) என்பர்.

இம் மூன்று கூறுகளே மொழியியலின் அடிப்படை அமைப்புகள் என்பர்.

சொற் பொருளியல் (*semantics*) : மேற்கூறிய இம்மூன்றும் மொழியின் அமைப்பை ஆய்வன. மொழிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வது இம் மொழியியலின் புறநடையியலாகக் கருதப்படுகிறது. பொருளமைவு குறிப்பிட்ட அளவுக்குள் அடங்குவது அன்று. விரிவு அஞ்சி இதனைப் பெரிதும் ஆராய்வதில்லை. எனினும் மொழிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பை ஒட்டி ஓரளவு இதனையும் ஆராய்வர். பொருட்கூறு (*sememe*) பற்றி ஆராயும் இவ்வியலைச் சொற்பொருள் தொடர்பு (*semantics*) எனக்கூறுவர். இவ்வாராய்ச்சியைப் புறநடை இயலாகக் கொள்வர்.

மொழியியல் பிரிவுகள்

மொழி விளக்கவியல் (*descriptive analysis*)

ஒரு மொழியின் இயல்பை உள்ளவாறு ஆராய்ந்து தெரிவிப்பது மொழி விளக்கவியல் என்பர். இது காலத்துக்குக் காலம் மொழியின்கண் ஏற்படும் மாறுதல்களையோ பிறமொழிகளில் உள்ள ஒப்புமைப் பகுதிகளைத் தொடர்பு படுத்தியோ கூறுவது அன்று; மொழியின் இயலை உள்ளபடி உணர்த்துவது.

தொல்காப்பியம்

தமிழ் மொழியின் இயல்பை உள்ளபடி ஆராய்ந்து விளக்கும் நூல் இது. இதனை மொழி விளக்கவியல் நூலாகவே கொள்ளல் தகும். பேச்சு வழக்கையும் செய்யுள் வழக்கையுமே அடிப்படையாகக் கொண்டு ஆயும் நூல் இஃது என அதன் சிறப்புப்பாயிரம் உணர்த்தும்.*

உரையாசிரியர்களும் தொல்காப்பியமும்

தொல்காப்பியம் தொல்காப்பியர் காலத்து மொழி நிலையையும் அதன் முந்திய நிலையையும் ஓரளவு உணர்த்தும். அந்த நூலின் விதிகளை ஒட்டிப் பெரிதும் மொழி யியங்குவதால் அதைக் கொண்டு மொழியின் பொதுவியலையும் ஓரளவு அறிய முடிகிறது.

அதன் உரையாசிரியர்கள் தம்முடைய காலத்து வழங்கும் வழக்குகளைத் தொல்காப்பியர் காலத்து வழக்கமாகக் காட்டுவது தவறாக முடிகிறது. அதனால் தொல்காப்பியத்தை விளக்குவதற்கு மாறாகச் சில இடங்களில் அதன் உண்மைப் பொருளையும் மறைத்து விடுகின்றனர்.

---

* தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி—பாயிரம்.

எனவே தொல்காப்பியர் காலத்து வழக்குகளை அறிய உரையாசிரியர்களின் உரை பெருமளவு பொருந்தாமல் போகிறது.

நன்னூல்

இது தொல்காப்பியத்தின் வழிநூல். பழையனவற்றை ஓரளவு கழித்துப் புதிய வழக்குகளைப் புகுத்தி அவர் காலத்து நிலையை விளக்கும் மொழிவிளக்க நூல் எனலாம். சிறப்பாக வடமொழியை ஒட்டிப் பதவியல் எனப் புது இயல் வகுத்துள்ளார். பிற்காலத்துக் கருத்துக்களை ஏற்றுப் புது விதிகள் சொல்லுவதைப் பலவிடங்களில் காணலாம். அதனால் சில சமயங்களில் தொல்காப்பியர் விளக்கம் மறைக்கப்பட்டுவிடுகிறது. மேலும் தொல்காப்பியர் காட்டும் நுட்பங்கள் சில மறைந்துவிடுகின்றன.

மேல் நாட்டார் இப்பொழுது கண்ட கலையை நம் முன்னோர்கள் கண்டு சிறந்த முடிவுகளைக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு இவ்விலக்கண நூல்கள் பெரிதும் சான்று தரும். சிறப்பாகத் தொல்காப்பியம் சிறந்த மொழியியல் விளக்க நூல் எனக்கூறலாம். மேலைநாட்டுப் புதுக் கருத்துக்களோடு தொல்காப்பியம் பெரிதும் ஒத்து இயங்குகிறது. தமிழின் இயலை நன்கு விளக்கும் நூல் இது.

மொழி ஒப்பியல் (*comparitive linguistics*)

ஒரு மொழியின் இயல்பைப் பிற மொழியின் அமைப்போடு ஒப்பிட்டு ஆராயும் ஆராய்ச்சி மொழிக் கலையின் மற்றொரு பிரிவாகக் கருதப்படுகிறது. அவ்வாறு பிற மொழிகளோடு ஆராயும்பொழுது அதற்கு இனமான மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்வதால்தான் பயன் உண்டாகும். அதனால் இனமான மொழிகளின் ஒப்புமை ஆராய்ச்சியையே மொழி ஒப்பியல் என்பர்.

டாக்டர் கால்டுவெல் இத்துறையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே சிறந்த ஆராய்ச்சியைச் செய்துள்ளார். அவருக்குக் கிடைத்த நூல் நன்னூலும் பிற்காலத்து இலக்கியங்களுமே. சங்க விலக்கியங்களும் தொல்காப்பியமும் அவர் அறிய முடியாமல் போயிற்று. அதனால் அவர் கண்ட முடிபுகள் ஆராய்ச்சியால் சில மறுக்கப்படுகின்றன. எனினும் திராவிட மொழிகள் ஒரே இனம் என்ற மொழிஒற்றுமையைக் காட்டிய பெருமை அவரையே சாரும்.

மொழி வரலாறு *(historical linguistics)*

மொழியில் ஏற்படும் மாறுதல்களை ஆராயும் துறைக்கு மொழி வரலாறு என்பர். இத்துறையில் தமிழில் முதன்முதலில் வழிகாட்டியவர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் ஆவர். மேல் நாட்டு நூல்களை ஒட்டிப் புதிய நூல்கள் சில எழுந்துள்ளன. தொல்காப்பியத்துக்கும் நன்னூலுக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்வதால் மொழியின் மாறுதல்களை ஓரளவு அறிய முடிகிறது. வீரசோழியம் போன்ற இடைக்காலத்து நூல் வடமொழியின் தாக்குதலை உணர்த்தும். அவர் காலம் பத்தாம் நூற்றாண்டு என்று கருதுவர். இதனை நன்னூலுக்கு முந்திய நூலாகக் கருதுவர். அக்கால வழக்குகளை அந்நூல் கொண்டு அறிய முடியும்.

பிளினி தாலமி போன்ற பிறநாட்டு ஆசிரியர்கள் எழுதிவைத்த குறிப்பால் தமிழின் பழமை வழக்குகள் அறியப்படுகின்றன. கல்வெட்டுகளும் சாசனங்களும் மக்கள் பேச்சு மொழியை அறியப் பெரிதும் உதவுகின்றன. இலக்கியங்களை ஆராய்வதால் அவ்வக்கால இலக்கண அமைப்புகளும் மாறுதல்களும் சொல்வழக்குகளும் அறியக் கிடக்கின்றன. இத்தகைய ஆய்வுகள் ஒரு சில எழுந்துள்ளன. இன்னும் அவ்வக்கால இலக்கியங்களை ஆராய்வ

தால் அவற்றின் முடிவுகளைக் கொண்டு இத்துறை வளர வேண்டியுள்ளது.

மொழியியலும் இலக்கணமும்

இம் மொழியியல் நம்பிக்கையின் அடிப்படையில் எழும் சமயத்தைப் போன்றது அன்று. ஆராய்ச்சியின் விளைவால் உண்டாகும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. விஞ்ஞான உண்மைகள் புதியன தோன்றும் பொழுது பழைய கொள்கைகள் தவறு என உணரப்படுதல் போல ஆராய்ச்சியால் புதிய உண்மைகள் தோன்றும் பொழுது பழைய கொள்கைகள் வழக்கு இழந்துவிடுகின்றன. கருத்துவேற்றுமை எழக்கூடிய துறைகளில் இதுவும் ஒன்று. இக்கலை இதன் கலைச் சொற்களை (*technical terms*) உணர்வதில் ஓரளவு அமைந்துள்ளது எனலாம்.

இலக்கணம் பொதுவாக எழுத்து வடிவில் உள்ள இலக்கிய மொழியின் அமைப்பை ஆராய்ந்து விதி கூறும். மொழியியல் மொழியின் இலக்கணத்தையும் தன்னகத்துக் கொண்டு மக்கள் பேச்சு வழக்கு மொழியையும் ஆராய்வதாக உள்ளது. இலக்கணம் மொழியியலின் ஒரு பகுதி எனலாம்.



பேச்சுவழி

1 பல், 2 மேல் இதழ், 2 அ. கீழ் இதழ், 3 அண்பல் (alveolar ridge), 4 அண்ணம் (palate), 5 பின்னண்ணம் (velum), 6 கடை நா (dorsum), 7 இடை நா (centre), 8 நாவிளிம்பு (blade), 9 நுனி நா (tip). 10 அடி நா (root), 11 தடை நார் (velic), 12 உள் நா (uvula), 13 குரல்வளை மேற் பகுதி (pharynx), 14 மேல் நார் (epiglottis), 15 குரல்வளை நார்கள் (vocal chords), 16 குரல்வளையிடம் (larynx), 17 உணவு வழி (food path).

மொழி ஒலிகள்

மொழி ஒலிகள் (*phonetics*)

வாயால் மொழியப்படுவது மொழி ஒலியாகும். இது காற்று வெளிப்படும் அசைவுகளால் உண்டாகிறது. காற்றுப்பையிலிருந்து வெளிவரும் காற்றுக் குரல்வளைவழியாக வந்து வாய்வழியாகவும் மூக்கு வழியாகவும் சென்று நா பல் அண்ணம் முதலியவற்றின் முயற்சியால் ஒலி வேறுபாடு பெற்று அவை மொழி ஒலிகளாக அமைகின்றன. அவை தோன்றும் இடத்தில் உண்டாகும் உறுப்பு முயற்சிகளுக்கு ஏற்ப ஒலி வேறுபாடு அடைகின்றன.

1. குரல்வளை இடம் (*larynx*)

அ. ஒலிப்பில் ஒலி (*voiceless*)

காற்று குரல்வளையில் வரும்பொழுது ஒலி தோன்றுகிறது. அங்கே குரல் நார்கள் (*vocal chords*) இருபுறமும் இரண்டு இருக்கின்றன. அவை நன்ருக அசையக் கூடியன. அவை சாதாரண நிலையில் பிரிந்து உள்ளன. அப்பொழுது காற்று தடையில்லாமல் வெளி வரும். அதனல் அநேகமாக ஒலி தோன்றுவதில்லை. இந்த நிலையை ஒலிப்பில் நிலை (*voiceless*) என்பர்.

ஆ. குரல்வழித் தடையொலி

இந்தக் குரல் நார்கள் இறுகி ஒன்றை ஒன்று தழுவிக் காற்று வெளிப்படாமல் தடை செய்யும் பொழுது ஒரு வகைத் தடையொலி ஏற்படுகிறது. அதனைக் குரல் வழித் தடையொலி (*glottal stop*) என்பர். தமிழில் 'அ ஆ' என்று பள்ளிச் சிறுவர்கள் ஒலிக்கும் பொழுது இரண்டிற் கும் இடையில் தோன்றும் ஒலியே இத்தடையொலியாகும். இதனை [ʔ] என்று குறிப்பர். குரல்நார்களுக்கு இடை யில் உண்டாகும் சிறு வழியைக் குரல்வழி (*glottis*) என்பர். இங்கே பிறக்கும் இத் தடை யொலியைக் குரல்வழித் தடை யொலி (*glottal stop*) என்று கூறுவர்.

இ. ஒலிப்பு ஒலி (*voiced sound*)

குரல்வழியில் (*glottis*) முதல் நிலை ஒலிப்பில்லா நிலை (*voiceless*). அடுத்தது குரல்வழித் தடையொலி. மூன்று வதாக இந்தக் குரல் நார்கள் பட்டும் படாமல் பொருந்துவ தால் அவை நெருங்கிக் காற்றைக் குறுகலான வழியில் வெளி விடுகின்றன. அந்த நிலையில் ஒலி அசைவுகள் (*vibrations*) உண்டாகின்றன. இதனை ஒலிப்பு ஒலிகள் (*voiced sounds*) என்பர். பொதுவாக உயிரொலிகளில் இந்த ஒலிப்புச் சேர்கிறது. மெய் யொலிகளில் *b, g, d* முதலிய வற்றில் இவ் ஒலிப்புச் சேர்கிறது. *p c l* என்பவற்றில் இவ் ஒலிப்பைக் காணமுடியாது. அதனால் *b, g, d* என்ப வற்றை ஒலிப்புச் சேர்ந்த ஒலி (*voiced*) என்பர். *p k t* என்பவற்றை ஒலிப்புச் சேராத ஒலி (*voiceless*) என்று கூறுவர்.

ஈ. ரகசிய ஒலிகள் (*whispers*)

குரல்வளையில் ஒலிப்பு ஒலி, ஒலிப்பில் ஒலி, குரல் வழித் தடையொலி உண்டாதலே யன்றி ரகசிய ஒலிகள்

(*whispers*) தோன்றுகின்றன. குரல்வழியில் (*glottis*) குறுகலான வழியமைத்து உராய்வு ஏற்படுத்தினால் ஒருவகை உரசொலி (*friction*) உண்டாகும். இங்கு உராய்வு மட்டும் உளதே யன்றி ஒலி எழுச்சியாகிய குரல் எடுப்பு (*pitch*) உண்டாவதில்லை. *

2. குரல்வளை மேல் பகுதி (*pharynx*)

குரல்வளைக்குமேல் வாய்ப்பகுதிக்குக் கீழ் உள்ள பகுதியைக் குரல்வளை மேல் பகுதி (*pharynx*) என்பர். நாவின் அடிப்பகுதி (*root*) இப்பகுதியோடு பொருந்தி நெருங்குவதால் ஒருவகைத் தடையொலி பிறக்கும். இவ் வொலி (*q*) தமிழில் இல்லை. '*qoran*' என்ற சொல்லில் *q* என்ற அரபிய ஒலியில் இது உள்ளது. இதனை அடிநாத் தடையொலி என்றும் கூறுவர். அது உள்நா (*uvular*) என்ற பகுதியில் இருப்பதால் அதனை உள்நாத் தடை (*uvular stop*) என்றும் கூறுவர்.

3. வாய் இடம் (*oral cavity*)

இந்த வாய்ப் பகுதியிலேயே பல ஒலிகள் அமைகின்றன. இங்கே தோன்றும் ஒலிகளை மெய்யொலிகள் எனவும் உயிரொலிகள் எனவும் பிரிப்பர்.

மெய்யொலிகள் (*consonants*)

தமிழைப் பொறுத்த வரையில் உயிரொலிகளும் மெய்யொலிகளும் வாய்ப்பகுதியிலேயே அமைகின்றன. குரல் வளையிலிருந்து வெளிப்படும் ஒலிப்பு ஒலியும் (*voiced sounds*) ஒலிப்பில் ஒலியும் (*voicelss sounds*) மேலே வாயில் தடை ஏற்பட்டால் மெய்யொலியாகவும் தடையின்றி வெளிவந்தால்

* Friction differs from voice in that it has no definite pitch.
—Gleason, p. 189

உயிரொலியாகவும் மாறுகின்றன. அதனால் உயிர் மெய் என்ற பாகுபாடு வாய் இடத்திலேயே அடைகின்றன என்பர். இந்த மெய்யொலிகளும் உயிரொலிகளும் நா இதழ் பல் அண்ணம் இவற்றின் பல்வேறு முயற்சியால் பல்வேறு வடிவங்கள் பெறுகின்றன.

இந்த மெய்யொலிகளை அவற்றின் இயல்புக் கேற்ப வெவ்வேறு வகையாகப் பிரித்துக் காண்பர். அந்த அந்த இயல்புக் கேற்ப அவ்வப்பிரிவு பொருந்துவதாகும்.

இலக்கண நூற்பிரிவு

தமிழ் இலக்கண நூல்கள் மெய்யொலிகளை வல்லினம் மெல்லினம் இடையினம் எனக் கூறும். வாயிற் பிறக்கும் தடை யொலிகளை வல்லினம் என்றும் மூக்கு வழியாகச் செல்லும் நெகிழ் வொலிகளை மெல்லினம் என்றும் பிற வற்றை இடைப்பட்ட ஒலிகள் என்ற முறையில் இடையி னம் எனவும் பிரித்துக் கூறும். இது ஒரு வகை.

தடையொலியும் பிறவொலியும் (பொதுப் பிரிவு)

மொழி யியலார் பொதுவாக ஒலிகளைத் தடையொலி (*stop*) என்றும் ஏனையவற்றை நெகிழ்வொலிகள் (*resonant*) எனவும் பிரிப்பர். க, ச, ட, த, ப இவற்றைத் தடையொலி எனவும் ஏனையவற்றைப் பொதுவாக நெகிழ்வொலி எனவும் பிரிப்பர். இந்த நெகிழ்வொலிகளில் உயிரொலியையும் அடக்குவர். இது ஒருவகை.

இயல்புபற்றி அமைவன (சிறப்புப் பிரிவு)

தடையொலி (*stop*)

இரண்டு உறுப்புக்கள் பொருந்திக் காற்றில் தடை ஏற்படுவதால் உண்டாகும் ஒலி தடையொலியாகும். (க, த, ப முதலியன).

உரசொலி *(spirant or fricative)*

காற்று வெளிப்பாட்டில் சிறிது தடை மட்டும் ஏற்படுத்தி ஒருவகை எதிர்ப்பையும் அதிர்ச்சியையும் உண்டாக்குவதால் பிறக்கும் ஒலியை உரசொலி என்பர். (ஸ, ஷ, *f* போன்றவை).

மூக்கொலி *(nasal)* *

ஒரு பகுதி காற்று மூக்கு வழியே வெளிப்படும்போது மூக்கொலி உண்டாகிறது. தடையொலி போன்ற வெடிப்புத் தன்மை இதில் இல்லை. உயிரைப் போன்ற நெகிழ்ந்த (*resonance*) தன்மை இதற்கு உளது. (ங, ஞ, ண, ந, ம, ன).

உரப்பொலி *(trill)*

நாவோ பிறவோ வெளிவரும் காற்றால் வேகமாக அசைக்கப்படுவதால் உண்டாகும் ஒலி. 'ற' இவ்வொலியாகும்.

பிரிவளிஒலி *(lateral)*

காற்று இடையில் தடைப்பட்டு இருவழியும் பிரிந்து செல்லும் இயல்பு பற்றிப் பிரிவளி என்பர்.

இவற்றுள் உரசுத் தன்மையும் உரசு அற்ற தன்மையும் உளது: ஷ என்பது உரசுத் தன்மையோடு கூடியது. இதனை உரசுப் பிரிவளி ஒலி என்பர் (*lateral fricative*) ல, ள என்பவை உரசு அற்ற பிரிவளி ஒலியாகும்.

வருடொலி *(flap)*

ஒரே முறை நா மடிந்து மேற்பகுதியைத் தடவிவிட்டுப் (வருடிவிட்டு) பிரிந்துவிட்டால் இவ்வொலி உண்டாகிறது. 'ர' — வருடொலியாகும்.

---

* மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின் வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் —தொல். சூ. 100.

† 'அண்ணம் வருட .... ரகாரம் பிறக்கும்.' — சூ. 95.

நா இதழ் பொருந்தும் இடம்பற்றி அமைவன

மற்ருெரு வகை : மேலே காட்டிய பிரிவுகள் அவற்றின் இயல்புக்கேற்ப அமைவன. இனி அவற்றையே நாவும் இதழும் மேலே பொருந்தும் இடங்களுக்கேற்பச் சில பிரிவு களாகப் பிரிப்பர். அவை இவை :

1. பின்னண்ண ஒலி (*velar sounds*) :* பின் அண்ணப் பகுதியில் நாவின் முதற்பகுதி (பிற்பகுதி) பொருந்துவதால் பிறக்கும்—க, ங.

2. இடை அண்ண ஒலி(*palatals*)†நாவின் இடைப் பகுதி இடை அண்ணத்தைப் பொருந்துவதால் இடை அண்ண ஒலி பிறக்கிறது. (அண்ண இடைப்பகுதி—*palatal*) ச, ஞ.

3. நாமடி ஒலி (*retroflex*) :‡ நா மடிந்து நா முனையின் பிற்பகுதி அண்ணத்தைப் பொருந்துவதால் பிறப்பது. ஏனைய மேற்பகுதியாகிய பொருந்தும் இடம் பற்றிப் பெயர் பெறுகின்றன. இவை நாவின் மடியும் தன்மை பற்றிப் பெயர் பெறுகின்றன. (ட, ண முதலியன) இவை ஐரோப்பிய மொழிகளில் இல்லை ; தமிழில் சிறப்பாக உள்ளன.

4. அண்பல் ஒலி (*alveolar*) : § பல்லுக்கு அண்மையில் உள்ள மேற்பகுதியை அண்பல் என்பர். இப் பகுதியில் நா நுனி பொருந்தப் பிறப்பது. ன, ல முதலியன.

---

* பின்னண்ணத்தை soft palat அல்லது velum என்று குறிப்பர். ககார ஙகாரம் முதல் நா அண்ணம் சூ. 89, தொல்.

† சகாரம் ஞகாரம் இடை நா அண்ணம். சூ. 90

‡ இதனை வளைநாஒலி என்றும் கூறுவர். டகார ணகாரம் நுனிநா அண்ணம் சூ. 91.

§ அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்—சூ. 94.

5. பல்லின ஒலி (*dental*): * மேற் பல்லில் நா நுனி பரந்து ஒற்றப் பிறப்பது. த, ந முதலியன.

6. இதழொலி (*bilabial*) † இரண்டு இதழ்கள் இயைந்து பொருந்துவதால் பிறப்பது. ப, ம. இவ் வொலிகளாம்.

7. பல்லிதழினம் (*labio dental*) ‡ கீழ் இதழ் மேற் பல்லில் உறப் பிறப்பது. 'வ'—இவ் வொலியாகும்.

மேல் இந்த ஏழு பிரிவுகளும் வாயில் பிறக்கும் ஒலிகளாம். இவற்றுள் மேற் பகுதிகளை அசையாதன என்பர். நா இதழ் மட்டும் அசைந்து அவ் விடங்களில் பொருந்துவன. பொருந்தும் இடங்கள் (*points of articultion*) பற்றியே இவை பெயர் பெறுகின்றன. நாமடி ஒலி (3-வது பிரிவு) ஒன்று மட்டும் தொடும் உறுப்புப் (*articulator*) பற்றிப் பெயர் பெறுகிறது.

ஒலிப்பு ஒலி (*voiced*) ஒலிப்பில் ஒலி (*voiceless*) எனக் குரல்வளையில் பிரிகிறது. இதனை ஒலித்தன்மை (*manner*) என்பர். அவை மேலே தடையொலி, உரசொலி, மூக்கொலி, உரப்பொலி, பிரிவளி ஒலி, வருடொலி எனப் பிரிவதை ஒலி அமைப்பு (*Modification*) என்பர். இவ்வாறு இருவித நிலைகளைப் பெற்றுவரும் ஒலி நா இதழ் பொருந்தும் இடம் நோக்கி வகைப்படுத்தப் படுகின்றன. இதனை வகை (*classification*) என்பர். அதனல் எந்த ஒலியும் அதன் தன்மை, அமைப்பு, வகை என்ற மூன்று நிலைகளில் ஆராயப்படுகின்றன.

---

* அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நா நுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம். சூ. 93.

† இதழியைந்து பிறக்கும் பகார மகாரம், சூ. 97.

‡ பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும், சூ. 98.

சில ஒலிகளின் மூவகை நிலைகள்

வகை	தன்மை	அமைப்பு
க (*k*) பின்னண்ண	ஒலிப்பில்	தடையொலி
க (*g*) ,,	ஒலிப்புத்	,,
ச (*c*) இடையண்ண	ஒலிப்பில்	,,
ஜ (*j*) ,,	ஒலிப்புத்	,,
ட (*t*) நாமடி	ஒலிப்பில்	,,
ட (*d*) ,,	ஒலிப்புத்	,,
த (*t*) பல்லின	ஒலிப்பில்	,,
த (*d*) ,,	ஒலிப்புத்	,,
ங — பின்னண்ண	ஒலிப்பு	மூக்கொலி
ண — நாமடி	ஒலிப்பு	,,
ன — அண்பல்	ஒலிப்பு	மூக்கொலி
ற —	ஒலிப்பு	உரப்பொலி
ல — ,,	,,	பிரிவளி ஒலி
ள — நாமடி	,,	,,

இவ்வாறே எல்லா மெய்யொலிகளும் மூன்று நிலைகளை ஒட்டிக் கூறப்படும். இதனைப் பின்வருமாறு ஒரு கட்டத்தில் அமைத்துக் காட்டலாம்.

Manner & Modification		CLASSIFICATION								
		இதழொலி Bilabial	பல்லிதழ் ஒலி Labio dental	பல்லொலி Dental	அண்பல் ஒலி Alveolar	அண்ண ஒலி Palatal	நாமடி ஒலி Retroflex	பின்னண்ண ஒலி Velar	கா அடி ஒலி Uvular	குரல் வழித் தடையொலி Glottal
ஒலிப்பில்	தடையொலி (Stop)	ப (P)	...	த (t)	...	ச	ட (t)	க k	q	?
ஒலிப்பு	,,	ப (b)	...	த (d)	...	ஜ	ட (d)	க g	G	...
ஒலிப்பில்	உரசொலி	...	f	ஸ	S ஶ	ஷ	...	...	...	...
ஒலிப்பு	,,	...	v	...	Z	...	...	...	...	...
,,	மூக்கொலி (Nasal)	ம	...	ந	ன	ஞ	ண	ங	...	...
,,	உரப்பு ஒலி (Trill)	...	...	...	ற	...	...	...	...	...
,,	பிரிவளி ஒலி Lateral	...	...	...	ல	...	ழ, ள	...	...	...
,,	வருடொலி Flap	...	...	...	ர	...	...	...	...	...

சில சிறப்பியல்புகள்

ச, ஜ : என்பவற்றில் இரண்டிட ஒலி (*affricate*) இருப்பதாகக் கொள்வர். பச்சை என்பதில் 'ச்' ஓரிட ஒலியாக உள்ளது. சிறப்பு என்பதில் த் என்ற ஒலி முதலிலும் 'ஸ' என்ற ஒலி தொடர்வதாக அமைகிறது. 'த்ஸ்' போன்ற இடங்களில் இரண்டிட ஒலியாகவும் 'ச்' என்ற இடத்தில் ஓரிட ஒலியாகவும் (அண்ண ஒலி) கொள்வர்.

ழ : தமிழில் உள்ள 'ழ' எந்த மொழியிலும் இல்லாத ஒரு தனி யொலியாகும். இதனை உரசு இல்லாத நாமடித் தொடரொலி (*frictionless retroflex continuant*) என்று கருதுவர். சிலர் இதனைப் பிரிவளியும் உரசும் கலந்த நாமடி ஒலி (*half-lateral and half-fricative retroflex* என்பர். சிலர் இதனைப் பிரிவளி - நாமடித் தொடரொலி (*lateral retroflex continuant*) என்பர். எனினும் நாமடி ஒலி என்பதில் கருத்து ஒற்றுமை உளது.

ய : இதனை உரசு இல் அண்ணத் தொடரொலியாகக் கருதுவர். (*frictionless palatal continuant*).

வ : இதனை உரசு இல் இதழ்த் தொடரொலி (*frictionless labial continuant*) இவ்விரண்டனை (ய, வ) அவற்றின் உயிர்த்தன்மை யொட்டி அரையுயிர் (*semi-vowel*) என்றும் கூறுவர்.

ற : இதனை உரப்பொலி என்பர். இது தொல்காப்பியர் காலத்தில் ட (*t*) போல ஒலிக்கப்பட்டது. ஈழத்திலும் இவ்வாறு ஒலிக்கப்படுகிறது. அதனால் தொல்காப்பியர் காலத்தில் தடை யொலியாகவே கொள்ளப் பட்டது. அதனால்தான் வல்லினம் 'கசடதபற' ஆறு எனக் கூறப்பட்டது. ஆனால் 'ற' என்பது தொல்காப்பியர் காலத்தில் அண்பல் தடை யொலியாகக் (*stop*) கொள்ளப்பட்டது. இப்பொழுது அண்பல் உரப்பொலியாக (*trill*) ஒலிக்கப் படுகிறது.

மேலும் தொல்காப்பியர் காலத்தில் 'க ச ட த ப ற' என்பவை ஒலிப்பில் ஒலியாகவே (*voiceless stops*) இருந்தன என்று கருதுவர்.

ஆய்த ஒலி

ஆய்த ஒலி எனத் தனியாக மொழிகளில் வருவது இல்லை. பள்ளிச் சிறுவர்கள் ஒலிப்பது போன்ற ஒலி அதற்கு இல்லை. இது சில ஒலிகள் திரிந்து அமைவது. சிறப்பாக வகரத்தின் திரிபு ஆய்தமாக மாறுகிறது. அவ் + து — அஃது.

ல, ள திரிந்தும் ஆய்தம் ஆகிறது.* முள் + தீது — முஃடீது; கல் + தீது — கஃறீது.

இதற்கு எனத் தனி ஒலி இல்லை. அதனால் அதனைத் தனிப் பிறப்பு ஒலியாகக் கொள்வதற்கு இல்லை. பிறவற்றைச்சார்ந்து அவற்றை உரசொலியாக்கவே அமைகின்றன. எகு — 'கு' ஒலிப்பில் தடை யொலியாக விளங்கியது. எஃகு — 'கு' உரசொலியாகிறது. அதனால் தடை யொலிகள் ஆய்தம் சேர்வதால் உரசொலி (*fricative*) ஆகின்றன.

க என்பது மொழிக்கு முதலில் *k* ஒலியும் இடையில் தனித்து வரும்பொழுது 'ஹ' ஒலியும் பெறுகிறது. பகல்—*pahal* போல ஒலிக்கிறது.

'அது' என்பதில் தற்காலத்தில் 'து' உரசொலி கலப்போடு ஒலிக்கப்படுகிறது. வருமொழி உயிராக இருந்தாலும் மெய்யாக இருந்தாலும் ஒரே வகையாக இப்பொழுது ஒலிக்கப்படுகிறது. இணைப் பொலிகள் (*clusters*) த்யாகம், க்ரமம் போன்ற சொற்களில் த்ய், க்ர் போன்று சேர்ந்து ஒலிப்பவற்றை இணைப் பொலி என்பர். இவ்வொலி வடமொழிச் சொற்களில் உளது.

* 'லள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம் என்பர். — நன். சூ. 97.

உள்ளிழுப்பு ஒலி (*suctional sound*)

பொதுவாக வெளிவரும் காற்றாலேயே ஒலிகள் பிறக்கின்றன. சில உள்ளிழுப்பதாலும் பிறக்கின்றன. உறிஞ்சுதல், கனைத்தல் போன்றவை இவ்வொலிகளாம்.

பின்னண்ணத் தடைநாரின் (*velum*) விளக்கம்

க ச ட த ப போன்ற தடை யொலிகள் ஒலிக்கும்போது அவை மூக்கு வழியாகச் செல்லாமல் தடுக்க ஒரு தசைநார் உளது. அதனை விலம் (*velum*) என்பர். அதைத் திறந்து விட்டால் மூக்கொலி பிறந்து விடும். அந்த விலத்திற்குப் பக்கத்தில் உள்ள பின் அண்ணப் பகுதியோடு நா பொருந்துவதால் எழும் ஒலியை *velar* ஒலி என்பர். நடு அண்ணத்திற்கு *hard palat* என்பர். இந்த *velar* பகுதியை *soft palat* என்றும் கூறுவர். இங்கே பிறக்கும் க, ங என்பவற்றை *velar sounds* என்பர்.

உயிரொலிகள்

பொதுவாக உயிர்கள் நாவின் முயற்சி கொண்டு வகைப் படுத்தப் படுகிறது. நா மேலெழும் உயரம் பற்றி (*height of the tongue*) முதற்கண் எழுவகையாக வகைப்படுத்தப் படுகின்றன. அந்த எழுவகைகள் பின்வருமாறு :

நா படியும் மேல் நிலை — *high*
நா படியும் இடை நிலை — *mid*
நா படியும் கீழ் நிலை — *low*

கீழ் நிலைக்கும் இடை நிலைக்கும் இடையில் இரண்டு நிலைகளும், இடை நிலைக்கும் மேல் நிலைக்கும் இடையில் இரண்டு நிலைகளும் ஆகச் சேர்ந்து எழுநிலைகள் அமைகின்றன.

1.		High
2.	Lower	High
3.	Higher	Mid
4.		Mid
5.	Lower	Mid
6.	Higher	Low
7.		Low

நா எழும் எழுச்சி நோக்கி (*advancement of the tongue*) மூன்று நிலைகள் அமைக்கப்படுகின்றன. நா நுனி முன் நோக்கி (அண்பல் நோக்கி) எழுதல், நா அடி பின் நோக்கி (பின்னண்ணம் நோக்கி) எழுதல், நா நடு நடுஅண்ணம் நேர்க்கி எழுதல் என்று மூன்று நிலைகள் காணப்படு கின்றன.

ஆக 3 × 7 — 21 நிலைகள் கிடைக்கின்றன. இவற்றை மீண்டும் இதழ் குவிதல் (*lip rounding*) பற்றி இதழ் குவிவன, குவியாதன என இரண்டு வகையாக வகைப் படுத்தப் படுகின்றன.

ஆக 2 × 21 — 42 நிலைகள் கிடைக்கின்றன. உலகப் பொது எழுத்து அறிகுறிகளால் (*phonetic script*) அவை குறித்துக் காட்டப்படுகின்றன. ஒவ்வொரு மொழியிலும் இந்த 42 நிலைகளில் ஒரு சில கோணங்களிலேயே உயிர்கள் அமைகின்றன.

மொழிக்கு மொழி மெய்களில் அடையும் வேறுபாடு மிகவும் குறைவு. உயிர்களில் பெருத்த வேறுபாடு உள்ளன.

ஓர் உயிரின் இயல்பைப் பற்றிக் கூறும்பொழுது நாவின் உயரம், நாவின் எழுச்சி, இதழ் முயற்சி இந்த மூன்றும் ஆராயப் படுகின்றன.*

* Most pure vocoid articulations in most languages can be described in terms of three factors: Lip position, tongue-height and tongue advancement. — Hocket. p. 77.

	நாவின் உயரம்	நா எழுச்சி	இதழ் முயற்சி
அ	Mid	Central	இதழ் குவிவு இல்லை
இ	High	Front	இதழ் குவிவு ,,
உ	High	Back	,, உண்டு
எ	Mid	Front	,, இல்லை
ஒ	Mid	Back	,, உண்டு

இவ்வாறு ஒவ்வொரு உயிரும் மூவகை நிலைகளில் ஆராயப்படுகின்றன. உயிரொலிகளின் 42 நிலைகளை 29-ஆம் பக்கத்திலுள்ள கட்டம் உணர்த்தும். அவற்றுள் தமிழ் உயிரொலிகளின் இயல்பும் தோன்றும் இடமும் உணரப்படும்.

குறிப்பு : உயிரொலிகள் பொதுவாக ஒலிப்பு ஒலிகளே (voiced sounds). ஒலிப்பற்ற உயிரொலிகளும் உள்ளன. தமிழ் ஒலிகள் ஒலிப்பு உள்ளவை.

வாயில் தடை ஏற்பட்டால் மெய்யொலி பிறக்கும். தடை சிறிதும் நேராமல் இருந்தால் உயிரொலி பிறக்கும்.

Vowels are modifications of the voice - sound that involve no closure, friction, or contact of the tongue or lips. They are ordinarily voiced.

— Bloomfield p. 102.

—	முன் (Front)		நடு (Central)		பின் (Back)		—
	Unrounded இதழ் குவிவு இல்லை	Rounded இதழ் குவிவு	Unrounded இ. கு. இல்லை	Rounded இ. கு. உண்டு	இ. கு. இல்லை	இ. கு. உண்டு	—
HIGH	இ	...	...	...	குற்றியல் உகரம்	உ	மேல்
LOWER HIGH	...	...	...	...	...	...	...
HIGHER MID	...	...	...	...	...	...	...
MID	எ	...	அ	...	...	ஒ	இடை
LOWER MID	...	...	...	...	...	...	...
HIGHER LOW	...	...	...	...	...	...	...
LOW	...	...	...	...	...	...	கீழ்

Gleason p. 203-ல் இப் பிரிவினைக் காட்டுவர்,

தமிழில் உள்ள குற்றிய லுகரத்தில் இதழ் குவிவு முயற்சி இல்லை. இது தனித்து ஒலிக்கப் படுவதில்லை. வன்மையூர் உகரமாகவே வந்து அதனால் தொடரொலியாக அமைகிறது.

'மருந்து' — இதில் உள்ள உகரத்திற்கு நா பின்னோக்கி எழும் முயற்சி உளது ; இதழ் குவிவு முயற்சி இல்லை.

'உ'லகம் — இதில் உள்ள உகரத்திற்குப் பின்னோக்கி எழுதலும் உண்டு ; இதழ் குவி முயற்சியும் உண்டு. இது தனித்தும் வரும் ; பிற மெய்யோடும் வரும்.

முன்னண்ண உயிர்களிலும் சில மொழிகளில் இதழ் குவி முயற்சி உண்டு. தமிழில் இல்லை. எனவே ஒவ்வொரு உயிருக்கும் இந்த இரண்டு வகை நிலைகள் உள்ளன. தமிழில் பொதுவாக உள்ள நிலைகளே மேலே காட்டப் பட்டுள்ளன.

பேச்சு மொழியில் இந்தக் குறிப்பிட்ட ஒலிகளே யன்றி வேறு கோணங்களில் மாறி வரும் ஒலிகளும் உள்ளன. அவற்றை உலகப் பொது எழுத்துக் கொண்டே காட்ட முடியும்.

தமிழ் இலக்கண நூல்கள் காட்டுவன

அகரத்தில் அங்காப்பு உளது என்று கூறுகிறது.*

இகரமும் எகரமும் அங்காப்போடு அண்பல்லை நாமுதல் விளிம்பு பொருந்துவதால் உண்டாகின்றன என்று கூறும்.†

உகரத்திலும் ஒகரத்திலும் இதழ் குவிவு முயற்சி உண்டு என்று எடுத்துக் காட்டுகிறது.‡

---

* அ, ஆ, ஆயிரண்டு அங்காந்து இயலும். — தொல். சூ. 85.

† இ ஈ எ ஏ ஐ யென இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன ; அவைதாம் அண்பல் முதல் நா விளிம்புறல் உடைய. — தொல். சூ. 86.

‡ உ, ஊ, ஒ, ஓ, ஔ என இசைக்கும் அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும். — தொல். சூ. 87.

அங்காப்பு என்பதற்கு இதழ் குவியாமை என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும். இதழ் குவிதல் உகரத்திற்கு உண்டு; இதழ் குவியாமையாகிய அங்காப்பு அகரத்திற்கும் இகரத்திற்கும் உண்டு எனக்கொள்ளல் பொருந்தும்.

நெடில் ஒலிகள் குறிலின இயல்பையே பெறுவன. இயல்பாலும் (*quality*) பிறக்கும் முயற்சியாலும் குறிலுக்கும் நெடிலுக்கும் வேறுபாடு இல்லை என்பர். மாத்திரை வேறுபாடே இரண்டையும் வேறாகக் கொள்வதற்குக் காரணம். குறிலின் முயற்சியே சிறிது நீட்டித்தால் நெடில் ஆகின்றது.

ஒலிகளின் சிறப்புப் பிரிவுகள் (*super segmentation*)

உயிர் மெய் என்ற பிரிவுகள் பொதுவாக ஒலிகளில் செய்யப்படுகின்றன. இவை அவற்றின் இயல்பு (*quality*) பற்றிச் செய்யப்படும் பிரிவுகளாம். மேலும் தன்மைகளை ஒட்டிச் சில பிரிவுகள் காண்பர்.

நெடில் ஒலிகள்

குறில் ஒலிகட்கும் நெடில் ஒலிகட்கும் பிறப்பு இயல்பில் (*quality*) எந்தவித வேறுபாடும் இல்லை. அளவிலேயே (*quantity*) இவ்விரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. மாத்திரையின் மிகுதி நோக்கி இவை நெடில் எனக் கூறப்படுகின்றன. அகரத்தை ஒலிக்கும் முயற்சியில் சிறிது நீட்டிப்பு நிகழ்ந்தால் அது 'ஆ' என்ற நெடில் ஒலியாக அமைகிறது.

அளபெடைகள்

குறிலுயிர் அளவு நீட்டித்தால் நெடிலுயிர் ஆகிறது. நெடில் அளவு மிகுந்தால் அளபெடை எனக் கூறப்படுகிறது.* எனவே குறில் நெடில் அளபெடை இவை தம்முள்

* நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர் — தொல். சூ. 6.

ஒலிவியல்பால் வேறுபாடு இல்லை. மாத்திரையாலேயே வேறுபாடு உளது.

'பக்க்அம்' — பக்கம் — ககரம் இரட்டித்தது என்று கொள்வதைவிட நீட்டித்தது என்று கூறுவதே பொருத்தம் என்பர். தமிழ் இலக்கணத்தார் வல்லொலி யல்லாத வேறு சில ஒலிகளில் உண்டாகும் நீட்டிப்பு நிலையை ஒற்றளபெடை † என்பர். 'கண்ண் கருவிளை — இதில் மெய் ஒலி நீட்டிக்கிறது.

மொழி ஒலிகள் (*phonetics*) என்ற பகுப்பில் பொருள் வேறுபாடு பற்றி ஒலிகள் ஆராயப் படுவதில்லை. பிறப்பியல் நோக்கியே அதன் சிறப்பியல்புகள் ஆராயப்படும். எனவே குறிலுக்கும் நெடிலுக்கும் உள்ள பொருள் வேறுபாடு எழுத்தொலிகள் (*phonemics*) என்ற தலைப்பில் ஆராய்வது பொருந்தும்.

துணை முயற்சிகள் (*co - articulation*)

சில ஒலிகளின் முயற்சியில் வேறு ஒலிகளுக்கு உரிய முயற்சியும் உடன் சேர்தல் உண்டு. இதற்குத் துணை முயற்சி அல்லது உடன்முயற்சி (*co - articulation*) என்பர். அவற்றுள் சில பின்வருமாறு.

1. இதழ்ச்சாயல் பெறல் (*labialization*)

இதழ் ஒலி யல்லாத பிற ஒலிகள் தமக்குரிய இயல்பான முயற்சியோடு இதழ் முயற்சியும் உடன் சேர்தல்.

2. அண்ணச்சாயல் பெறல் (*palatalization*)

அண்ண ஒலி யல்லாத பிற ஒலிகள் அண்ண ஒலியின் முயற்சியும் உடன் பெறுதல்.

---

† அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர் — தொல். சூ. 33.
ஙஞண நமன வயலள ஆய்தம் அளபாம் — நன். சூ. 92.

3. நாமடிச்சாயல் பெறல் *(retroflexion)*

நாமடி ஒலி அல்லாத பிற ஒலிகள் நாமடி ஒலியின் முயற்சியும் உடன் பெறுதல்.

4. பல்லினச்சாயல் பெறல் *(dentalization)*

பல்லின ஒலி அல்லாத பிற ஒலிகள் பல்லின ஒலியின் முயற்சியும் உடன் பெறுதல்.

இவற்றைப் போலவே ஏனையவும் பிற ஒலிகளின் முயற்சியைப் பெறுதல் உண்டு. இப்படிச் சேர்வதால் சேரும் துணை ஒலி சில சமயங்களில் செல்வாக்குப் பெற்று விடுவதும் உண்டு. அப்பொழுது பழைய இயல்பான ஒலி முயற்சி கைவிடப்பட்டு மற்றொன்றாக மாறி விடுதலும் உண்டு.

1. இதழ் ஒலியாக மாறல்

ஆ—ஓவாக மாறிவிடுகிறது. இதழ் குவிதல் செல்வாக்கால் இம்மாற்றம் ஏற்படுகின்றது. 'ஆ ஓ ஆகலும் செய்யுளில் உரித்து' என்பர்.* ஆம் என்னும் வினைவிகுதி ஓம் ஆக மாறுகிறது. வந்தாம் — வந்தோம்.

2. அண்ண ஒலியாக மாறல் †

த — ச ; ந — ஞ வாக மாறுதல் உண்டு.

மாதம் — மாசம்.

செய்ங்கின்ற — செய்ஞ்ஞின்ற (இலக்கியம்).

இவற்றில் அண்ண ஒலி செல்வாக்குப் பெற்று முதல் ஒலி மறைந்து விட்டது.

3. நாமடி ஒலியாக மாறல்

த — ட வாக மாறுதல் உண்டு.

---

* நன்னூல் சூ. 353.

† நான் — ஞான் (மலையாளம்)

ஆண் + து — ஆடு.
மகள் + து — மகடு.
காழ் + து — காடு.
கோழ் + து — கோடு (கொழு — கோழ்)*

நாமடி ஒலிகளாகிய ண, ள, ழ இவற்றை அடுத்து 'த' வருவதால் நாமடி ஒலியின் துணை முயற்சிபெற்றுப் பிறகு டகரமாகவே மாறிவிட்டது.

4. பல்லின ஒலியாக மாறல்

ற்—த் — பல்லின ஒலியாக மாறுதல் உண்டு.
பற்று — பத்து (பேச்சு மொழி).
விற்று — வித்து.
காற்று — காத்து. †
நேற்று — நேத்து.

துணையாக வந்த பல்லொலி நிற்க அண்பல் (*alveolar*) ஒலி நிலை மறைந்து விட்டது.

ஒலியழுத்தம் (*accent*)

ஒலியழுத்தம் மூன்று வகைப்படும். அவை (1) அசையொலி அழுத்தம் (*stress*) (2) குரல் அழுத்தம் (*pitch*) (3) வாக்கிய ஒலி யழுத்தம் (*intonation*) என்பர்.

1. அசைஒலி யழுத்தம் (*stress*)

இதில் மூன்று நிலைகள் உண்டு. எடுத்தல் படுத்தல் நலிதல் என்பர். இவை தமிழில் உண்டு. இது ஆங்கிலத்தில் சில இடத்தில் பொருள் மாற்றத்தை உண்டாக்கி விடுகிறது.

---

* கோழிலை வாழை. — அகம் 2.
கொழுமீன் உணங்கல். — அகம் 20.

† கால் + து — காற்று. (அண்பல் ஒலியாதல்) இது முதல் நிலை.
காற்று — காத்து (பல்லொலி யாதல்) இப்பொழுதைய பேச்சு நிலை.

This is a pèrmit
Please permit me

முதலில் (*pèrmit*) என்பது பெயராகவும் அடுத்தது வினையாகவும் மாறுகிறது. எடுத்துச் சொல்வதால் தமிழிலும் ஒரோவழிப் பொருள் மாற்றம் உண்டாகிறது. வினைமுற்றில் முதலசையில் எடுத்துச் சொல்லுதலும் வினையாலணையும் பெயரில் ஈற்றில் எடுத்துச் சொல்லுதலும் உண்டு என்பர்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் எடுத்துச் சொல்லுவதற்கும் படுத்துச் சொல்லுவதற்கும் எடுத்துக்காட்டுத் தருவர் :

" தபு எனவரும். இது படுத்துச்சொல்ல, நீசா எனத் தன் வினையாம். எடுத்துச்சொல்ல, நீ, ஒன்றனைச்சாவி எனப் பிறவினையாம்." *

இதனைக்கொண்டு ஆராய்ந்தால் எடுத்துச் சொன்னல் பிறவினையாகும் தன்மையைப் பல சொற்களில் காணமுடிகிறது. அதற்கு அறிகுறியாக வல்லெழுத்து சேர்கிறது எனலாம்.

சேர்கிறேன் (தன்வினை) — சேர்க்கிறேன்– (பிறவினை)

திருந்துவேன் (தன்வினை)— திருத்துவேன் (பிறவினை)

அசை ஒலி அழுத்தம் பொருட்சிறப்பு உள்ள பகுதிகளில் இடம் பெறுகின்றன. அதனல் பொருட் சிறப்பு உள்ள இடங்கள் கெடாமல் நிலைத்து நிற்க ஏனைய பகுதிகள் மறைந்து விடுகின்றன.

மலைநாடு — மலாடு, சோழநாடு — சோணடு.

போகிறுன் — போறுன்

தஞ்சாவூர் — தஞ்சை

---

* இளம்பூரணர் உரை — தொல். சூ. 76.

சீனமொழியில் அசை யழுத்தத்தை அடிப்படை ஒலியனாகவே (*phoneme*) கொள்வர். அசை யழுத்தத்தால் பொருளை முற்றிலும் மாறிவிடுவது அம்மொழி இயல்பு.

அம்மொழியில் 'மா' என்ற ஒரு சொல், ஒலி யழுத்தத்தால் பல பொருளைத் தந்துவிடும்.

2. குரல் அழுத்தம் (*pitch*)

சில ஒலிகளை ஒலிக்கும் பொழுது குரலில் அழுத்தம் தோன்ற ஒலித்தல் உண்டு. பொதுவாகக் குரல் அழுத்தம் மெய்யொலிகளில் இடம் பெறுகிறது என்பர். *

இது பொதுவாகக் குரல் வளையில் குரல் நார்களின் செறிவால் உண்டாகும் அசைவுகளின் காரணமாக உண்டாகின்றது என்பர்.† குரலில் எழும் இசையமைப்போடு கூடிய அசைவுகளைக் குரல் அழுத்தம் என்பர். ‡

3. வாக்கிய ஒலியழுத்தம் (*intonation*)

வாக்கிய ஒலி அழுத்தம் என்பது மொத்தமாகப் பரவலாக அமைவது. இந்த வாக்கிய ஒலி அழுத்தத்தால் பொருள் நிலை மாறுதல் உண்டு.

சாப்பிட்டாய்

சாப்பிட்டாய் ? — முன்னது செப்பு, பின்னது வினா.

---

* The stresses occur more or less simultaneously with the vowels, and the pitches simultaneously with all the others.

— Gleason, p. 169.

† The pith depends on the tension of the vocal cords and on the consequent rate of their vibration — Bloch and Trager out line. p. 35.

‡ Differences of pitch, that is, frequency of vibration in the musical sound of the voice.

— Bloomfield p. 114.

செப்பு வாக்கியம் வினா வாக்கியமாக இவ் ஒலி அழுத்தத்தால் மாறுவது உண்டு. இந்த ஒலி அழுத்தத்தை உணர்த்தவே வியப்புக்குறி வினாக்குறி முதலிய குறியீடுகள் மொழியில் இடம் பெறுகின்றன.

இவையல்லாமல் வேறு சில குறியீடுகளும் மொழியியலார் இம் மூவகை ஒலி அழுத்தங்கட்கு அமைத்துக் காட்டுவர். இம் மூன்றையும் உள்ளடக்கி ஒரே சொல்லால் எடுத்துக்கூறல் (*accent*) என்று குறிப்பர்.

பிரித்திசைத்தல் (juncture)

சொற்கள் பிரித்தும் சேர்த்தும் பொருளுக்கேற்றவாறு இசைக்கப்படுகிறது. நிலைமொழிச் சொல்லும் வருமொழிச் சொல்லும் சேரும்பொழுது சேர்த்துச் சொல்ல வேண்டிய இடத்தில் சேர்த்தும் பிரித்துச் சொல்லவேண்டிய இடத்தில் பிரித்தும் சொல்ல வேண்டியுள்ளது.

'செம்பொன்பதின்தொடி' என்ற தொடரைப் பொருள் கருதிச் செம்பொன் பதின்தொடி, செம்பு ஒன்பதின் தொடி என இரு பொருள் கொள்ளக் கிடக்கின்றது. இதனை இசையில் திரிதல் நிலைஇய பண்பு என்று தொல்காப்பியம் விளக்கும்.

> எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
> இசையில் திரிதல் நிலைஇய பண்பே.*

பொருள் கருதி ஒலிகளைச் சேர்த்து இசைத்தலும் பிரித்து இசைத்தலும் உண்டு.

> அவன் செய்து கொண்டுவந்தான்.
> அவன் செய்துகொண்டு வந்தான்.

இரண்டு தொடர்களிலும் பொருள் வேறுபாடு உளது.

* தொல்காப்பியம், சூ. 142.

இவ்வேறுபாட்டை உண்டாக்குவதும் சேர்ப்பதும் (*closed-juncture*) பிரிப்பதும் (*open juncture*) ஆகும்.

கூட்டொலி (*dipthong*)

இரண்டு உயிரொலிகள் ஒன்று கூடிச் சேர்ந்து இசைத்தலால் கூட்டொலி (*dipthong*) உண்டாகிறது. அ இ — ஐ என ஒலிக்கிறது; அ உ — ஔ என ஒலிக்கிறது.

இந்த இரண்டு ஒலிகளுள் ஒன்று மிகுதியான இசைமைத் திறன் (*sonority*) பெற்றும் மற்றொன்று குறைவான இசைமை (*sonority*) பெற்றும் விளங்குகின்றன.

மெய்யொலியை நோக்க உயிரொலிக்கு இசைமை மிகுதி. உயிரொலி யுள்ளும் நா மேல் எழுவதால் பிறக்கும் உயிரொலியைவிட நா கீழ் நிலையில் இருப்பதால் பிறக்கும் உயிரொலிக்கு இசை மிகுதி என்பர். அதனால் அ இ என்ற கூட்டொலியில் அகரத்திற்கு இசைமை மிகுதி இகரத்திற்கு இசைமை குறைவு. அய் என்று எடுத்துக் கொண்டால் அகரத்திற்கு இசைமை மிகுதி யகரத்திற்குக் குறைவு. அ உ என்ற கூட்டொலியில் அகரத்திற்கு இசைவு மிகுதி உகரத்திற்கு அதை நோக்கக் குறைவு; அவ் என்று எடுத்துக் கொண்டால் அவுக்கு இசைமை மிகுதி வகரத்திற்குக் குறைவு.*

---

* Sounds differ not only in quality but also in sonority. The sonority of a sound is determined primarily by the size of the resonance chamber through which the air stream flows. Thus a low vowel is more plainly audible than a higher vowel uttered with the same force; and any vowel is more sonorous than any consonant—out line. — p. 22.

செய்யுளில் ஒலியசை (*syllable*) இசைமை (*sonority*) காரணமாகவே பிரிக்கப்படுகிறது. இந்த இசைமையைப் பொதுவாக உயிர்களே உண்டாக்குகின்றன. அதனால்தான் அலகிடும்பொழுது உயிர் ஒலிகள் அலகு பெறும் என்பர். எனவே உயிர் ஒலிகளின் அடிப்படையிலேயே அசைகள் அமைக்கின்றனர்.

அகர இகரமும், அகர யகரமும் ஐ ஆகும் என்றும் அகர உகரமும் அகர வகரமும் ஔ ஆகும் என்றும் தொல்காப்பியம் கூறும்.*

அ இ — ஐ, அ உ — ஔ ; அய் — ஐ, அவ் — ஔ.

கூட்டொலி என்பதற்கு இசைமை மிகுதியான உயிர் ஒலியும் இசைமை குறைவான ஒலியும் சேர்ந்து அமைவது என்பர்.†

யகரமும் வகரமும் அவற்றின் உயிர்த்தன்மையை நோக்கி அரையுயிர் என்பர். அரையுயிர்த் தன்மை வாய்ந்த யகரமும் வகரமும் சேர்வதால் அவற்றிற்கு இசைமை குறைவு என ஆகிறது. முன்னுயிர் இசைமை மிகுதி பின் அரையுயிர் இசைமை குறைவு : அய், அவ். அதனால் இவ் வமைப்பைக் கூட்டொலி என்றல் பொருந்துகிறது.

இவற்றுள் ஒலியிசையில் எடுத்தல் முன்னும் படுத்தல் பின்னும் இருந்தால் அதனைத் தாழ்ச்சிக் கூட்டொலி (*falling diphthong*) என்பர். தாழும் ஒலி முன்னும் எடுப்பொலி பின்னும் இருந்தால் எழுச்சிக் கூட்டொலி (*rising diphthong*) என்பர்.

அய்யர் அவ்வை (அஇ; அஉ)— தாழ்ச்சிக் கூட்டொலி.

இ எமன், இ எந்திரம், (இஎ)— எழுச்சிக் கூட்டொலி.

---

* அகர இகரம் ஐகாரம் ஆகும். — சூ. 54.
அகர உகரம் ஔகாரம் ஆகும். — சூ. 55.
அகரத்து இம்பர் யவகரப் புள்ளியும்
ஐ ஔ என் நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும் — சூ. 56.
இளம்பூரணர் உரை 'யவ' 'ஐ ஔ' என்று இச் சூத்திரத்தை மாற்றித் திருத்திக் கொள்கிறது.

† A Combination of a syllabic and a non-syllabic vowel is a diphthong. — Bloch and Trager, p. 23.

'Say'—diphthong.

Saying — triphthong எனக் காட்டுவர். — Bloomfield. p. 124.

மூக்கொலிச் சாயல் பெறல் (*nasalization*)

உயிரொலியோடு மூக்கொலி சேர்ப்பதை மூக்கொலிச் சாயல் பெறுதல் என்பர்.

'வந்தான்' என்பது 'வந்தா०'

என இறுதியில் ஆகார உயிர் மூக்கொலி கலந்து ஒலிக்கப் படுகிறது. முழு னகரம் ஒலிக்கப்படுவது இல்லை.

'வந்தோம்' — வந்தோ० — இதில் மகரம் சரியாக ஒலிக்கப்படுவது இல்லை. ஓகார உயிர் மூக்கொலிச் சாயல் பெறுகிறது. இவற்றை அனுஸ்வாரம் என்றும் கூறுவர்.

பேச்சை ஆர்வத்தோடு கேட்கும் பொழுது 'ஊம்' என்று உடன் இசைத்துக் கூறும்பொழுதும்—'ஆம்' என்று ஒத்திசைக்கும் போதும் இறுதி மகரம் ஒலிக்கப்படுவது இல்லை. ஊ ஆ இவற்றோடு மூக்கொலி சேர்ந்து அவை மூக்கொலிச் சாயல் பெறுகின்றன.

சில உயிர்கள் மூக்கொலிச் சாயல் பெற்று நாளடைவில் அவற்றை அடுத்து மெல்லின மெய்கள் பெறுவதற்குக் காரணம் ஆகின்றன.

மோதிரம் — மோந்திரம் — ந் பெற்றது.
தொடு — தோண்டு — ண் ,,
மா + செடி— மாஞ்செடி — ஞ் ,,

மூச்சொலிகள் (*aspirates*)

குரல்வழியில் (*glottis*) உண்டாகும் உராய்வால் காற்றைச் செறிவாக வெளிவிட்டால் மூச்சொலி (*aspirate*) பிறக்கிறது.* இந்த மூச்சொலி தடை யொலிகளோடு சேரும் பொழுது அவை மூச்சுத்தடை யொலிகளாகின்றன. (*aspirated stops*) இவற்றுள் ஒலிப்புடைய தடை யொலியோடு சேர்ந்தால் ஒலிப்பு மூச்சுத் தடையொலி (*voiced aspirated*

* Aspiration involves a puff of breath. — Gleason p. 195.

stop) அமைகிறது. ஒலிப்பில் தடை ஒலியோடு சேர்ந்தால் ஒலிப்பில் மூச்சுத் தடையொலி (*voiceless aspirated stop*) ஆகிறது. வடமொழியில் *kh, gh, ph, bh* என ஒவ்வொரு வர்க்க எழுத்துக்களில் இரண்டாவதும் நான்காவதும் இவ் வமைப்பைக் கொண்டவை.

இது மெய்யொலிகளான தடை யொலிகளோடு சேராமல் தனித்து வரும்பொழுது 'ஹ' என்று அமை கிறது.

இவை வடமொழியில் எழுத்தொலிகளாகக் (*phonemes*) கொள்ளப்படுகின்றன. தமிழில் ஒரு சிலரின் உச்சரிப்பில் இருந்தாலும் இவை எழுத்தொலியாகக் (*phoneme*) கொள்ளப்படுவது இல்லை.

முறுக்கும் நெகிழ்வும் (*tension and laxity*)

உயிர்களின் ஒலிப்பில் முறுக்கும் உளது; நெகிழ்வும் உளது. குறில்உயிர்களில் முறுக்கும் நெடில்உயிர்களில் நெகிழ்வும் உள்ளன. அதனால் குறில் ஒலிப்பதற்கு அரு மையும் நெடில் எளிமையும் ஆகின்றன.

மொழிஒலிக் குறியீடுகள் (*phonetic script*)

மொழியில் வழங்கும் எல்லா ஒலிகளையும் விடாமல் அப் படியே எடுத்துக்காட்ட, குறிப்பிட்ட மொழியில் உள்ள எழுத்துக் குறியீடுகள் போதா. அதனால் எல்லா மொழி கட்கும் பொதுவாக அமையத்தக்க வகையில் நுட்பமாகவும் தெளிவாகவும் உணரத்தக்க ஒலிக் குறியீடுகளை மொழி யியலார் அமைத்துள்ளனர். இவை ஆங்கில எழுத்துக் குறியீடுகளைக் கொண்டு அவற்றின் அடிப்படையில் சில மாறுதல்களை ஏற்படுத்தி அமைக்கப் பெற்றவை. இக் குறியீடுகளில் குறிக்கப் பெறும் எழுத்தமைப்பை மொழி ஒலிக் குறியீடு (*phonetic transcription*) என்பர்.

இது பொதுவாக, பேச்சு வகைமொழிகளைக் (*dialects*) குறித்துக் காட்டப் பெரிதும் பயன்படுகிறது. உலகப் பொது மொழிஒலிக்குறியீடு (*international phonetic script*) ஒன்று அமைத்து அதன் அடிப்படையில் தேவையான மாற்றங்களைச் செய்துகொண்டு ஒலிகளைக் குறிப்பர்.

இவற்றைக் கையால் எழுதி ஒலி நுட்பங்களைக் காட்டலாமே யன்றி இவற்றைக் கொண்டு நூல்கள் அச்சிடுவது என்றால் முயற்சியும் செலவும் மிகுதி. மொழியியல் துறைக்கே இவ் ஒலிக்குறியீடுகள் பயன் உடையன. பிற துறைக்குத் தேவை யில்லாத ஒன்றாகும். ஒலி நுட்பங்களைக் காட்டவே இவை பயன்படும்.

எழுத்தொலிக் குறியீடுகள் (*phonemic script*)

ஒவ்வொரு மொழியும் தனித்தனி எழுத்தொலிக் குறியீடுகளைப் பெற்றே விளங்குகிறது. இதைப் பிற மொழியினரும் அறிய ஒரு பொதுக் குறியீடு தேவையாக உள்ளது. அதனால் ஆங்கில வடிவ (*roman script*) எழுத்துக்களைக் கொண்டு ஏற்ற சில மாற்றங்களைப் புகுத்தி எந்த மொழியின் ஒலிகளையும் குறிப்பிடுவர். இவ்வாறு பிற மொழிகளின் எழுத்துக்களைப் பெயர்த்து அவ்வெழுத்து உணர்த்தும் ஒலிகளைக் குறிப்பதற்கு 'எழுத்துக் குறியீட்டு அமைப்பு' (*phonemic transcription*) என்பர். தமிழில் 'அ' வுக்கு நேராக *a*; இ — *i*, க — *k*, ப — *p* முதலியன அமைத்தல் இவ் வகையாகும். இதனைச்சுருக்கமாக 'மொழி மாற்றி எழுதுதல்' (*transliteration*) என்றும் கூறுவர்.

பேச்சு மொழியின் நுட்பங்களைக் காட்டுவது முன்னது; இலக்கிய மொழியாகிய எழுத்து மொழியின் வடிவை அறிய அறிகுறியாக அமைவது பின்னது. மொழி ஒலிக் குறியீடு கற்பதற்கு அரியது; மிகுந்த பயிற்சி வேண்டும். எழுத்தொலிக் குறியீடு கற்பதற்கு மிகவும் எளியது.

இரண்டும் இரண்டுவித பயன்களை உடையன : மொழியியலார் பேச்சு மொழியின் ஒலி நுட்பத்தைக் காட்ட மொழி ஒலிக்குறியீட்டையும் இலக்கிய மொழியின் சொல் வடிவத்தைக் காட்ட எழுத்தொலிக் குறியீட்டையும் எழுத்து முறைகளாகக் கொள்வர். இவ்வெழுத்து முறைகளால் பிற மொழிகளை அறியவும் அவற்றைத் தெரிவிக்கவும் இயல்கின்றது.

ஒலியன்கள்

மொழியில் வழங்கும் அடிப்படை ஒலிகளை எழுத்தொலி கள் அல்லது ஒலியன்கள் (*phonemes*) என்பர்.* இந்த ஒலியன்களைத் தேர்ந்து அமைப்பதில் சில அடிப்படைகள் உள்ளன.

மொழியில் பல ஒலிகள் உள்ளன. அவ்வளவும் எழுத் தொலிகளாகக் கொள்ளப்பட மாட்டா. அவற்றுள் அடிப் படையானவற்றையே எழுத்தொலியாகக் கொள்வர். பல நுட்ப வேறுபாடுகள் கொண்ட ஒலிகளுள் ஒன்றை நிலை நிறுத்தி அதனை எழுத்தொலியாகக் கொண்டு அந்த எழுத்தொலியைக் கொண்டே ஏனைய இன ஒலிகளையும் குறிப்பர். எழுத்தொலிகள் குறைவாக இருப்பதால் மொழியை உணர்த்த அவை சிறந்த கருவியாக அமைகின் றன. எண்ணிக்கை குறைவதால் கற்பதற்கும் அவற்றை ஆள்வதற்கும் உணர்வதற்கும் எளிமையாகின்றன. பேச்சு மொழியில் பல்வேறு நுட்பங்களோடு வழங்கும் ஒலி வேறு பாடுகள் கொண்ட ஒலிகளுக்கு இடையில் மாறாததும் அடிப்படையானதும் ஆன ஒலிகளைத் தேர்ந்து கொள்வர். இவற்றையே ஒலியன் (*phoneme*) என்பர்.†

---

* ஒலியன் என்பது phoneme என்ற பொருளில் கலைக்களஞ்சியம் வழங்கு கிறது — ஒலி + அன் (அன் - சொல்லாக்க விகுதி).

† It is only by discovering the significant features of any utterance, the constants in a mass of irrelevent variables, that we can lay the foundation for linguistic study. — Bloch and Trager, p. 39.

மொழியில் வழங்கும் ஒலிகளின் ஆராய்ச்சி வேறு; அவற்றுள் அடிப்படை ஒலியன்களை ஆராயும் ஆராய்ச்சி வேறு. மொழிக்கலையின் அடிப்படையே மொழி ஒலிகளின் இயல்பை உணர்வது மட்டுமல்லாமல் அவற்றில் உள்ள அடிப்படை ஒலியன்களை அமைப்பதுமாகும்.

ஒலிகளின் செயல்

மொழியின் ஒலியன்களை உணர்வதற்கு முன் பொதுவாக ஒலிகளின் செயல் இன்னது என்பதை அறிய வேண்டியுள்ளது. இரண்டு பேச் சொலிகளை (*utterances*) வேறுபடுத்திக் காட்டுவதே ஒலியின் செயலாகும். *

காலணா
நாலணா

இவ் இரண்டு பேச்சொலிகளுக்கும் உள்ள வேறுபாட்டை உண்டாக்குவது 'க்' 'ந்' என்ற ஒலிகளாகும். எனவே 'க்' 'ந்' என்ற இவ் ஒலிகள் மாறுவதால் அப் பேச் சொலிகளின் பொருளே வேறுபட்டு விடுகிறது. அதனால் இவை இரண்டு பேச்சொலிகளில் பொருள் வேறுபாடுகாட்ட இன்றியமையாதன ஆகின்றன.

சூழ்நிலை தேவை

இரண்டு பேச் சொலிகளுக்கும் வேறுபாடு உணர அதற்குத் தகுந்த சூழ்நிலை தேவையாக உள்ளது. இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் சூழ்நிலை அவசியமாகிறது.

'பழம்' என்பதைப் 'படம்' எனவே ஒலித்துவரும் குழந்தை 'படத்தில் பழம் இருக்கிறது' என்பது போன்ற தொடரைக் கேட்கும் பொழுதே 'பழம்' வேறு 'படம்' வேறு

---

* Througout the study of phonology, it must be remembered that sounds and differences between them have one and only function in language : to keep utterances apart. — Hocket p. 15.

என்று உணர்கிறது. அது முதற்கொண்டு 'ட' வேறு 'ழ' வேறு எனத் தெளிகிறது.

பழம்
படம்

'ழ' 'ட' என்பன இரண்டு பேச்சொலிகளை வேறுபடுத்து கின்றன. அதனால் இவை பொருள் உணர்ச்சிக்கு அடிப் படையான ஒலிகள் ஆகின்றன. இவை இரண்டும் மொழிக்கு அடிப்படையான ஒலிகள் என்று உணரப்படு கிறது. இவ்வாறு உறழ்வதால் உணரப்படும் தெளிவான ஒலிகளையே ஒலியன்கள் (*phonemes*) என்பர். * அதனால் ஒலியன் என்பது ஒரு மொழியில் வழங்கும் தெளிவான ஒலியின் சிறு அளவு என்பர். பேச்சொலியின் ஒரு சிறு பகுதியாகவும் அதே சமயத்தில் பொருள் மாற்றம் உண் டாக்கக்கூடிய தனி ஒலியாகவும் ஆகிறது.

உறழ்வு இணைகள் ***(minimal pairs).***

இவ்வாறு ஒலியன்களைப் பிரித்து அறியப் பெரும் பான்மை ஒத்துச் சிறுபான்மை வேறுபடும் பேச்சொலிகள் தேவையாகின்றன.

மடம்	பழம்	அவன்
படம்	படம்	அவள்

மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் இவ்வாறு வேறுபடும் இடங்களைக் காணமுடிகின்றன.

* We may define a phoneme as a minimum feature of the expression system of a spoken language by which one thing that may be said is distinguished from any other thing which might have been said.

— Gleason p. 9.

A minimum unit of distinctive sound-feature is a phoneme.

— Bloomfield p. 79.

Acc 16158

T.3071

நீண்ட ஒலித் தொடர்களை உறழ்ந்து பார்ப்பதனுல் ஒலியன்களை எளிதில் அறிய முடிவதில்லை. முற்றிலும் வேறுபடும் ஒலி யீட்டத்தை உறழ்வதாலும் பயன் இல்லை.

அவன் எங்கே போனுன்.

கடை இரண்டு உள்ளன — நீண்ட தொடர்கள்.

கல் அழி

முள் மடு — முற்றிலும் வேறுபடுவன.

இவ்வாறு உறழ்ந்து பார்ப்பதால் தெளிவான மாறுபாடு (*contrast*) கிடைக்காது. எனவே குறைந்த அசைகளைக் கொண்டு பெரும்பான்மை ஒத்து ஓர் ஒலியால் மட்டும் வேறுபடும் இணைகளை ஒப்பிட்டு உறழ்வு காண்பதால் ஒலியன்களைப் பிரித்து அறிய முடிகிறது. இவ் இணைகளையே உறழ்வு இணை (*minimal pair*) என்பர்.

மாறுபாடு (*contrast*).

உறழ்வு இணைகளில் மாறுபாடு ஏற்படும் பொழுது ஒவ்வோர் ஒலியும் வேறு என உணரப்படுகிறது; ஒவ்வொன்றிற்கும் தனிச்செயலும் தனிப்பொருள் உணர்த்தும் அமைப்பும் உளது என்று அறியப்படுகிறது.

ஆங்கிலத்தில்,

Pin *Pill*

Bin *Bill*

இவ் இரு பேச்சொலிகட்கும் பொருள் வேறுபாடு *p*, *b*, என்ற ஒலி மாற்றத்தால் உண்டாகிறது. அதனுல் அம் மொழியில் அவை ஒலியன்களாகக் கொள்ளப்படுகின்றன.

தமிழில்,

பி (*p*) ன்

பி (*b*) ன்

என்று தனித்தனியே ஒலித்துக் காண்போம். எப்படி ஒலித்தாலும் பொருள் மாற்றம் இல்லை.

ப (*p*) வும்
ப (*b*) வும்

இவற்றையும் எப்படி ஒலித்தாலும் பொருள் மாற்றம் இல்லை. அதனால் இவை வெவ்வேறு தனி ஒலியன்களாகக் கொள்ளப்படவில்லை.

குறிலும் நெடிலும்

தமிழில் உள்ள குறில் உயிரும் நெடில் உயிரும் தனித் தனி ஒலியன்களாகவே கொள்ளப்படுகின்றன. தமிழில் பொருள் மாற்றம் அமையத்தக்க வகையில் ஒலிகளுள் மாறுபாடு அமைவனவற்றையே ஒலியன்களாகக் (எழுத்தொலிகளாக) கொண்டுள்ளனர்.

அலை	உடல்	என்	கொள்
ஆலை	ஊடல்	ஏன்	கோள்

இவ்வாறு உறழ்வதால் குறில்ஒலிகளும் நெடில்ஒலிகளும் தனித்தனியே பொருள் உணர்த்தும் தன்மையால் தனித்தனி ஒலியன்கள் ஆகின்றன. பிறப்பு முயற்சியில் குறிலுக்கும் நெடிலுக்கும் வேறுபாடு இல்லை; மாத்திரை வகையாலேயே வேறுபாடு உளது. பொருள் உணர்த்துவதிலும் வேறுபாடு உளது. அதனால் தமிழில் நெடில் ஒலிகள் தனித்தனி ஒலியன்களாகக் கொள்ளப்படுகின்றன.*

மாற்றொலிகள் *(allophones)*.

ஆங்கிலத்தில் *p*, *b*, என்பன தனி ஒலியன்கள். தமிழில் இவை தனி ஒலியன்கள் அல்ல. ஏனெனில் இவற்றை உறழ்ந்து பார்த்தால் பொருள் மாறுபாடு (*contrast*) ஏற்

---

* வடமொழியில் ஏ ஓ — என்பன நெடிலாகவே கொள்ளப்படுகின்றன. எ ஒ என்ற ஒலியன்கள் இல்லை. இரண்டுக்கும் பொருள் மாற்றம் அந்த மொழியில் இல்லை. அதனால் தனி ஒலியன்களாக அமையவில்லை. வடமொழியை நோக்க எ ஒ இவ்விரண்டையும் சிறப்பொலியன்கள் என்று நன்னூலார் கூறுவர்.

படவில்லை. எனினும் '*b*' என்ற ஒலியும் தமிழில் இல்லாமல் இல்லை. காண்ப, செய்ப, உணர்ப, தின்ப, அப்லை, பாபம் முதலிய இடங்களில் 'ப' ஒலி காணப்படுகிறது.

மொழிக்கு முதலில் *p* ஒலியும் இடையில் *b* ஒலியும் இருக்கக் காண்கிறோம்.* இவ்வாறு இடத்திற்கு ஏற்பத் தனி ஒலி அமைந்துள்ளதே யன்றி இவ்விரண்டு ஒலிகள் ஒரே இடத்தில் வந்து பொருள் மாற்றம் பெறவில்லை என்பது தெரிகிறது. அதனால் இடமாற்றத்தால் ஒலி மாற்றம் உண்டாகிறது என்று உணர்கிறோம். பிற ஒலியிலும் இவ்வுண்மையைக் காணலாம்.

கண் — *k* ஒலி
பகல் — *g* ஒலி
தலை — *t* ஒலி
அதனை — *d* ஒலி

எனவே *k* வுக்கு *g* மாற்றொலியாகிறது.
p க்கு *b* ,,
t க்கு '*d*' ,,

வேறு வகையாகச் சொன்னால் க (*k*) என்ற ஒலியனுக்கு க (*k*), (*g*) என்ற மாற்றொலிகள் உள்ளன எனலாம். எனவே இவற்றை *k* = | *k* |, | *g* | எனக் குறிப்பர். இவ்வாறே *p* = | *p* |, | *b* | எனக்குறிப்பர். இவற்றுள் '*b*' என்றோ '*p*' என்றோ எதை வேண்டுமானாலும் ஒலியனாகக் கொள்ளலாம். சிறப்புப் பற்றியோ விருப்புப் பற்றியோ ஒன்றனை ஒலியன் என்று குறிப்பிட்டால் அதுவும் ஏனையவும் அதன் மாற்றொலியாகக் கொள்வர். எனவே ஒலியன் என்பது பல மாற்றொலிகளை உள்ளடக்கியது என்றும் விளக்கம் கூறுவர்.†

* காண் + ப் + அ, செய் + ப் + அ, உணர் + ப் + அ — தின் + ப் + அ, அப் + அலை, பாப் அம் — பகரம் இடையிலேயே வந்தது எனக் கொள்ளல் வேண்டும்.

† 'A phoneme is a class of allophones' — Gleason p. 163.

இந்த மாற்றொலிகளில் இரண்டு சிறப்பியல்புகள் உள்ளன. ஒன்று ஒலி இயல்பால் பெரும்பான்மை ஒத்து விளங்குதல், மற்றொன்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடத்தில் வருதல்.

'*p*' என்பதும் '*b*' என்பதும் பெரும்பாலும் ஒத்துவிளங்குகின்றன. எனினும் ஒன்று ஒலிப்பில் ஒலி (*voiceless*) மற்றொன்று ஒலிப்பு ஒலி (*voiced*). இவை பெரும்பான்மை இயல்பால் ஒத்துச் சிறிதளவே வேறுபடும் ஒலிகளாக இருக்கின்றன. இவ்வாறு ஒத்து இயங்குவதை ஒலி ஒப்புமை (*phonetic similarity*) என்பர். உவமை என்பது முழுவதும் ஒத்துவருவது அன்று. பெரும்பான்மை ஒத்துச் சிறுபான்மை வேறுபடுவதேயாகும்.

இத்தகைய ஒலிகளை உறழ்வு காணும் பொழுது இவற்றை ஐய உறழ்வுகள் (*suspicious pairs*) என்பர். இந்த ஐய உறழ்வுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மாறுபாடு ஏற்பட்டால் (ஆங்கிலத்தில் *pin - bin* போல) அவற்றைத் தனி ஒலியன்களாகக் கொள்வர். இவ்வாறு ஓர் இடத்தில் இரண்டு ஒலிகள் வந்தாலும் பொருள் மாறாமல் இருந்தால் அவற்றை ஒலியன்களாகக் கொள்ளார். வகையொலிகளாகவே (*variation*) கொள்வர். அவை ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வகையாக ஒலிக்கும் தன்மைபெற்று இடத்திற்கு ஏற்றவாறு மாறி ஒலிக்கும் தன்மை பெறும் பொழுது அவற்றை மாற்றொலியாகக் (*allophone*) கொள்வர். இடத்திற்கு ஏற்றவாறு தனி ஒலி பெறுதலை இடமாற்றம் (*complementary distribution*) என்பர். ஒலிகள் இடமாற்றம் பெறுவது என்பது ஒவ்வொரு மாற்றொலியும் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திலேயே வருதல் என்ற வரையறையைப் பெறுதலாகும். *

* Sounds are said to be in complementary distribution when each occurs in a fixed set of contexts in which none of the others occur.

— Gleason p. 164.

எனவே மாற்றொலிகள் என்பவற்றிற்கு இரண்டு அடிப்படைகள் தேவை : ஒன்று ஒலி ஒப்புமை (*phonetic similarity*) ; மற்றொன்று இன்ன இடத்தில் இன்ன ஒலியோடு அமைதல் என்ற இடமாற்றம் (*complementary distribution*). இவ்விரண்டும் பொருந்தி இருந்தால் அவற்றை மாற்றொலிகள் (*allophones*) என்பர்.*

சில ஒப்புமை ஒலிகள் இடமாற்றத்தால் மாறி ஒலித்து மாற்றொலிகள் ஆகின்றன. சில ஒரே இடத்தில் இருந்து மாறி ஒலித்தலும் உண்டு. ஒரே இடத்தில் பலவகையாக மாறி ஒலித்தாலும் பொருள் மாறாமல் இருந்தால் அதனை வகைஒலி (*free variation*) என்பர்.

எனவே (*1*) ஒரே இடத்தில் மாறி ஒலித்துப் பொருள் மாறினால் அவை தனி ஒலியன்கள் (*phonemes*) ஆகின்றன; (2) ஒரே இடத்து மாறி ஒலித்துப் பொருள் மாறாமல் இருந்தால் அவை வகை யொலிகள் (*variations*) ஆகின்றன ; (3) வெவ்வேறு இடத்தில் வெவ்வேறுவகையாக ஒலித்து இவற்றின் இன ஒப்புமை ஒலிகளோடு உறழும்பொழுது பொருள் மாறாமல் இருந்தால் மாற்றொலிகள் (*allophones*) ஆகின்றன.

வகையொலி *(free variation)*

ஒரே இடத்தில் (மொழிக்கு முதலில் இடையில் அல்லது கடையில்) ஒரு குறிப்பிட்ட ஒலி பல நுட்ப வேறுபாடுகளோடு ஒலிப்பைப் பெறுகின்றன. ஓர் ஒலி இப்படித்தான் ஒலிக்க வேண்டும் என்று வரையறை செய்ய முடியாது. ஒரு குறிப்பிட்ட ஒலியை ஏறத்தாழ ஒலித்தல்

---

* Any sound or sub-class of sounds which is in complementary distribution with another so that the two together constitute a single phoneme, is called an allophone of that phoneme. A phoneme is therefore, a class of allophones. — Gleason, p. 163.

இயற்கை.* அது இன்னொரு ஒலியன் என்ற அளவுக்கு மாறுதபடி ஒலிக்கும் அளவு அது வகையொலியாகக் கொள்ளப்படும். அது வகையொலி என்ற நிலை கடந்து வேறு ஓர் ஒலியனாகவும் மாறிவிடுதல் உண்டு.

சில மாற்றொலிகள்

தமிழில் *k* என்பது மொழிக்கு முதலில் ஒரு வகையாகவும் இடையில் ஒரு வகையாகவும் ஒலிக்கப் பெறுகிறது. இவற்றை *k* வின் மாற்றொலிகளாகக் கொள்வர்.

க (*k*) = | க *k* | , | க *g* | என ஓர் ஒலியனின் மாற்றொலிகளாக ஏனையவற்றைக் கொள்வர். அதே போல,

ப (*p*) = | *p* | , | *b* |

ச (*c*) = | ஸ | , | ச | , | ஜ |

ட (*t*) = | *d* | , | *tt* |

த (*t*) = | த*t* | , | த*d* |

என ஒன்றன் மாற்றொலிகளாக ஏனையவற்றைக் கொள்வர். ட (*t*) மொழிக்கு முதலில் வருவது இல்லை. இடையில் மட்டும் ட (*d*) என்ற ஒலியோடு வருதல் உண்டு. சில இடங்களில் நீட்டிப்பு ஒலி உண்டு (பாட்டு — ட் ட்) இங்கு வல்லொலி இடம் பெறுகின்றது. அதனால் | *d* | , | *tt* | மாற்றொலிகள் ஆகின்றன.

சிலர் மெல்லொலி அடுத்து இவை வரும்பொழுது நுட்ப வேறுபாடு இருப்பதைக் கண்டு தனித்துப் பிரித்துக்

---

* The simplest of the patterns of distribution is free variation. The human vocal apparatus operates with an incredibly high degree of precision, but still is for from exact. If the word 'key' is pronounced, even by a single speaker, a hundred or so times and all the measurable features of each k, are measured, it will be found that no two are exactly alike.
— Gleason, p. 163.

காண்பர். *b* என்ற ஒலிக்கும் மெல்லெழுத்து அடுத்து வரும் '*b*' க்கும் நுட்ப வேறுபாடு காண்பர். அதே போல் (*p*) ஒலிக்கும் நீட்டிக்குமிடத்து வரும் *pp*, ஒலிக்கும் நுட்ப வேறுபாடு காண்பர். அப்பொழுது அவர்கள் கொள்கைப்படி

ப *p* = | *p* |, | *b* |, | *mb* |, | *pp* |

என மாற்றொலிகளாகக் குறிப்பிடுவர்.

க = | *k* |, | *g* |, | *ng* |, | *kk* |
ச = | ஸ |, | ச |, | ஜ |, | ச்ச் |
ட = | ட |, | ண்ட் |, | ட்ட் |
த = | தt |, | தd |, | ந்த் |, | த்த் |

என மாற்றொலிகளாகக் கொள்வர்.

டாக்டர் கால்டுவெல் தமிழில் சிறப்பாக வல்லொலி (**surd**), மெல்லொலி (**sonant**) என்ற இரண்டு நுட்ப ஒலி வேறுபாடுகளையே காண்பர். அவர் இடத்திற் கேற்றவாறு வல்லொலி பெறுதலையும் மெல்லொலி பெறுதலையும் சுட்டிக் காட்டுவர். இவற்றை வல்லொலி மெல்லொலி மாற்றம் (***convertibility of surds and sonants***) என்ற பகுதியில் ஆராய்வர்.*

மொழிக்கு முதலில் வன்மையாக ஒலித்தலும் இடையில் தனித்து வரும் பொழுது மென்மையாக ஒலித்தலும் உண்டு என்பர். இரட்டித்து வருமிடத்து மொழிக்கு இடையிலும் வன்மையாகவே ஒலிக்கும் என்பர். தமிழ் ஒலிவிதி முறைப்படி வட மொழிச் சொற்களும் முறை மாறி ஒலித்

---

* அவர் தமிழ் மொழிக்கும் சித்திய மொழிகட்குமே இவ்வாறு மாறி ஒலிக்கும் தன்மை உண்டு என்பர். ஆனால் உலகத்தில் எல்லா மொழிகளிலும் இப்பண்பு உண்டு என்பதை மொழியியலார் காட்டுகின்றனர். இடந்தோறும் மாறி வரும் ஒலிகளை மாற்றொலிகளில் அடக்கிவிடுவர்.

தலைக் காட்டுவர். '*danta*' — என்பது '*tandum*' என மாறி ஒலிக்கப்படுகிறது. *

முதல் ஒலியும் சார்பொலியும்

முதல் ஒலிகள் தனித்து நின்று பொருள் வேறுபாடு உணர்த்த வருவன; சார்பொலிகள் பொருள் வேறுபாடு உணர்த்த வருவன அல்ல. இவை அடுத்துவரும் மெய் யொலிகள் பெறும் ஒலி நுட்பத்தையே காட்டுவன. அதனால் இவை சார்பொலிகள் எனப்படுகின்றன.

ஆய்தம்

அஃது

அ து — இரண்டுக்கும் பொருள் ஒன்றே. 'ஃ' சேர்வ தால் பொருள் மாற்றம் உண்டாகவில்லை. ஆய்தம் அங்கே தகரத்தில் உள்ள நுட்ப ஒலிச்சேர்க்கையைக் காட்டுகிறது.

அது படம்

அஃது ஊர் — முதலில் தகரம் உரசு கலக்காமல் ஒலிக் கிறது; அடுத்த தகரம் உரசுபெற்று ஒலிக்கிறது. தகரம் இடத்திற்கேற்ற நுட்ப ஒலி வேறுபாடு பெறுகிறது. அந்த நுட்ப ஒலியைப் பிரித்துக்காட்டுவது ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி. எனவே ஆய்தத்திற்குத் தனிப் பொருள் உணர்த்தும்ஆற்றல் இல்லை. பிறவற்றைச் சார்ந்து வருகிறது.†

---

* Caldwell p. 138.

† Key — 'k' வில் 'h' என்ற சார்பொலி உள்ளது.
Sky — 'k' வில் 'h' என்ற சார்பொலி இல்லை என்பர்.
Pin — 'p' யில் 'h' என்ற சார்பொலி உள்ளது.
Spin — 'p' யில் 'h' என்ற சார்பொலி இல்லை.
அதேபோல 'அது படம்' என்பதில் தகரத்தோடு ஃ ஒலித்துணை இல்லை. 'அஃது ஊர்' என்பதில் தகரத்தோடு ஃ ஒலித்துணை உளது.

குற்றியல் உகரம்

அரங்க் (உ)
பெரித் (உ)
சார்ப் (உ)

என ஒலித்துணையாக இவ் உகரம் சேர்கிறது ; வன்தொடர், மென்தொடர், உயிர்த்தொடர், நெடிற்றொடர், ஆய்தத் தொடர், இடைத்தொடர் என்று கூறப்படுகின்ற பல தொடர்களில் வல்லெழுத்தை ஊர்ந்து துணைஒலியாக வருகிறது.

இது வருமொழியில் மெய் வரும்பொழுது நிலை பெறுகிறது ; உயிர் வரும்பொழுது மறைந்துவிடுகிறது.

சுக்கு + கணை — சுக்குக்கணை — உகரம் நிலைபெறுகிறது.

சுக்கு + அழகு — சுக்கழகு — உயிர் மறைகிறது.

அது + உலகம் — அது வுலகம் — உகரம் முற்றிய லுகரமாதலின் மறையவில்லை.

வண்டு + இன்கால் — வண்டின் கால் — குற்றிய லுகரமாதலின் மறைந்துவிட்டது.

அதனல் இந்த உகரம் ஒலித்துணையாக வந்ததே அன்றிப் பொருள் புலப்பாட்டிற்கு அடிப்படை அன்று எனலாம்.

குற்றியல் இகரம்

குற்றியல் உகரத்தின் திரிபாகப் புணர்மொழிகளில் குற்றியல் இகரம் வருகிறது.

வரகு + யாது — வரகியாது.

வருமொழி யகரத்தின் சார்பால் நிலைமொழி உகரம் திரிகிறது.

கேண்ம்+யா — யகரத்தின் சார்பால் நுட்பமான இகர ஒலி சேர்ந்து ஒலிக்கிறது. இவ் விரண்டு எடுத்துக்காட்டு களிலும், வரும் யகரச் சார்பால் இகரம் ஒலித் துணையாக வருகிறது. 'வரகு' என்பதில் ஏற்கனவே வன்தொடர்ச் சார்புபற்றி வந்த உகரத்தின் திரிபே இகரம் ஆகும்.

கேண்ம் யா

கேண்மி யா — இவ் விரண்டையும் உறழ்ந்தால் இகரத்திற்குப் பொருட்சிறப்புத் தரும் தனித் தன்மை இல்லை. அதனால் அது ஒலியன் அன்று. வெறும் துணை ஒலியே ஆகிறது.

இவற்றை ஆராய்ந்தால் சார்பொலிகள் என்று தொல் காப்பியர் குறிப்பிடும் குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் என்ற இம் மூன்றும் சில தனித் தன்மைகள் பெற்று விளங்குகின்றன.

1. இவை சொற்களுக்குப் பொருள் மாற்றம் தர வில்லை. (அது — அஃது).
2. பிற ஒலிகளின் திரிபாகவும் அமைகின்றன. (வரகு+யாது — வரகியாது ; முள்+தீது— முஃடீது).
3. குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பிறவற்றைச் சார்ந்து வருகின்றன.

(அ) உகரம் தனிக்குறில் அல்லாத மற்றைய தொடர் களில் வல்லெழுத்து ஊர்ந்து வருகிறது.

(ஆ) இகரம் யகரத்திற்கு முன் வருகிறது.

(இ) ஆய்தம் குறிலுக்குப் பின்னும் உயிரொலி தொடரும் வல்லொலிக்கு முன்னும் வரு கிறது.

அஃதூர் ; கஃறீது.

அறிவன (முடிவு)

1. இவற்றை ஆராய்ந்தால் இவற்றிற்குத் தாமாக ஒலிக்க வேண்டிய சூழ்நிலை இல்லை.

2. பிறவற்றைச் சார்ந்தே பிறக்கின்றன. பிற மெய் யொலிகட்கு ஒலிநுட்பம் தரச் சாரும்ஒலிகளாகவே அமை கின்றன.

அதனால்தான் இவை சார்பொலிகள் எனக் குறிப்பிடப் படுகின்றன.*

இவை அடிப்படை ஒலிகள் அல்ல துணை யொலிகளே என்று காட்டற்கு அவற்றின் வரிவடிவும் ஓரளவு சான்று தருகிறது. குற்றியலுகரமும் அற்றென மொழிப † எனப் புள்ளி பெறுதலைக் கூறுவர். ஆய்தத்தை முப்பாற் புள்ளி எனக் குறிப்பிடுவர்.‡ குற்றியல் இகரமும் புள்ளி பெற்றன எனக் கருதுவோரும் உளர். §

நன்னூலார் கொள்ளும் கருத்து வேறு.|| தொல்காப் பியனார் காட்டும் நுட்பங்களை ஒட்டி இவர் சார்பெழுத் துக்கள் என்று குறிப்பிடவில்லை. மெய்யையும் உயிரையும் முதலாகக் கொண்டு ஏனையவற்றை அவற்றின் சார்பொலி களாகக் கொள்வர். உயிர்மெய்யையும் ஒரு தனி எழுத் தாகவே குறிப்பிட்டு அதனையும் சார்பெழுத்து என்பர்.

---

* சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும். — தொல், சூ. 101.

† தொல். சூ. 105.

‡ ,, ,, 2.

§ மயிலைநாதர் விருத்தியுரை, சூ. 97.

|| உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகியஇஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும். — நன். சூ. 60.

மாத்திரை குறைந்த குறுக்கங்களை எல்லாம் சார்பெழுத்துக்களாகக் கொள்வர். இவர் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் தொல்காப்பியர் காட்டும் நுட்ப அடிப்படையில் அமைந்தவை அல்ல.

இவற்றுள் குற்றியல் உகரம் ஒன்று மட்டும் உகரத்தின் மாற்றொலியாகக் (*allophone*) கொள்ளக் கிடக்கிறது எனலாம்.

மாற்றொலி என்பதற்கு இரண்டு அடிப்படைகள் தேவை. (1) இன ஒலி ஒப்புமை (*phonetic similarity*) (2) இடமாற்றம் (*complementary distribution*).

குற்றியல் உகரம்

இதுவும் ஏனைய உகரமும் ஒலியமைப்பில் பெரிதும் ஒத்துள்ளன. குற்றியல் உகரத்திற்கு இதழ்குவி முயற்சி இல்லை. பிற உகரத்திற்கு இதழ்குவி முயற்சி உண்டு. இதுவே வேறுபாடு. மாத்திரை வேறுபாடு ஒலித் தன்மையை மாற்றுவது அன்று. அதனால் அதை எடுத்துக் கொள்வதற்குத் தகுதி இல்லை.

குற்றியல் உகரம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மட்டும் வரும் என்ற நியதி உள்ளது. இந்த இரண்டு காரணங்களால் இது மாற்றொலி (*allophone*) எனலாம்.

உ = | உ |, | குறில் உ | எனக் குறிக்கலாம். ஆனால், தொல்காப்பியனார் இதனை மாற்றொலி என்ற பொருளில் சார்பு ஒலி எனக் கூறவில்லை என்பது ஏனைய இரண்டும் இவ்வியல்பைப் பெறாமல் இருப்பதிலிருந்து அறிய முடிகிறது.

குற்றியல் இகரம்

ஏனை இகரத்திற்கும் இதற்கும் மாத்திரையில் மட்டும் வேறுபாடு உளது. இதனை ஒலியியல்பு வேறுபாடாகக் கொள்ளார். அதனால் இரண்டும் ஒரே ஒலிகளாம். ஆகவே

இன ஒற்றுமை என்ற பேச்சே இல்லை. ஒன்று மாத்திரை குறைவு மற்றொன்று மிகுதி என்ற வேறுபாட்டைத் தவிர பிறப்பியல்பால் வேறுபாடு இல்லை. இன ஒலி ஒற்றுமை ஏற்படாததால் இவற்றை மாற்றொலிகளாகக் கொள்வதற்கு இல்லை.

ஆய்தம்

இதற்குக் குறிப்பிட்ட இடச் சார்பு உண்டு. ஆனால் இனமான ஒலி இல்லை. அதனால் இதனை மாற்றொலி (*allophone*) என்று கூறுவதற்கு இல்லை. ஆய்தத்தை வகரத்தின் திரிபாகக் கொள்வர்.

அவ்து — அஃது.

ஏனைய சில மெய்யொலிகளும் ஆய்தமாகத் திரிகின்றன.

முள் + தீது — முஃடீது.
அல் + திணை — அஃறிணை.

எனவே இவை பிற மெய்யொலிகளின் திரிபாகக் கொள்ளக் கிடக்கிறது.

இது வல்லெழுத்தோடு சார்ந்து வரும்பொழுது தனக்கெனத் தனித்தன்மை இல்லாமல் பிறவற்றிற்கு நுட்ப ஒலிச் சேர்க்கையாகவே அமைந்துவிடுகிறது. இது சேர்ந்து வரும் வல்லெழுத்தை உரசெழுத்து (*fricative*) ஆக்கிவிடுகிறது. ஆய்தம் அடுத்த வல்லெழுத்து ஒரு வகையாகவும் ஆய்தம் அடுக்காத வல்லெழுத்து ஒரு வகையாகவும் ஒலிக்கிறது. அதனால் வல்லெழுத்தில் இருவகை மாற்றொலிகள் (*allophones*) ஏற்படுகின்றன. ஒன்று வெறும் தடையொலி மற்றொன்று உரசொலி. இரண்டும் மாற்றொலிகளாகி விடுகின்றன.*

---

* வகர ஈற்றுச் சொற்கள் பல வழங்கி இருக்கவேண்டும். இவற்றின் முன்னே வல்லெழுத்து வந்தால் வகரம் வெறும் உயிர்ப்பாகி ஆய்தமாகிப் பின் வரும் வல்லெழுத்தை உரசெழுத்தாக்கி விடுகிறது.

— தெ. பொ. மீ. கலைக்களஞ்சியம், பக்கம் 467.

த = | த |, | ஃத |

க = | க |, | ஃக |

ப = | ப |, | ஃப |

ட = | ட |, | ஃட |

ற = | ற |, | ஃற |*

ச = | ச |, | ஃச |

என மாற்ருெலிகள் தோன்றக் காரணம் ஆகின்றது. எனவே ஆய்தம் மாற்ருெலி என்பதை விட அது சாரும் வல்லொலிகளே மாற்ருெலிகள் என்பது பொருந்துவதாகிறது.†

pin, key என்பவற்றில் நுட்பமாகச் சார்ந்து கிடக்கும் மூச்சொலியைப் போன்று தமிழில் குற்றியல் உகரம் குற்றியல் இகரம் ஆய்தம் என்ற மூன்றும் வெறும் சார்பொலிகளாகவே அமைந்துள்ளன. இந்த நுட்பத்தைக் கூர்ந்து கண்ட தொல்காப்பியஞர்,

'தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்'‡

என இவற்றைக் குறிப்பிடுகின்ருர் எனலாம்.

---

* றகரம் தொல்காப்பியர் காலத்தில் தடையொலியாகும்.

† Pin — Spin.
Key — Sky.

pin, key — இவற்றுள் உள்ள 'h' மாற்ருெலியல்ல, தனித்து வரும் 'p' யும் மெய்யொலி அடுத்து வரும் p யும் மாற்ருெலிகள் ஆகின்றன. அதேபோல k வும் மெய்யொலி அடுத்துவரும் k வும் மாற்ருெலிகள் ஆகின்றன.

‡ சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்...... — தொல். சூ. 101.

மொழி மரபு

ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு வகையான மெய்யொலிகளும் உயிரொலிகளும் அமைந்திருப்பது மொழியின் ஒலிஇசைப் போக்குக்கு அடிப்படைக் காரணமாகும். அதுவே அம்மொழியின் மரபாகவும் விளங்குகிறது. ஒலிகள் ஒன்றன்பின் ஒன்று தொடர்வதில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மரபு உண்டு.

மெய்யொலிகள்

வட மொழியில் உள்ள மூச்சொலிகளோ (*aspirates*) ஆங்கிலத்தில் உள்ள உரசொலிகளோ (*fricatives*)* அரபியில் உள்ள *q* போன்ற உள்நா ஒலிகளோ (*uvular stops*) தமிழில் இல்லை. வாயில் மட்டும் பிறப்பதும் முயற்சி மிகவும் தேவை யில்லாததும் ஆகிய தடையொலிகள் இருப்பது தமிழின் எளிமைக்கும் இனிமைக்கும் காரணம் ஆகின்றன.

மேலும் வல்லொலி ஆறு மெல்லொலி ஆறு இடை ஒலி ஆறு என ஒரே அளவாக அமைந்திருப்பது இதன் சிறப்பியல்பாகும். ஆறு வல்லொலிகட்கு ஏற்ப ஆறு இன மெல்லொலிகள் அமைந்திருப்பது இதன் மற்றொரு சிறப்

* உரசொலிகளில் இருவகை உண்டு. ஒன்று 'f' போன்றவை. மற்றொன்று 's' போன்றவை. 's' போன்றவற்றை Sibilants என்று கூறுவர். ஆங்கிலத்தில் 'f' தனிச் சிறப்பு. 's' ஒலி மிகுதியாகப் பயில்கின்றது.

பியல்பாகும்.* சிறப்பாக னகரத்தைத் தொடர்ந்து றகர மெய் வரல் தமிழின் ஒலிச் சிறப்பாகும். கன்று, நன்று, தின்று, என்று, வென்று—முதலிய பல சொற்கள் தமிழில் உள்ளன. இதனால் தமிழுக்கு இனிமை உண்டாகிறது.

உயிரொலிகள்

தமிழில் உயிரொலிகள் பிறக்கும் நிலைகள் தெளிந்த இடங்களைப் பெற்றுள்ளன.

	முன்	நடு	பின்
மேல் :	இ		உ
இடை :	எ	அ	ஒ
கீழ் :	×		×

நா மேல் எழுந்த நிலையில் முன்னோக்கிச் செல்வதால் இகரம் பிறத்தலும் அதே நிலையில் பின்னோக்கிச் செல்வதால் உகரம் பிறத்தலும் என இரண்டு நிலைகளும், அவையே சிறிது நா உயரம் குறைந்து இடைநிலையில் முன்னோக்கிச் செல்வதால் எகரமும் பின்னோக்கிச் செல்வதால் ஒகரமும், அதே இடைநிலை உயரத்தில் நா நடுநிலையில் அமைவதால் அகரம் பிறப்பதும் தமிழ் உயிர் ஒலிகளின் சிறப்பியல்பாகும். இதைப்போன்ற தெளிவான கோணங்களை ஐரோப்பிய மொழிகளில் காணமுடியாது. இவ்வாறு தெளிந்த கோணங்களைப் பெறுவதால் மொழிஒலிகளில் ஓர் ஒழுங்கும் அதனால் இனிமையும் அழகும் தோன்றுகின்றன.

---

* நெடுங்கணக்கில் இவற்றை அமைத்திருப்பதிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. பின்னண்ணம் தொடங்கி வாயிதழ் வரை முன்னோக்கி அமைந்துள்ளன: கங — பின்னண்ணம்; சஞ — இடையண்ணம்; டண — இடையண்ண நாமடி; தந — பல்; ப, ம — இதழ்.

றன தனியாக வைக்கப்பட்டுள்ளது : இவை தமிழுக்கேயுரிய சிறப்பொலிகள். ஆதலின் இவற்றைப் பிரித்து இறுதியில் வைத்திருக்க வேண்டும். இவை அண்பல் ஒலிகள்.

தமிழில் இறுதியில் வல்லொலியில் முடிவது இல்லை. உயிரொலிகளைக் கொண்டே வல்லொலிகள் முடிகின்றன. வல்லொலியை இசைக்கவே குற்றியல் உகரங்கள் மொழியில் இடம் பெறுகின்றன.

தமிழ் ஒலி இனிமை

இறுதியில் உயிர்களில் முடியும் அன்றி உயிரோடு ஒத்த நெகிழ்வொலிகளான (*resonants*) மெல்லின இடையின ஒலிகளைக் கொண்டு முடியும். அதனால் இறுதியில் ஒலி யசைவு (*vibration*) ஏற்பட்டு மொழிக்கு இனிமை தருகிறது.

சில மெய்யொலிகளின் அருகில் சில மெய்யொலிகள் வாரா என்ற நியதி உண்டு. அப்பொழுது சாரியைகள் வந்து தமிழ் ஒலிஇசைச் சிறப்பைக் காக்கின்றன.

மரம் + கு — ம் அருகில் க் வராது. அதனால் அத்துச் சாரியை வருகிறது — மரத்துக்கு.

கண் + கு — கண்ணிற்கு — இன்சாரியை.

இப்பொழுது 'கண்ணுக்கு' — என உகரம் ஒலிநயம் பற்றி அமைகிறது.

தனிக்குறில் முன் ர ழ வராது என்பது தமிழ் ஒலிச் சிறப்பு அமைப்பு * அதனால் அவை உகரம் பெறுகின்றன அன்றி முதல் நீள்கின்றன.

ஒர் — ஒரு — ஓர்; பெர் — பெரு — பேர்; கர் — கரு — கார்.

அர் — அரு — ஆர்; கொழ் — கொழு — கோழ்.

---

* ரழத் தனிக்குறில் அணையா. — நன். சூ. 119.

ரகார ழகாரங் குற்றொற் ருகா. — தொல். சூ. 49.

ஒலி நிலைகள்

மொழியில் ஒவ்வொரு இடத்திலும் சில குறிப்பிட்ட ஒலிகளே வரும் என்பர். அவற்றை முதல்நிலை, இறுதி நிலை, இடைநிலை மெய்ம்மயக்கம் எனக் குறிப்பிடுவர்.

முதல் நிலை ஒலிகள்

தொல்காப்பியர் காட்டுவன :

1. உயிரொலிகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும். *

2. மெய்யொலிகள் உயிரொலிகளின் துணைகொண்டே மொழிக்கு முதலில் வரும். மெய் வந்தால் அதனை அடுத்து வேறு ஒரு மெய் தொடராது. உயிரே தொடர்ந்து வரும். †

3. இவற்றுள் க த ந ப ம என்னும் ஐந்தெழுத்தும் எல்லா உயிரொடும் பொருந்தி வரும். ‡

4. ச வ ஞ ய என்பன சில உயிர்களோடுமட்டும் வரும்.§

5. குற்றியல் உகரம் நுந்தை என்ற சொல்லில் வரும். ||

---

* பன்னீ ருயிரும் மொழி முதலாகும். — தொல். சூ. 59.

† உயிர்மெய் யல்லன மொழிமுதலாகா. — தொல். ,, 60.

Double or treble consonants at the beginning of syllables, like str in strength, are altogether inadmissible — Caldwell. p. 183.

‡ க த ந ப ம வெனும் ஆவைந்து எழுத்தும் எல்லா உயிரொடுஞ் செல்லு மார் முதலே. — சூ. 61.

§ சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே. — 62.
உ ஊ ஒ ஓ வென்னும் நான்குயிர்
வ என் எழுத்தொடு வருதல் இல்லை. — 63.
ஆ எ ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய. — 64.
ஆவோ டல்லது யகரம் முதலாது. — 65.

|| குற்றியல் உகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும். — 61.

இறுதிநிலை ஒலிகள்

தொல்காப்பியர் காட்டுவன :

1. எல்லா உயிர்களும் மொழிக்கு இறுதியில் வரும். *

2. அவற்றுள் சில உயிர்கள் சில மெய்களோடு மட்டும் வந்து இறுதியில் வரும்.

(அ) ஔ — க வ இவற்றோடு வரும்.† கௌ, வௌ.

(ஆ) எ என்ற உயிர் தானே இறுதியில் வரும்; அன்றி மெய்யோடு வராது. ‡

(இ) நகரத்தோடு மட்டும் ஒகரம் ஈறுகவரும். வேறு வகையாக வராது §

(ஈ) ஏ ஒ — ஞகாரத்தோடு வருதல் இல்லை. ‖

(உ) உ ஊ — நவ இவற்றோடு வாரா. ¶

(ஊ) உ சகரம் மீது வரும்பொழுது இரண்டு சொற்களில் மட்டும் வரும். உசு, முசு. ⌘

(எ) உகரம் பகரத்தோடு ஒரே சொல்லில் மட்டும் வரும் 'தபு'. ⊕

---

* உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும். — 69.

† க வ வோ டியையின் ஔவும் ஆகும். — 70.

‡ எ என வரும்உயிர் மெய்யீ றாகாது — சூ. 71.

§ ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே. — சூ. 72.

‖ ஏ ஒ எனும் உயிர் ஞகாரத் தில்லை. — ,, 73.

¶ உ ஊ காரம் நவவொடு நவிலா. — ,, 74.

⌘ உச்சகாரம் இருமொழிக் குரித்தே. — ,, 75.

பசு என்பது ஆரியச்சிதைவு; கச்சு குச்சு என்பன குற்றியல் உகரம் பெற்றன. — நச். உரை.

⊕ உப்ப காரம் ஒன்றென மொழிப. — சூ. 76.

மொழி இறுதி மெய்கள்

1. ஞண நமன யரல வழள — இப்பதினொரு மெய்யும் ஈருக வரும் என்பர். *

2. அவற்றுள் ங் இந்த இருமொழிக் கண் மட்டும் வரும். பொருந் வெரிந். †

3. ஞ் — ஒரே மொழிக்கண் மட்டும் வரும். உரிஞ். ‡

4. வகரம் இந்த நான்கு மொழிக்கண் மட்டும் வரும்.
அவ் இவ் உவ் தெவ் §

நன்னூலார் மாறுபடும் இடங்கள்

முதல் நிலை

1. 'ஙு' வும் மொழிக்கு முதலில் வரும் என்பர். சுட்டையும் வினவையும் ஒட்டி இது மொழிக்கு முதலாகும் என்பர்.||

2. யகரம் தொல்காப்பியர் சுட்டிய ஆகாரத்தோடு அன்றி அ உ ஊ ஓ ஔ இவற்றோடு மொழிக்கு முதலாக வரும் என்பர். 卐

---

* ஞணநம னயரல வழள வென்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி. — சூ. 78.

† உச்ச காரமொடு நகாரஞ் சிவணும். — சூ. 79.

‡ உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே. — சூ. 80.

§ வகரக் கிளவி நான்மொழி யீற்றது. — ,, 81.

|| சுட்டியா எகர வினவழி யவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே. — சூ. 106.

'ஙனம்' என்ற சொல்லே நன்னூலார் படைப்பு என்பர். பழந்தமிழ் — "யாங்கனம்" — ஙனம் என்ற சொல்லே கிடையாது.

卐 அ ஆ உ ஊ ஓ ஔயம்முதல். — சூ. 104.
இவை பெரும்பாலும் வடசொற்களாக விருக்கின்றன.

3. ஞகரம் ஆ எ ஒ இவற்றோடு அன்றி அகரத்தோடும் வரும் எனல். *

4. சகரம் எல்லா உயிரோடும் வரும் எனல். †

மொழி இறுதி நிலைகள்

நன்னூலார் மாறுபடும் இடங்கள் :

1. தொல்காப்பியர் குறிப்பிடும் ஒலிகளையே மொழி இறுதி ஒலிகளாகக் குறிப்பிடுவர். தொல்காப்பியர் குற்றியல் உகரத்தை வெறும் சார்பொலியாகக் கொண்டு அதற்குத் தனிச் சிறப்புக் கொடுக்கவில்லை. நன்னூலார் அதற்குத் தனிச் சிறப்புக் கொடுத்து அதுவும் மொழிக்கு ஈற்றில் வரும் என்பர். இதுவே வேறுபாடாகும். ‡

2. தொல்காப்பியர் காட்டும் சில சிறப்பு இடங்களை இவர் குறிப்பிடவில்லை.§

இடைநிலை மெய்ம் மயக்கம்

1. டறலள முன்னர் கசப மயங்கும். ||

---

* அ ஆ எ ஒவ்வொடு ஆகும் ஞம்முதல். —நன். சூ. 105.
ஞெமலி என்பது காட்டுவர்.

† நன்னூலார் காலத்தில் சகரம் எல்லா உயிர்களோடும் வரும். தொல்காப்பியர் அ ஐ ஒள இவற்றோடு வருதல் இல்லை என்பர். சங்ககாலத்தில் அகரத்தை முதலாக உடைய சொற்கள் பல உள்ளன. இதனால் சங்ககாலம் தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டது என்பதற்கு இதுவும் ஒரு சான்றுகிறது.

‡ ஆவி ஞணநமன யரலவழள மெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே. — நன். சூ. 107.

§ "எ ஒ ஞகரத்தோடு வாரா ; உ ஊ நவவொடு வாரா ;
சு இரு மொழிக்கு உரித்து ; பு ஒரு மொழிக்கு உரித்து."
என்ற செய்தியை நன்னூலார் வற்புறுத்தவில்லை.

|| டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
க ச ப வென்னும் மூவெழுத் துரிய. —தொல். சூ. 23.

2. ளள முன்னர் கசபக்களையன்றி யவ வும் தோன்றும். *

3. மெல்லின மெய்கள்முன் தம் வல்லின மெய்கள் தோன்றும். †

4. ணன முன் கசஞபமயவ ஏழும் உரிய. ‡

5. ஞநமவ முன் ய நிற்கும். §

6. ம முன் பகரயகரமே யன்றி வ வும் தோன்றும். ||

7. ய ர ழ முன் மொழிக்கு முதலாகும் என விதித்த கதநபம, சவஞய, ங என்ற இப்பத்தும் வரும். ⁂

8. மேலே காட்டிய பதினன்கும் (டறலள, ஙஞணநமன, வ, யரழ) பிறவற்ருேடு மயங்குமாறு கூறப்பட்டது. அவற்றுள் ரழ நீங்கலாக ஏனைய பன்னிரண்டும் மேலே குறிப்பிடாத கசதப என நான்கும் ஆகப் பதினறு மெய் யொலிகள் தம்மொடு தாமே மயங்கியும் வரும். எனவே கசதப பிறவற்ருேடு மயங்கி வாரா என்பதாம்.

9. ரழ தம்மொடு தாம் மயங்கா.

---

* அவற்றுள்,
ளளஃகான் முன்னர் யவவுந் தோன்றும். — சூ. 24.

† ஙஞண நமன வெனும் புள்ளி முன்னர்த்
தத்த மிசைக ளொத்தன நிலையே. — ,, 25.

‡ அவற்றுள், ணனஃகான் முன்னர்க்
க ச ஞ ப ம ய வவ் வேழு முரிய. — ,, 26.

§ ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே. — 27.

|| மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும். — 28.

⁂ யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். — 29.

நன்னூலார் கருத்து

இடைநிலை மெய்ம்மயக்கத்தில் நன்னூலாருக்கும் தொல்காப்பியனாருக்கும் கருத்து வேறுபாடு காணப் பட்டிலது. இவற்றை நன்னூலார் வேறு வாய்பாட்டுச் சூத்திரங்களால் விளக்குகின்றாரே யன்றிக் கருத்து வேறு பாடு இல்லை. இவற்றைச் சுருக்கி உடனிலை மெய்ம்மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என ஒரு சூத்திரத்தில் காட்டுவது அவர் சிறப்பாகும்.*

தம்மொடு தாம் மயங்குவனவற்றை உடனிலை மெய்ம் மயக்கம் எனவும் தம்மொடு பிற மயங்கும் தொடர் நிலையை வேற்றுநிலை மெய்ம்மய்க்கம் எனவும் கூறுவர்.

இவை பொதுவாகத் தமிழ் ஒலிகள் இசைக்கும் திறன் ஆகும். இவையே யன்றி வேறு சில சிறப்பு ஒலி யிசைப் புகள் தமிழ் மொழியில் அமைந்துள்ளன.

உயிர் தொடரா மெய்கள் உடன் நிற்றல்

ய ர ழ ஒற்றின் முன் க ச த ப ங ஞ ந ம வந்து ஈரொற்றாகும். அவற்றின் பின் உயிர் தொடர்தல் இல்லை; மெய்யே தொடரும்.

வேய்ங்குழல்; பாழ்ங்கிணறு; வேர்க்குறை.

ய ர ழ என்பன மெல்லிய நெகிழ்வொலிகள். அதனால் இவற்றைப் பிறமெய்கள் தொடர மொழி இடம்கொடுக்கிறது.

சார்பொலிகள்

குற்றியல் இகரம் குற்றியல் உகரம் ஆய்தம் என்ற மூன்றும் நுட்ப ஒலிகளாக அமைந்து பிற ஒலிகளைச் சார்ந்து நிற்கின்றன.

---

* கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகும்இவ் விருபால் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கு அளவின்றே. — சூ. 110.

அளபெடை

ஒலியமைப்பில் இசை நோக்கத்திற்காக நீட்டித்து ஒலித்தல் உண்டு. அதனால் மொழியின் அசைகள் (*syllable*) இசை கெடாமல் அமைகின்றன.

போலி

னகரமும் மகரமும் சில சொற்களில் மாறி வரல் உண்டு. இவற்றைப் போலி என்பர். ஈற்று மெல்லொலிகள் சரியாக ஒலிக்கப்படாமையால் இத்தடுமாற்றம் ஏற்படுகின்றன. சில சமயங்களில் அவை முழுமையாக ஒலிக்கப்படாமல் மூக்கொலி சேர்ந்த உயிர் ஒலியாக அவற்றின் ஈறுகள் ஒலிக்கப் படுகின்றன. மரம் — மரன் — மரo அவற்றை அனுஸ்வாரம் என்று கூறுவர். சில அஃறிணைச் சொற்களில் 'ன' மாறாது.*

மாத்திரை

குறில் நெடில் அளபெடை இவை ஒலிக்கும் அளவால் மாறுகின்றன. செய்யுளின் ஓசை நயத்திற்கு ஏற்றவாறும் ஒலி எளிமைக்கு ஏற்றவாறும் ஒலிகள் அளவிற் குறைந்து குறுக்கங்களாக ஆகி விடுதலும் உண்டு. அவற்றை ஐகாரக் குறுக்கம் ஒளகாரக் குறுக்கம் மகரக் குறுக்கம் என்பர். கண்ணிமைக்கும் நேரத்தையும் நொடிக்கும் நேரத்தையும் ஒரு மாத்திரையின் அளவு என்பர். ‡

---

* மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன. — தொல். சூ. 82.

மகரம் பன்மையை யுணர்த்தியும் னகரம் ஒருமையை உணர்த்தியும் வந்தன என்பர். தொல்காப்பியர் காலத்தில் இவ்வேறுபாடு மறைய மகரமாகவும் னகரமாகவும் இரு ஒலிகளைப் பெற்று இவை முடிந்தன என்று கருதுவர்.
— தெ. பொ. மீ. கலைக்களஞ்சியம், 'தமிழ்.'

‡ கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே —தொல். சூ. 7.

ஒலிமரபின் உறுதிப்பாடு

மொழியின் ஒலிமரபுகள் பொதுவாக மாறுவதில்லை. தொல்காப்பியர் காலத்து ஒலிமரபிற்கும் நன்னூலார் காலத்து ஒலிமரபிற்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. சிற்சில மாறுதல்களே பெற்றிருக்கின்றன. பிறமொழிச் சொற்கள் கலப்பால் சில புதுச்சொற்கள் மொழியில் இடம் பெற்றதால் ஒரு சில மாறுபாடுகள் எழுந்தன. தொல்காப்பியர் காலத்திற்கும் நன்னூலார் காலத்திற்கும் இடையில் கால எல்லை பெரிது என்றாலும் அவை அடைந்த மாற்றங்கள் மிக மிகக் குறைவு. பொதுவாக ஒரு மொழியின் ஒலியமைப்பு எளிதில் மாறாது என்பர். சொற்களை மாற்றிப்பேச முடியும்; இலக்கண அமைப்பையும் மாற்றி அமைத்துப் பேச முடியும். பேச்சொலிகளைச் சிறிது மாற்றினாலும் பொருள் மாற்றம் உண்டாகிறது; பிறர் நகைக்க ஏதுவாகிறது. அதனால் ஒரு மொழியின் ஒலியமைப்பைத் தெளிவாக உணரவேண்டும் என்பர்.*

சொற்கள் மாறும் இயல்பின. பேசுவோர் வேறு சொல்லையும் பயன்படுத்தலாம். இலக்கண அமைப்பைக்கூட மாற்றி ஒலித் தொடர்களை அமைக்கலாம். செய்வினையைச் செயப்பாட்டு வினையாக அமைக்கலாம்; முற்றை எச்சமாக ஆக்கிவிடலாம். ஆனால் பேச்சொலிகளில் ஓர் ஒலிக்கு மாறாக மற்றோர் ஒலி ஒலிக்க முடியாது. தவறாக ஒலித்தால் பொருளுணர்ச்சி கெட்டுவிடுகிறது. அதனால் மொழியின் ஒலிநுட்பத்தை அறிதலும் அதன் மரபுப்படி ஒலித்தலும் தேவை ஆகும்.

---

* A speaking knowledge of a language requires very close to a one hundred per cent control of the phonology and control of from fifty to ninety per cent of the grammar, while one can frequently do a great deal with one per cent or even less of the vocabulary.—Gleason, p. 252.

அதனால் பிறமொழி ஒலிகள் எளிதில் ஒரு மொழியில் புகுவதற்கு மொழி இடம் கொடுப்பதில்லை. பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டாலும் அவற்றைத் தமிழ் ஒலியமைப்பிற்கு ஏற்றவாறு மாற்றியே கொள்வர்.*

பிறமொழி ஒலிகளை மாற்றாமல் ஏற்றுக்கொண்டால் அவற்றைத் தற்சமம் என்றும் மாற்றி அமைத்துக் கொண்டால் அவற்றைத் தற்பவம் என்றும் கூறுவர். தமிழ் ஒலிமரபுக் கேற்ப வடமொழிச் சொற்கள் மாறுதல் இயற்கை.

1. ககரத்தின் பின்னால் பிற மெய்யொலிகள் தொடர்தல் இல்லை. அதனால் அவை மாறுகின்றன.

பக்தி — பத்தி

முக்தி — முத்தி

2. மொழிக்கு முதலில் தனி மெய் தொடங்குவதில்லை. அதனைத் தொடர்ந்து உயிர் வர இடங் கொடுக்குமேயன்றி மெய் நிற்க இடங் கொடுப்பதில்லை. அதனால் இடையில் உயிர் வருகின்றது.

க்ரமம் — கிரமம்

ச்ரமம் — சிரமம்

3. இணைப்பொலிகள் (*clusters*) தமிழில் வருவது இல்லை. அதனால் மற்றொரு மெய்யையும் உயிரையும் துணையாகப் பெறுகின்றன.

நாட்யம் — நாட்டியம்

சத்ரம் — சத்திரம்

---

* வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. —தொல். சூ. 401.

T. 3071

4. மொழிக்கு முதலாகா என்ற ஒலிகள் வரும்பொழுது அவற்றைத் தவிர்க்க அ, இ, உ ஆகிய உயிர்கள் முன் இடம் பெறுகின்றன.

அரங்கன்	இராமன்	உரோமம்
	இலாபம்	உலோபம்
	இயக்கன்	

5. வடமொழிக்கே உரிய தனிஒலிகள் தமிழ் ஒலிகளாக மாறுகின்றன.

பங்கஜம்	— பங்கயம்	— ஜ	— ய
ஸித்தி	— சித்தி	— ஸ	— ச
ஆஸனம்	— ஆதனம்	— ஸ	— த
ஹரன்	— அரன்	— ஹ	— அ
மோஹம்	— மோகம்	— ஹ	— க
பக்ஷம்	— பக்கம்	— க்ஷ	— க்க்
டாகூர்	— தாகூர்	— ட	— த (ட மொழிக்கு முதலில் வருவது இல்லை)
நெஹ்ரு	— நேரு	— முதல் நீள்கிறது.	

பிறமொழியில் தமிழ்

பிறமொழியாளரும் தமிழ் ஒலியை அவர்கள் மரபுக்கேற்ப மாற்றுதல் உண்டு.

திருவல்லிக்கேணி — *Triplicane*
தஞ்சாவூர் — *Tanjore*
திருச்சிராப்பள்ளி — *Trichinopoly*

---

* ரவ்விற்கு அ, இ, உ; லவ்விற்கு இ, உ; யவுக்கு இ ஒன்றே.
— நன்னூல் சூ. 148.

நீண்ட சொல்லமைப்பு

தமிழில் சொற்கள் நீண்ட வடிவாக விளங்குவதற்குக் காரணம் அதன் ஒலிமரபைக் காப்பாற்றச் சேரும் ஒலித் துணைகளும் சாரியைகளும் ஆகும்.*

பெருகுகிறது, மரத்திற்கு.

மொழிக்கு ஒரு மரபு

ஒரு மொழிக்கு விளங்கும் அடிப்படைஒலிகளும் அவற்றின் இயக்கமும் அவை தொடருமாறும் அவை பெறும் இடங்களும் ஒரு மொழியின் அடிப்படை மரபாகும். இதனை ஒலிமரபு (*phonemic pattern*) என்பர். ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொருவகை மரபு அமைதல் இயல்பாகும். தமிழமொழியின் ஒலிமரபையே தொல்காப்பியர் மொழி மரபு என்ற இயலில் காட்டுகின்றார்.

---

* In consequence of these peculiarities of syllabation and the agglutinative structure of its inflexions, the Tamil language appears very verbose and lengthy when compared with Sanskrit and the languages of Europe. —Caldwell p. 184.

ஒலி மாறுதல்கள்

ஒருவர் ஒலிப்பது போலவே மற்றொருவர் ஒலிப்பதில்லை. ஒருவர் ஒலிப்பதிலேயே அவர் மீண்டும் ஒலிப்பதில் சிறு வேறுபாடு அமைகிறது. இச்சிறு வேறுபாடுகள் பெருகி ஓர் ஒலியன் மற்றொரு ஒலியனை மாறிவிடுகிறது. மேலும் நா முதலிய உறுப்புக்கள் சரியாகப் பொருந்தாத காரணத்தாலும், கற்று அறிவதில் உள்ள குறைபாட்டாலும், கற்றோர் பேசும் மொழியை மற்றோர் பின்பற்றும் பொழுது சரியாக உணர மாட்டாமையாலும், ஒலியை எளிமைப்படுத்தும் நோக்கத்தாலும், ஒலியில் மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது.

ஓரினமாதல் (*assimilation*)

அம்மாற்றங்களுள் ஓரினமாதல் அடிப்படையாகும். இவை உடன்முயற்சி ஒலிப்புகளால் (*co-articulation*) பெரும்பாலும் ஆகின்றன. இவை மூன்று வகைப்படும். வருவொலித் திரிபு (*progressive*) நிலைஒலித் திரிபு (*regressive*) இரு ஒலியும் திரிதல் (*reciprocal*).

இவையேயன்றி மற்றொரு வகையாகவும் இவற்றின் இயல்பைக் காண்பர். அண்மை ஒலித்திரிபு (*contiguous*) சேய்மை ஒலித்திரிபு (*noncontiguous*) எனக்காண்பர். மெய்யொலித் திரிபுகள் பெரும்பாலும் அண்மை ஒலித்திரிபுகளாக அமையும். ஓரின உயிராதல்(*vowel harmony*) சேய்மை ஒலித்திரிபாக அமைகிறது. அவை பின்வருமாறு :

1. அண்ண ஒலியாதல் (*palatalization*)

முயல் + த் + இ — முயற்சி இகரம் நோக்கித் தகரம் திரிந்தது.

கயீ — செய் — யகரம் நோக்கிக் ககரம் திரிந்தது.

2. பல்லின ஒலியாதல் (*dentalization*)

நீர் + து — நீந்து. தகரம் நோக்கி ரகரம் 'ந்' ஆகத் திரிந்தது.

சார் + து — சாத்து — ர் — த் ஆகத்திரிந்தது.

3. இதழொலியாதல் (*labialization*)

கால் + பு — காம்பு — ல் — ம்; பகரம் நோக்கித் திரிபு
பாய் + பு — பாம்பு — ய் — ம் ,,

4. நாமடி ஒலியாதல் (*retroflexion*).

பாண் + து — பாடு — த — ட; ணகரம் நோக்கித்திரிபு
உண் + து — உண்டு — த் — ட் ,,
காழ் + து — காடு — த் — ட்* ,,
கோழ் + து — கோடு — த் — ட் ,,

இறந்த கால இடைநிலை த் — ட் ஆனது இவ்விதி பற்றியே யாகும். உண் + த் — உண்டு, கண் + த் — கண்டு, கொள் (ண்) — த் கொண்டு, (த் — ட்).

5. அண்பல் ஒலியாதல் (*alveolarization*)

சொல் + து — சோறு — த் — ற்
தின் + து — தின்று
கொல் (ன்) + து — கொன்று.

இவ்விதிபற்றியே இறந்த கால விகுதி ற் அமைகிறது. இவை ஐந்தும் அண்மை ஒலித் திரிபுகளாம் (*contiguous*).

* அகக்காழ் — மரம், புறக்காழ் — புல் — தொல் (மரபியல்).

6. உயிரொலி இயைபு* (*vowel harmony*).

இதுவும் ஓரினமாதலின்பாற்படும். தொடரும் ஒலிகள் ஒரே இனமாகின்றன.

சாகிறான் — சாகறான், சாவறான். (பேச்சு மொழி).
மைத்துனி — மச்சினிச்சி - ,,
இவை சேய்மை ஒலித் திரிபுகளாம் (*noncontiguous*).
இவை ஆறும் ஓரினமாதல் ஆகும்.

அசைகெடல் (*haplalogy*)

ஒரே வகையான அசையொலிகள் ஒரு தொடரில் இருந்தால் அவற்றுள் ஓர் அசையை விடுத்து ஏனைய ஒன்றனை மட்டும் கூறல் உண்டு. இரண்டு அசைகளையும் ஒலித்துவிட்டது போன்ற உணர்வே இதற்குக் காரணம் ஆகின்றது. †

அருமருந்தன்ன — அருமந்த
அவாவல் — ஆவல்

உயிர் தோன்றல் (*anaptyxis*)

தொல்காப்பியனார் மொழிமரபியலில் சில ஒலிகளே சில ஒலிகளைத் தொடரும் என்று காட்டியுள்ளார். தமிழ்மொழியின் ஒலிமரபிற்கு மாறி இரண்டு மெய்யொலிகள் தொடர்வதை மொழி ஏற்காது. அதனால் தமிழ் மரபிற்கு ஏற்ப ஒலிக்க மெய்களுக்கு இடையில் உயிர் தோன்றுகிறது.

* தெலுங்கு மொழியில் இவ் வமைப்பு மிகுதி.

தானிகி, இண்டிகி, பிட்டகு — இகரம் நோக்கி நான்காம் வேற்றுமை 'கி' ஆக அமைகிறது. அகரத்தில் பழைய 'கு' நிலை பெற்றுள்ளது.

† இதனை மரூஉ முடிபு என்பர்.

வடமொழிச் சொற்கள் உயிர்ஒலி இடையில் பெற்றுத் தமிழில் இயங்குகின்றன.

வாக்யம் — வாக்கியம் — இ பெற்றது.
பத்மம் — பதுமம் — உ ,,
ரத்னம் — அரதனம் — அ ,,

மொழி மரபிற்காக மட்டுமன்றி ஒலிநயம் காரணமாகவும் உயிர் இடையில் தோன்றுதல் உண்டு.

செல் + கிறு ஆன் — செல்லுகிறான்—உகரம் தோன்றியது
சொல் + வ் ஆன் — சொல்லுவான் ,,
உண் + வி — உண்ணுவி — ,,

மொழி முதல் துணை (*prothesis*)

வடமொழி ஒலிகள் ர, ல, ய என்பன தமிழில் அ இ உ பெற்று மொழி முதலில் வருகின்றன. அரங்கன், இலக்குவன், இயக்கன்.

உயிர் கெடல் (*syncope*)

மருளும் — மருண்ம் உகரம் கெட்டது.
போலும் — போன்ம் ,,

மெய் கெடல் (*rejection of radical consonant*)

சிறப்பாக க, ழ, ர கெடுதல் உண்டு.

ஆகும் — ஆம் — உயிர்மெய் இரண்டும் கெட்டன
போகும் — போம் — ,,
பொழுது — போது — ழ கெட்டது
ஒருத்தன் — ஒத்தன் — (பேச்சுமொழி) 'ரு' கெட்டது
பார்ப்பான் — பாப்பான் — ,, ர் ,,
அரும்பல் — அம்பல் — ரு கெட்டது
உருண்டை — உண்டை — ,,

முதல் நீளல் *(lengthening of the initial vowel)*

பல சொற்களில் முதல்உயிர் நீட்சி பெறல் உண்டு. அதனால் இருவகை வடிவங்கள் மொழியில் இடம் பெறுகின்றன.

அகழ்	— ஆழ்	நிழல்	— நீழல்
பகல்	— பால்	கொழு	— கோழ்
பொழுது	— போது	ஒரு	— ஓர்
தொகுப்பு	— தோப்பு	அரு	— ஆர்

சில பண்புச் சொற்களில் இம்மாறுதல்கள் நிகழ்கின்றன. இதனை நன்னூலார் ஆதி நீடல் என்பர்.

பசு + இலை—பாசிலை
அரு + இடை—ஆரிடை

உயிர் இடம்பெயரல்: *(euphonic displacement of vowels)*

ஒரு சொல்லின் முதல் உயிர்ஒலி விடப்பட்டால் அது அடுத்த அசையில் இடம் பெற்றுவிடுகிறது.*

எனக்கு — னேக்கு (பேச்சு மொழி)
இரண்டு — ரெண்டு (,,)
வீட்டில் — வீட்லெ (இல்—லெ) பேச்சு மொழி

ஒலி இடம்பெயரல்: *(metathesis)*

சில சொற்களில் ஒலி யிடம் பெயர்ந்தாலும் பொருள் மாறாமல் இருக்கின்றது.† இல்வாய் — வாயில்.

---

* தெலுங்கு மொழியில் இம் மாறுதல் மிகுதி.

உரம் — ரொம்மு (மார்பு)
உகிர் — கோரு (நகம்)
அவர் — வாரு
இவர் — வீரு
உள் — லோ

† நன்னூலார் இவற்றை இலக்கணப் போலி என்பர்.

தசை	—	சதை	நுதற்கண்	—	கண்ணுதல்
பத்தை	—	தப்பை	மரநுனி	—	நுனிமரம்
விசிறி	—	சிவிறி	புறநகர்	—	நகர்ப்புறம்
இல்முன்	—	முன்றில்	கால்வாய்	—	வாய்க்கால்

புணர்மொழித் திரிபுகள்

நிலை மொழியும் வரு மொழியும் சேர்ந்து இயங்கும் பொழுது சில தெளிவான மாறுதல்கள் நிகழ்கின்றன. அவ்வாறு அடையும் மாறுதல்களை 'ஒலித்திரிபுகள்' எனத் தொல்காப்பியம் கூறும்.

நிலைமொழி ஈற்றொலியும் வருமொழி முதல் ஒலியும் இயையும்பொழுது இத்திரிபுகள் உண்டாகின்றன. சில சமயங்களில் இத் திரிபுகள் நிகழாமல் இயல்பாய் நிற்றலும் உண்டு.

மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்புஎன
ஆங்கு அந்நான்கே மொழிபுணர் இயல்பே

எனக் கூறுகிறது.

அவைதாம்,

மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல் என
இவ்வென மொழிப திரியும் ஆறே †

என மேலும் விளக்கிச் செல்கிறது.

மெய் பிறிதாதல் (*assimilation*)

இதனை ஒரினமாதல் என்றும் கூறுவர். நிலைமொழியும் வருமொழியும் சேரும்பொழுது ஒன்றதன் வலிவால் மற்றொன்றன் மெய் மாறிவிடுகிறது. இவ்வாறு முன்னொலியின் சார்பால் பின்னொலி திரிதலை வருவொலித் திரிபு (*progressive assimilation*) என்பர். பின் ஒலியின் சார்பால்

---

* தொல்காப்பியம். சூ. 108.
† ,, ,, 109.

முன்னொலி திரிதலை நிலையொலித் திரிபு (*regressive assimilation*) என்பர்* இரண்டும் திரிதலை இருவழித் திரிபு என்பர். (Reciprocal assimila

வருவொலித் திரிபு (*progressive.*)

பொன் தீது	—	பொன்றீது
மண் தீது	—	மண்டீது
பொன் நன்று	—	பொன்னன்று
கண் நன்று	—	கண்ணன்று
கல் நுனி	—	கன்னுனி †

நிலையொலித் திரிபு (*regressive.*)

கண் காட்சி	—	கட்காட்சி ‡
நல் சேர்க்கை	—	நற்சேர்க்கை
நெல் காய்த்தது	—	நெற்காய்த்தது
செல் கடிது	—	செற்கடிது
தம் நூல்	—	தந்நூல்
நல் நூல்	—	நன்னூல்.

இருவழித் திரிபு (*reciprocal*)

நிலையொலியும் வருவொலியும் ஒருசேரத் திரிதலும் உண்டு.

கல்	+	தூண்	—	கற்றூண்
முள்	+	தாள்	—	முட்டாள் (முள்ளையுடைய தாள்)
கல்	+	தீது	—	கஃறீது
முள்	+	தீது	—	முஃடீது
நல்	+	தாய்	—	நற்றாய்.

---

* Progressive : The assimilated sound follows the conditioning sound.
Regressive: The assimilated sound precedes the conditioning sound.
— Gleason. p. 83 & 84.

in portant—important ஆயிற்று என்பர்.

in possible—impossible ,, ,,

† னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே — நன் 237.

‡ ணன வல்லினம் வரட் டறவும் — நன் 209. [பொருட்கே. தொ. 302.
ணகார இறுதி வல்லெழுத்து இயையின் டகார மாகும் வேற்றுமைப்

மிகுதல் (*juncture*)

சொற்களைப் பொருள் கருதிச் சேர்த்தலும் பிரித்து இசைத்தலும் என இருவகை உண்டு என்பது சிறப் பொலிகள் என்ற தலைப்பில் கூறப்பட்டது. சேர்த்து ஒலித் தலின் அறிகுறியாக மிகுதல் நிகழ்கிறது. பிரித்து இசைத் தலின் அறிகுறியாக இயல்பு நிகழ்கிறது. குரங்குக் கால்— வேற்றுமைப் பொருளில் சேர்ந்து இசைக்கிறது.

குரங்கு கொடிது — அல்வழிப் பொருளில் பிரிந்து இசைக்கிறது.

மிகும் இடங்களை இலக்கணம் விரிவாக உணர்த்தும். சிறப்பாகக் க ச த ப மிகுவதை விரித்துக் கூறும்.

வேறு ஒலியாக மாறலும் குன்றலும் (*dissimilation*)

ஒரே வகையான தனி ஒலிகள் மீண்டும் வருமெனில் அவற்றுள் ஒன்று நின்று மற்றொன்று கெடுகிறது. சில சமயத்தில் அதே ஒலி வருவதை மொழி எதிர்க்கிறது. அதனால் வேறு ஒலியாக மாறிவிடுதலும் உண்டு. *

வேறு ஒலியாக மாறல்

தகராறு	—	தகராலு	—ர—ல
பட்டடை	—	பட்டரை	—ட—ர
ஒட்டடை	—	ஒட்டரை	—ட—ர
மார்வாரி	—	மார்வாடி	—ர—ட

* We have *dissimi ation* a reverse process to assimilation, which consists in making only once an articulatory movement which ought to be made twice; thus, from the Latin arborem we have the spanish arbol and the provencal albre. In both cases the' movement demanded for the production of rwas not effected twice ; but only once and a second, time a different movenent was adopted resulting in the production of the liquid I. It also often happens that dissimilation simply entails the disappearance of the phoneme altogether. —Vendryes, p. 62.

ஒலி குன்றல்

சின்ன + அண்ணன் — சின்னண்ணன்
பெரிய + அப்பா — பெரியப்பா
கைகேயியின் — கைகேயின் (என ஒலித்தல் உண்டு).

இலக்கண நூல்கள் காட்டுவன

இவ்வாறு குன்றி வரும் இடங்களை இலக்கண நூல்கள் பலவற்றைக் காட்டும்.

1. மக + அத்துக்கை — மகத்துக்கை—'அத்து' — அ கெட்டது.*

2. ஆடி + இக்குக் கொண்டான் — ஆடிக்குக் கொண்டான். இக்கு — இ கெட்டது. †

3. சித்திரை + இக்குக் கொண்டான் — சித்திரைக்குக் கொண்டான். இக்கு — இ கெட்டது. ‡

4. குன்று + அக்கு — குன்றக்கு — அ கெட்டது.
குன்றக்கு + கூகை — கு கெட்டது. §

5. விளவினின் என வராது. ஓர் இன் கெட்டு விடும். பலவினின் என வராது. பலவின் எனவே வரும். இதனை,

இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்னென்சாரியை இன்மை வேண்டும்.

என்ற சூத்திரம் வற்புறுத்தும். 'இன்' என வேற்றுமை உருபு வந்தால் பிற இடங்களில் வரும் 'இன்' என்ற

---

* அத்தின் அகரம் அகரமுனை யில்லை. தொல். சூ. 126.

† இக்கின் இகரம் இகரமுனை அற்றே. சூ. 127.

‡ ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும். சூ. 128.

§ எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே. சூ. 129.

சாரியை இங்கு வருவதில்லை. இது வேறுஇனமாதல் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம் — குறுந்தொகை.

மாத்துப்பழம் — என முடிகிறது.

மா + அது — மாத்து.

ஆறன் உருபின் அகரக்கிளவி நிலைமொழி அகரம் நோக்கிக் கெட்டது.*

உடம்படு மெய்

உயிர் இறு சொல்லும் உயிர் முதலாக வரும் சொல்லும் சேரும்பொழுது இடையில் உடம்படுமெய் அமைகிறது. இதனை விட்டிசையைத் தடுக்க வருவது (*prevention of hiatus*) என்பர். யகரமும் வகரமும் உயிர்த்தன்மை பெற்று விளங்குவதால் அவை உடம்படு மெய்களாகத் தமிழில் அமைகின்றன.

மணி அழகு — மணியழகு — ய
பலா அருமை — பலாவருமை — வ
அவனே அழகன் — அவனேயழகன், அவனேவழகன்

இதனை நன்னூலார் இ ஈ ஐ என்ற ஒலிகளுக்குப் பின் யகரமும் ஏனை உயிர் ஒலிகளுக்குப் பின் வகரமும் ஏ முன் இவ்விரு ஒலிகளும் உடம்படு மெய்என்று ஆகும் என்பர்.

தொல்காப்பியர் இவ் உடம்படு மெய்களை வற்புறுத்திக் கூறியதாகத் தெரியவில்லை. அவர் காலத்தில் அப்பொழுது தான் இவை புகத் தொடங்கி இருக்கிறது. உடம்படுமெய் வருவதை வரையார் என்று கூறுகின்றாரே யன்றி அவை வரவேண்டும் என விதி கூறவில்லை என்று தெரிகிறது.

---

* ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈருகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் — சூ. 116.

† இ ஈ ஐவழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும் உயிர்வரின் உடம்படு மெய்என்று ஆகும். — நன்.

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்.*

என்று தொல்காப்பியனார் கூறுகின்றார்.

உடம்படு மெய் வாராமல் உயிர்கள் இசைந்திருக்கவேண்டும் என்பதைச் சில எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன.

நசை + இ — நசை இ.
அசை + இ — அசை இ.

இவற்றில் உடம்படு மெய் இடம்பெறவில்லை. இகரம் இசைபற்றி வந்தது அன்று; இறந்தகாலம் உணர்த்தும் விகுதியாகும். எனவே உடம்படுமெய் வந்திருக்கலாம். இவ்விதி வற்புறுத்தப் பெறாத காலமும் இருந்தது என்பதற்கு இவை சான்றுகள் ஆகின்றன.

நன்னூலார் காட்டும் விதியே இப்பொழுது பெரும்பாலும் பின்பற்றப்படுகிறது. அந்த விதிக்கும் விதிவிலக்கை மொழி ஏற்படுத்திவிடுகிறது.

கோவில் — கோயில் என இருவடிவங்கள் வழங்குகின்றன. நிலைமொழியின் ஒலிஆற்றலால் வகரமும் வருமொழியின் ஒலிஆற்றலால் யகரமும் பெற்று அமைகின்றன. அதனால்தான் இருவகை வடிவங்கள் சில சொற்களில் உண்டாகின்றன. பிற இனமொழிகளிலும் உடம்படு மெய்கள் இருத்தலைக் காட்டுவர்.†

---

* சூ. 140.

† தெலுங்கில் க, ன, ர, ம இவை உடம்படுமெய் என்பர் கால்டுவெல்.

அறுகுரு — (அறுவர்) ; க பெற்றது.
பதகொண்டு — (பதினொன்று) ,,
ராஜு உத்தரவு — ராஜுனுத்தரவு; ன பெற்றது.
பொத+இல்லு—பொதரில்லு (இலை வீடு) ; ர பெற்றது.
நிக நிக அணி — நிக நிக மணி ; ம பெற்றது.

வடமொழியில் — மட + அதிபதி — மடாதிபதி என உயிர் நீள்வு பெறுகிறது.
குமர + ஈசன் — குமரேசன்.

செய்யுள் விகாரம்

செய்யுளில் இசைநயம் காரணமாகத்திரியும் திரிபுகளைச் செய்யுள் விகாரம் என்பர். இவை தெரிந்து இசைக்காகவே புலவர்கள் திரிப்பது ஆகலின் பொதுமொழியில் நிலை பெறுவதில்லை.

ஒப்புமை ஆக்கத்திரிபுகள் *(analogic changes)*

ஒப்புமை ஆக்கத்தால் சொற்களில் பல மாறுதல்கள் உண்டாகின்றன. பல சொற்களில் ஒழுங்கு இருப்பதற்கு இவ் ஒப்புமை ஆக்கமே காரணமாகும். ஒழுங்கின்மையும் பொருத்தமின்மையும் இருப்பதற்கும் இவ் ஒப்புமைஆக்கமே காரணமாகிறது.*

இடந்தோறும் தனித் தனிப் போக்கில் சொல் அமைவதால் இவ் ஒழுங்கின்மை ஏற்படுகிறது.

ஒருவன் — ஒருவள் என அமைந்திருக்கவேண்டும். ஒருத்தி என அமைந்திருப்பது ஒழுங்கின்மையைக் காட்டுகிறது.

சிறுவன்—சிறுவள் என்பதற்கு மாறுகச் சிறுமி என அமைந்துள்ளது.

ஒருவன் — சிறுவன் என்பன ஒருவகைப் போக்கில் அமையச் சிறுமி ஒருத்தி என்பன ஒருவகைப் போக்கில் அமைகின்றன. இரண்டு வகையும் பொது மொழியில் இடம் பெறும்பொழுது ஒருவகை ஒழுங்கின்மை காணப்படுகிறது. வடிவால் இவை ஒழுங்கு பெறவில்லை.

சில அமைப்புகள் வடிவால் ஒழுங்கு பெறுகின்றன. பொருள் புலப்பாட்டில் ஒழுங்கின்மை ஏற்படுகிறது.

---

* Analogic change is not regular. It may, and frequently does, produce an increase in irregularity, but it may equally exert a regularizing effect.

—Gleason p. 290.

'தட்ப வெட்பம்' என அமைவதும், நன்மை, தின்மை என அமைவதும் இவ்வகையைச் சாரும்.

கரடு முருடு என்பது கரடு மூரடு என அமைந்தது.

பார்க்கின்ற என்பதற்கு நேராகக் கார்க்கின்ற என்றும் அமைக்கின்றனர்.

பார்வை — கோர்வை (கோவையே சொல்லாகும்.)

'என்னல் உன்னல்' என்பவற்றைப்போல 'பின்னல் முன்னல்' என்ற சொற்கள் அமைந்திருக்கலாம். அன்றி 'ஆகில்' என்பதன் திரிபாக இந்த 'ஆல்' அமைந்திருக்க லாம். இவற்றில் முன் வழங்கும் சொல் நோக்கியே பின் வரும் சொல் அமைகிறது.

வகை மொழியில் திரிபுகள் *(dialectial inter changes)*

பேச்சுமொழி இடத்துக்கு இடம் மாறும். இனமொழி களுள் மொழிக்கு மொழி ஒலியன்கள் மாறும். இவ்வாறு பேச்சு மொழியிலும் திராவிட இனமொழிகளிலும் சொற்கள் ஒலிமாறி ஒலித்தலை அறிஞர் கால்டுவெல் காட்டுவர். அவற்றுள் சில மறுபக்கத்திலுள்ள கட்டத்தில் காண்க.

தமிழ்	பேச்சு	தெலுங்கு	கன்னடம்	மலையாளம்
மலை	மலெ	மல	மலெ	மல
தலை	தலெ	தல	தலெ	தல
கரை	கரெ	கர	கரெ	கர
உரல்	ஒரல்	ரோலு	...	ஒரல்
இலை	எலெ	...	...	...
உடல்	ஒடல்	ஒன்ளு	...	...
சேரி	சேரி	...	கேரி	...
கெடு	கெடு	செடு	கெடு	கெடு
நான்,யான்	நான்	நேனு	நானு	ஞான்
பெயர்	பேரு	பேரு	ஹெசரு	பெயர்
ஐந்து	அஞ்சு	ஐது	ஐது	அஞ்சு
பத்து	பத்து	பதி, மிதி	ஹத்து	பத்து
பாம்பு	பாம்பு	பாமு	ஹாவு	பாம்பு
எழு	எழு	எடு	எளு	எழு
கோழி	கோழி	கோடி	கோளி	கோழி

பொருளசைகள்

பொருளசை

ஒலி தனித்தோ தொடர்ந்தோ பொருள்தரின் அதனைப் பொருளசை (*morpheme*) என்பர். நன்னூலார் பதம் என்பதற்குக் கூறும் விளக்கம் இதற்குப் பொருந்துவதாக உள்ளது.

> 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்'* என்பர்.

பொருளசையைப் பிரித்து அறிதல்

ஒலியனைத் தனித்துப் பிரித்து அறிய அது பிறவற்றோடு எவ்வாறு வேறுபடுகிறது என்று காணவேண்டியுள்ளது. அதைப்போலவே ஒரு பொருளசையைத் தனித்துப் பிரித்து அறிய அது பிற பொருளசையோடு எவ்வாறு வேறுபடுகிறது என்று காணவேண்டியுள்ளது.

பொருளசை என்பது ஒரு தனி ஒலியனாகவும் இருக்கலாம்; பல ஒலியன்களால் ஆகிய பெரிய தொடரசையாகவும் இருக்கலாம். அது பிறவற்றோடு உணர்த்தும் பொருளால் வேறுபட்டு அமைவதே அடிப்படையாகும். அப் பொருள் உணர்ச்சிக்கு ஏற்ப வேறுபடும்பொழுது மிகச் சிறிய வடிவத்தையே பொருளசையாகக் (*morpheme*) கொள்வர்.

---

* நன்னூல் சூ. 128.

† Morphemes are the smallest individually meaningful elements in the utterances of a language. — Hocket, p. 124.

செய் வ் ஆன்
செய் த் ஆன்

இவ் வுறழ்வால் வ், த் என்பன மாறுபடுகின்றன. இரண்டு தொடர்களுக்கும் இவை பொருளமாற்றம் உண்டாக்கு கின்றன. அதே சமயத்தில் தமக்கு எனத் தெளிந்த பொருளையும் பெறுகின்றன. இரண்டு தொடர்களைப் பிரிப்ப தால் அவை ஒலியன் என்ற வேறுபாடு பெறுகின்றன. ஒவ்வொன்றும் தனித் தனிக் காலப்பொருளைப் பெற்றிருப் பதால் அவை பொருளசைகளும் ஆகின்றன.

செய் கிறு ஆன்
செய் த் ஆன்

இவற்றுள் ஒலியன் என்ற சிறப்பு அறிய இவ்வுறழ்வு அமையவில்லை. பொருளசைகள் வேறு என்ற வேறு பாட்டை உணர்த்துகின்றது. எனவே வ், கிறு, த் என்பன காலம் உணர்த்தும் இடைநிலைகள் என உணரப்படு கின்றன.

அதைப் போலவே, நடக்கிறான், செய்கிறான் என் பவற்றை உறழ நட, செய் என்பன பொருள் உணர்த்தும் பொருளசைகளாகின்றன; நடப்பள் நடப்பன் — அள் அன் — இவை பால்காட்டும் இடைநிலைகளாகிய பொரு ளசைகளாகின்றன.

ஒலியன் வேறு பொருளசை வேறு

செல் | கிறான்
வெல் | கிறான்

ச் வ் என்பன ஒலியன்கள். இரண்டு பேச்சொலிகளை வேறுபடுத்தும் செயல் தவிர இவற்றிற்குத் தனிப் பொருள் உணர்ச்சி இல்லை. அதேபோல விடப்பட்ட 'ல்' என்பதும் அங்கு நின்று பொருள் உணர்த்துமாறு இல்லை. அதனால்

'செல்' 'வெல்' என்று சேர்த்தே பொருள் சிதையாதவாறு ஒலிகளைப் பிரித்து அறிதல் வேண்டும். பொருட் சிதைவு ஏற்பட்டுவிட்டால் அவற்றைப் பொருளசை என்று கூறுவதற்கு இல்லை.*

இவ்வாறு இணை உறழ்வுகள் கொண்டு மாறுபாடு காண்பதால் கிறு, த், வ் என்பன கால இடைநிலைகள் என்றும், நட, செய் என்பன பொருள் உணர்த்தும் தனிச் சொற்கள் என்றும், அள், அன் என்பன பால் உணர்த்தும் விகுதிகள் என்றும் அறிய முடிகிறது.

இவ்வாறு பிரித்து அறியப்படும் பொருளசைகள் ஓரிரண்டைக் கொண்டுமட்டும் உணர்ந்தால் போதாது. பல பேச்சொலிகளில் அதே பொருளில் அவை வழங்கும் போதே அவ் வடிவங்கள் பொருளசைகள் என்று உறுதி செய்யப்படுகின்றன.

த் என்பது நடந்தான், செய்தான், விழுந்தான் எனப் பல சொற்களில் பயில்கிறது. நட என்பது நடத்தை, நடக்கிறான், நடப்பான், நடை, நடப்பு என்ற பல சொற்கள் அதே பொருளில் பயில்கிறது. வருவன், போவன், செய்வன் முதலிய சொற்களில் அன் அதே பொருளில் பயில்கிறது. அதனால் இவை தனித்தனிப் பொருளசைகள் என்று நிறுவப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

பொருள் அடிப்படை

பொருளசையைப் பிரித்து அறியும் பொழுது அவற்றின் பொருள்புலப்பாடே அடிப்படையாகும். வடிவ ஒற்றுமை கொண்டே பொருளசைகள் என்று கூறுவதற்கு இல்லை.

---

* 'எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்பின்று' —சூ. 395. என்று தொல்காப்பியர் உரிச் சொற்குக் கூறுவது இப் பொருளசைகட்குப் பொருந்துவன ஆகும்.

மகன் எனல் மக்கட் பதடி எனல்.

என்+அல் இவற்றுள் ஒன்று எதிர்மறை; மற்ருென்று உடன்பாடு. அல் என்பதற்கு ஒரே வடிவம் இருந்தாலும் பொருள் வேறு.

வரல், வருவல், போகலன் — ஒன்றில் தொழிற் பெயர் விகுதி ; அடுத்தது தன்மை ஒருமை விகுதி; மற்ருென்றில் எதிர்மறை இடைநிலை. இவை ஒரே வடிவ அமைப்பைப் பெற்றிருந்தாலும் வெவ்வேறு பொருளசைகளாம். இவற்றைப் பல பொருள் ஒரு வடிவ அமைப்பை உடையன என்பர்.*

பொருள் உணர்த்துவது என்பது பொதுப் பொருளை உணர்த்துவது ஒருவகை; இலக்கணப்பொருளை உணர்த்துவது மற்ருெருவகை. கல், மண், தின், செய், உண் முதலியன பொதுப் பொருள் உணர்த்துவன. த், ட், வ், ப், கிறு, ஆன், கு, இல், மன் முதலியன இலக்கண இடை நிலைகளாக அமைபவை. இவை இலக்கணப் பொருள் உணர்த்துவனவாகும். அதனுல் பொருளசை என்பது இருவகைப் பொருளையே குறிக்கும். இந்த அடிப்படையின் மேலேயே பொருளசைகள் பிரித்து அறியப்படும்.

இலக்கண அமைப்பு

இப்பொருளசைகள் அமைவதில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. 'கிறுநட ஆன்' என்று இவை அமையுமானல் அவை பொருளசைகள் ஆவதில்லை. அவை தொடர்வதில் ஓர் ஒழுங்கு முறை இருத்தல் வேண்டும். அந்த ஒழுங்கு முறையையே இலக்கண அமைப்பு என்பர். ஒவ்வொரு மொழியும் இவ்வகையில் ஒவ்வொரு அமைப்பைப் பெற்று

---

* Frequently two morphemic elements are alike in expression but different in content. Such pairs are said to be homophonous, literally 'sounding alike.'
— Gleason, p. 54.

உள்ளது.* எனவே பொருளசைகள் சிறப்புறுவதற்கு அவற்றின் இலக்கண அமைப்பும் அடிப்படையானது ஆகும்.

நன்னூலார் எந்தப் பதத்தையும் பகுபதம் பகாப்பதம் என இருவகையாகப் பிரிப்பர். பெயர் வினை இடை உரி என்று வழங்குபவை பிரிக்க முடியாமல் அமைந்தால் அவற்றைப் பகாப்பதம் என்பர். இதே பகாப்பதம் என்ற இலக்கணம் பொருளசைக்கும் பொருந்துவதாக உள்ளது.

சில பொருளசைகள் பிறதொடர்தல் இல்லாமல் தாமே உரிமையாக விளங்குவனவற்றைப் பகுதி (*stem*) † என்றும் பிறவற்றைச் சார்ந்தே வரும் சார்பு அசைகளை இடைநிலை விகுதி (*bound forms*) என்றும் கூறுவர். இப் பகுதிகள் (*stems*) சொற்களாகவும் இயங்க வல்லன என்பது பற்றி இவற்றை உரிமைப் பொருளசை (*free form*) என்பர்.

இந்த உரிமைப் பொருளசைகள் (*free forms*) ஆகிய பகுதிகளும் சார்புப் பொருளசைகள் ஆகிய இடைநிலைகளும் விகுதிகளும் சேர்ந்து அமைவனவே பகுபதம் என்பர். இவை சேர்ந்து அமையும் பொழுது உண்டாகும். ஒலித்திரிபுகளைச் சாரியை சந்தி விகாரம் என்பர். எனவே எந்தப்பதமும் இந்த ஆறு உறுப்புக்களின் சேர்க்கையாலேயே அமைவன என்பர். ‡

---

* Every language has its own grammar. The grammar, or grammatical system, of a language, is (1) the morphemes used in the language, and (2) the arrangements in which these morphemes occur relative to each other in utterances. — Hocket, p. 124.

† A stem is any morpheme or combination of morphemes to which an affix can be added. — Gleason, p. 59.

‡ பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும். — நன்னூல், சூ. 133.

சொல்லாக்க உருபுகள்

நன்னூலார் காட்டும் பகுதிகளை மேலும் பிரித்தால் அடிச்சொற்கள், சொல்லாக்க உருபுகள் என வேருகப் பிரிக்க முடியும். அறிஞர் கால்டுவெல் சொற்களை அடிச் சொற்கள் எனவும் அவற்றேடு சேரும் ஆக்க உருபுகளை வேருகவும் பிரித்துக் காட்டுவர். நன்னூலார் பிரித்துக் காட்டாத இரண்டு உருபுகளை அவர் காட்டுகின்ருர். அவை (1) ஒலிநயச் சேர்க்கை (*enunciative additions*) (2) ஆக்க உருபு கள் (*particles of specialization*). நன்னூலார் கூறும் இடை நிலைகள், விகுதிகள் முதலியவற்றை இலக்கணச் சேர்க்கை (*grammatical additions*) என்பர்.

அடிச்சொற்கள்

முதன் முதலில் அடிச்சொற்கள் வினையடியாகவே பெரும்பான்மை பிறந்திருக்கவேண்டும். வடமொழியாளர் கூறும் அடிச்சொற்கள் இலக்கணக்காரர்கள் படைப்பு. தமிழ் அடிச்சொற்களோ இயல்பாக அமைந்தவை. இவை வினைக்கும் பெயர்க்கும் பொதுவாக முதலில் பயன்பட்டன. பிறகு சில மாறுதல்கள் பெற்று வினைக்கே உரிமையாகியும் பெயருக்கே உரிமையாகியும் உள்ளன. *

---

* The language of the primitive Dravidian seems to be mainly a language of roots. These were not merely the results of the grammatical analysis, but forms of regular usage in the language .... The root itself did the function of a verb as well as of a noun ;—first without any change, but later on with a little change in the ending.

— K. Ramakrishnayya, Krishnaswamy Iyengar Commemoration Volume, p. 318.

இவ்வடிச் சொற்களின் திரிபே ஏனைய இலக்கணச் சொற்களாகவும் இருந்திருக்கவேண்டும் என்று கருதுவர்.

அடிச்சொற்கள் பகுதியாதல்

இவ்வடிச் சொற்களோடு ஆக்க உருபுகள் (*formative additions*) சேர்வதாலேயே பகுதிகள் அமைகின்றன. அப் பகுதியாம் நிலையிலும் பல பெயருக்கும் வினைக்கும் பொதுவாகும் நிலைமையும் உண்டு. சிறப்புப் பொருள்தரல் வேண்டிச் சிறப்பு உருபுகள் சேர்ந்து அடிச்சொற்கள் பகுதிகள் ஆகின்றன. அவை பகுதியாக நிற்பதன்றி வினையாகவும் பெயராகவும் நிற்றல் உண்டு. விள், அண், மல், வள் முதலியன அடிச் சொற்களாம்.

ஆக்க உருபு சேரல்

அடிச்சொல்	உருபு	பகுதி	பெயர்	வினை
விள்	ஐ	விளை	விளை (வு)	விளைகிறது
விள்	து	விடு	வீடு †	விட்டான்
விள்	இ	விளி	விளி	விளித்தான்
அண்	இ	அணி	அணி	அணிந்தான்
அண்	ஐ	அணை	அணை	அணைந்தான்
மல்	ஐ	மலை	மலை	மலைந்தான்
மல்	அர்	மலர்	மலர்	மலர்ந்தது

* The root words which were appended to other roots in order to convey different significations in meaning, lost their original shape and meaning owing to the rapidity in pronunciation and other causes and began to be used as unmeaning suffixes and made to perform certain grammatical functions in the sentence. — K. Ṛamakrishnayya, p. 318.

† விடு — முதலில் இசை யழுத்தத்தால் வீடு என்ற பெயர்ப்பொருளைத் தந்து விட்டது.

உன் — ஊன்.

மின் — மீன் என்பனவும் அன்ன.

இவற்றை முதல்நீளல் என்பர்.

வள்	ஐ	வளை	வளை	வளைந்தான்
வள்	இ	வளி	வளி	...
வள்	அம்	வளம்	வளம்	...
வள்	மை	வண்மை	வண்மை	...

பகுதிகள் பல, பெயருக்கும் வினைக்கும் பொதுவாக விளங்குகின்றன. பகுதிகள் என்ற நிலைகடந்து பெயருக்கே உரிமையாகிவிட்டால் அவை மீண்டும் வினையாதற்குத் துணைவினையைத் துணை கொள்கின்றன.

கொலை யுண்டான்
முயற்சி செய்கிறான்
துன்பப்படுகிறான்
இன்பப்படுகிறான்
முறுவல் கொள்கிறான்.

இலக்கணச் சேர்க்கை

அடிச் சொற்களாக இருக்கும் பொழுதும் ஆக்க உருபு பெற்ற நிலையிலும் இவை வினைக்கும் பெயருக்கும் பொது வாக நிற்றல் பெரும்பான்மை. அவற்றுள்ளும் சில வினைக்கே உரிமையாவனவும் பெயருக்கே உரிமையாவனவும் உள. இலக்கணச் சேர்க்கைகள் சேர்ந்த பிறகு இவை ஒன்றற்கே உரிமையாகின்றன.

வந்தான்	—	வினைச் சொல்
அகற்சி	—	தொழிற் பெயர்
பெருமை	—	பண்புப் பெயர்
செய்த	—	பெயரெச்சம்
தூக்கம்	—	பெயர்

கூட்டு அடிச் சொற்கள்

சில பகுதிகள் இரண்டு அடிச்சொற்கள் சேர்ந்து அமை தலும் உண்டு.

காமரு — காமம் வரு அல்லது காமம் மரு
அணர் — அண் வரு
கொணர் — கொண்டு வரு எனக் காட்டுவர்.*

ஒலித்துணைகள்

ஆக்க விகுதிகள் பொருட் சிறப்புத்தர வருவன; ஒலித் துணைகள் பொருட்சிறப்புத் தர அமைவதில்லை. இவை ஒலி நயத்திற்காகவே வருவன. அதனால் எவ்வாறு சார்பு ஒலிகளாகிய குற்றியல் உகரம் குற்றியல் இகரம் ஆய்தம் என்ற ஒலிகளை ஒலியன்களாகக் கொள்ள அமையாதோ அவ்வாறே இவற்றைப் பொருளசைகளாகக் கொள்வதற்கு இல்லை. வெறும் ஒலிநயச் சேர்க்கைகளாகவே கொள்ளக் கிடக்கின்றன. இவை சேர்வதால் (1) தனிக்குறில் அணையா ரழ ஒலிப்பு எளிமை பெறுகின்றன.

ஒர் + உ — ஒரு; எழ் + உ — எழு
(2) செல் + கிறான் — செல்லுகிறான்
கண் + கு — கண்ணுக்கு; கண்ணிற்கு

இந்த ஒலிநயச் சேர்க்கை இல்லாவிட்டால் ண் – ட் ஆகிவிட்டிருக்கும். இது சேர்வதால் ஒலிமாற்றத்தைத் தடுக்கிறது எனலாம்.

மண் + கு — மண்ணிற்கு — இன்
அண் + கு — அணுகு — உ

இவை சேராவிட்டால் ஒலிகள் திரிந்தோ கெட்டோவிடும். (3) ல ழ ள ர முதலியன எளிதில் மாறிவிடக் கூடியன அன்றி மறைந்துவிடக் கூடியன. அவற்றைப் போற்றுவது இவ் ஒலித் துணைகளே.

பொழ்து — பொத்து (தெலுங்கில்)

பொழுது என இருப்பதால் அதன் வடிவு போற்றப்படுகிறது. போழ்து என்று மாறியதும் ழகரம் கெட்டுப் போது

* கலைக்களஞ்சியம், பக். 471.

என்று ஆகிவிடுகிறது. உகரம் சேராததால் பல சொற்களில் ழகரம் கெட்டுவிடுகிறது அல்லது திரிகிறது.

மழ் + கு மங்கு — மக்கு
உருண்டை —* உர்ண்டை — உண்டை

சாரியைகள்

சாரியைகளின் தோற்றம் யாதாயினும் அவை மொழியில் வெறும் ஒலித்துணைகளாகவே அமைகின்றன.

சார்புஒலிகள் பொருள்குறிக்க வாராமல் பிறவற்றைச் சார்ந்தே வருதல் போல இச் சாரியைகளும் தமக்கெனப் பொருள் இன்றிப் பிறவற்றைச் சார்ந்தே வருகின்றன. 'சார்பு — சாரியை' என்ற பெயர்களில் ஒற்றுமை காண்க. சார்பு ஒலிகளை எவ்வாறு ஒலியனாகவோ மாற்றொலியாகவோ கொள்வதற்கு இல்லையோ, அவ்வாறே இவற்றைப் பொருளசை (*morpheme*) யாகவோ மாற்றுப் பொருளசை யாகவோ (*allomorph*) கொள்ளுவதற்கு இல்லை. இவை வெறும் ஒலித்துணையாகச் சேர்வனவே.

பொருளசை ஒலித்திரிபுகள் (morphophonemic changes)

அடிச் சொற்களோடும் பகுதிகளோடும் ஆக்க உருபுகளும் இலக்கண உருபுகளும் சேரும்பொழுது சில மாற்றங்கள் அடைகின்றன. அவற்றுள் ஓரினமாதல் (*assimilation*) சிறப்பானது.

நிலையொலித்திரிபு (reggressive assimilation)

	முன்னொலித்திரிபு	மாறுதல்
கால் + பு — காம்பு	ல் — ம் —	இதழொலியாதல்
பாய் + பு — பாம்பு	ய் — ம் —	,,
இயல் + கு — இயங்கு	ல் — ங் —	பின்னண்ண ஒலியாதல்
முயல் + கு — முயங்கு	,,	,,

* உருள் + து + ஐ — உருண்டை

நால் + கு — நாக்கு	ல் — க் பின்னண்ண ஒலியாதல்	
வடல் + கு — வடக்கு	,,	,,
மழ் + கு — மங்கு	ழ் — ங்	,,
,, — மக்கு	ழ் — க்	,,
நீர் + து — நீந்து	ர் — ந் பல்லொலியாதல்	
வளர் + து + இ — வளர்ச்சி	த் — ச் இகரம் நோக்கித் திரிபு ; அண்ண ஒலியாதல்.*	
உயர் + து + இ — உயர்ச்சி	த் — ச்	,,
கவர் + து + இ — கவர்ச்சி	த் — ச்	,,
முயல் + து + இ — முயற்சி	த் — ச்	,,

கய் — செய் ; க் — ச் யகரம் நோக்கித் திரிபு ; அண்ண ஒலியாதல்.

வருவொலித் திரிபும், நிலைஒலி கெடலும்
(progressive assimilation & regressive dissimilation)

	ஓரினம் *(assimilation)*	குன்றல் *(dissimilation)*
விள் + து விடு	த் — ட்;	டகரம் நோக்கி ள குன்றல்
நள் + து நடு	,,	,,
கொள் + து கொடு	,,	,,
எழ் + து எடு	,,	டகரம் நோக்கி ழ குன்றல்
அழ்† + து அடு	,,	,,

* அண்ணஒலியாதல் : அண்ணஒலிகளான இகரம் அல்லது யகரத்தின் வலிவால் தகரமும் ககரமும் சகரமாக மாறுகின்றன.

Palatalization :—This is the assimilation of velar or dental consonants to high front vowels or semi vowels, which are similar in articulation to palatal consonants. —Gleason, p. 85.

† அழ் என்ற அடிச்சொல்லினின்று அடு பிறந்திருத்தல் வேண்டும். அடு தலுக்கும் அழிவுப் பொருளே காண்க.

இருவொலித் திரிபு (reciprocal assimilation)

பழ் + து — பண்டு	த் — ட் ; ழ் — ண்
வள் + து — வண்டு	„ ள் — ண்
கால் + து — காற்று	த் — ற் ; ல் — ற்

இடைநிலைகள்

காலம் காட்டும் இடைநிலைகள் தொல்காப்பியர் காலத்தில் தெளிவாக ஏற்பட வில்லை ; கால இடைநிலைகள் எனத் தனியாகச் சொல்லப் படவில்லை. நன்னூலார் பகுதி விகுதிக்கு இடை நிற்றலை இடைநிலை என்பர்.

இறந்த காலம் த், ட், ற், இன்.

செய்தான்	உழுதான்	தகரமே முதல்
சென்றான்	தின்றான்	ன்— த் =
உண்டான்	கண்டான்	ண்— த் = ட்
அடங்கினன்	விழுங்கினன்	சில வினைகளிலேயே இன் வருகிறது.

இவை ஒவ்வொரு குறிப்பிட்ட சூழ்நிலையிலேயே வருகின்றன. ஒரே பொருளில் வருகின்றன. அதனால் இவற்றை மாற்றுப் பொருளசைகள் (*allomorphs*)* என்று கூறலாம்:

{ த் } = | த்—ட்—ற்—இன் | என்று குறிப்பிடலாம்.

நிகழ்கால இடைநிலை

கிறு, கின்று என்பன ஒன்றன் மாற்று வடிவமே ஏனையது. ஆநின்று என்பதும் அதே பொருளில் வரும்

---

* Two elements can be considered as the same morpheme if (1) they have some common range of meaning, and (2) they are in complementary distribution conditioned by some phonologic feature.

— Gleason, p. 80.

An allomorph is a variant of a morpheme which occurs in certain definable environments.

— Ibid. p. 61.

Acc. 16158

T. 3071

இடைநிலையாகும். இது இறப்பும் நிகழ்வும் பொருந்திய ஒன்றாக அமைந்துள்ளது.

எதிர்கால இடைநிலைகள்

வகரம் வரும் இடத்தில் பகரம் வருவதில்லை. இரண்டும் தனித் தனிச் சூழ்நிலைகளிலேயே வருகின்றன. அதனால் இவற்றையும் மாற்றுப் பொருளசைகள் (*allomorphs*) என்று கூறலாம்.

வரும்		வராது
உண்பான்	—	உண்வான்
உண்ணுவான்	—	உண்ணுபான்
செய்வான்	—	செய்பான்
வருவான்	—	வருபான்
போவான்	—	போபான்
என்ப	—	என்வ

தன் வினையில் வகரம் வருமிடங்களில் பிறவினையில் பகரம் வரும்.

தன் வினை *	பிற வினை †
அழிவான்	அழிப்பான்
ஒழிவான்	ஒழிப்பான்

எதிர்மறையில் வகரம் வந்தால் உடன்பாட்டில் பகரம் வருகிறது.

எதிர் மறை	உடன்பாடு
நடவான்	நடப்பான்

எனவே {வ்} = | —வ்—ப் | என்று கூறலாம்.

---

* Intransitive. † Transitive

விகுதிகள்

அன் ஆன்; அள் ஆள்; அர் ஆர் முதலியன :

இவை ஒன்று வரும் இடத்திலேயே ஏனையவும் வருகின்றன. பொருளால் மாற்றம் இல்லை. அதனால் அவை ஒரே வகையான பொருளசைகளாகும்; இடத்தால் மாற்றம் இல்லை. அதனால் இவை மாற்றுப் பொருளசைகள் அல்ல. ஆகவே இவற்றை மாற்று வடிவங்கள் (*variants*) என்று கூறலாம். அன் ஆன் முதலியன ஒன்றன் திரிந்த வடிவமாகக் கொள்ளல் பொருந்தும்.

மீண்டும் அவற்றுள் கு, து என்பன மாற்று வடிவங்களாகலாம். து, டு, று என்பன மீண்டும் குறிப்பிட்ட சூழ்நிலையில் வருவதால் இவை மாற்றுப் பொருளசைகள் ஆகும்.

⟨ து ⟩ = | து—டு—று |
⟨ தும் ⟩ = | தும்—டும்—றும் |

என்று கூறலாம்.

ஒலியனின் மாறுதல் (*phonemic change*)

ஈண்டு மாற்றுப் பொருளசைகள் (*allomorphs*) ஆன ற் ட் முதலிய சிலவடிவங்களையும் ஏனைய இடங்களில் தகரம் டகரமாகவும் றகரமாகவும் மாறியுள்ள நிலைமையையும் நோக்கினால் இவை முதலில் மாற்றொலிகளாக (*allophones*) விளங்கி மீண்டும் தகரத்தோடு வேறு சூழ்நிலையில் மாறுபாடு (*contrast*) பெற்று ஒலியன்களாக அமைந்திருக்கலாம் எனக் கருத இடம் உள்ளது. அதே போல, ககரத்தின் திரிபாகச் சகரம் இருத்தல் கொண்டு இவை ஒரு காலத்தில் மாற்றொலியாக ஒலித்துப் பிறகு ககரத்தோடு மாறுபாடு(*contrast*)பெற்றுத் தனி ஒலியனாகமாறியும் இருக்கலாம் என்று ஐயுறக்கிடக்கிறது.* இவ்வாறு மொழியில் புது ஒலியன்கள் தோன்றலும் உண்டு என்றுகூறுவர்.†

---

* கலைக் களஞ்சியம், பக்கம் 467.

† Gleason, p. 287.

நன்னூலார் தம் பதவியலில் பிரித்துக் காட்டும் பகுதி விகுதி இடைநிலைகளைப் பொருளசைகளாகக் (*morphemes*) கொள்ளலாம். ஏனைய சந்தி விகாரம் சாரியை முதலியன வற்றை ஒலி இயைபு மாறுதல்களாகவே (*morphophonemic changes*) கொள்ளக் கிடக்கின்றன.

நன்னூலார் பகுதியை அடிப்படையாகக் கொண்டு சொற்களின் உருபுகளைப் பிரித்துக் காண்பர். கால்டுவெல் போன்ற அறிஞர்கள் அடிச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் பிரித்துக் காண்பர். இவற்றுள் பொருள் உணர்த்துவன ஒருவகை; இலக்கணம் உணர்த்துவன ஒருவகை; இரண்டும் சேரும்பொழுது உண்டாகும் ஒலி மாறுதல்கள் ஒருவகை என மூன்று வகையாக அறியக் கிடக்கிறது. இவை சேர்ந்து இயங்கும்பொழுதே சொற்கள் அமைகின்றன.

சொல்லியல்

சொல்லமைப்பு

பொருளசை (*morpheme*) தனித்து இயங்கினுல் அதனைத் தனிப்பதம் (*free form*) என்பர். தனித்து இயங்க ஆற்றல் இல்லாப் பொருளசையைச் சார்புப்பதம் (*bound form*) என்பர். தனிப்பதம் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றுள்ளமையின் அது சொல்லாக இயங்கும். சார்புப் பதம் சொல்லாகாது. நடக்காத குழந்தையைத் தாய் தூக்கி வைத்துக் கொள்வது போல் தனித்து இயங்காத சார்புப் பதத்தைத் தனிப்பதம் அணைத்துக்கொண்டு இயங்குகிறது. இதுவே சொல்லின் அடிப்படையாகும்.

நீ போ — இரண்டும் தனிப் பதங்களாகும். அதனுல் ஒவ்வொன்றும் சொற்களாக அமைகின்றன.

போ கிறு ஆன் — போ ஒன்றே தனிப்பதம். ஏனைய இரண்டும் சார்புப்பதங்கள். தனிப் பதத்தோடு சார்புப் பதங்கள் இணைந்து ஒரு சொல்லாகிறது.

இவ்வாறு அமையும் சொற்களை அவற்றின் அமைப்பைக் கருதி பெயர் வினை என்று பிரித்துக்காண்பர். இவற்றையே சொல்லிலக்கணம் என்பர். சொல் பொருளை உணர்த்தலோடு வடிவ அமைப்பையும் உணர்த்தும்.*

---

* பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர். — தொல். சொல். சூ. 156.

தனிச்சொற்கள்

தமிழில் அமைப்புக்கருதிச் சொற்களைப் பெயர் வினை என்று இரண்டாகப் பிரித்துக் காண்பர்.

சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே. *

என்று தொல்காப்பியனார் கூறுவர்.

சார்புச் சொற்கள்

பெயர் வினையைச் சார்ந்தே இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வரும் என்பர். †

பெயரையும் வினையையுமே அவர் சொற்கள் என்று குறிப்பிடுகிறார். ஏனைய இடைச்சொல்லையும் உரிச்சொல்லையும் சார்புப்பதங்கள் என்ற பொருளில் அவற்றை, 'அவற்று வழி மருங்கிற்றோன்றும் என்ப' என்று குறிப்பிடக் காண்கிறோம். மேலும் அவர் இடைச் சொற்களைப் பற்றிக் கூறுமிடத்து,

இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல்பு இலவே ‡

என்றும் உரிச் சொல்லைப்பற்றிக் கூறுமிடத்துப் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்றும் கூறி அவை சார்புப் பதங்களே யாகும் என்பதை நன்கு விளக்குகிறார்.

சொற்கள் இரண்டு என்று எண்ணிக்கை கொடுத்திருப்பது இக்கருத்தை வற்புறுத்துவதாகும். இவற்றையும் தனிச் சொற்களாகக் கொண்டிருந்தால் சொற்கள் நான்கு என்றுகுறிப்பிட்டிருக்கவேண்டும். அவ்வாறு குறிப்பிடாமை

---

* தொல். சூ. 158.

† இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப. — சூ. 159.

‡ சூ. 249.

கருதத்தக்கது. இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர் வினைகளைச் சார்ந்தே தோன்றும் என்பது தெய்வச் சிலையாரின் விளக்கமாகும்.*

உரிச்சொல்

குறிப்பு பண்பு இசை என்னும் அடிப்படையில் இச் சொற்கள் தோன்றும். இவை பெயரையும் வினையையும் சார்ந்துவரும். ஒரு வடிவம் பல பொருளை உணர்த்தும். பல வடிவம் ஒரு பொருளை உணர்த்தும். இவற்றின் அடிப் படை பொருளை உணர்த்துவதாகும். †

இவ் உரிச்சொற்களை அடிச் சொற்களாகக் கருதுவர். இதனைத் தெய்வச்சிலையார் உரை எடுத்துக் காட்டுகிறது:‡

"எழுத்ததிகாரத்துள் இதனைக் குறைச் சொற்கிளவி § என்று ஓதினமையால், வட நூலாசிரியர் தாது என்று குறிப்பிட்ட சொற்களே இவையென்று கொள்ளப்படும். ||

'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' என்பது உரிச் சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும்

---

* — உரை. சூ. 154.

† உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய் தடுமாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல். — சூ. 297.

‡ From a close study of the chapter in Tolkappiam dealing with uriccol and the commentary on the same by Deyvaecilaiyar, it is evident that uriccol is nothing but nominal root and verbal root—Subrahmaniya Sastri, Comparitive grammar, of the Tamil language. p. 88.

§ எழுத்து சூ. 482.

|| தெய்வச்சிலையார் உரை. சூ. 282.

தடுமாறி எ - று. அவை தடுமாறுங்கால் பெயர் வினைகளைச் சார்ந்தும், அவற்றிற்கு அங்கமாகியும் வரும். 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறக்கொண்டான்' என்பது வினையைச் சார்ந்து வந்தது 'உறுவன்' என்றவழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. 'உற்ருன்' என்றவழி வினைக்கு அங்கமாயிற்று." *

உறு என்பது மற்ருென்றைக் கொண்டே இயங்க வேண்டியுள்ளது. அதனுல் இது சார்புப் பதமேயாகும்.

உரிச்சொல் அடிச்சொல் ஆகும்.

1. எழுத்ததிகாரத்து இதனைக் குறைச்சொற் கிளவி எனக்கூறல்.

2. சார்ந்துவரும் இயல்பு உண்மை.

3. சொற்கள் இரு திணையிலும் இசைக்கும் என்பர்.† உரிச்சொல் திணைகாட்டாது. அவ்விலக்கணம் இவ் உரிச்சொல்லுக்குப் பொருந்தாமை.

4. இசை பண்பு குறிப்பு என்ற அடிப்படையில் தோன்றும் எனல் அடிச் சொல்லுக்கே பொருந்தும்.

5. ஒரு வடிவம் பல பொருளுக்கு உரியதாதல், பல வடிவம் ஒரு பொருளுக்கு உரியவாதல் அடிச்சொல்லுக்குப் பொருந்தும்; பெயர் வினை என்ற சிறப்புப் பெறும் பொழுதே அவை ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்ற நிலைமையை அடைகின்றன.‡

---

* தெய்வச்சிலையார் உரை, — சூ. 282.

† உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே. — தொல். சூ. 1.

‡ திரிசொற் கிளவிக்கும் இது பொது. இதன் வேறுபாட்டை தெய்வச் சிலையார் விளக்குகின்ருர். உரிச்சொல்லோடு இதனிடை வேறுபாடு என்னையெனின், உரிச்சொல் குறைச்சொல்லாகி வரும். திரிசொல் முழுச்சொல்லாகி வரும். — உரை. 394.

6. பெயர் வினைபோன்று தனிச் சொல்லாயின் அவற்றின் சொற் பொருளுக்குக் காரணம் தோன்றும். அடிச் சொற்களுக்குக் காரணம் கூறமுடியாது என்பது பற்றியே உரியியலில்,

மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்ற *

என்று கூறுகிருர்.

7. அருகிய அடிச் சொற்களுக்கே அவர் பொருள் விளக்கம் தருகிருர்.

8. பெயர் வினையைப் பிரிப்பதுபோல் இவற்றைப் பிரித்தால் பொருள் சிதைந்துவிடும் என்பார்.

எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே

என்று கூறுகின்ருர்.

9. உகப்பே உயர்தல்
உவப்பே உவகை

என்று அடுத்து அடுத்து ஓர் இடத்தில் வைக்கிருர். 'உக' 'உவ' என்ற அடிச் சொற்களுக்குள் உள்ள வேறுபாட்டைக் காட்டவே அடுத்தடுத்து வைக்கின்ருர்.

இக்காரணங்களால் இவை அடிச் சொற்களாம் என்ற கருத்து வலிவுறுகிறது.

ஒரு சில உரிச் சொற்களை முழுச் சொற்களாக எடுத்து ஓதுவதே இவை அடிச் சொல் அன்று என்ற கருத்துக்கு இடம் தருகிறது. அவற்றைத் தனியாக ஆக்க உருபுகள் இன்றி எடுத்துச் சொன்னல் பொருள் விளங்காது என்பது பற்றி அவற்றை ஆக்க விகுதி கொடுத்துக் கூறுகின்ருர்

* உரியியல். சூ. 98.

என்று கொள்ளுதல் பொருந்தும். இவை சார்புப் பதங்கள் ஆதலின் தனியே பிரித்துக் கூறினல் பொருள் விளங்கா.

செழுமை, விழுமம், விறப்பு, கவர்பு, ஒய்தல் முதலிய சொற்களை ஆக்க உருபோடே சொல்கின்ருர். உரையாசிரியர்கள் காட்டும் எடுத்துக் காட்டுகள் அவற்றை அப்படியே அமைத்துக் காட்டுவன வல்ல; அவற்றின் முதல் நிலைகளைக் கொண்ட வினைச் சொற்களையும் பெயர்களையும் காட்டுவர். எனவே தொல்காப்பியர் குறிப்பதும் அவற்றின் முதல் நிலைகளையே எனக் கொள்ளல் பொருந்தும்.

'செழும்பல குன்றம்' — செழுமையின் முதல் நிலை.

'பாடு விறந்து அயல' — விறப்பின் முதல் நிலை.

முனைவு முனிவாகும்

முனை இய காரான்

அமர் தன் மேவல்

அகன் அமர்ந்து

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள

தருமணன் ஞெமிரிய திருநகர்

பாய்புனல்

இவற்றின் முதல் நிலைகளான அடிச் சொற்களைக் கொண்டு பல்வேறு சொற்களைக் காட்டல் காண்க.

இடைச்சொற்கள்

உரிச்சொல் பொருட்பகுதியை உணர்த்தும் அடிச் சொல்; அவற்றை ஆக்க உருபு கொடுத்தே காட்டுகின்ருர். இடைச்சொல் இலக்கணச் சொற்களாம். அவை சாரியை, கால இடை நிலைகள், இசை நிறைவு, வேற்றுமை உருபு, அசைநிலை, தனித்தனிக் குறிப்புப் பொருள், உவம உருபு

முதலிய இலக்கணச் சொற்களாக வரும். இவற்றிற்கு இலக்கணப் பொருளே யன்றி உரிப்பொருள் இல்லை. *

உரி இடை - இவற்றின் சிறப்பு

இவையே மொழியின் உயிர்நாடி எனலாம். தெளிந்த சில உரிச் சொற்களையும் இடைச் சொற்களையும் கொண்டே பிறசொற்கள் அமைகின்றன. உரிச் சொற்களும் இடைச் சொற்களும் சிலவாகவே இருக்கும். இவற்றைப் பல்வேறு வகையாக இயக்கும் பொழுது புதுப்புதுச் சொற்களை அமைக்க முடிகிறது. அள் என்ற ஓர் உரிச் சொல்லோடு பல ஆக்க உருபுகளும் பிற இடை நிலைகளும் சேர்ப்பதால் பல சொற்கள் படைக்க முடிகிறது. அள் - அளை, அளர், அளவு, அளபு, அளக்கர், அளி, அர் என்ற இடைச்சொல் வளர், மலர், அலர், கிளர் முதலிய பல சொற்களுக்குத் துணையாகிப் புதுச் சொற்களின் படைப்புக்குக் காரண மாகிறது.

மேலும் இவற்றின் அமைப்பில் மற்றொரு சிறப்பும் உள்ளது. சிக்கனம் என்பது இவற்றின் வடிவிலும் காண லாம். ஒரு வடிவமே பல பொருளில் வருவது இவற்றின் சிறப்பியல்பாகும்.

அது — ஆறும் வேற்றுமை உருபு, பால் காட்டும் விகுதி, சுட்டு எனப் பல பொருளில் வரு கிறது.

---

* அவைதாம்,
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்என்று
அப்பண் பினவே நுவலுங் காலை. — சூ. 2. இடையியல்.

இன் — சாரியை, ஏழாம் உருபு, உவம உருபு. அதன் திரிபாகிய இல் ஆக்க உருபுப்பொருளில் வருகிறது (துய் + இல்) — துயில்.

ஐ — ஆக்க உருபு (மலை), இரண்டன் உருபு.

கு — ஆக்க உருபு (வடக்கு), நான்கன் உருபு.

அன்— சாரியை, பால் விகுதி (தன்மை, படர்க்கை ஆண்பால்); இதன் திரிபாகிய அல்-தொழிற் பெயர் விகுதி, எதிர்மறை இடைநிலை.

ஒரு சில வடிவங்களே ஆக்க உருபுகளாகவும் வேற்றுமை உருபுகளாகவும் சாரியைகளாகவும் சுட்டு வடிவங்களாகவும் இன்னும் பல்வேறு விகுதிகளாகவும் இயங்குவதால் குறைந்த வடிவங்களைக் கொண்டு பல்வேறு பொருளசைகளை அமைக்க முடிகிறது.

குறைந்த ஒலியன்கள் மொழிக்குச் சிறந்த கருவியாதலைப் போலவே குறைந்த எண்ணிக்கையுடைய வடிவங்கள் மீண்டும் மீண்டும் பல்வேறு பொருளில் இயங்குவது மொழிக்கு ஆற்றலையும் படைக்கும் திறனையும் அளிக்கிறது.

'இல்லாத ஒன்றும் பிறவாது' என்பது பழமொழி. ஏற்கனவே வழங்காத பொருளசை புதுச்சொல்லாக அமையாது என்பது மொழி யுண்மையாகும். வந்த பொருளசைகளே மீண்டும் மீண்டும் அதே பொருளிலும் புதுப்பொருளில் மாறியும் பலவாறாக இயங்கி அமைவதால் சொல்லுக்கு வளன் உண்டாகிறது. அதனால் ஒரு மொழியில் சொற்கள் இல்லையே என்ற கவலை தேவை இல்லை. கருத்தின் நுண்மைக்கும் இலக்கண வன்மைக்கும் ஏற்றவாறு புதுப்புதுச் சொற்களை அமைக்கும் ஆற்றல் இடைச் சொற்களுக்கும் அடிச் சொற்களாக விளங்கும் உரிச் சொற்களுக்கும்

உண்டு. எனவே இவை இரண்டும் மொழிக்கு இரு கண்கள் போன்றவை. இவற்றைக் கொண்டு எந்தக் கருத்தையும் உணர்த்தச் சொற்கள் அமைக்க முடியும்.*

பிறப்பு வகை

சொற்கள் அமைப்பை ஒட்டிப் பெயர்வினை எனவும் சிறப்பை ஒட்டி இடைஉரி எனவும் பிரித்துச் சொல்லின் இயல் உணரப்படுகிறது. அவற்றின் பிறப்பு வரலாறு (*etymology*) ஒட்டி அவை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று பிரித்து உணரப்படுகின்றன.†

---

* ஒலி — ஒல் + இ; ஒலி + அன் — ஒலியன் — புதுச்சொல் ஆக்கம். ஒல் — ஒலிக்குறிப்புப் பற்றித்தோன்றிய உரிச்சொல்.

† இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. — எச்சவியல். — சூ. 1.

பெயர்ச்சொல்

தமிழில் வடிவத்தைக் கொண்டு சொல்லின் இலக்கணம் உணர முடியும். எனினும் எல்லாச் சொற்களிலும் இவ் உண்மை பொருந்தாது. சில வடிவங்கள் அவை கொள்ளும் இலக்கணத்தை ஒட்டியும் உணர வரும் ; இடம் ஒட்டியும் அறிய வேண்டியுள்ளது.

அவன் வந்தான்	— வினை
வந்தானைக் கண்டேன்	— பெயர்
அவன் கரியன்	— வினை
கரியன் அவன்	— பெயர்
பூட்டு இது	— பெயர்
வீட்டைப் பூட்டு	— வினை
அதை அடி	— வினை
அடி ஒன்று	— பெயர்

அதனால் தமிழில் வடிவத்தைக் கொண்டே பெயர் வினை என்று முழுவதும் கூற முடியாது. அவற்றின் இலக்கண இயல்பைக் கொண்டே, அவை பெயரா வினையா என்று உணரப்படும். எனவே பெயருக்கும் வினைக்கும் உள்ள அடிப்படையான இலக்கண வேறுபாட்டை உணர வேண்டியுள்ளது.

பெயர் வேற்றுமை கொள்ளும். வினை வேற்றுமை கொள்ளாது என்பதே இரண்டிற்கும் உள்ள வேறு

பாடாகும். வினை குறிப்பாகக் காலம் உணர்த்தும். பெயர் காலம் உணர்த்தாது என்பது அடுத்த வேறுபாடு.*

பெயர்ச் சொற்களை இருவகையாகப் பிரித்து அறியலாம்.

1. பொருளை உணர்த்துவன :

பொன், நிலம், காலம், கண், நடை, மகன், மகள், நம்பி, நங்கை முதலியன.

2. இவற்றை உணர்த்தும் மாற்றுப் பெயர்கள் (*substitutes*) :

அவன், இவன், அவர், அது, யார், எது, எல்லாம், பல, சில, ஒன்று, இரண்டு முதலியன.

இந்த மாற்றுப் பெயர்கள் அமைப்பதால் குறித்த பொருளை மீண்டும் மீண்டும் உணர்த்தும் தேவையில்லாமல் சுருக்கமாகச் சொல்ல முடிகிறது. கூறியது கூறலைத் தவிர்க்க முடிகிறது; தொகுத்துச் சொல்ல முடிகிறது. இவை மொழிக்கு இன்றியமையாதன; பயின்று வழங்குவவாதலின் எளிதில் மாறாதவை. இவை வேற்றுமொழிச் சொற்களாக இருக்க முடியாது. இனமொழிகளில் ஒற்றுமையை நிறுவ இவை அடிப்படையானவை.

திணை உணர்த்தும்

தமிழில் பெயர்ச் சொற்கள் திணைப் பகுப்பின் அடிப்படையில் பிரித்து உணரப்படுகின்றன.† சிறப்பாக மாற்றுப் பெயர்கள் பால் திணை அடிப்படையில் அமைகின்றன.

---

* வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும். — தொல். சூ. 198.

† பெயரெனப் படுபவை தெரியுங்காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்றலாறே.

பெயராக்கம்

அடிச் சொற்களோடு ஆக்க உருபுகள் சேர்ந்தும் வேறு சில மாறுதல்கள் பெற்றும் பெயர்ச் சொற்கள் அமைகின்றன.

1. அடிச் சொல்லோடு ஆக்கஉருபு சேரல்

மல் + அர் — மலர்
அள் + இ — அளி
மல் + ஐ — மலை

இவ்வாறு சேரும் ஆக்க உருபுகளை (அ) க, த, ப வோடு சேர்ந்த உகர ஈறுகவும் (ஆ) அம், அல், அர், அன், இ, ஐ இல், இர், வு முதலிய சேர்ந்து அமைவதாகவும்(இ)கு, து, பு சேர்ந்த பிறகு மீண்டும் அம் அல் முதலிய உருபுகள் சேர்ந்து அமைவதாகவும் பிரித்துக் காணலாம்.

(அ) கு, து, பு சேர்ந்து அமைதல்.

பிர் + கு — பிர்க்கு
பல் + கு — பங்கு

தகரம் ச, ட, ற என மாற்றம் பெற்று ஆக்க உருபாக அமைகின்றது.

த — ச	புகழ்	+	து	+ இ	—	புகழ்ச்சி
	புலை	+	து	+ இ	—	புலைச்சி
	எழு	+	து	+ இ	—	எழுச்சி
த — ட	குருள்	+	து		—	குருடு
	இருள்	+	து		—	இருட்டு
	சுருள்	+	து		—	சுருட்டு
த — ற	கால்	+	து		—	காற்று
	சொல்	+	து		—	சோறு
பு —	உக	+	பு		—	உகப்பு
	உவ	+	பு		—	உவப்பு

(ஆ) அம், அல், அர், அன், இ, ஐ, இல், இர், வு முதலியன சேரல்.

நில்	+	அம்	—	நிலம் ; வலம், இடம்
நிழ்	+	அல்	—	நிழல் ; முறுவல், பகல்
மல்	+	அர்	—	மலர் ; அலர்
நில்	+	அன்	—	நிலன் ; புலன், வளன், மகன்
ஒல்	+	இ	—	ஒலி ; ஒளி, அளி, வளி
நில்	+	ஐ	—	நிலை ; வலை, விலை, மலை
தொழ்	+	இல்	—	தொழில் ; முகில்
உகு	+	இர்	—	உகிர்; மயிர், (மை — கருமை+யிர்) பயிர் (பசுமை—பய்+இர்)
சோர்	+	வு	—	சோர்வு ; தாழ்வு, வாழ்வு

(இ) கு, து. பு வும் பிறவும் சேரல்

துய்	+	கு	— தூங்கு	+	அம்	—	தூக்கம்
பால்	+	கு	— பாங்கு	+	அர்	—	பாங்கர்
பாண்	+	து	— பாடு	+	அல்	—	பாடல்
நீர்	+	து	— நீந்து	+	அம்	—	நீத்தம்
கொள்	+	து	— கொண்டு	+	அல்	—	கொண்டல்.

வள்	+	து	+	அல்	—	வண்டல்
துடை	+	பு	+	அம்	—	துடைப்பம்
இன்	+	பு	+	அம்	—	இன்பம்
துன்	+	பு	+	அம்	—	துன்பம்
செய்	+	கு	+	ஐ	—	செய்கை
நட	+	து	+	ஐ	—	நடத்தை
தென்	+	து	+	அல்	—	தென்றல்
தண்	+	பு	+	அம்	—	தட்பம்
கொல்	+	து	+	அம்	—	கொற்றம்

2. அடிச் சொற்கள் திரிந்து பெயராதல்

(அ) முதல் நீண்டுபெயராதல்:

உண் — ஊண்
படு — பாடு
மின் — மீன்
பெறு — பேறு
உறு — ஊற்று

(ஆ) பகுதி இரட்டித்துப் பெயராதல்

எழுது — எழுத்து
பாடு — பாட்டு
ஊறு — ஊற்று

இவ்வாறு ஆக்க உருபுகள் சேர்ந்தோ அடிச் சொற்களோ வினைப் பகுதிகளோ திரிந்தோ பெயராதலை ஆக்கப் பெயர்கள் (*derivative nouns*) என்பர். இவ்வாறே எல்லாப் பெயர்களும் அமைந்து விடும் என்று கூறவியலாது. பல பெயர்ச் சொற்களின் அடிச் சொற்கள் அறிய முடியாத நிலைமையில் இருக்கிறோம். வினைச் சொற்களுக்கு அடிச் சொற்கள் காண்பது எளிது; பெயர்ச் சொற்களுக்குப் பல அடிச் சொற்கள் விளங்காமற் போகிறது. எனினும் அவற்றின் தோற்றம் அறிய முடியாவிட்டாலும் உரிச் சொல்லாகிய அடிச் சொற்களோடு ஆக்க உருபுகள் சேர்ந்து அமைந்தவையே பல சொற்கள் என்று கொள்ளக் கிடக்கிறது.

3. துணைச் சொற்கள் தம் இயல்பான பொருளை இழந்து இடைச் சொற்களாகி முதற் சொற்களோடு சேர்ந்து பெயராதல்:

உறு	+ கண்	—	உறுகண்	—	கண் சேர்தல்
தறு	+ கண்	—	தறுகண்		,,
புன்	+ கண்	—	புன்கண்		,,
தீர்	+ மானம்	—	தீர்மானம்	—	மானம் சேர்தல்
கட்டு	+ மானம்	—	கட்டுமானம்		,,
பொறு	+ மானம்	—	பொறுமானம்		,,
கட்டு	+ பாடு	—	கட்டுப்பாடு	—	பாடு சேர்தல்
உடன்	+ பாடு	—	உடன்பாடு		,,
எல்(ற்)	+ பாடு	—	ஏற்பாடு		,,
கூ(வு)	+ பாடு	—	கூப்பாடு		,,

பெயர்களில் சிலவற்றை அவற்றின் இலக்கணச் சிறப்பும் அமைப்புச் சிறப்பும் கருதி (1) வினையாலணையும் பெயர், (2) தொழிற் பெயர், (3) பால்விகுதி சேரும் பெயர், (4) காரணப் பெயர் எனப் பலவாறாகப் பிரித்துக் காண்பர்.

1. வினையாலணையும் பெயர் *(participial noun)*

வினைமுற்றுப் பெயராக அமைந்து காலத்தையும் வேற்றுமையையும் உணர்த்துவதனை வினையாலணையும் பெயர் என்பர்.

அவன் செய்தான்	—	வினைமுற்று
செய்தானைக் கண்டேன்	—	வினையாலணையும் பெயர்
அவன் கரியன்	—	குறிப்பு வினைமுற்று
கரியன் வந்தான்	—	வினையாலணையும் பெயர்

2. தொழிற் பெயர் *(verbal noun)*

வினையாலணையும் பெயர் காலம் உணர்த்தும். தொழிற் பெயர் காலம் உணர்த்தாது. வினைப்பகுதியோடு தல் அல் முதலியன சேர்வதால் இவை அமைகின்றன.

செய்தல்	நல்லது.
உண்டல்	இனிது.
போகல்	நன்று.

ஆக்கப் பெயர்களாக வரும் வினையடிப் பெயர்களுக்கும் (*verbal derivative nouns*) தொழிற் பெயருக்கும் (*verbal noun*) உள்ள நுட்பமான வேறுபாட்டை அறிஞர் கால்டுவெல் காட்டுவர்.

வினையடிப் பெயரில் பெயர் ஆற்றல் மிகுதியாக உள்ளது. தொழிற் பெயரில் வினையாற்றல் மிகுதி.

வினையடிப் பெயர்	**தொழிற் பெயர்**
செய்கை	செய்தல்
உணவு	உண்டல்
போக்கு	போகல்
வேகமான செய்கை	வேகமாகச் செய்தல்
சுவையான உணவு	சுவையாக உண்ணல்
மென்மையான போக்கு	மெல்லப் போதல்

இவ்வாறு அடை கொண்டு முடியுமேயன்றி மாறி முடியாது. வேகமாகச் செய்கை, சுவையாக உணவு, மெல்லப் போக்கு என ஒன்றனோடு ஒன்று தொடர்பு பெறாது. வேகமாகச் செய்தல் என்பதில் அடை வினைப்பொருளைச் சிறப்பிக்கிறது. வேகமான செய்கை என்பதில் அடை பெயர்ப் பொருளைச் சிறப்பிக்கிறது. இந் நுட்ப வேறுபாட்டை அறிஞர் கால்டுவெல் காட்டுவர்.

பால் விகுதி சேரும் பெயர்கள் (*pronominalised nouns*)

பால் விகுதி அல்லது இடப் பெயர்களை சேர்ந்து பெயராதல் உண்டு. இடப் பெயர்களின் திரிபுகளே பால் விகுதியாகும் என்று கருதுவர்.

1. வினையோடு சேர்ந்து பெயராதல் உண்டு.

செய்து + அவன் — செய்தவன்
செய்து + அவள் — செய்தவள்

2. பெயர்ப் பகுதியோடு இவை சேர்ந்து பெயராதல் உண்டு.

இளை + அவன்	—	இளையவன்
இளை + ஓன்	—	இளையோன்
மட + ஓன்	—	மடவோன்
உர + ஓன்	—	உரவோன்
உடை + அவன்	—	உடையவன்
அடி + ஏன்	—	அடியேன்
அடி + ஓம்	—	அடியோம்

3. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் பற்றி வரும் பெயர்களோடு பால் விகுதிகள் சேர்ந்து பெயராதல் உண்டு.

பொன்+அன் — பொன்னன். ஏனையவும் இவ்வாறு அமையும்: அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊனன் என்பன காட்டுவர்.

காரணப் பெயர் (*agent nouns*)

ஒரு தொழிலுக்கோ பொருளுக்கோ உரிமையாதல் பற்றிச் சில பெயர்கள் அமைதலும் உண்டு. இவற்றைக் காரணப் பெயர் எனலாம்.

1. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்பற்றி வரும் பெயர்களும் இவற்றுள் அடங்கும்.

பொன்னன்	—	பொன்னுக்கு உரியவன்
நிலத்தன்	—	நிலத்துக்கு உரியன்
வெற்பன்	—	வெற்புக்கு உரியன்

2. அடிச் சொல்லோடும் வேறு முழுப் பெயரோடும் 'இ' சேர்வதால் பல காரணப் பெயர்கள் அமையும்.

உண் + இ — உண்ணி (இதனை உன்னி எனத் திரித்து வழங்குவர்.)

கொல் + இ கொல்லி

வெட்டு + இ வெட்டி (மண் வெட்டி)

நாற்கால் + இ நாற்காலி

மரம் ஏறு + இ மரமேறி

3. அடிச் சொல்லுக்கும் பால்விகுதிக்கும் இடையில் ஙகரம் அல்லது ஞகரம் வரச் சில காரணப் பெயர்கள் அமைகின்றன.

அறியு + ங் + அன் — அறியுநன் (சங்கவழக்கு)
செய்கு + ங் + அன் — செய்குநன் (,,)
அறி + ஞ் + அன் — அறிஞன் (இப் பொழுதைய வழக்கு)
கலை + ஞ் + அன் — கலைஞன் (,,)

(ங் திரிந்து ஞ் ஆகி யிருக்க வேண்டும்.)

4. ஆள் என்ற வினையடியோடு இ சேர்ந்து பிற பெயரோடு இயைந்து காரணப் பெயர் அமைகிறது.

மலையாளி, படிப்பாளி, அறிவாளி, முதலாளி, தொழிலாளி, பாட்டாளி, உழைப்பாளி முதலியன அமைதல்காண்க.

5. 'சாலி' என்ற துணைச் சொல் சேர்ந்து அமைதல் உண்டு.

பொறுமை சாலி.

சிறப்பாக வடமொழிச் சொற்களில் இவற்றின் அமைப்பைக் காணலாம்.

பாக்கியசாலி, குணசாலி, பலசாலி.

6. 'வான்' என்ற துணைச் சொல் சேர்ந்து அமைதல் உண்டு.

தனவான், கனவான், பாக்கியவான், பலவான்—இவையும் வட சொற்களே.

7. 'மான்' சேர்தல்.

நீதிமான், புத்திமான்.

புத்திமான் பலவான் ஆவான் — பழமொழி

8. காரன் காரி என்ற துணைச் சொற்கள் சேரல்.

பணக்காரன், வீட்டுக்காரன், வம்புக்காரி, சொகுசுக்காரி.

9. 'வந்தர்' சேர்தல்.

வட மொழி 'தனவான்' என்ற சொல்லை நோக்கித் தமிழில் தனவந்தர் எனத் திரித்து அமைத்துள்ளனர். செல்வந்தர் என்ற சொல்லிலும் இந்த 'வந்தர்' என்பது சேர்ந்துள்ளது. செல்வம் தமிழ்ச் சொல். செல்வந்தர் என்பது ஒப்புமைப் போலியமைப்பு.

சாலி, வான், மான், காரன், வந்தர் முதலியன வட மொழிச் சொற்களாதல் வேண்டும். இவ்வாறு தமிழ்ச் சொல்லோடு வட மொழிச் சொற்கள் சேர்ந்து அமையும் அமைப்பைக் கூட்டு அமைப்பு (*hybrids*) என்பர்.

திணை பால் அமைப்பு

தமிழில் பெயரும் வினையும் பால் திணை காட்டுதல் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது.* இது மொழியின் அடிப்படை இலக்கணமாகக் கருதப்படுகிறது.

பெயர்ச் சொற்களை வடிவு நோக்கிப் பால் பாகுபாடு முற்றிலும் அறிய முடியாது. சில சொற்களில் ஈறுபற்றி அதன் பால் திணையை ஒரு சில இடங்களில் கூற முடியாது. அவற்றின் பால் திணையை வழக்கு நோக்கியே உணர்தல் வேண்டும். இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து என அறுதியிட்டுக் கூற முடியாது என்பதைச் சேனாவரையர் நன்கு காட்டுகின்றார்:

" அவன், பெண்மகன், சாத்தன் என னகர வீறு ஆடுவிற்கும், மகடுவிற்கும், அஃறிணை யாண்பாற்கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகர வீறு மகடுவிற்கும் பல்லோர்க்கும் அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி நம்பி எனவும் ஆடு மகடு எனவும், இகர ஈறும் ஊகார ஈறும் இருபாற்கும் உரியவாய்

---

* ஆங்கிலத்தில் வினைச் சொற்களில் பால் பாகுபாடு இல்லை.

I cut, you cut, they cut.

படர்க்கைப் பெயரில் மட்டும் ஒருமை உணர்த்தத் தனிவடிவம் நிகழ் காலத்தில் அமைகிறது. 'S' சேர்கிறது.

வருதலானும் வினைச் சொற் போல இன்ன விறு இன்ன பாற்கு உரித்து எனப் பெயர்ச் சொல் ஈறுபற்றி உணர்த லாகாது"*

பெயர்ச் சொற்கள் பால்திணை விகுதி பெறுமல் கூறப் பட்டநிலையே பழைய நிலையாகும்.

பழைய வழக்கு	புதிய வழக்கு
இறை	இறைவன்
அரசு	அரசன்
அமைச்சு	அமைச்சன்
வேந்து	வேந்தன்
மகவு	மகன், மகள்.

மலையாளத்தில் 'பைதல்' என்ற சொல்லே பையன் என்ற பொருளை உணர்த்துகிறது. அச் சொல்லில் பால் காட்டும் விகுதி இல்லை. ஆண் பைதல் பெண் பைதல் என்று சேர்த்தே கூறுவர். தமிழ்ப் பேச்சு வழக்கில் ஆண் பிள்ளை—ஆம்பளை, பெண்பிள்ளை—பொம்பளை எனத் திரிந்து வழங்குகின்றன. பிள்ளை என்பது பொதுச் சொல்லாக வழங்குகிறது

திங்கள் ஞாயிறு என்பன பழைய வழக்குகள். சூரியன் சந்திரன் என்பன புது வழக்குகள். பால் விகுதி பெற்று வடமொழிச் சொற்கள் தமிழில் இவ்வாறு அமைந்துள்ளன.

இவற்றையெல்லாம் நோக்கப் பால் விகுதிகள் சேரா மல் பெயர்கள் வழங்கிய வழக்கே பழைய வழக்கு என்பதும் பழைய சொற்களில் ஈற்றமைப்பைக் கொண்டு தெளிவாகப் பால் உணர்த்த முடியாமல் இருந்தது என்பதும் அறிய முடிகின்றன.

---

* தொல். சூ. 161 க்குச் சேனவரையர் விளக்கவுரை.

பால் உணர்த்தும் சிறப்பு நோக்கி மாற்றுப் பெயர்களாகிய அவன் இவன் உவன் முதலானவற்றையே முதற்கண் ஓதிப் பிறகே ஏனைய பொதுப் பெயர்களைக் கூறுகின்றார். சுட்டு முதலாகிய மாற்றுப் பெயர்கள். (*substitutes*) பொதுவாகப் பால்காட்டும் ஈறுகளைப் பெற்றே விளங்குகின்றன. இவற்றுள் இடப் பெயர்களுக்கும் பால் விகுதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. வினைச் சொற்களின் பால் விகுதிகளாக அமைந்துள்ளவை இடப் பெயர்களின் திரிபுகள் என்பர்.

இடப் பெயர் சுட்டுப் பெயர் முதலிய பெயர்களிலேயே முதன் முதலில் பால் விகுதிகள் இடம் பெற்றிருக்க வேண்டும். இதற்கு அடுத்த நிலையில் வினைச்சொற்களோடு சேர்ந்து இயங்கி யிருக்கவேண்டும். அதற்கு அடுத்த நிலையிலேயே பெயர்களோடு பால் விகுதிகள் சேர்ந்தன எனக் கொள்ளல் பொருந்தும்.

பால் விகுதிகள் வினையோடுதான் தெளிவாகத் தோன்றும் எனத் தொல்காப்பியனார் வற்புறுத்தக் காண்கின்றோம்.

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றினின்று இசைக்கும் பதினே ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே. *

திணைப் பகுப்பு

மக்களை உயர்திணை என்றும், ஏனைய உயிர்களையும் உயிரில் பொருள்களையும் அஃறிணை என்றும் குறிப்பிடுவர். †

நரகர் தேவர் என்ற வழக்கு, மொழியில் இடம் பெற்றுவிட்டபிறகு அவற்றிற்கும் திணை கூறவேண்டிய நிலைமை

* தொல். சொல். சூ. 10.

† அல் + திணை — அஃறிணை (உயர்வு அல்லாத திணை).
உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே. — தொல். சூ. 1.

ஏற்பட்டுவிட்டது. தெய்வம் பேடு என்பனவற்றிற்குப் பால் கூறமுடியாத சிக்கல் மொழியில் ஏற்பட்டுவிட்டது. அவை வினைகொண்டால் எத்தகைய முடிவு கொள்ள வேண்டும் என்பது சிக்கலான நிலைமையாகி விட்டது. அவற்றிற்குத் தொல்காப்பியனார், 'இவ்வென அறியும் அந்தம் தமக்கில' வென்று கூறி அவை வினையேற்குங்கால் உயர்திணைப் பால்முடிவு கொண்டு இசைக்கும் என்று அமைதி கூறுகின்றார். *

நன்னூலார் இவற்றையெல்லாம் உட்கொண்டு, மக்களும் தேவரும் நரகரும் உயர்திணை என்று கூறவேண்டிய நிலைமை வந்துவிட்டது. †

விரவுத் திணை

சாத்தன் முடவன் போன்ற சொற்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் வந்தன. இவற்றை விரவுத்திணை என்பர். இவை முடியும் வினைச்சொல்லின் அமைப்பைக் கொண்டே அவற்றின் பால் திணை உறுதிசெய்ய முடியும். ‡ விரவுப் பெயராக வருவன இவை என விளக்கிக் கூறப்படுகிறது. §

---

* பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும். — தொல். சூ. 4.

† மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை. — நன். ,, 261.

‡ இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையிற்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே. — தொல். ,, 172.

§ இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே. — தொல். ,, 174.

பால் பகுப்பு

உயர்திணை ஆண் பெண் பலர் என்ற பிரிவினையும், அஃறிணை ஒன்று பல என்ற பிரிவினையும் பெறும். அஃறிணையில் ஆண் பெண் என்ற பாகுபாட்டை மொழி செய்வது இல்லை; வினைமுடிவில் ஒன்றன்பால் அல்லது பலவின் பாலாகவே முடியும். பெயர்ச் சொற்களில் வடிவால் தனி வேறுபாடு அமையவில்லை. எனினும் சில சிறப்புச் சொற்கள் ஆண் பெண் இவற்றைக் குறிக்க வழங்குகின்றன.

ஒருவன் ஒருத்தி என்பதில் ஒருமை அடங்கிக் கிடக்கிறது. பலர் என்பதில் பன்மை அடங்கியுள்ளது. ஆண் பன்மை பெண் பன்மை என இல்லாமல் பொதுவாகப் பன்மை என்று அமைந்திருப்பது சிறப்பியல்பாகும்.

அஃறிணையில் ஆண் பெண் பகுப்பு

வினைச் சொற்கள் ஒன்றன்பால் அல்லது பலவின்பால் பெறுகின்றன. ஒரு சில பெயர்ச் சொற்கள் ஆணைக் குறித்தும் பெண்ணைக் குறித்தும் வருமெனினும் அவை ஒன்றன்பாலாகவே கொள்ளப்படும். இரண்டுக்கும் பொதுவான சொற்களும் உள்ளன.

ஆண்	பெண்	பொது
சேவல்	பெட்டை	கோழி
பிடி	களிறு	யானை
இரலை	பிணை	மான்
கடுவன்	மந்தி	குரங்கு
எருது	பசு	மாடு

சில இடத்துப் பொதுச் சொற்களோடு ஆண் பெண் என்ற சிறப்புச் சொற்கள் சேர்த்து ஆண் பெண் வேறுபாடு காட்டுவது உண்டு.

ஆண் யானை பெண் யானை
ஆண் குரங்கு பெண் குரங்கு

பயிற்சி மிகுந்த சொற்களில் ஆண் மாடு பெண் மாடு என்று கூறப்படுவதில்லை. பசு எருது என்றே கூறப்படும். கோழி சேவல் என்றே கூறுவர். ஆண் கோழி பெண் கோழி என்று கூறுவதில்லை. *

பால் காட்டும் ஈறுகள்

னகர ஈறு ஆண்பாலையும் ளகர ஈறு பெண்பாலையும் ரகர ஈறு பலர்பாலையும் ‘து’ ஒன்றன்பாலையும் அகர ஈறு பலவின்பாலையும் உணர்த்தும். து என்பதன் மாற்றுப் பதங்கள் (*allomorphs*) டு று என்பன வழங்குகின்றன. பகர இறுதியும் மார் என் கிளவியும் பலர்பாலை உணர்த்தும். எதிர்மறையில் பலவறி சொல்லாக ‘ஆ’ ஈறு வரும். பலவின் பாலில் அகரமும் வகரமும் மாற்றுப் பதங்களாம். மெய்யீறில் முடிவன அகரத்தையும் உயிரீறில் முடிவன வகரத்தையும் கொண்டு முடியும். இவை வினையோடே தெளிவாகப் பாலை உணர்த்தும் என்பர். †

---

* பிடி, களிறு, இரலை பிணை, கடுவன் மந்தி என்பன பழைய வழக்குகள். அவர்கள் நேரில் இவற்றைக் கண்டு பழகியதால் இவ் வேறுபாட்டோடு இவற்றைக் குறித்தனர். இவ் வழக்கு இப்பொழுது இல்லை. கடுவன் என்பது ஆணைக் குறிக்கும் சொல்லாகக் கடுவன் பூனை, கடுவன் நாய் என வழங்குகிறது.

† னஃகா னொற்றே ஆடூஉ வறிசொல் தொல் - சொல் - சூ. — 5
ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல் — ,, 6
ரஃகா னொற்றும் பகர விறுதியும்
மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே — ,, 7
ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும் — ,, 8
அ ஆ வ என வரூஉம் இறுதி
யப்பான் மூன்றே பலவறி சொல்லே — ,, 9
இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினை யொடு வருமே — ,, 10

ன் ம்

இவையே யன்றி னகரம் பொதுவாக ஒருமையை உணர்த்தவும் மகரம் பன்மையை உணர்த்தவும் வருகின்றன.

தாம் — பன்மை

தான் — ஒருமை

இவ் உறழ்வால் மகரம் பன்மையையும் னகரம் ஒருமையையும் உணர்த்தும் என்பது தெளிவாகிறது.*

இவ் வுண்மை வேறுசில சொற்களின் ஈற்றாலும் உறுதி பெறுகிறது. எல்லாம், நாம், யாம், எம், நும் என்பன பன்மையை உணர்த்த நான், யான், என், நின் முதலியன ஒருமையை உணர்த்துகின்றன. நியிர் பன்மையை உணர்த்த நீ ஒருமையை உணர்த்துகிறது. நின் என்பதில் னகரம் இருப்பதால் 'நீன்' என வழங்கியும் இருக்கலாம்.

கும் டும் தும் றும்

என்பன பன்மையை உணர்த்துகின்றன.

அம் என்பதன் திரிபாகவே 'அவ்' 'அவை' என்ற பன்மைச் சுட்டுகள் அமைந்திருக்க வேண்டும் என்று கருதுவர்.

அவற்றிற்கு நேராக கு, டு, து, று ஒருமையை உணர்த்துகின்றன. அவையும் குன், டுன், துன், றுன் என வழங்கியிருக்க வேண்டும் எனக் கருதுவர். செய்யும் என்ற வழக்

* தாமென் கிளவி பன்மைக் குறித்தே —சூ. 184.
தானென் கிளவி யொருமைக் கிரித்தே — ,, 185.

கிற்கு நேராகச் செய்யுன் என்ற வழக்கும் இருந்திருக்க வேண்டும் எனக் கருதுவர்.*

தொல்காப்பியர் காலத்தில் மகரமும் னகரமும் மாருடிய காரணத்தால் ஒருமை பன்மை வேறுபாடு மறைந்திருக்க வேண்டும் எனக் கருதுவர். அதனுல்தான் அஃறிணைச் சொற்கள் பலவற்றில் மகரமும் னகரமும் போலியாக அமைந்தன என்பர்.

மரம் மரன் குளம் குளன் இவ்வாறு மாறிவந்த காரணத்தால் இரண்டிற்கும் வேறுபாடு மறைந்துவிட்டது என்பர். தமிழில் மரம் என்பது நிலைக்கத் தெலுங்கில் மரானு என்பது வழங்குகிறது. புளியன் எருக்கன் வேலன் முதலிய சொற்களில் னகரம் நிலைபெற்று விட்டது. மரம் என்பது பன்மையையும் மரன் என்பது ஒருமையையும் உணர்த்தியிருக்க வேண்டும் எனக் கொள்வர்.†

---

*கும், டும், தும், றும் என்பன தன்மைப் பன்மையில் மட்டும் வழங்குகின்றன. ம் பன்மையானல் குன், டுன், துன், றுன் என்ற ஒருமை வடிவங்கள் இருந்திருத்தல் வேண்டும்; இவற்றின் ஈற்று னகரம் கெட்ட வடிவமே கு, டு, து, று என்பன. இவை தன்மையில் வழங்கும்.

தன்மை யல்லாத பிற இடங்களில் செய்யும் என்ற வாய்பாடே வழங்கிற்று. ஈதும் ஒரு காலத்தே பன்மைக்கே வழங்க உன் என்ற ஈறு ஒருமைக்கு வழங்கி இருத்தல் வேண்டும். வருக என்பது போன்ற வடிவங்களைத் தொல்காப்பியத்தே காண்கிறோம். இவற்றில் வருக் என்பது தெலுங்கிற் போலச் 'செய்யுன்' என்ற ஒருமை வாய்பாடு எனலாம்.

— தெ. பொ. மீ. கலைக்களஞ்சியம். 'தமிழ்' பக். 475.

† It is our thesis that | maran | denoted the singular and | maram | the plural in ancient times.

T.P.M. ' The so-called inflexional increments in Tamil '—' Indian Linguistics Turner Jubilee volume, II — 1959.

மரம் மரன் போன்ற சொற்களின் ஈற்று அம் அன் என்பனவே பிரிந்து அம் அன் என்ற சாரியைகளாக வழங்கியிருக்க வேண்டும் என்று கருதுவர்.

எனவே பொதுவாக மகர ஈற்றுச் சொல் பன்மையையும் னகர ஈற்றுச் சொல் ஒருமையையும் உணர்த்துகின்றன என்று கொள்வர். †

கள் என்னும் ஈறு

தொல்காப்பியர் காலத்தில் 'கள்' என்னும் பன்மை உருபு அஃறிணைக்கு மட்டும் வந்தது.

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே. ‡

நன்னூலார் காலத்தில் 'கள்' உயர் திணைக்கும் கொள்ளப்படுகிறது.

கிளந்த கிளைமுதல் உற்ற ரவ் வீற்றவும்
கள்ளென் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும். §

ரகர ஈற்றுச் சொல் உயர்திணையில் பன்மையையும் மரியாதை ஒருமையையும் உணர்த்தத் தொடங்கப் பிறகு இவற்றிடையே வேறுபாடு அமைக்க வேண்டி 'கள்' இடம் பெற்றிருக்க வேண்டும்.

---

* | an | and | am | came to be looked upon when occurring as exceptional cases in older forms of words, as mere augments having nothing to do with the original forms of the word. But, if our assumption is correct, these are not mere augments but integral parts of the words, ie., suffixes signifying singular and plural respectively. T. P. M.

† எல்லாச் சொற்களிலும் ஆண்பால் பெண்பால் என்ற வேற்றுமையின்றி ஒருமையை னகரமும் பன்மையை மகரமும் காட்டிய நிலை மிக மிகப் பழைய காலத் திராவிட மொழியில் வழங்கிய நிலை எனக் கொள்ளக் கூடும்.

— தெ. பொ. மீ. கலைக்களஞ்சியம். 'தமிழ்'. 472.

‡ தொல். சூ. 169.

§ நன். சூ. 278.

அரசர்—அரசர்கள் பிறகு மரியாதை ஒருமையிலும் இந்தக் 'கள்' வழக்குப் பெற்றுவிட்டது; தலைவர் அவர்கள். *

வினைச்சொல்லில் பேச்சு வழக்கில் இந்தக் கள் ஈறு மிகுதியாக இடம் பெற்றுவிட்டது. 'அவர்கள் வருவார்கள்' என்பது 'அவங்க வருவாங்க' என்று வழங்கத் தொடங்கி விட்டது. இது மரியாதை ஒருமையிலும் மிகுதியாக வழக்குப் பெற்றுவிட்டது. 'ர்கள்' என்பதன் திரிபாக 'ங்க' என்பது அமைந்துவிட்டது. பொருளே இல்லாமல் வெறும் மரியாதை அறிகுறியாகச் சிலர் பேச்சில் இது இடம் பெற்று விட்டது. 'என்னங்க' 'அது வீடுங்க.' நீங்கள் என்பதன் ஈற்றுநிலை பால் விகுதி போல முன்னிலை வினைச்சொற்களில் இடம் பெற்றுவிட்டது.

நீங்க வாங்க

நீர், உம், அவர், நாம், எம் முதலிய பன்மை இடப் பெயர்களிலும் சுட்டுப் பெயர்களிலும் கள் மிகுதியாக இடம் பெற்றுவிட்டது.

நீங்கள், உங்கள், அவர்கள், நாங்கள், எங்கள்.

ரகர ஈறு

மகர ஈறு பொதுவாகத் திணை வேறுபாடு அற்று ஒருமை பன்மை வேறுபாடு காட்டப் பன்மைக்கு வழங்கி வந்தது. ரகர ஈறு திணை வேறுபாடோடு பன்மைக்கு வழங்குகிறது. ரகரம் உயர்திணையில் பலர்பால் விகுதியாக வருகிறது. இதுவே மகரத்திற்கும் ரகரத்திற்கும் உள்ள வேறுபாடு எனலாம்.

நீவிர், நீர், வருவீர், வருவார், அவர் முதலிய சொற்களில் ரகரம் வருகின்றது.

---

* தெலுங்கில் மீரு என்பதற்கு மேலும் மீரலு என்ற வழக்கும் உள்ளது.

மார்—மகரமும் ஆர் என்பதும் சேர்ந்த ஒன்றாகக் கருதப் படுகிறது. செய்யும் ஆர் என்பது இணைந்து செய்யுமார் என்று ஆகிப் பிறகு மார் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும் எனக் கருதுவர்.

ரகர ஈற்றின் சிறப்பு

மொழியில் சிறப்புப்பால் உணர்த்தும் சொற்களேயன்றிப் பொதுப் பால் உணர்த்தும் சொற்களும் தேவையாக உள்ளன.* பால் வேறுபாடு சுட்டிக் காட்டத் தேவை யில்லாத இடத்தும் பொதுவாகக் குறிக்க வேண்டிய இடத்தும் பொதுச் சொல் தேவையாக உள்ளது.†

'குற்றம் செய்பவன் தண்டிக்கப்படுவான்' என்றால் குற்றம் செய்பவள் தண்டிக்கப்பட மாட்டாள் என்றும் பொருள் கொள்ளக் கூடும். குற்றம் செய்பவர் தண்டிக்கப் படுவார் என்று குறித்தால் இரு பாலாரையும் குறிக்க முடிகிறது.

'அவனோ அவளோ வருவான்' என்று சொல்வது தவறாக முடிகிறது. இவ்வாறு ஐயமாக வருமிடத்துப் பொதுச் சொல்முடிவு தேவையாக உள்ளது.

'அவனோ அவளோ வருவார்' என்று கூறுதல் பொருந்துகிறது. வருவார் என்ற பொதுச் சொல் தேவையாக உள்ளது.

மாணவன் மாணவி, ஆசிரியன் ஆசிரியை என்று தனித்துப் பிரித்துச் சொல்ல வேண்டாத இடத்து இவர்களைக் குறிக்க மாணவர், ஆசிரியர் போன்ற பொதுச் சொற்கள் தேவையாக உள்ளன.

---

* ஆங்கிலத்தில் student, pupil, teacher, person, who, each, somebody முதலிய சொற்கள் பொதுப்பாலில் வருவன.

* ஆங்கிலத்தில் he she என்பதற்குப் பொதுவான சொல் இல்லை. அதனால் சட்ட நூல்களில் he என்று வரும் இடங்களில் she என்ற பொருளும் கொள்ள வேண்டும் என்று அடிக்குறிப்புக்கொடுப்பர்.

ஒருவன் ஒருத்தி என்பதற்குப் பொதுவாக ஒருவர் என்ற சொல் தேவைப்படுகிறது. *

இவ்வாறு பொதுத் தன்மையை உணர்த்த வரும் இடங்களில் தமிழில் ரகர ஈறு பெயரோடும் வினையோடும் வருகின்றது.

யார் என்ற சொல் உயர்திணைப் பொதுச் சொல்லாகவே அமைந்துவிட்டது. யாவன் யாவள் என்ற சொற்கள் இப்பொழுது வழக்கிழந்து விட்டன. †

அவன் யார்?

அவள் யார்?

என்று பொதுச் சொல்லே வழங்குகிறது.

இகர ஈறு

தமிழில் ஒரு சில பெயர்ச் சொற்களில் இகரம் ஈற்றில் வருகின்றது. வினைச் சொற்களில் 'ள்' ஒன்றே உளது; இகரம் இல்லை. தலைவி, ஒருத்தி, செவிலி, பொன்னி, தோழி, பெருமாட்டி முதலிய சொற்களில் இகரம் வருதல் காண்க.

தொல்காப்பியனார் இகர ஈறு பெண்பாற்கு உரித்து என்று கூறவில்லை. அவர் பொதுவாக வினைச் சொற்களின் ஈறுகளையே கூறுகின்றார். வினைச் சொற்களில் இகர ஈறு வாராமையால் அதனைக் கூறவில்லை. கிளவியாக்கத்துள் பால்விகுதிகளைக் கிளந்து கூறும் அவர் வினையியலிலேயே அவற்றிற்கு விளக்கம் கூறக் காண்கிறோம். பெயரியலில் பால் விகுதிகளைப் பற்றி அவர் யாதும் கூறவில்லை. அதனால் பெயருக்கே உரிய இகர விகுதி பற்றி அவர் கூற

---

* ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கு முரித்தே தெரியுங் காலை--தொ. சூ. 191.

† யாவன் யாவள் என்பன தொல்காப்பியர் குறிக்கிறார்.—சூ. 162.

வில்லை எனக் கொள்ளலாம். நன்னூலார் பெயர்ச்சொற்களில் இகரம் வருதல் நோக்கி இகரத்தையும் பெயர்ச்சொற்களில் பால்விகுதியாகக் கூறுகின்றார். *

பால் உணர்த்தத் தேவையில்லாத இடம்

பேச்சு மொழியில் பால் உணர்த்தத் தேவை யில்லாத இடங்களில் உயர்திணைச் சொற்களை அஃறிணை வடிவு கொண்டே உணர்த்துகின்றனர். சிறப்பாக முறைப் பெயர்களில் இவ் வமைப்பைக் காணலாம்.

அன்றி னகர ஈற்றிலோ ளகர ஈற்றிலோ கூறுவது மரியாதை குறைவு என்ற காரணத்தாலும் பால் உணர்த்தாமல் கூற வேண்டி அஃறிணை வடிவில் உணர்த்துகின்றனர் என்றும் கொள்ளலாம். இதன் அடிப்படை அஃறிணையில் உணர்த்த வேண்டும் என்பது அன்று. பால் கூறாமல் வழங்க வேண்டும் என்பதேயாகும்.

மாமா வந்தது
அண்ணன் வந்தது
தம்பி வந்தது
தங்கை வந்தது
அக்கா வந்தது

இவற்றில் மரியாதையும் அன்பும் கலந்துள்ளன.

தெலுங்கு மொழியில் ஒன்றன்பால் அமைப்பிலேயே பெண்பாலை உணர்த்துகின்றனர்.

---

* கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
எவ்வொற் றிகரக் கேற்ற ஈற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே. — நன். சூ. 277.

ஆடதி வச்சினதி (பெண் வந்தாள்)
அதி வச்சினதி (அவள் வந்தாள்)

கோந்த் மொழியிலும் இவ் வழக்கு உளது என்பர் அறிஞர் கால்டுவெல்.

அதி என்பதில் தகர ஈறு ஒன்றன்பாலை உணர்த்துகிறது. இகரம் பெண்பாலை உணர்த்துகிறது. இரண்டும் ஒன்றாக இணைந்து அமைந்திருப்பதால் பெண்பாலுக்கும் அஃறிணை ஒருமைக்கும் பொதுவாக இது அமைந்துள்ளது என்று கொள்ளுதல் பொருந்தும்.

பால் பகா அஃறிணைப் பெயர்

அஃறிணையில் சில சொற்கள் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வருகின்றன.

யானை வந்தது
யானை வந்தன
மரம் வளர்ந்தது
மரம் வளர்ந்தன

இவ்வாறு அஃறிணையில் பெயர்ச் சொற்களில் பால் பிரிக்காமல் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வழங்கும் வழக்கு உளது. இதனைப் பால் பகா அஃறிணைப் பெயர் என்பர்.*

னகர மகரங்களுள் அஃறிணைச் சொற்களில் வேறுபாடு மறைந்துவிட்ட காரணத்தால் ஒரே இறுதி ஒருமையையும் பன்மையையும் உணர்த்தத் தொடங்கி நாளடைவில் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவான அஃறிணைச் சொற்கள் வழங்கியிருக்கலாம் என்று கருதுவர். அஃறிணையில் ஒருமை பன்மை வேறுபாடு முதலில் இருந்தது என்றும் அவை

* பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய. — நன். 281.

மறைந்த பின்னரே இவ்வாறு பொதுமையுற்றது என்றும் கருதுவர்.*

தொகைச் சொற்கள் ஒருமையில் வழங்கல்

தொகையாக வரும் பெயர்கள் சில இடங்களில் ஒருமையில் சொல்லுதல் மரபாக உள்ளது. பல பொருள்களைத் தொகுத்து ஒரு பொருள் போலக் கருதும் அடிப்படையே இதற்குக் காரணமாகிறது.

எல்லாம் என்பது ஒருமை போல் வழங்கும் வழக்கு உள்ளது.

வெயிலெல்லாம் மறைந்தது
பணமெல்லாம் இருக்கிறது
வீடுவாசல் நிலம் கிணறு இருக்கிறது
பத்துமாடு வந்தது

பத்து மாடுகளையும் ஒன்றாகக் கருதும் போக்கே இவ்வமைப்புக்குக் காரணம் ஆகும்.

மேலும் எண்ணுப் பெயர்கள் இந்த அடிப்படையிலேயே அமைந்துள்ளமை காணலாம்.† ஒன்று இரண்டு முதலிய எண்கள் ஒன்றன்பால் விகுதியாகிய 'து' பெற்றிருப்பது அவை ஒன்றன் பாலாகக் கொள்ளப்பட்டமையால்

---

* இவ்வாறு மரம் மரன் என்பவை மர௦ (mara) என்ற ஒலியாக ஒலிக்கும் போது ஒருமை பன்மை எவ்வாறு காண்பது ? இவ்வாறு நிகழ்ந்தபோது அஃறிணைச் சொற்கள் ஒருமை பன்மை என்ற வேற்றுமை காட்ட மாட்டாது நின்றன. இவற்றையே தொல்காப்பியர் அஃறிணை இயற்பெயர் என்பர்; பின்வந்தோர் பால்பகா அஃறிணை என்பர். அஃறிணையில் ஒருமை பன்மை வேறுபாடு பின் புகுந்தது அன்று; முன்னிருந்து மறைந்தது என்றே கூறவேண்டும்.
— கலைக்களஞ்சியம் 'தமிழ்' பக். 472.

† A numeral like, two, ten, or hundred is taken as one unit ; and hence is in the form of the singular number.

—T. P. M. "The so called inflexional increments in Tamil" Jubilee volume.

ஆகும். தொகுத்து ஒன்றுகக் கருதும் அடிப்படையே இதற்குக் காரணம் ஆகும்.

ஒன்	+	து	—	ஒன்று
இரண்	+	து	—	இரண்டு
மூன்	+	து	—	மூன்று
ஆ	+	று	—	ஆறு
ஐந்	+	து	—	ஐந்து
எண்	+	து	—	எட்டு
நூ	+	று	—	நூறு.

மூவிடப் பெயர்

மாற்றுப் பெயர்களுள் மூவிடப் பெயரும் ஒன்றாகும். அவை தன்மை முன்னிலை படர்க்கை என்பனவாம். இம் மாற்றுப் பெயர்களை ஆராயும்போது மூன்று வகையாக ஆராயலாம். ஒன்று அவற்றின் விளக்கம், இரண்டு அவற்றின் வரலாறு, மூன்று இனமொழிகளோடு ஒப்புமை.

மூவிடப் பெயரின் விளக்கம்

தன்மை முன்னிலை படர்க்கை என்னும் இம் மூன்று இடங்களைக் குறிக்கும் பெயர்கள் ஒருமை பன்மை மட்டும் காட்டும். திணை வேறுபாட்டின் அடிப்படையில் இவை ஆராயப்படுகின்றன. சுட்டுப் பெயர்களைப் போல இவை ஐந்து பாலையும் காட்டுவன அல்ல. பொதுவாக ஒருமையை னகர ஈறும், பன்மையை மகர ஈறும் ரகர ஈறும் காட்டு கின்றன.

திணை விளக்கம்

தன்மைப் பெயர் தொல்காப்பியர் காலத்தில் உயர் திணைக்கு மட்டும் உரியது. முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயரும் இருதிணைக்கும் பொதுவாக வருவன. நன்னூலார் தன்மையையும் இருதிணைக்கும் பொது என்று குறிப்பர்.*

* நன். சூ. 282.

		தொல்காப்பியம்	நன்னூல்
தன்மை	ஒருமை	யான்	யான், நான்
,,	பன்மை	யாம், நாம்	யாம், நாம்
முன்னிலை	ஒருமை	நீ	நீ
,,	பன்மை	நீயிர்	நீயிர், நீவிர், நீர்
படர்க்கை	ஒருமை	தான்	தான்
,,	பன்மை	தாம்	தாம்

ஒருமையும் பன்மையும்

தான் என்கிளவி ஒருமைக் குரித்தே
தாம் என்கிளவி பன்மைக் குரித்தே

என்பர் தொல்காப்பியனார்.* இவ் வுறழ்ச்சியால் னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் உணர்த்தும் என்பது அறியக் கிடக்கிறது. ஏனைய இடப் பெயர்களிலும் இது பொருந்துவதாக உள்ளது. ஒருமை வடிவங்களான யான் நான் என்பவற்றில் னகரமும் யாம் நாம் என்பவற்றில் மகரமும் உள்ளன. எல்லாம் என்ற தொகைப் பெயரிலும் மகரம் பன்மையைக் காட்டும். † நீயிர் என்பது பன்மையை உணர்த்துவதால் ரகர ஈறும் பன்மை உணர்த்தும் வடிவம் என அறியக் கிடக்கிறது.

உருபு ஏற்கத் திரியும் வடிவங்கள்

பொதுவாக மூவிடப் பெயர்கள் உருபு ஏற்க நெடுமுதல் குறுகின்றன. இதில் நன்னூலாருக்கும் தொல்காப்பியனாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

யான் — என் ; யாம் — எம்; நாம் — நம் ;
தான் — தன் ; தாம் — தம்; நீ — நின் ;
நீயிர் — நும் என வடிவம் பெறுகின்றன.

---

* சூ. 185, 184.

† தொல். சூ. 186.

நான்

இது நன்னூலில் மட்டும் கூறப்படுகிறது. யான் என்பது என் என்று அமைவதைப் போல நான் என்பது நன் என்று அமையும் வடிவம் இல்லை. இதுவேயன்றி நன்னூலாரும் தொல்காப்பியனாரும் குறிப்பிடாத **நுன், உன் உம்** என்பனவும் மொழியில் இடம் பெற்றுள்ளன. இவை நான்கும் பிற்காலத் திரிபுகள்.*

நீவிர் நீர்

நீம் என்பதுவே நீவ் என அமைந்து இர் பெற்று நீவிர் எனவும் பிறகு நீயிர் நீர் எனவும் மாறி யமைந்துள்ளன என்பர்.

நீன் நீம்

தொல்காப்பியனார் உருபேற்கத் திரிந்த வடிவமாக நின் என்பதையும் நும் என்பதையும் கூறுகின்றார். நீ என்பதில் னகரம் இல்லை. நீயிர் என்பதில் மகரம் இல்லை. யான் தான் என்பவற்றில் னகரமும் யாம் நாம் என்பவற்றில் மகரமும் நின் நும் என்பவற்றில் முறையே னகரமும் மகரமும் இருத்தல் நோக்கின் இவற்றின் நெடில் வடிவம் நீன் நீம் எனக் கொள்ளக் கிடக்கின்றன.

பால் விகுதிகள்

தன்மை ஒருமை	**தன்மைப் பன்மை**
கு, டு, து, று	கும், டும், தும், றும்
என், ஏன், அல்	அம், ஆம், எம், ஏம்.

---

* நாம் என உளப்பாட்டுத் தன்மைப் பன்மைக்கு ஒரு வடிவம் தொல்காப்பியர் கூறுகின்றார். உளப்பாட்டுத் தன்மை என்பது பன்மையே யாதலின் இதற்கேற்ற ஒருமை வடிவம் இருப்பதற்கு இல்லை. ஒற்றுமை நயத்தால் யாம் யான் என்பன போல நாம் நான் எனப் பேசத் தொடங்கியதால் நான் என்ற தன்மை ஒருமை வடிவமும் பல்லவர் காலத்தில் நிலைபேறு எய்தியது. நும் என்பதற்கேற்ப நுன் என்பதும் தோன்றியது. இவற்றின் மாற்றங்களான உன் உம் என்பன நிலைபெற்றன. — தெ. பொ. மீ. — கலைக்களஞ்சியம் 'தமிழ்' ப. 476.

இவையே தொல்காப்பியனார் கூறுவன. இவற்றோடு அன் என்பதை ஒருமையிலும் ஓம் என்பதைப் பன்மையிலும் சேர்த்து நன்னூலார் கூறுவர்.* கும், டும், தும், றும் என்பவற்றை நோக்கக் கு, டு, து, று என்பனவும் னகரம் பெற்றுக் குன் டுன் துன் றுன் என ஒருமையை உணர்த்தி யிருக்க வேண்டும் எனக் கருதுவர். அல் என்பதே பழைய தன்மை ஒருமை விகுதி. அன் என்பது பிற்காலத்து வடிவம் எனத் தெரிகிறது. என் ஏன் என்பன யான் என்பதன் திரிபுகளே யாகும். ஒன்றன் மாற்று வடிவமே மற்றொன்று. அம் ஆம் முதலியன யாம் நாம் என்பவற்றின் ஈற்று நிலைகளாம். அவையும் ஒன்றன் மாற்று வடிவமே ஏனைய என்பது கொள்ளக் கிடக்கின்றது.

முன்னிலை ஒருமை	முன்னிலைப் பன்மை
இ, ஐ, ஆய்	இர், ஈர், மின்†

இ : நீ என்பதன் ஈற்று நிலைத்திரிபாகக் கொள்ளக் கிடக்கிறது.

ஐ, ஆய் : அய் என்பதே ஐயாகும்.
அய் என்பதன் நீட்சி ஆய் என்பதாகும்.
அய் என்பதன் தோற்றம் தெளிவு பெறவில்லை.‡

இர், ஈர்

ஒன்றன் மாற்று வடிவமே ஏனையது. நீயிர் என்பதில் உள்ள இர் என்பதே இப் பால்விகுதியாகும். நீம் என்பது இர் பெற்று இர் பன்மை உணர்த்துவதால் மகரம் வகரமாகத் திரிந்து நீவிர் என அமைந்தது என்பர். நீவிர் என்பதே நீயிர் என மருவியது.

---

* நன்னூல் சூ. 331, 332.

† தொல். 223, 224 ; நன். சூ. 335, 337.

‡ என்ஐ—என்னை, தன்னை முதலிய சொற்களில் தலைமைப் பொருளைக் குறிக்கும் ஐ என்பதே முன்னிலை ஒருமை விகுதியில் வழங்குவது என்று திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் கருதுவர். மூவிடப் பெயர் பக்கம் 49.

மின்

இது மகரமும் இன்னும் சேர்ந்த கூட்டு அமைப்பாகும். மகரம் பன்மையை உணர்த்துவது. இன் என்பது நின் என்பதில் உள்ள முன்னிலை விகுதி. இரண்டும் சேர்ந்து முன்னிலைப் பன்மையை உணர்த்துகின்றன என்பது கொள்ளக் கிடக்கிறது.

பிற இனமொழிகளில்

தன்மை ஒருமை

தெலுங்கு

ஏனு நேனு என்ற இருவடிவங்கள் தன்மை ஒருமையில் வழங்குகின்றன. இவை தமிழில் உள்ள யான் நான் என்பவற்றிற்கு நிகரானவை. உருபேற்கத் திரிந்த வடிவம் நன் என்பது. மற்றொன்று நா என்பது.

கன்னடம்

ஆன் நான் என்ற இருவடிவங்கள் உள்ளன. உருபேற்கத் திரிவன என் நன் என்பன.

மலையாளம்

ஞான் என்பது எழுவாய் வடிவம் ; என் என்பது உருபேற்கத் திரிந்த வடிவம்.

தன்மைப் பன்மை

தெலுங்கு

ஏமு, மனமு, மேமு — எழுவாய் வடிவம்.

மம், மா, மன — உருபு ஏற்கும் வடிவம்.

மேமு மனமு என்பவற்றில் இரண்டு மகரங்களும் பன்மை காட்ட வருவன என்பர். உருபு ஏற்கும் வடிவங்களில் உள்ள மகரமும் பன்மை காட்டும்.

கன்னடம்

ஆம், நாம்	—	எழுவாய் வடிவம்
எம், நம்	—	உருபு வடிவம்

இவற்றுள்ளும் மகரம் பன்மை காட்டல் காண்க.

மலையாளம்

ஞங்ஙள், எங்ஙள், நாம் — எழுவாய் வடிவம்
ஞங்ஙள் எங்ஙள் நாம் — உருபு வடிவம்

கள் சேர்ந்துள்ள வடிவம் பெற்றிருப்பது இம் மொழியின் சிறப்பாகும். நகரம் ஞகரமாக மாறியிருப்பது இதில் காணப்படும் மற்றொரு சிறப்பாகும்.

முன்னிலை எழுவாய் வடிவம்

	ஒருமை	பன்மை
தெலுங்கு	ஈவு, நீவு	ஈரு, மீரு, மீரலு
கன்னடம்	நீன்	நீம், நீவு
மலையாளம்	நீ	நிங்கள், நீம்

உருபு ஏற்கத் திரிந்த முன்னிலை வடிவம்

		ஒருமை	பன்மை
தெலுங்கு	—	நின், நீ	மிம், மீ
கன்னடம்	—	நின்	நிம்
மலையாளம்	—	நின்	நிம், நிங்கள்

தெலுங்கில் வகரம் இருத்தலின் நீவு என்பது பன்மை வடிவமே. ஒருமையைப் பன்மையில் குறிக்கும் வழக்கம் பற்றி இவ்வாறு நீவு என்பது ஒருமையைக் குறிக்கிறது. கன்னடத்தில் நீவு என்பது பன்மையையே குறிக்கிறது. நீம் நீன் என்பன எழுவாய் வடிவமாகவும் நிம் நின் என்பன

உருபேற்கத் திரிந்த வடிவமாகவும் கன்னடத்தில் ஒழுங்காக அமைந்துள்ளன. நெடுமுதல் குறுகலும், ஒருமைக்கு னகரமும் பன்மைக்கு மகரமும் அமைதலும் ஆகிய இவை தெளிவாக விளங்குகின்றன. மீரலு என்ற தெலுங்கு வடிவம் தமிழில் கள் ஈறு பெற்று நீங்கள் என்று விளங்கும் வடிவம் போன்றதாகும்.

பால் விகுதிகள்

அவ்வம் மொழியின் இடப் பெயர்களின் திரிபுகளே அவ்வம் மொழிகளில் பால் ஈறுகளாக விளங்குகின்றன. தெலுங்கு — **நி, நு, நின்** ; கன்னடம் **என், ஏனெ** ; மலையாளம் **ஏன்** ஒருமையிலும், தெலுங்கு — **மி, மு, அமி,** கன்னடம் — **எம், எவு, அமி,** பன்மையிலும் தன்மை விகுதிகளாக விளங்குகின்றன. இவ்வாறே முன்னிலையிலும் விகுதிகள் உள்ளன.

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

யாம் என்பது முன்னிலையை உளப்படுத்தாது. நாம் என்பது முன்னிலையை உளப்படுத்தும். அதனால்தான் இருவகை வடிவங்கள் ஏற்பட்டன. இது முன்னிலையை உளப்படுத்தலின் இதில் முன்னிலைக்குரிய நகரம் உளது என்பர். *

தெலுங்கில் ஏமு, நேமு, மேமு என்பன யாம் என்பதற்கு நிகரானவை. இவற்றுள் ஏமு நேமு வழக்கிழந்தன. மனமு என்பது நாம் என்பதற்கு நிகரானது. தமிழ் நாட்டில் இவ்வழக்குப் பேச்சு மொழியில் இன்றும் உள்ளது. ஈழ நாட்டில் இவ் வேறுபாடு மறைந்து விட்டது.

---

* நாம் என்பது தன்மையோடு முன்னிலையை உளப்படுத்தும் பெயராதலின், அதில் தன்மைப் பெயரின் கூறும், முன்னிலைப் பெயரின் கூறும் சேர்ந்திருத்தல் வேண்டும்.

திரு. வேங்கடராஜுலு ரெட்டியார், மூவிடப் பெயர், பக்கம் 32.

கள் ஈறு

கள் ஈறு மூவிடப் பெயரோடு சேர்ந்து பன்மையில் யாங்கள், நாங்கள், நீங்கள், தாங்கள் என வழங்குகின்றன. இந்தக் கள் ஈறு சேர்ந்த வடிவம் மலையாளத்தில் காணப் படுகிறது.

படர்க்கைப் பெயர்

நான், நாம் என்பன தன்மைப் பெயர்கள். நீ, நீர் என் பன முன்னிலைப் பெயர்கள். இவை அமைந்தாற் போலத் தான் தாம் என்பன படர்க்கைப் பெயர்களாகும்.

தொல்காப்பியனர் மாற்றுப் பெயர்களைப் பொதுவாகக் கூறுகின்றாரே யன்றி எவை எவை எப் பெயர் ஆகும் என் பதை வகைப் படுத்திக் காட்டவில்லை. இவை அனைவரும் எளிதில் அறிபவை என்ற காரணத்தால் கூறாமல் விட் டிருப்பர் எனத் தெரிகிறது. அவருடைய அடிப்படை யெல்லாம் உயர்திணைச் சொற்கள் எவை அஃறிணைச் சொற் கள் எவை விரவுத்திணைச் சொற்கள் எவை என்று காட்டு வதாக உள்ளது.

சுட்டுப் பெயரும் படர்க்கைப் பெயரும்

தான் தாம் என்பன விரவுத் திணைக்கு உரியன என்பர். யான் யாம் நாம் என்பவற்றை உயர்திணைப் பெயராகக் கொள்வர். முன்னிலையையும் விரவுத் திணையாகவே கொள்வர். *

தாம் என் கிளவி பன்மைக் குரித்தே†
தான் என் கிளவி யொருமைக் குரித்தே‡

என்று ஒருமை பன்மை வேறுபாட்டைக் காட்டுவர்.

---

* தொல் 162, 172, 174.

† ,, சூ. 184.

‡ ,, சூ. 185.

தாம் வந்தார்; தாம் வந்தன;

தான் வந்தான்; தான் வந்தாள்; தான் வந்தது

என உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகள் தருவர்.* இவை படர்க்கை வினைகள் கொள்கின்றன.

இவை வினைச் சொல்லாலேயே பால் விளக்கம் பெறுகின்றன. பெயர் வடிவில் ஒருமை பன்மை என்ற வேறுபாடே விளங்குகிறது. தன்மை முன்னிலைகளும் இவ்வாறே எண் வேறுபாடு காட்டும்; பால் வேறுபாடு காட்டா. தன்மை முன்னிலைக்கு வினைச் சொல்லிலும் ஆண் பெண் பால் பாகுபாட்டு அமைப்பு இல்லை. அதனால் இவை ஆண் பெண் என்ற பால் பாகுபாட்டு விகுதிகள் மொழியில் இடம் பெறுவதற்கு முன்னரே தோன்றி அமைந்தவை என்று கொள்ளக் கிடக்கின்றன. அன், அள், அர், என்பன சுட்டுப் பெயர்களிலேயே இடம் பெறுகின்றன. இவை பெயர் வடிவாகவே இருந்து பால் திணை காட்டும்.

சுட்டுப் பெயர்களோடு பால் விகுதிகளைப் பெற்று அமையும் அவன், அவள், அவர் அது முதலிய பெயர்கள் படர்க்கையைச் சுட்டும். இவை ஒரு திணைக்கே உரியவாய் வரும். ஏற்கனவே குறிக்கப்பட்ட பொருளையே சுட்டிப் படர்க்கையாக வரும்.

'சாத்தன் வந்தான் அவற்குச் சோறு இடுக' என்றே வரும்.

இயற் பெயர் குறித்த பிறகு இச் சுட்டுப் பெயர் பின் கிளக்கப்படும். †

---

* தாம் வந்தார் முதலியன படர்க்கை வினை கொள்வதால் இவை படர்க்கைப் பெயர் என்று கொள்ளக் கிடக்கிறது.

† இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர். — தொல். சொல். 38.

தான் தாம் என்பன நீ நான் என்பன போன்று சுட்டுக் கலவாமல் வருவன. அவன் அவள் என்பன பால் தெரியநின்று சுட்டாக ஒரு திணைக்கே உரிமையாகி வருவன. தான் தாம் என்பன பால் வேறுபாடு இன்றி ஒருமை பன்மையை மட்டும் காட்டி இரு திணைக்கும் பொதுவாக வருவன.*

ஏனைய இடப் பெயர்கள் வேற்றுமை ஏற்க நெடுமுதல் குறுகுமாறுபோல இவையும் குறுகி நிற்கும். தாம் என்பது தம் எனவும், தான் என்பது தன் எனவும் வரும்.

தான் தாம் படர்க்கைப் பெயரே.

பல சொற்கள் மூவிடப் பெயர்களைக் கொண்டு இணைந்துள்ளன. இவற்றைப் பிரித்தால், தான் தாம் என்பன படர்க்கைக்கே உரியன என்பது விளங்கும்.

தன்மை	முன்னிலை	படர்க்கை
நம்பி	உம்பி	தம்பி
நங்கை	நுங்கை	தங்கை
எந்தை	நுந்தை	தந்தை
யாய்	ஞாய்	தாய்
எவ்வை	நுவ்வை	தவ்வை
எமக்கை	நுமக்கை	தமக்கை

இவற்றால் தம் என்பது படர்க்கைக்கே உரிய சொல் என்பது பெறப்படுகிறது.

---

* பால் வேறுபாடு காட்டாமல் ஒருமை பன்மை மட்டும் காட்டிப் படர்க்கையாக வருவன. எடுத்துக்காட்டு:

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
குருகு முண்டு தான் மணந்த ஞான்றே. — குறு. 25.

தான் என்பது தலைவனைக் குறிக்கும்.

வருகதில் அம்ம தானே
அளியளோ அளியள் என் நெஞ்சமர்ந்தோளே. — குறு. 56.

தான் என்பது தலைவியைக் குறிக்கும்.

தம் என்பது படர்க்கைக்குரிய சாரியையாக வருதலும் அது படர்க்கைக்குரியது என்பதைக் காட்டும்.

எல்லார் தம்மையும் — படர்க்கைக்கு உரிய வடிவம்.

குறுகி உருபு ஏற்கத் திரிந்த வடிவங்களில் இவற்றின் படர்க்கைத் தன்மை தெளிவாக உணரக் கிடக்கிறது.

அவன்	தன் வீட்டுக்கு	வந்தான்
நீ	உன் ,,	வந்தாய்
நான்	என் ,,	வந்தேன்

வேறு வகையாகத் தன் என்பது வருவதற்கு இல்லை. அதனால் தான் என்பது படர்க்கைக்கே உரியது என்பது புலனாகும்.

தான் என் பெயரும் சுட்டுமுதற்பெயரும்
யான் என் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி யனைத்தும் விளிகோள் இலவே *

என்ற சூத்திரத்தில் 'அவன்' என்பதைச் சுட்டாகவே கூறுகின்றார். (சுட்டு முதற் பெயர்) யான் என்பதைப் போலத் தான் என்பதைக் கூறுகிறார். எனவே யான் தன்மையைக் குறிக்கிறது. தான் படர்க்கையைக் குறிக்கிறது என்று கொள்ளலாம்.

வேறு இடத்திலும் வரும்

இவ்வாறு குறித்து வரும் இப் படர்க்கைப் பெயர்கள் ஏனை இடப் பெயர்களோடு சேர்ந்து அவற்றின் வினை முடிவையே பெற்றுத் தற்சுட்டுப் பெயராகவும் (*reflexive pronoun*) விளங்குகின்றன.†

---

* தொல்விளிமரபு. சூ. 137.

† இவ்வாறு வருவதை reflexive pronoun என்று அறிஞர் கால்டுவெல் கூறுவர்.

அவன் தான் வந்தான் (*himself*)
நான் தான் செய்தேன் (*myself*)
நீ தான் வருவாய் (*yourself*)

சில இடத்தில் தேற்றப் பொருளில் இடைச் சொற்களாக வருகின்றன.

நீ தான் செய்யவேண்டும்
நான் தான் வரவேண்டும்
சொல்வது சரி தான்
அவ்வளவும் உண்மை தான்

தேற்றப் பொருளில் வரும்பொழுது தான் என்பதே ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வருகிறது. தற்சுட்டுப் பெயராக (*reflexive pronoun*) வரும்பொழுதே ஒருமை பன்மை வேறுபாடு பாராட்டப்படுகிறது.

இப்பெயர்கள் முன்னிலைக்கே வரும்பொழுது பிறவற்றோடு சேராது தனித்தும் வரும். அப்பொழுது அது மரியாதைக்காக வருவது எனலாம்.

'தாங்கள் வந்தீர்கள்' என்பது மரியாதையில் முன்னிலையில் வருகிறது. 'தங்கள் நட்பும் உறவும் சூழ வரவேண்டுகின்றேன்' என்பதும் முன்னிலையில் வருகிறது.

சுட்டின் அடியாகப் பிறக்கும் பால்தெளிய நிற்கும் சொற்களாகிய அவன், அவள், அவர், அது என்பன மொழியில் வழக்கு மிகுதி பெறவே தான் தாம் என்பன தம் இயல்பான படர்க்கைப் பொருளை இழந்துவிட்டன. தான் தாம் என்பன தம் படர்க்கைப் பொருளை இழந்து நின்றாற் போலவே அவற்றின் அடியாகப் பிறந்த தம்பி தங்கை, தாய், தந்தை முதலிய சொற்களும் மூவிடத்திற்கும் உரிய பொதுச் சொற்களாகி விட்டன.

படர்க்கைக்கே வந்த வழக்குகள் சங்கவிலக்கியத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. அவை நான், நீ என்பன போல அமைந்தவை; தான் தாம் என்பன படர்க்கையைச் சுட்டின:

தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ — குறுங் 25.
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுதல் தாமஞ் சினரே — அகம் 26.

என வருகின்றன.

சுட்டின் நிலைபேறு

படர்க்கை இடத்தில் சுட்டுப் பெயர்கள் பெருவழக்கு ஆகிவிட்ட காரணத்தாலும் தெளிவாகப் பால் பாகுபாடு காட்டுவதனாலும் அவை செல்வாக்குப் பெற்று விட்டன. இப்பொழுது படர்க்கை இடத்திற்கு இச் சுட்டுப்பெயர்களே வருகின்றன. அதனால் அவற்றைப் படர்க்கைச் சுட்டுப் பெயர்கள் என்று கூறலாம்.

நான் நீ என்பவற்றைச் சுட்டுப் பெயர்கள் வழக்கு இழக்குமாறு செய்விக்கவில்லை. எந்தப் பேச்சும் முன்னிலை யாரிடத்தே பேசுவதாகலின் சுட்டு முன்னிலையிலும் தன்மையிலும் இடம் பெறவில்லை. நான் நீ என்பன நிலை பெற்று நாம் நீர் என்பவற்றில் மரியாதைச் சிறப்பும் பன்மைச் சிறப்பும் நிலை பெற்று விட்டன. தன்மை முன்னிலையில் பால் வேறுபாடு தேவையில்லாக் காரணத்தால் இச் சுட்டுப் பெயர்கள் இடம் பெறவில்லை.*

மூவிடப் பெயர்களின் பழமை

பால் வேறுபாடு இல்லாமல் ஒருமை பன்மை காட்டிய நிலைமையே மிகப் பழைய வழக்காம். அந்த வகையில்

---

* ஆங்கிலத்திலும் படர்க்கையிலேயே he, she, it என்ற வேறுபாடு உள்ளது. தன்மை முன்னிலையில் ஒருமை பன்மை வேறுபாடு மட்டும் உள்ளது.

இம் மூவிடப் பெயர்களின் பழமை புலனாகும்: நான், நாம், நீ(ன்), நீ(ம்), தான், தாம்.

பிற இன மொழிகளில்

அவற்றுள்ளும் தான் தாம் என்பன ஏனைய திராவிட மொழிகளில் மிகுதியான வேறுபாடு பெறாமல் வழங்குவது அவற்றின் பழமையையும் உறுதிப்பாட்டையும் காட்டு கின்றது.

தான் என்பதே ஏனைய மொழிகளிலும் வழங்குகின்றது. தெலுங்கில் ‘ தானு ’ என்று உகரம் பெற்று விளங்குகிறது. அதே போலத் தாம் என்பதும் திரிபு பெறாமல் வழங்கு கின்றது. ‘ தாமு ’ என்பது தெலுங்கு வடிவம். உருபு ஏற்கத் திரிந்த வடிவங்கள் பிற இன மொழிகளிலும் ஒருமையில் தன் என்பதும் பன்மையில் தம் என்பதும் ஆகும்.

கூ மொழியில் படர்க்கைக்கே வரும்

கூ மொழியில் தானு என்பது ஒருமையையும் தாரு என்பது பன்மையையும் உணர்த்துவதோடு அவை படர்க் கைக்கே உரிய பெயராக வழங்குகின்றன.* அதனாலும் இது படர்க்கைக்குரிய சொல் என்பது உறுதிப்படுகிறது.

நன்னூலார் விளக்கம்

நன்னூலார் இவற்றைப் படர்க்கைப்பெயர் என்றே கூறுகின்றார். இருதிணைக்கும் பொதுவான பெயர்களைக் கூறுமிடத்து,

---

* It is interesting to note that taru is said to be the plural form in Kui and tanu and taru refer only to the third person.

P. S. Subramaniya Sastri,
Comparative grammar p. —162.

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயர்ஒரு நான்குமுறை யிரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்
எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர் *

என்று கூறிவிட்டு அவற்றிற்கு விளக்கம் தரும் பொழுது,

தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை
எல்லீர் நீயீர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது†

என்று கூறுகின்றார். அதனால் அவர் படர்க்கையாகக் கொள்வது தான் தாம் என்பவற்றை எனக் கொள்ளக் கிடக்கிறது. மாற்றுப் பெயர்களுள் படர்க்கைக் குரியன தான் தாம் என்பனவாகும். பொதுப் பெயர்களுள் முதற் பெயர், சினைப் பெயர் சினைமுதற் பெயர் என வருவன படர்க்கைப் பெயராம் என்பது நன்னூலார் விளக்கமாக அமைந்துள்ளது.

---

* சூ. 282. † சூ. 285.

சுட்டு வினு முதலியன

சுட்டுப்பெயர்கள்

அவன் இவன் உவன் என்பவை ஆண் பாலேயும் அவள் இவள் உவள் என்பவை பெண் பாலேயும் அது இது உது என்பவை ஒன்றன் பாலேயும் உணர்த்தும். அஃது இஃது உஃது என்பவை அது இது உது என்பவற்றின் மாற்றுப் பதங்களாகும். அவை இவை உவை என்பன பலவின்பாலாகவும் அவ் இவ் உவ் என்பன சுட்டு அடைகளாகவும் வழங்குகின்றன. இவை தனியாகவும் நின்று வேற்றுமை உருபு முதலியன ஏற்றும் வரும்.

இந்தச் சுட்டு அடைகளாகிய அவ் இவ் உவ் என்பவை பிற சொற்களோடு சேரும்பொழுது சில மாறுதல்கள் பெறுகின்றன.

அவ் + நாள் — அந்நாள் — நிலேயொலித் திரிபு
அவ் + ஊர் — அவ்வூர் — வருவொலித் திரிபு
அவ் + யாழ் — அவ்யாழ் — இயல்பு
அவ் + வழி — அவ்வழி — இயல்பு

எனவே மெய்கள் வந்தால் நிலேயொலித்திரிபும் (*regressive assimilation*) உயிர் வந்தால் வருவொலித்திரிபும்(*progressive assimilation*) பெறுகின்றன. யகரமும் வகரமும் வந்தால் யாதொரு திரிபும் பெறுவதில்லே.

தொல்காப்பியனார் அவ் இவ் உவ் என்பவற்றை வகர ஈற்றுப் பெயர்களில் குறிப்பிடுகின்றார்.

'வகரக் கிளவி நான்மொழி யீற்றது'*

அவ், இவ், உவ், தெவ் என்பன காட்டுவர்.

இவை புணர்மொழிக்கண் அடையும் மாறுதல்களைக் குறிப்பர் :

(1) சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்.†

என்று கூறி அவை வேற்றுமை உருபு ஏற்புழி வற்றுச் சாரியை பெறும் என்பர். அவ் + வற்று + ஐ– அவற்றை.

(2) வேற்றுமை யல்வழி ஆய்தம் ஆகும்‡

அல்வழிப் பொருளில் ஆய்தம் வரும் என்பர்.

அவ் + கடிய — அஃகடிய ஆகும்.

(3) மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத் தாகும்§

அவ் + ஞாண் — அஞ்ஞாண்

(4) ஏனையவை புணரின் இயல்பென மொழிப ‖

அவ் யாழ், அவ்வாமை, அவ்வழி–வகரம் இயல்பாக உள்ளது என்பர்.

அவ் இவ் உவ் என்பன அடைகளாக நின்று ஏனையவற்றோடு பெறும். புணர் மொழித் திரிபுகளையே அ, இ, உ என்ற சுட்டுக்கள் பெறும் என்பர். அ, இ, உ என்பவற்றைச் சுட்டுக்களாகத் தொல்காப்பியனார் குறிப்பிடுவர் :

---

* எழுத்து சூ. 81.
† எழுத்து — 378.
‡ ,, — 379.
§ ,, — 380.
‖ ,, — 381.

'அ, இ, உ அம் மூன்றுஞ் சுட்டு.'*

இவை பிறவற்ருேடு புணரும் பொழுது அடையும் மாறுதல்கள் :

1. அ—வற்று அல்லது அன் என்ற சாரியை பெறும் என்று கூறவில்லை. எனவே இது தனித்து நின்று சொல்லாதல் இல்லை என்பது தெரிகிறது.

2. அ + ஞாண் — அஞ்ஞாண் — ஞ தோன்றியது.
அ + மணி — அம்மணி — ம தோன்றியது.

சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்.†

3. அ + யாழ் — அவ்யாழ் — வ தோன்றியது.
அ + வினை — அவ் வினை — ,,

யவமுன் வரினே வகரம் ஒற்றும்‡

4. அ + உரல் — அவ்வுரல் — வ தோன்றியது.
அ + இயல் — அவ்வியல் — ,,

உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது §

இவற்றை (2, 3, 4) ஆராய்ந்தால் அவ் இவ் முதலியவற்றிற்குச் சொல்லும் விதிகளையே அ, இ, உ இம் மூன்றிற்கும் கூறல் காணப்படுகிறது.

அவ் இவ் இவற்ருேடு அன் அள் அர் முதலாயின சேர்ந்து அவன் இவன் முதலியன அமைந்தனவா அ இ உ என்பவற்ருேடு இவை சேர்ந்து அமைந்தனவா என்பது ஆராய்ச்சிக்கு உரிய செய்தியாக உள்ளது.

1. அவன்—அவ்+அன் (வ் பன்மை உணர்த்தும் உருபு)
2. அவன்—அ+வ் + அன் (வகரம் உடம்படுமெய்)

* எழுத்து —31. † எழுத்து —205. ‡ எழுத்து —206. § —207.

அவ் இவ் என்பன யாவை ?

இவற்றின் அமைப்பை ஆராய்வதற்குமுன் அவ் இவ் என்பவற்றுள் உள்ள வகரம் யாது என்பதை அறிதல் பயன்தரும். வகரம் பன்மை சுட்டும் உருபு ஆகும். அம் இம் என்பன வகரமாகத் திரிந்து அவ் இவ் ஆயிற்று என்று கருதுவர். அவை, இவை, வருவ, போவ என்பன பன்மை காட்டல் காண்க.

வற்று என்ற சாரியை பன்மையையே சாரும். அன் என்ற சாரியை ஒருமையையே சாரும்.

பல + வற்றை — பலவற்றை
சில + வற்றை — சிலவற்றை
அது + அன் + ஐ -- அதனை; இதனை

அவற்றை—வற்று சேர்வதால் அவ் என்பது பன்மையாகும். வகரம் பன்மை உணர்த்துவதாகும்.

நீம் என்பது நீவ் + இர் — நீவிர் எனத் திரிந்தாற் போல அம் என்பது அவ் என்று ஆகியிருக்க வேண்டும்.

அம் என்பது பன்மையையும் அன் என்பது ஒருமையையும் சுட்டி வழங்கி இருக்கவேண்டும் என்று கருத இடம் உள்ளது.

ஆன் ஈன் என்பன ஒருமை உணர்த்தும் வடிவங்கள். இனி, அனைத்து, இனைத்து, அன்ன, இன்ன, இன்று, அன்று முதலிய வடிவங்களில் னகரம் இருத்தல் காண்க.

ஆன்கு—ஆங்கு, ஈன்கு—ஈங்கு என ஆயிற்று எனக் கருதுவர்,

'இன்னே வருகுவர் தாயர்' —முல்லைப் பாட்டு

இன் என்ற அடியாக இன்னே என்பது தோன்றியது. அதனால் னகர ஈறு ஒருமையையும் மகர ஈறு பன்மையையும் சுட்டின எனக் கொள்ளலாம். தான், தாம், யான், யாம்

என்பன போல அன், அம், என இருவழக்குகள் இருந்திருக்கவேண்டும். னகர மகரம் ஒருமை பன்மை உருபுகளாகக் கொள்வதால் அ, இ, உ மூன்றும் சுட்டுக்கள் என்று கொள்வதும் பொருந்துகிறது.

னகர மகர வேறுபாடு மறைந்து மகரமே நின்று அந்த மகரம் வகரமாகத் திரிந்து அவ் இவ் உவ் என்ற வடிவங்கள் அமைந்தன எனக் கொள்ளக் கிடக்கிறது.

'வ்' உடம்படு மெய்யா ? பன்மை உருபா ?

அவன் இவன் அவர் இவர் என்பவற்றுள் உள்ள வகரம் உடம்படு மெய்யா பன்மை உருபா என்பதிலேயே கருத்து வேறுபாடு உள்ளது. அ, இ, உ என்பவை சுட்டுக்கள் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

அவ் + அன் — அவன்; இவன் என அமைந்திருக்கலாம் என்பதற்குக் காரணங்கள்:

அவ் + யாழ் — அவ் யாழ்
அ + யாழ் — அவ் யாழ்

அ + யாழ்—அவ் யாழ் என்று அமையக்காரணம் இல்லை. அதனல் அவ் என்பதே நின்று ஏனையவற்றோடு புணர்கிறது என்பது கொள்ளக் கிடக்கிறது.

2. அவ் + ஞாண் — அஞ்ஞாண் என அமைவது பொருந்துகிறது ; ஓரினமாதல் என்ற விதி அமைகிறது. அ + ஞாண் — அஞ்ஞாண் என்பதற்கு இவ்வளவு தகுதியாக அமைதி கூறுவதற்கு இல்லை. அ, இ, உ புணரும் விதிகள் எல்லாம் அவ் இவ் என்பவற்றிற்குச் சொல்லப்படும் விதிகளாகவே உள்ளன.

3. அ+உரல் என்பது அவுரல் என்றும் அ+இயல் என்பது அவியல் என்றும் ஆக இடம் உள்ளது; அவ்வுரல் அவ்வியல் என்று ஆகத்தேவை இல்லை.

4. அவ் + அன் — அவன் என்று ஆவது பொருந்தாது என்பார் தனிக்குறில் முன் ஒற்று இரட்டும் என்ற காரணம் கூறுவர். 'அவ்வன்' என்றுதானே வர வேண்டும் என்பர்.

அடிச் சொற்களோடு உருபுகள் சேரும் பொழுது இவ்விதி போற்றப் படுவதில்லை என்று கொள்ளலாம்.

மல் + அர் — மலர்
மல் + ஐ — மலை

5. அவ் + து — அஃது என அமைந்ததைப் போல ஏனையவும் அவ் + அன், அள், அர் — அவன், அவள், அவர் என அமைந்திருக்கலாம். பஃது, பது ஆதற் போல அஃது, அது ஆகி யிருக்கலாம்.

அவ் இவ் என்பன பன்மை உணர்த்தும் வடிவங்கள் என்பது மறக்கப்பட்டு அடையாக நின்று பால் விகுதிகள் பெற்று அவன் இவன் முதலியன அமைந்திருக்கலாம் என்று கருத இடம் தருகிறது. அடையாக வரும் பொழுது ஒருமை பன்மை வேறுபாடு மறைதல் தமிழ் மொழியின் இயற்கை யாகும்.

அந்த நாள்
அந்த நாட்கள்

ஒருமை பன்மை வேறுபாடு அடையில் காணப் படவில்லை.

அது நல்லது —ஒருமை
அவை நல்ல —பன்மை
நல்ல பையன்
நல்ல பையன்கள்

அடையாக வரும் நல்ல என்பதில் ஒருமை பன்மை வேறுபாடு பாராட்டப் படவில்லை. இவ்வாறே அவ் இவ்

என்பன அடையாகுங்கால் ஒருமை பன்மை வேறுபாடு மறைந்து பால் விகுதிகளோடும் பிற சொற்களோடும் புணர்ந்தன என்று கொள்ளுதல் பொருந்தும்.

இருவகை அமைப்பு

அ,இ,உ என்பனவும் மொழியில் ஒரு பக்கம் தொடர்ந்து வழங்கி வர அவ் இவ் உவ் என்பனவும் வழங்கி வர இரண்டும் மொழியில் இடம் பெற்றன என்று கொள்ளுதற்கும் இடம் உளது. எனினும் புணர்மொழியின்கண் அவ் இவ் பெறும் விதிகளை இவையும் ஒப்புமையாக்கத்தால் பெற்றிருக்கலாம் என்று கருத இடம் உள்ளது. அந்த முறையில் நோக்கினல் அ என்பதோடு து சேர்ந்தும் நேராக அது என்ற வடிவும் அமைந்திருக்கலாம். அவ் + து — அஃது என ஒரு வடிவும் அ + து சேர்ந்து அது என்ற வடிவும் அமைந்திருக்கலாம். ஏனைய திராவிட மொழிகளில் அது இது போன்ற வடிவங்களே உள்ளன. தொல்காப்பியனர் அ, இ, உ என்பவற்றைத் தனிச் சுட்டுக்களாகவும் அவ் இவ் என்பவற்றை வகர ஈற்றுப் பன்மைச் சுட்டுக்களாகவும் கொள்வர். அவர் இரண்டு வடிவங்களையும் கூறுகின்றார். அ, இ, உ என்பன வெறும் அடைகளாகவே வருவன. அவ் இவ், உவ் என்பன அடையாக வருதலோடு வேற்றுமை உருபு முதலிய ஏற்றுத் தனித்தும் வழங்கின என்று அறியக் கிடக்கிறது.

நெடிலா ? குறிலா ?

சுட்டுக்கள் செய்யுளில் வரும்பொழுது நீட வருதல் உரித்து என்பர். அ, இ, உ சுட்டுக்கள் என்பதை விட ஆ, ஈ, ஊ என்பனவே முதன் முதலில் சுட்டுக்களாயிருந்தன என்று கொள்ள இடம் உள்ளது.

1. நீட வருதல் செய்யுளில் உரித்து என்று தொல்காப்பியனர் குறிப்பர்.

"ஆயிரு திணையின் இசைக்கு மன சொல்லே"

"ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்"

'ஈவயினான'

'ஈகாண் தோன்றும் எம் சிறு நல்லூரே

'கொல்லும் விலைப் பொருட்டால் கொன்றாரே

ஈதொன்று'

ஆன் ஈன் என்ற சுட்டுக்களும் வழங்கியுள்ளன *

இவ்வெடுத்துக் காட்டுகளில் சுட்டு நீண்டு அமைந்துள்ளன.

2. பிற திராவிட மொழிகளில் நெடில்கள் சுட்டுக்களாக உள்ளன. †

இவற்றால் இச் சுட்டுக்கள் நெடில்களாயிருந்தவையே பழைய வடிவமோ என்று கருத இடம் உள்ளது.

வினாப் பெயர்கள்

சுட்டுக்களைப் போலவே வினாச் சொற்களும் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரிமையாகிவரும். இதனைத் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டுவர்.

---

* ஏனை எச்சம் வினை முதலானும்
ஆன் வந்தியையும் வினைநிலையானும் —தொல் எழுத் 232.
மன்னும் சின்னும் ஆனும் ஈனும் —எழுத் 333.

† கன்னடத்தில், ஆ, ஈ, ஊ என்ற நெடில்களே சுட்டுக்களாயுள்ளன. அது இது உது என்னும் பெயர்கள் தொகை நிலைக்கண் அவ்வாறு திரிந்தன என்று இலக்கண நூல் கூறும்.

தெலுங்கில், ஆ ஈ க்களே சுட்டுக்களாயுள்ளன. அவை, புணர் நிலைக்கண் வருமொழி யொற்று இரட்டும் வழி முதல் குறுகி நிற்கும்.

மலையாள மொழியில் அ, ஆ, இ, ஈக்கள் காண்கின்றன. அ ஆ இ ஈ உ ஊ—க்கள் சுட்டு எனப் பெயர் பெறும். உ ஊக்கள் வழங்குதல் இல.

துளு மொழியில் ஆ ஈ என்னும் நெடில்களே உள்ளன; குறில் இல்லை:......

—திரு. வேங்கடராஜுலு ரெட்டியார். மூவிடப்பெயர் பக்கம் 97

யாவன், யாவள், யாவர் — உயர்திணை *
யாது, யா்வை — அஃறிணை †

யா + (அ)வன்	— *யாவன்*	(*அ குன்றல்* ***dissimilation***)
யா + (அ)வள்	— *யாவள்*	,,
யா + (அ)வர்	— *யாவர்*	,,
யா + (அ)து	— *யாது*	,,
யா + (அ)வை	— *யாவை*	,,

வினை அடிச் சொல்லாகிய யா என்பதனோடு சுட்டுப் பெயர்கள் சேர்வதால் யாவன், யாவள், யாவர், யாது, யாவை என அமைகின்றன என்று கொள்ளக் கிடக்கிறது.

தொல்காப்பியனார், யாவர் என்ற வடிவு திரிந்து யார் என மருவியது என்பர். யாது என்பதன் இடையே வகரம் சேர்ந்து யாவது என மருவியது என்பர்.‡ யர்வர் என்பதன் வகரம் கெட யார் என அமைந்ததைப் போல யாவது என்பதன் வகரம் கெட யாது என அமைந்தது என்று கூறல் பொருந்தும் எனத் திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் கூறுவர். §

தொல்காப்பியனார் கூறும் அமைப்புப் பொருந்துவதாக உள்ளது. வினை அடியோடு சுட்டுப் பெயர்கள் உடன் சேரும்

---

* தொல் சொல். 162.

† சொல். 167.

யார் என்பது எல்லாப் பாலுக்கும் உயர்திணையில் பொதுச் சொல்லாக வருகிறது. —தொல். சூ. 210; நன். சூ. 349.

‡ தொல். எழுத்து —சூ. 172.

§ ஆசிரியர் தொல்காப்பியனார் யாது என்னும் சொல்லின் இடையே வகரம் தோன்ற யாவது என்னும் சொல் ஆகும் என்று கூறினர். அவ்வாறன்றி (யாவர் என்பதன் வகரங் கெட யார் என்றாகும் என்று விதித்தாங்கு) யாவது என்பதன் கண் வகரம் கெட யாது என்றாகும் என்று விதித்திருப்பின் அமைவினதாகும்.

—மூவிடப் பெயர் பக்கம். 102.

பொழுது அகரம் கெடுதலாகிய ஒரே வகையான மாறுதல் ஐந்து சொற்களுக்கும் அமைகிறது.

யா (அ) வன் — யாவன்
யா (அ) வள் — யாவள்
யா (அ) வர் — யாவர்
யா (அ) வை — யாவை
யா (அ) து — யாது

ஒரே வகையான விதியே ஐந்தனுக்கும் கொள்வது பொருந்துகிறது. இவற்றை நோக்க யாது என்பதே இவற்றோடு ஒத்த வடிவம் என்பதும் யாவது என்பது பின்னைய வடிவம் என்பதுமாகின்றன. அதனால் யாது என்பதனோடு வகரம் சேர்ந்தே யாவது என்று ஆகிறது என்று தொல்காப்பியனார் கூறுவது பொருந்துகிறது. அதே போல யாவர் என்பது முதல்வடிவமாக இருத்தலின் யார் என்பது வகரம் கெட்டு அமைந்தது என்று கூறுவதும் பொருந்துகிறது. எனவே தொல்காப்பியனார் கூறும் இரண்டு,கருத்துக்களும் பொருந்துவனவே என்று கொள்ளக் கிடக்கிறது.

அறிஞர் கால்டுவெல் வினா அடிச் சொல்லாகிய யா என்பதனோடு பால் விகுதிகள் சேர்ந்து வினாச் சொற்கள் அமைந்தன என்று பொதுப்படையாகக் கூறுவர்.* சுட்டுப் பெயர்களுக்கும் இவர் அவ்வாறே கூறியுள்ளார். அ இ உ என்ற சுட்டுக்களோடு பால்விகுதி சேர்ந்து அமைந்தன அவன் இவன் முதலானவை என்பர்.

எவன் என்ற வினாச் சொல் பழங்காலத்தில் இடம் பெறலாயிற்று. அஃது அஃறிணையில் இருபாற்கும் வழங்கும்

*The interrogatives are formed in the same manner by the addition of suffixes of gender and number to an interrogative base signifying 'what.' Caldwell. p. 420.

சொல் ஆகும். எவன் என்பது ஏன், என்ன, என்னை என்றும் பிற்காலத்தில் மருவி வழங்கிவிட்டது.

எவன் என்ற மற்றொரு சொல்லும் உள்ளது. அது உயர்திணைச் சொல்லாகும். இது யாவன் என்பதன் திரிபாகும். எவர் எவள் எது என்பனவும் முறையே யாவர் யாவள் யாது என்பவற்றின் மரூஉக்களாம்.

வாக்கிய இறுதியில் சொல்லழுத்தத்தால் தோன்றிய ஆ, ஏ, ஓ முதலியன வினவாதற்கு நிலைபெற்றுவிட்டன; பெயரும் வினையும் ஆகிய பொதுச் சொற்களோடு ஆ, ஏ, ஓ என்ற இடைச் சொற்கள் சேர்வதால் வினா அமைகிறது.

வந்தது அவனா? பெயரோடு ஆ சேர்தல்
அவன் வந்தானா? வினையோடு ஆ சேர்தல்
வந்தது அவனோ? பெயரோடு ஓ சேர்தல்
அவன் வந்தானோ? வினையோடு ஓ சேர்தல்

ஏ என்பது இக்காலத்து வழக்கில் இல்லை. ஏ என்பதே பழைய வழக்காகும். இதற்கும் யா வினாவிற்கும் தொடர்பு உள்ளது எனலாம்.

யாவன் யாவள் யாவர் முதலியவற்றை உறழ்ந்தால் யா என்பதே வினா அடிச் சொல்லாகும். இதனை ஏகாரத்தின் திரிபாக அறிஞர் கால்டுவெல் கொள்வர். இவ்வாறு கொள்வதோடு அன்றிச் சுட்டுக்களில் அ, இ, உ என்ற உயிரொலிகளும் வினாவில் எ என்ற ஒலியும் அமைந்துள்ள அழகையும் ஒழுங்கையும் சிறப்பையும் பாராட்டுவர்.†

---

* புலவியஃது எவனோ வன்பிலங் கடையே —குறு. 93.
எவன் இல குறுமகள் இயங்குதி என்னும் —அகம். 13.

அஃறிணைப் பொருளில் ஒருமையில் வந்துள்ளமை காண்க.

† I need not call attention to the beautiful and philosophical regularity of this quadruple set of remote, proximate and intermediate demonstra tives and interrogatives. In no other language or family of languages in he world shall we find its equal or even its second. Caldwell. p. 421.

சுட்டு வினக்களில் உள்ள அமைப்பும் பிற திராவிட இன மொழிகளோடு ஒத்து உள்ளது. சிறப்பாக வகரம் நிலை பெற்றுள்ளது.*

தமிழ்	தெலுங்கு	கன்னடம்	மலையாளம்
அது	அதி	அது	அது
அவன்	வா:டு	அவம்	அவன்
அவள்	அதி	அவள், அவளு, ஆகெ	அவள்
அவர்	வாரு	அவரு	அவர்
இவர்	வீரு	இவரு	இவர்
யாவன்	எவ:டு	ஆவ0 யாவனு	யாவன் ஏவன்
யாவர்	எவரு	ஆவர்	யாவர்
யார்	ஏரு	ஆர்	யார்

தொகைப் பெயர் (*collective nouns*)

இவ்வாறு ஒவ்வொரு இடத்திற்கு வரும் பெயர்களே யன்றிப் பல பொருள்களையும் தொகுத்து உணர்த்தும் தொகைச் சொற்களும் உள்ளன.

உயர் திணை

எல்லாரும், எல்லீரும், அனைவரும்
பலர், சிலர். — இவை உயர்திணை.

அஃறிணை

பல சில உள்ள இல்ல.
ஒன்று பத்து முதலிய எண்ணுப் பெயர்கள்,
அனைத்து, இனைத்து.† — இவை அஃறிணை.

விரவுத் திணை

எல்லாம் என்பது இருதிணைக்கும் பொதுவாக வரும்.‡

* தொல். சொல் —சூ. 164. † —சூ. 178. ‡ —சூ. 174.

எல் (எல்லை) என்ற சொல்லினின்று எல்லாரும் எல்லாம் என்ற சொற்கள் அமைந்திருக்க வேண்டும் எனக் கால்டுவெல் கருதுவர். அறிஞர் குண்டட்ர்டும் இவ்வாறு கருதுவதாகக் குறிப்பிடுவர்.

எண்ணுப் பெயர்கள்

மூவிடப் பெயர், சுட்டுப் பெயர், தொகைப பெயர் முதலியன மாற்றுப் பெயர்களாக விளங்குவதைப் போல இவ் எண்ணுப் பெயர்களும் மாற்றுப் பெயர்கள் ஆகும்.

எண்ணுப் பெயர்களுள் ஏழு நான்கு என்பவை தவிர ஏனைய து விகுதியோ று விகுதியோ பெற்றுத் தொகைச் சொல்லாக நின்று ஒருமையைக் குறிக்கின்றன. எனவே இவை ஒன்றன் பாலாகவே அமைந்துள்ளன எனலாம்.

ஒன் + து — ஒன்று, இரண் + து — இரண்டு, மூன் + து — மூன்று என இவ்வாறு அமைந்துள்ளன. து விகுதி பெற்றுள்ள இவ் எண்ணுப் பெயர்கள் அஃறிணை ஒருமையை உணர்த்துகின்றன. உயர்திணை உணர்த்த வர் அல்லது மர் சேர்கிறது. ஒருவர், இருவர், மூவர், நால்வர் ; எண்மர், பதின்மர்.

மெல்லொலி முன் மர் என்பதும் ஏனைய இடத்து வர் என்பதும் அமைகின்றன. நால்வர் என்பதில் வர் இருப்ப தால் ஏனைய இடத்தும் வர் சேர்ந்தது என்று கொள்வது பொருந்தும். இந்த வர் என்பது அவர் இவர் என்பவற்றில் உள்ள வர் ஆகும்.

எண் அடிச் சொற்கள்

பண்புச் சொற்களின் ஈற்று விகுதி நீங்கினல் அவை அடைகள் ஆகின்றன. நன்மை — நன் அல்லது நல்; மெல் லொலி முன் னகரமும் ஏனைய இடத்து லகரமும் அமை கிறது — நன்னெறி, நல்வழி.

இவ்வாறு அடையாகுங்கால் அதன் அடிச் சொல் புலப்படுகிறது. அதேபோல எண்ணுப் பெயர்கள் அடையாகுங்கால் அவற்றின் அடிச் சொற்கள் புலப்படும் எனலாம்.

ஒன்று : ஒன் + து; ஒன் என்பது அடிச் சொல்லாகும். கன்னடத்தில் ஒன்டு என்பது சொல்லாகும். ஒன்பது என்னும் எண்ணுப் பெயருக்கு அடையாக விளங்கும் வடிவமும் ஒன் என்பதாகும். அன்று — அற்றை எனவும் கன்று ஆ — கற்ரு எனவும் ஆதலைப் போல ஒன்று என்பது ஒற்றை என அமைதலும் உண்டு. இந்த ஒன் என்பது ஒர் என மாறும் என்பர் தொல்காப்பியனார். தெலுங்கில் ஒக என்றும் ஒண்டி எனவும் வழங்குகின்றது. மலையாளத்தில் ஒன்னு எனபது வழங்குகிறது. ஒருவர் ஒருத்தி என்பவற்றில் ஒரு என்பதே அடையாகும். ஒர் என்பதும் அடிச் சொல்லாக இருக்கலாம்.

பழைய வடிவம் ஒர் என்பதும் இருக்கலாம். பிறவற்ருேடு சேரும்பொழுது ரகரம், னகரம் ஆகியிருக்கலாம். புணர் மொழியிலேயே ஒன் என்ற வடிவம் உள்ளது. ஒர் + து—ஒன் து ஆகியிருக்கலாம்.

அறிஞர் கால்டுவெல் ஒறு என்பதே அடிச் சொல் என்பர். ஒறு என்பது மூக்கின மெய் பெற்று ஒன்று ஆகியிருக்கும் என்பர். அந்த ஒறு என்பதற்கும் ஒர் என்பதற்கும் தொடர்பு காண்பர். ஒறு என்பதே மருவி 'ஒரு' ஆயிற்று என்பர். பழைய சொற்களில் றகர ரகர மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

இது அடையாகுங்கால் உயிர் முன் ஓர் என்ற வடிவும் மெய்யின்முன் ஒரு என்ற வடிவும் கொள்ளும். தனிக் குறில் முன் ர ழ அணையா என்ற அமைப்பே இதற்குக் காரணமாகும்.

இரண்டு : இது அடையாகுங்கால் இரு அல்லது ஈர் என்ற வடிவு கொள்ளும். எனவே இர் என்பதே அடிச் சொல்லாகும். இர் + அண் + து — இரண்டு; இதில் அண் என்பது பரண் முரண் என்பவற்றில் உள்ள சொல்லாக்க உருபு எனலாம்.

கன்னடத்தில் 'எரடு' என்றும் (இலை எலை ஆதற்போல இரண்டு எரண்டு ஆகி மெல்லொலி கெட்டது) தெலுங்கில் ரெண்டு என்றும் (இரண்டு — ரெண்டு — உயிர் ஒலி இடம் பெயரல் என்ற அமைப்பு) மலையாளத்தில் இரண்டு என்றும் வழங்குவர்.

ஈர் என்பது அடிச்சொல் என்பர் அறிஞர் கால்டுவெல். பிளத்தல் என்ற பொருளில் இச் சொல் அமைந்திருக்க வேண்டும் எனக் கருதுவர்.

மூன்று : மூன் + து. மூன் என்பதே அடிச் சொல்லாகும். 'மூன்' என்பது அடையாகுங்கால் நெடு முதல் குறுகல் ஒரினமாதல் என்ற அமைப்புகளைப் பெறுகின்றது: முப்பது.

கன்னடத்தில் மூரு என்பது சொல்லாகும். ஒரு இரு போன்ற வடிவம் இது. கன்னட வடிவமாகிய மூரு என்பதே பழைய வடிவம் என்றும் னகரம் பெற்ற மூன்று என்ற வடிவம் பின்னையது என்றும் கால்டுவெல் கருதுவர். மூரு என்பதே அடிச் சொல்லை விளக்க வல்லது என்பர். முறி என்ற பொருளில் முறு என்பது அடிச் சொல் என்று கருதுவர். முறு முரு ஆகி யிருக்க வேண்டும் என்பர். தெலுங்கில் மூன்று என்பது மூடு என்று வழங்குகிறது. மலையாளத்தில் மூன்னு என்று வழங்குவர். கன்று கன்னு என வழங்குதற் போன்றது இது.

இதுவும் மூர்து—மூன்து—மூன்று ஆகியிருக்கலாம். ரகரம் னகரம் ஆகியிருக்காலாம். முர்பது—முப்பது—ஆகி யிருக்கலாம். (முர்+கரு—முக்கரு—தெலுங்கு).

நான்கு : நான் என்பது அடையாகும். நான் அல்லது நால் என்பதை அடையாகக் கொள்ளலாம். உயிரும் இடையொலியும் வந்தால் நால் என்ற அடை அமைகிறது. ஏனையிடத்து நான் அல்லது நாற் என மாறுகிறது. தொல் காப்பியனார் நான்கு என்பது இடை உயிர்வந்தால் நால் என மாறும் என்பர். நால்கு என்ற வடிவம் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. சங்கவிலக்கியத்தில் 'நால்கு' என்ற வழக்கு உள்ளது. கன்னடத்தில் நால்கு எனவும் தெலுங்கில் நாலுகு எனவும் வழங்குகின்றன. மலையாளத்தில் நாங்கு எனத் திரித்து வழங்குகின்றனர். நால் என்பதன் குறுகிய வடிவமாகிய நல் என்பதை அடிச்சொல் என்பர் அறிஞர் கால்டுவெல்; மிகுதிப் பொருளது என்ற பொருளில் நல்என்பது வழங்குதலைக் காட்டுவர்.

ஐந்து : ஐன் து — ஐந் து — ஐன் என்பது பகுதியாகும். ஐன் + பது — ஐம்பது என ஆகிறது. கன்னடம் ஐது, தெலுங்கு ஐது, மலையாளம் அஞ்சு. ஐவர் என்ற சொல் நோக்கின் ஐ என்பதே அடிச் சொல் என்று கொள்ளலாம்.

ஐந்து விரலுடைய கை ஒரு எண்ணைக் குறிக்க அந்தக் கை என்பதன் மரூஉ ஐ என்பர் அறிஞர் கால்டுவல்.

ஆறு : அறு என்பதே அடையாகும். எல்லா இன மொழிகளிலும் ஆறு என்ற எண்ணே வழங்குகிறது. புது வழி யறுத்தல் என்ற பொருளில் 'அறு' தோன்றியிருக்க வேண்டும் என்பர்; அறிஞர் கால்டுவெல் ஐந்துக்கு மேற் பட்டுப் புதுஎண் அறுதல் என்ற பொருளில் ஆறு தோன்றி யிருக்கவேண்டும் என்பர்.

ஏழ் : கன்னடத்தில் ஏளு; தெலுங்கில் ஏடு; மலை யாளம் ஏழு. எழு என்பது அடையாகும். புது எண் எழுதல் என்ற பொருளில் எழு என்ற சொல்லின் அடியாக எழு உண்டாகி இருக்கவேண்டும் என்பர் கால்டுவெல்.

எட்டு : எண் + து ; எண் என்பது அடிச்சொல் ஆகும். கன்னடம் எண்டு ; தெலுங்கு எனிமிதி ; மலையாளம் எட்டு. எண் என்ற பொருளில் இந்த அடிச்சொல் அமைந்துள்ளது என்பர்.

பத்து : பன்னிரண்டு என்பதில் பன் என்பது அடிச் சொல்லாகும். பன் அல்லது பல் பல என்ற பொருள் உடையது. இப் பொருளில் இவ்வெண் அமைந்திருக்க வேண்டும் என அறிஞர் கால்டுவெல் கருதுவர். தெலுங்கு : பதி. கன்னடம் : ஹத்து (அம்மொழியில் ப ஹ ஆகும்.) மலையாளம் : பத்து. பன் அல்லது பல் என்பது அடிச் சொல்லாகும் என்பர். தெலுங்கில் பன்தொம்மிதி (19) என்ற தொகைச் சொல்லில் பன் என்பதே அடையாகும்.

நூறு : நூறு என்பதே அடையாகும். அதுவே அடிச் சொல்லும் ஆகும். நீறு (துகள்) என்ற பொருளில் நூறு வழங்குகிறது ; பலவாகப் பரந்துபட்ட ஒன்று என்ற பொரு ளில் வழங்கி இருக்கலாம் எனக் கருதுவர். ஏனைய மொழி களிலும் நூறு என்ற சொல் வழங்குகிறது. 'வந்த' என்ற சொல்வேறு தெலுங்கில் வழங்குகிறது.

ஆயிரம் : இது ஸஹஸ்ரம் என்ற வடமொழிச் சொல் லின் திரிபு என்பர் அறிஞர் குண்டர்ட். தெலுங்கில் வெய்யி என்ற திராவிடச் சொல் உள்ளது.

ஒன்பது : இது கூட்டுச் சொல்லாகும். இதில் உள்ள ஒன் என்பது ஒன்று என்பதன் அடை வடிவமாகும். தெலுங்கில் தொம்மிதி என்ற சொல் வழங்குகிறது. தொன் மிதி என்பது தொம்மிதி யாகும். பது என்பதற்கு நேரான சொல் மிதி என்பது ஆகும். எனவே ஒன் அல்லது தொன் அடையாக இருத்தல் வேண்டும். கன்னடம் தமிழ் வடிவம் போன்றது — ஒம்பத்து. னகரம் பகரம் நோக்கி மகரம் ஆகி யது. மலையாளம் ஒன்பது ஆகும்.

அதே தொன் என்னும் அடை மீண்டும் பத்து என்ற பொருளை உடைய 'பை' என்பதோடு சேரும்பொழுது தொன் + பை — தொம்பை (90) என்று அமைகிறது. தொம்மநூறு (900) என்று தெலுங்கில் அமைந்துள்ளது.

தொண்ணூறு தொள்ளாயிரம்

ஒன்பது + பத்து — தொண்ணூறு
ஒன்பது + நூறு — தொள்ளாயிரம்

ஆயின என்பர் தொல்காப்பியனார். அதற்கேற்றவாறு நிலைமொழியிலும் வருமொழியிலும் சில மாறுதல்கள் நிகழ்ந்துள்ளமையைக் காட்டுவர். இவ் வெண்களின் மதிப்புப்படி இவ்வாறு அமையும் என்பது பொருந்துகிறது. எனினும் அவர் கூறும் ஒலி மாறுதல்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவாக இல்லை.

தொள் + நூறு; தொள் + ஆயிரம் என்றுதான் அமைந்திருக்க வேண்டும். இந்தத் தொள் என்பது யாது என்பதே ஆராய்ச்சிக்கு உரியது. தொண்டு என்ற சொல் ஒன்பது என்ற மதிப்பைக் குறிக்கும் சொல்லாக வழங்கியுள்ளது. அதன் அடிச்சொல் தொள் (தொள்+து) என்பதாகும். இந்தத் தொள் என்பதுதான் அடையாக இருக்க வேண்டும் என்று கருத இடம் உள்ளது.

அறிஞர் கால்டுவெல் தொல் என்ற சொல்லின் திரிபாகத் தொள் இருக்க வேண்டும் எனக் கருதுவர். தமிழில் தொன்று, தொன்மை, தொலைவு முதலிய சொற்களின் அடிச்சொல் இத் தொல் என்பதாகும். தெலுங்கில் 'தொலி' — முன்னையது என்ற பொருளுடைய சொல் உளது என்பர். 'தொலி வாரமு' என்பதற்கு முதல் நாள் என்ற பொருள் உளது என்பர். முதல், பழைமை என்ற பொருள்கள் உள்ளன: தொலி நாடு (முதல் நாள்),

தொலிபிட்ட (முதல் குழந்தை) என்ற பொருள் உள்ளது. பத்துக்கு முந்தியது என்ற பொருளும் 'தொலி' என்பதற்கு உளது என்பர். தமிழில் எந்தப் பொருள் இதற்கு உளதோ அதே பொருளில்தான் தெலுங்கில் வழங்குகிறது. பத்துக்கு முற்பட்டது என்ற பொருள் உளது என்று அறிஞர் கால்டுவெல் கருதுவர்.

இந்தத் தொல் என்பதுதான் தொண்ணூறு தொள்ளாயிரம் என்ற சொற்களுக்குமுன் உளது என்பர். இந்தத் தொல் என்பதே தெலுங்கு தொம்மிதி (ஒன்பது) என்ற சொல்லிலும் உளது என்பர். இதை நோக்கத் தமிழிலும் ஒருகாலத்தில் தொன்பது என்ற வழக்கு இருந்திருக்க வேண்டும் எனக் கருதுவர். தொல் என்பதற்கு முற்பட்டது என்று பொருள் கொண்டாலும் அந்தத் தொல்தான் தொள் ஆகி யிருக்க முடியுமா! என்பது சிந்திக்கவேண்டிய ஒன்று. லகர ளகரம் வேறுபாடு இன்றி இக்காலத்தில் ஒரு சில இடங்களில் ஒலிக்கப் பெறும். பழங்காலத்தில் இவ் வாறு மாறி வருவதைக் காண இயலவில்லை. தொல், தொள் என்பன வெவ்வேறு பொருள்தரும் அடிச் சொற் களாகும். தொல் என்பதினின்று தொலை, தொன்று, தொலைவு போன்ற சொற்கள் அமையும். தொள் என்பதி லிருந்து தொடு, தோண்டு, தொண்டு (ஒன்பது), தொண்டை, தோள் முதலிய சொற்கள் அமையும். அதனால் தொல் தொள் ஆக மாறி வருவதில்லை.

தொள் என்றால் அதன் பொருள் ஒன்பது என்று கொண்டால் ஒன்பது நூறு தொண்ணூறு ஆகும். இவ் வாறு அமைவதிலும் மதிப்பால் பொருத்தம் இல்லை; அதே போலத் தொள்ளாயிரம் என்பதும் பொருத்தம் இல்லை. இவ்வாறு இவற்றின் தோற்றம் தெளிவு பெறாத நிலை மையில் உள்ளது என்று கூறலாம். தொல்காப்பியனார் இச் சொற்களின் தோற்றத்தை ஆராய்ந்து காட்டவில்லை.

அவர் காலத்தில் வழங்கிய சொற்களை எடுத்துக் காட்டி அவற்றின் மதிப்பையே காட்டினார் என்று கூறல் பொருந்தும். 'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்று' என்று கூறுவது இந்த ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பதற்கும் ஏற்கும் எனலாம்.

எண்ணுப் பெயரும் எண்முறைப் பெயரும்

ஒன்று இரண்டு என்பன எண்ணுப் பெயர்கள். ஒரு, இரு என்பன எண் அடைகள். முதலாவது இரண்டாவது என்பன எண்முறைப் பெயர்களாகும். ஓராம் எண் முதன்மையான எண் என்பது பற்றி முதலாவது என்ற வழக்கே உள்ளது. ஆவது அல்லது ஆம் என்று சேர்ந்து எண் முறைப் பெயர் ஆகிறது.

வினைச்சொல்

———

வினையின் பொது இயல்புகள்

1. வேற்றுமை கொள்ளாதது வினை

பல அடிச் சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக விளங்குகின்றன. வேற்றுமை ஏற்கும் வடிவம் பெயராகவும் காலம் உணர்த்தும் வடிவம் வினையாகவும் கொள்ளப்படுகின்றன. காலம் உணர்த்தும்பொழுது அது வெளிப்படையாகக் கால இடைநிலைகளைப் பெற்று உணர்த்தும்; குறிப்பாக இடம் ஒட்டியும் காலம் உணரப்படும். ஈற்று விகுதிகளும் குறிப்பாகக் காலம் உணர்த்தும்.

2. வினைப் பொருள்கள்

வினைப் பொருள்கள் வேறுபட்டாலும் அவற்றின் அமைப்பு ஒன்றே எனக் கூறலாம். சிற்சில வேறுபாடுகள் பெற்று அவை பலவகைகளாக இயங்குகின்றன. தெரிநிலையின் வடிவமே ஏவல் வினையாக அமைகிறது. தெரிநிலை வினை முன்னிலைக்கு வரும்பொழுது அதனை ஏவல் என்று கொள்வர். ஏவலிலேயே சிறிது மரியாதை கலக்குமானால் வியங்கோள் ஆகிறது. தெரிநிலை வடிவத்தின் சிறு மாறுபாடு வியங்கோள் ஆகிறது. ஏனைய வகைவினைகளும் இவ்வாறே சில மாற்றங்களைப் பெற்று விளங்கும்.

3. எச்சமும் முற்றும்

பழங்காலத்தில் பல வடிவங்கள் எச்சமாகவும் முற்றாக வும் வழங்கின. பழைய வினை வடிவங்கள் இடம் நோக்கியே முற்று எச்சமா என்று உணரப்பட்டன. அதனால் முற்றுக்கும் எச்சத்திற்கும் வேறுபாடு இல்லாதிருந்த நிலையும் இருந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது.

அவன் செய்யும்
செய்யும் வேலை

என்ற அமைப்புகளில் ஒன்றே முற்றாகவும் எச்சமாகவும் வழங்கியுள்ளது.

4. பெயர் வடிவமே பெறுவன

எதிர்மறை வினையும் குறிப்பு வினையும் பெயரமைப்புக் கொண்டு விளங்குகின்றன. இவை பெயரமைப்போடு விளங் கினாலும் வினையின் ஆற்றலைப் பெற்று விளங்குகின்றன. இவை இரண்டும் பால்விகுதி பெறாமல் இயங்குவதில்லை.

அவன் வாரான்
அவன் கரியன்

5. பால் விகுதி பெறா வினைகள்

வினையோடு பால் விகுதிகள் சேராமல் இருந்த நிலையும் உண்டு. பின் உருபுகள் (*suffixes*) மட்டும் பெற்றிருந்த நிலையும் உண்டு.

யான் செய்கு
யான் உண்டு
யான் வருது
அவன் செய்யும்

கு, டு, து, று, உம் என்ற இவற்றுள் ஏதேனும் ஒரு பின்னுருபு சேர்ந்து தெரிநிலை வினை ஆயின.

'நோகு யான்' என்பது ஒருமையை மட்டும் காட்டியது. 'நோகும் யாம்' என்பது பன்மை யமைப்பு. பிற்காலத்தில் இடப்பெயர்களில் உள்ள ஈற்று நிலைகள் இவற்றோடு சேர்ந்து இடத்தையும் பாலையும் உணர்த்தின: 'நோகுவன் யான்'

தொல்காப்பியர் காலத்தில், ஈற்றுவிகுதி மட்டும் ஏற்று அமைந்த வடிவும் பால் விகுதியும் உடன் சேர்ந்த வடிவும் வழங்கின. தன்மையிலேயே இவ் விருவகை வடிவங்கள் உள்ளன. ஏனைய இடத்தும் இவ்விரு வடிவங்கள் வழங்கி இருக்கலாம்.

அவன் வந்து; அவன் வந்தான்.

6. கால இடை நிலைகள்

பழந் தமிழில் தெளிவான கால இடைநிலைகள் இல்லாமல் இருந்தன. தொல்காப்பியர் கால இடைநிலைகளைக் குறிப்பிடவில்லை. பழந்தமிழ் வினைவடிவ அமைப்புகளை ஆராய்ந்தால் **இகரம்** இறந்த காலத்தையும் **ககரம்** நிகழ்வையும் எதிர்வையும் **தகரம்** இறப்பையும் எதிர்வையும் உணர்த்தின என அறியக் கிடக்கிறது. தகரம் பிற்காலத்தில் இறந்த காலத்திற்கு மட்டும் வரும் நிலைமை அடைந்து விட்டது.

7. கால இடை நிலைகளோடு சாரியைகள்

இறந்த கால வினை முற்று அமைப்பில் அன் இன் என்ற சாரியைகள் பகுதிக்கும் பால் விகுதிக்கும் இடையில் இடம் பெற்றன.

அறிந்து + அன் + அன் — அறிந்தனன்
ஆடி + இன் + அன் — ஆடினன்

இவற்றுள் 'த்' என்ற இடை நிலைக்கு அருகில் 'அன்'னும், இகர இடை நிலைக்குப் பிறகு 'இன்'னும் வருதல் சிறப்பியல்பு ஆகும்.

வந்து + அன் + து — வந்தன்று
போஇ + இன் + து — போயின்று.

போயின்று என்பது போயிற்று என்று மாறும். வந்தன்று என்பது வந்தற்று என மாறுவதில்லை.

8. நிகழ்கால வினை

சங்க காலத்தில் நிகழ் கால இடை நிலை என்று தனியாக இல்லை. செய்யும் என்ற வாய்பாட்டு வினை நிகழ் காலத்தை உணர்த்தியது.* கிறு கின்று ஆநின்று என்பவை பிற்காலத்து வழக்குகளாம்.

9. எதிர் கால இடை நிலைகள்

எதிர் கால இடை நிலைகள் வ, ப, க என்பவை. அவற்றுள் ககரம் காலத்தால் முந்தியது.

10. பின் விகுதிகளே வினையில் சேரும்

முன் விகுதிகளோ (*prefixes*) இடை விகுதிகளோ (*infixes*) பெற்றுத் தமிழ் வினை வடிவங்கள் அமைவதில்லை; பின் விகுதிகள் (*suffixes*) பெற்றே வினை வடிவங்கள் அமைகின்றன.

11. கூட்டு வினைகள்

வினைக்குப் புது இலக்கணப் பொருள் உண்டாக்கவும் பெயரை வினைபோலச் செயல்படுத்தவும் துணைவினைகள் சேர்ந்து கூட்டு வினைகள் அமைகின்றன.

எடுபடாது — வினை துணைவினையை ஏற்றல்.

கண்ணுற்றான் — பெயர் துணைவினையை ஏற்றல்.

12. இயக்கு வினைகள் (*causatives*)

வி பி சேர்ந்து இயக்கு வினைகள் அமைகின்றன: செய்வி, உண்பி. சேர்கிறேன் என்பது தன் வினையாகும்.

* 'நிகழுங் காலத்துச் செய்யும் என் கிளவி' — சூ. 227 எனத் தொல்காப்பியனார் குறிப்பிடுவர்.

சேர்க்கிறேன் என்பது பிறவினையாகும்; சேர்ப்பிக்கிறேன் என்பது இயக்கு வினையாகும்.

13. வான் பான் வடிவம்

இவை நன்னூலார் காலத்திலேயே கூறப்படுகின்றன. தொல்காப்பியர் காலத்திலும் சங்க இலக்கியங்களிலும் இவ் வடிவங்கள் வழங்கவில்லை. எனவே இவை பிற்காலத்து வடிவங்களாம்.

14. ஆறும் தருவது

நன்னூலார் காலத்து வினைகள் பால் விகுதிகளையும் கால இடை நிலைகளையும் பெற்று விளங்குகின்றன. இந்த அமைப்பு இக்காலத்து வினையமைப்பின் நிலை என்றும் கூறலாம்.

‘செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே’

என்று நன்னூலார் கூறுமளவிற்குத் தெளிந்த வடிவங்களோடு அவர்காலம்முதல் தமிழ் வினை வடிவங்கள் விளங்குகின்றன.

15. ஒட்டுநிலை அமைப்பு

நன்னூலார் தெரிநிலை வினையைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் எனப் பிரித்துக்காட்டி ‘முன்னிப் புணர்ப்ப முடியும் எப் பதங்களும்’ என்று கூறுகின்றார்.* தமிழ் வினைகள் ஒட்டாக அமைகின்றன என்பதை நன்கு தெளிவு படுத்துகிறார். அதனால் தமிழ் வினையமைப்பை ஒட்டுநிலை யமைப்பு (*agglutinative structure*) என்பர். †

---

* நன். சூ. 133.

† பொருளசை (morpheme) தனித்து நின்று பொருள் உணர்த்தும் சொல்லமைப்பைத் தனிநிலை (isolative) என்பர். இரண்டோ பலவோ ஒட்டி அமைந்து எளிதில் பிரித்து அறியக் கூடிய அமைப்பை ஒட்டுநிலை (agglutinative) என்பர்; இவையே பிணைந்து பிரிக்க முடியாமல் இயைந்தால் உட்பிணைப்பு நிலை (inflexional) என்பர்.

வினை அமைப்பு

பாலும் காலமும்

வினைமுற்றுக்களை விட வினை எச்ச வடிவங்களே மிகப் பழமையானவை. பகுதிகளோடு ஆக்க உருபுகள் சேர்வதால் வினை எச்சங்கள் ஆகின்றன.

செய்+கு — செய்கு
செய+து — செய்து
செய்+பு — செய்பு

சில வினை எச்சங்களோடு அ என்ற உருபு சேரும்பொழுது அவை பெயரெச்சங்கள் ஆகின்றன.

செய்து+அ — செய்த

இந்த வினை யெச்சங்கள் வினை எச்சமாகவும் முற்றாகவும் இருந்த நிலைமை உண்டு. அந்த நிலையில் அவற்றின் ஈற்று நிலைகள் ஒருமையையும் பன்மையையும் காட்டியதோடு அல்லாமல் அவையே காலத்தையும் குறிப்பாகக் காட்டின எனலாம். சில காலம் காட்டாமல் பால் மட்டும் காட்டின எனலாம்.

காலமும் பாலும் ஒன்றாக அமைந்த நிலையே பழைய நிலை எனலாம். அதனால் வினைகள் தனியே கால இடை நிலைகள் எனப் பெறுவிட்டாலும் ஈற்று நிலைகளே காலத்தைக் காட்டின எனலாம். இடை நிலைகள் தெளிவாக நின்று காலத்தை உணர்த்தாமையால் அவை நுட்பமாகவே காலம் காட்டின.

Acc. 16158
T. 3871

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்*

என்று கூறுகின்றார்.

காலம் மூன்று என எடுத்துக் கூறி அம் முக்காலமும் குறிப்பாகவே தோன்றும் எனக் குறிப்பிடுகின்றார்.

> இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
> அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
> மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே — சொல். சூ. 200.

எனவே குறிப்பொடு தோன்றுதல் என்பது தெரிநிலை வினைக்கும் கூறப்படும் செய்தியாகும்.

இவ்வாறு காலம் காட்டும் வினைகள் பெயர்களைப் போலவே உயர்திணைக்கு உரிமையாகியும் அஃறிணைக்கு உரிமையாகியும் இருதிணைக்கும் உரிமையாகியும் வரும் என்பர்.†

தன்மை ஒருமை

இவ்வாறு திணையையும் பாலையும் காலத்தையும் உணர்த்தும் வினைகள், கடதற என்பவை குன்றியல் உகரம் ஊர்ந்து வருதல் ஒருவகை அதற்கு மேலும் தெளிவாகப் பால் விகுதிகள் பெற்று அமைபவை ஒருவகை எனத் தன்மை ஒருமையில் இருவகையாக அமைவதை எடுத்துக் காட்டுவர்.

உண்கு, உண்டு, வருது, சேறு என்பன முதல்வகை. உண்டேன், உண்குவென், உண்பன், வருவல் என்பன

---

* சொல். 198.

† குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே — சொல். 201

மற்றொருவகை. இவை தன்வினையிலேயே வரும். பிறவினையாக வராது; தன்மை இடத்திற்கு மட்டும் வரும் என்பர்.

கட தற வென்னும்
அங்கான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என்ஏன் அல்லன வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்கும் தன்மைச் சொல்லே — 203

இவற்றின் பன்மையாகக் கும், டும், தும், றும், என்பனவும் அம் ஆம் எம் ஏம் என்பனவும் தன்மையில் வரும் என்பர்.

அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற வென்னும்
அங்காற் கிளவியோ டாயெண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே. — சூ. 204.

படர்க்கை ஒருமையும் பன்மையும்

அன் ஆன் அள் ஆள் என்னும் பால் ஈறுகளைக் கொண்டு முடியும் வினைச் சொற்கள் படர்க்கை ஒருமையை உணர்த்தும் எனவும் அர், ஆர், ப, மார் என வரும் நான்கும் படர்க்கையில் பலர் பாலை உணர்த்தும் எனவும் கூறுவர்.*

தன்மை ஒருமையில் ஏழும், தன்மைப் பன்மையில் எட்டும் படர்க்கை ஒருமையில் நான்கும் பன்மையில் நான்கும் ஆக இருபத்து மூன்று ஈறுகள் உயர்திணையில் வரும் என்பர்.†

அஃறிணை வினைகள்

அ, ஆ, வ எனவரும் ஈறுகள் படர்க்கைப் பலர் பாலிலும் து, று, டு, என்பன படர்க்கை ஒன்றன்பாலிலும் வரும் என்பர். ஆக இவ் ஆறு ஈறுகள் அஃறிணையில் வரும் என்பர்.‡

---

* சொல். சூ. 205, 206, 207

† சூ. 208.

‡ சூ. 216, 217, 218.

யார் எவன்

யார் எவன் என்பன குறிப்பு வினைகளாகவும் வரும். அப்பொழுது யார் என்பது உயர் திணையில் எல்லாப் பாலுக்கும் பொதுவாக வரும் என்பர். எவன் என்பது அஃறிணையில் இருபாற்கும் உரித்து என்பர்.*

அவன் யார், அவள் யார், அவர் யார்.
அஃது எவன், அவை எவன்.

இருதிணைக்கும் பொதுவாக வரும் வினைகள்

முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி, இல்லை இல் என்பன, வேறு, செய்மன செய்யும் செய்த என்ற பெயரெச்சங்கள் ஆகிய இவை இருதிணைக்கும் பொதுவாக வரும் என்பர்.†

நன்னூலார் தன்மையையும் இருதிணைப் பொதுவினையாகக் கூறுவர். உண்டு என்பதும் பொதுவினை என்பர்.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறுஇல்லை
உண்டு ஈரெச்சம் இருதிணைப் பொதுவினை.‡

வினைகள் அமையுமாறு

இறந்த கால வினை எச்சங்களே தமிழில் வினையமைப்பைத் தெளிவாகக் காட்டுவன எனலாம். பகுதியோடு த் இ என்பன சேர்ந்து இறந்த காலம் அமைகின்றது. இகரம் சிறப்பாகக் குற்றியலுகர ஈற்றுப் பகுதிகளோடு சேர்ந்து வினையெச்சமாகவும் ஏனைய வினைகளாகவும் அமைகிறது. ஏனைய ஈறுகளோடும் இகரம் வருதல் உண்டு.

---

* தொல். சூ. 210, 219.

† தொல். சூ. 222.

‡ நன். சூ. 330.

த் சேரும் வினைகள் ஒருவகை அமைப்பையும் இ சேரும் வினைகள் ஒருவகை அமைப்பையும் பெற்று விளங்கு கின்றன. இதனை இரு வேறு வகைகளாக ஆராயலாம்.

த் பெறும் வினை முதல் வகை

சில வினைகள் அடிச் சொல்லோடு த் சேர்ந்து இறந்த காலம் காட்டும். இந்த த் சேரும் அடிச் சொற்கள் ஒருவகை யான அமைப்போடும் இ சேரும் அடிச் சொற்கள் ஒருவகை யான அமைப்போடும் இயங்குகின்றன. இறந்த கால அமைப்பில் மட்டுமன்றி ஏனைய அமைப்புகளிலும் இவை தனித் தன்மைகளைக் காட்டுகின்றன. த் சேரும் வினை வடி வங்கள் மென்மை வடிவம் (*weak form*) வன்மை வடிவம் (*strong form*) என இருவகை அமைப்புகளைப் பெறு கின்றன.

		மென்மை	வன்மை
இறந்த காலம்	—	**அமைந்தான்**	**அமைத்தான்**
நிகழ்வு எதிர்வு	—	அமையும்	அமைக்கும்
எதிர்வு	—	அமைவான்	அமைப்பான்
தொழிற் பெயர்	—	அமைதல்	அமைத்தல்

மெல்லமைப்புப் பெறுவன பெரும்பான்மையும் தன் வினையாகவும் வல்லமைப்புப் பெறுவன பிற வினையாகவும் அமைகின்றன.

இ பெறும் வினை இரண்டாம் வகை

த் இறந்த காலம் காட்ட அமைவதைப் போல இகரமும் இறந்த காலம் அமையச் சேர்கிறது. இது எல்லா ஈற்றுச் சொற்களோடும் சேர்கின்றன எனலாம்.

ஆடு + இ — ஆடி — இறந்தகால வினையெச்சம்
ஓடு + இ — ஓடி — ,,

இவ்வாறு இகரம் ஏற்று இறந்த காலம் அமையும் வினை ஒரு தனிவகை எனலாம். இவை ஏனைய இடத்தும் தனி

அமைப்பைப் பெற்று விளங்குகின்றன. ஈண்டுக் கால இடைநிலைகள் வன்மை பெறுதலும் மென்மை பெறுதலும் இல்லை. அதற்கு மாறாக இவற்றின் பகுதியிலேயே இவ் இரண்டு அமைப்புகளும் உள்ளன.

இறப்பு—ஆடு + இ — ஆடி + இன் + ஆன்—ஆடினன்
நிகழ்வும் எதிர்வும் — ஆடும்
எதிர்வு — ஆடுவான் — ஆடுப்பான் என்பது
தொழிற் பெயர் — ஆடல் [இல்லை.

இகரம் ஏறும் வினைப் பகுதிகளில் மென்மை வடிவும் வன்மை வடிவும் உள்ளன.

இறப்பு — அடங்கினன் — அடக்கினன்
இறப்பும் நிகழ்வும் — அடங்கும் — அடக்கும்
எதிர்வு — அடங்குவான் — அடக்குவான்
தொழிற் பெயர் — அடங்கல் — அடக்கல்
ஏவல் — அடங்கு — அடக்கு

இவற்றுள்ளும் மென்மை வடிவம் தன் வினையையும் வன்மை வடிவம் பிற வினையையும் உணர்த்தல் காண்க.

கூட்டு வினைகள் (Compound verbs)

கூட்டுவினைகள் *(Compound verbs)*

இரண்டு அடிச் சொற்கள் சேர்ந்து ஒரு கூட்டுவினையாகும். காமரு, கொணர், அணர், போதரு முதலியன இரண்டு அடிச் சொற்களின் கூட்டு ஆகும். பெயர்ப்பகுதியும் வினைப்பகுதியும் இணைந்து கூட்டுச்சொல்லாதல் உண்டு.

இறைதந்து — காண்தர
இறைதரும் — புறம் தரு
கைப்படு — உரையாடு
காண்வர — கார் செய்தல்

முதலியன கூட்டு வினைகளாம்.

சிறப்பாகப் பெயர்ச்சொல் வினைப்படுங்கால் இவ்வாறு கூட்டுவினையாக அமைகின்றது. பெயர்ச் சொற்களை நேரே வினைப் படுத்தலும் உண்டு ; துணைவினைகளைச் சேர்த்துக் கூட்டு அமைப்பாக அமைத்தலும் உண்டு.

பெயர் வினையாதல் :

இருள்	— இருண்டது	சூழ்	— சூழ்ந்தது
காய்	— காய்த்தது	துயில்	— துயின்றது
கிளை	— கிளைத்தது	உரை	— உரைத்தான்
குறை	— குறைந்தது	பூ	— பூத்தது

இப்பகுதிகள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக அமைகின்றன. இவ்வாறு வினைப்படுத்த முடியாத பெயர்களே துணைவினைகளின் துணையைத் தேடுகின்றன.

துன்புறு	(உறு)	மேம்படு	(படு)	நோய்செய்தான்	(செய்)
அல்லலுறு	,,	அகப்படு	,,	முகஞ்செய்தான்	,,
கலக்குறு	,,	புறப்படு	,,		
துயருறு	,,	கீழ்ப்படு	,,	கைவிட்டான்	(விடு)
விம்முறு	,,	புறந்தருதல்	(தரு)	மடவந்தான்	(வர்)
பிணிக் கொண்டான்	(கொள்)				
ஊர் கொண்டது	,,				

வினைகளும் சிறப்புப் பொருள் தரத் துணைவினைகள் பெறல் உண்டு.

வளர்ந்திட்ட	(இடு)	சொல்லக்கூடும்	(கூடும்)
திறந்திருந்த	(இரு)	வாழ வேண்டும்	(வேண்டும்)
மயங்கிட்ட	(இடு)		
நினைந்திருக்கும்	(இரு)		
வந்தீக	(ஈ)		
எனப்படு	(படு)		

காலம் காட்டல்

இறந்தகால வினையமைப்பு

இறந்த கால வினை முற்றுக்கள் இறந்த கால வினை எச்சத்தினின்று அமைந்தன.

செய்தான் — முற்று; செய்து — எச்சம்;

செய்து + ஆன் — செய்தான் என முற்ருக அமையும்.

செய்து என்பதே ஒரு காலத்தில் முற்ருகவும் இருந்துள்ளது. பால் விகுதி பெருத நிலை அந்த நிலை.

இறந்தகால வினை எச்சங்கள்

அடிச்சொற்கள் ஏவலில் தனித்து வரக் கூடிய நிலையைப் பகுதி என்பர். இந்தப் பகுதி வெறும் அடிச் சொல்லாகவும் இருக்கலாம்; ஆக்க உருபும் பெற்று அமையலாம்.

செய் — அடிச் சொல் அதுவே பகுதியாகும்.

அடங்கு — ஆக்க உருபு பெற்றுப் பகுதியாக உள்ளது.

இந்தப் பகுதிகளோடு 'த்' சேர்ந்து அதனேடு ஒலித் துணையாக உகரம் சேர்ந்து வினை எச்சம் அமைவது ஒருவகை.

செய் + து — செய்து

இ சேர்ந்து வினை எச்சம் அமைவது மற்ருெரு வகை.

அடங்கு + இ — அடங்கி

ஓடு + இ — ஓடி

த் சேர்ந்து இறந்த காலம் அமையும் வினை எச்சங்கள் :

அடிச் சொற்களோடு த் சேரும் நிலைகள் நான்கு எனலாம்.

1. அடிச் சொல்லோடு த் சேர்வதால் இறுதி மெய் இரட்டிப்புப் பெறுதல்.

நக் + த் + உ — நக்கு
பட் (உ) + த் + உ — பட்டு
உற் + த் + உ — உற்று

இவற்றைப் பகுதி இரட்டித்தது என்று இலக்கண உரையாசிரியர்கள் கூறுவர். அடிச்சொல்லோடு த் சேர்ந்து ஓரினமாதல் ஆகி இன மெய்யாகத் திரிந்தது என்றும் கொள்வர்.

நக் + த் — நக்கு
பட் + த் — பட்டு
உற் + த் — உற்று

அடிச் சொற்களோடு 'த்' சேர்வதால் இறுதி இரட்டிப்புப் பெறுகின்றது. இந்த வினை எச்சங்களோடு பால் விகுதிகள் பெற்று வினைமுற்று அமைகின்றது.

புகு — புக்கான்
மிகு — மிக்கான்
நகு — நக்கான்
விடு — விட்டான்
அறு — அற்றான்

அடிச் சொற்கள் ஒலித்துணையாக உகரம் பெற்றுப் பகுதிவடிவில் ஏவலாக நிற்பவை தகரம் பெறும் பொழுது உடன் 'ந்' என்ற மெல்லொலியும் பெற்று ந்த் சேர்ந்து அமைகின்றன.

புகு — ந்த் — புகுந்து + ஆன் புகுந்தான்
மிகு + ந்த் — மிகுந்து + ஆன் — மிகுந்தான்

இவை 'ந்த்' என்று அமைவதோடு அல்லாமல் சில வினைகளில் 'த்த்' என்றும் சேர்ந்து அமைகின்றன.

விடு — விடுத்தான்
அறு — அறுத்தான்

2. அடிச் சொல்லோடு து சேர்ந்து வினை எச்சமாதல்

செய் + து — செய்து
என் + து — என்று
கல் + து — கற்று
உண் + து — உண்டு
விள் + து — விட்டு

இவற்றில் யகரத்தின் முன் இயல்பாகத் தகரம் நிலை பெறுகிறது. ஏனைய இடத்தில் ன ல முன் தகரம் றகரமாகவும் ண ள முன் தகரம் டகரமாகவும் மாறுகின்றன. அதனால் த் என்பதன் மாற்று வடிவங்களே ட் ற் என்பவை ஆகின்றன.

ழகர ஈற்று அடிச் சொல்லோடு து சேரும்பொழுது தனிக்குறில் முன் ர ழ அணையா என்ற விதிப்படி அவை உகரம் பெற்றே தகரத்தோடு சேரும்.

அழ் + து — அழுது
தொழ் + து — தொழுது

3. அடிச்சொல்லோடு தகரம் பெறும்பொழுது அதன் இனமெல்லெழுத்தும் உடன் பெறுதல்—அடிச்சொல்+ந்த்.

அகர ஈற்று அடிச்சொல்லோடு ந்த் சேர்தல்

நட — நடந்து — நடந்தான்
கட — கடந்து — கடந்தான்
இற — இறந்து — இறந்தான்.

இவை தன் வினையாகவே வருகின்றன. பிற வினையாக வன்மை வடிவம் பெறுவதில்லை. நடத்தான் கடத்தான் இறத்தான் என வருவதில்லை.

இ, ஐ, ர், ழ், ய், ஈற்று அடிச் சொல்லோடு ந் த் சேர்தல்

அவி — ந் த் — அவிந்து — அவித்து
முளை — ந் த் — முளைந்து — முளைத்து
இவர் — ந் த் — இவர்ந்து — இவர்த்து
அவிழ் — ந் த் — அவிழ்ந்து — அவிழ்த்து
மேய் — ந் த் — மேய்ந்து — மேய்த்து

இவை வன்மை வடிவும் பெறுகின்றன.

ல, ள, ஈற்று அடிச்சொல்லோடு ந் த் சேர்தல்

செல் + ந் த் — சென்று
கொள் + ந் த் — கொண்டு
ஆள் + ந் த் — ஆண்டு

நகரத்தின் மென்மை ல ள மேல் சென்று அவற்றை மெல்லினமாக்கி விடுகிறது. ல ள முன் வரும் த முறையே ற ட ஆகிறது.

ஓரசை அடிச் சொற்களோடு ந்த் சேர்தல்

போ + ந்த் — போந்து
வெ + ந்த் — வெந்து
மோ + ந்த் — மோந்து

இவற்றுள் போ என்பது போந்து என அமைவதோடு குகரவிகுதி பெற்றும் அமைதல் உண்டு. குகரவிகுதி பெறுங்காலத்தில் இகரம் ஏற்று இறந்தகாலம் ஆகிறது.

போ — போகு + இ — போகி — போயி.

4. அடிச் சொல்லோடு த்த் சேர்தல்: இவை பெரும் பாலும் பிறவினை எச்சங்களே யாகின்றன.

உகரத்தில் இறும் அடிச் சொல்லோடு த்த் சேர்தல்

அடு + த்த் — அடுத்து
கொடு + த்த் — கொடுத்து
நிறு + த்த் — நிறுத்து.

இ, ஐ, ர், ழ், ய் என்பவற்றில் இறும் அடிச் சொற்கள்

அழி + த்த் — அழித்து ; உடை + த்த் — உடைத்து சேர்த்து ; முகிழ்த்து ; எய்த்து என்பன.

ஓரசை அடிச் சொற்கள்

கா, ஈ, யா, சி, நீ, கோ, வை முதலிய அடிச் சொற்களோடு த்த் சேர்ந்து, காத்து, ஈத்து, யாத்து, சித்து, நீத்து, கோத்து, வைத்து என வினை எச்சங்கள் அமைகின்றன.

இகரம் ஏற்கும் வினை எச்சங்கள்

எல்லா ஈற்று அடிச் சொற்களோடும் இவ் இகரம் சேர்ந்து வினை எச்சம் ஆகிறது.

இந்த அடிச் சொற்களோடு குற்றியல் உகரம் இருந்தால் அவை பகுதியாகவும் அமைகின்றன ; ஏவலாகவும் நிற்கின்றன. உகரம் நீங்கிய நிலையில் உள்ள ஈற்று மெய்களோடு இகரம் சேர்ந்து இறந்த கால வினை எச்சம் அமைகிறது.

அடங்கு — பகுதி — ஏவல்
அடங்க் + இ — வினை எச்சம்

இவற்றின் பகுதியில் மெலிப்பு வலிப்பு வடிவங்கள் அமைவதால் தன்வினை பிறவினை அமைப்புகள் ஏற்படுகின்றன.

அடங்கி — தன்வினை
அடக்கி — பிறவினை.

குற்றியல் உகரம் பெறும் இயல்புடைய அடிச் சொற்களான க ச ட த ப ற என்பவை இகரத்தோடு சேர்

வதால் அம் மெய்களில் எந்தவித மாறுதலும் நிகழ்வதில்லை. அவை பகுதியாக விளங்கும் பொழுதே மென்மை வன்மை அமைப்புகளும் இயல்பான அமைப்பும் பெற்று விளங்குகின்றன.

ங்க் — க்க் — க்

அடங்கு — அடக்கு — அல்கு

இவை வெவ்வேறு வினைப் பகுதிகள் ; வெவ்வேறு அமைப்போடு விளங்குகின்றன. இவை சிலவே மென்மை வடிவும் வன்மை வடிவும் பெற்று விளங்குவன.

குற்றியல் உகர ஈறுகளோடு இகரம் சேரல்

அல்கி, அடங்கி, அடக்கி — ககரத்தோடு இகரம்
பல்கி — மயங்கி — மயக்கி — " "
ஊசி — அஞ்சி — அடைச்சி— ச " "
எய்தி — வருந்தி — வருத்தி— த " "
——*— நம்பி — செப்பி — ப " "
ஆடி — கிண்டி — ஆட்டி — ட " "
ஆறி — ஒன்றி — அகற்றி— ற " "

வகர ஈற்றோடு இகரம்

ஏவு — ஏவ் + இ — ஏவி
தாவு — தாவ்+இ — தாவி
வவ்வு— வவ்வி — வ்வ் + இ

ல, ன, ள, ண ஈற்றோடு இகரம்:

ல் ஆலி (ல் + இ) ; சொல்லி (ல்ல் + இ)
ன் குனி (ன்+ இ) ; உன்னி (ன்ன் +இ)
ள் அருளி (ள் + இ) ; எள்ளி (ள்ள் +இ)
ண் நாணி (ண்+இ) ; எண்ணி (ண்ண்+இ)

* தனியாக பு என்பது ஈற்றில் அமைந்து பகுதியாவது இல்லை.

ரகர ஈறு

ரகர ஈற்ருேடு முடிவன சில இகரமும் தகரமும் பெற்று வினை எச்சங்கள் ஆகின்றன.

உளர் — உளரி — உளர்ந்து
தொடர்— தொடரி— தொடர்ந்து
எதிர் — எதிரி — எதிர்ந்து
திமிர் — திமிரி — திமிர்ந்து

இவ்வாறு அமையும் இறந்த கால வினை எச்சங்களோடு பால் விகுதிகள் சேர்ந்து இறந்தகால வினைமுற்றுகள் அமைவது தமிழ் மொழியின் இயல்பாகும்.

இவ்வாறு தெளிவாக இறந்தகாலம் காட்டும் வினை எச்சங்களைக் கொண்டு நன்னூலார் த், ட், ற் இன் என்பன இறந்த காலம் காட்டும் இடைநிலைகள் என்பர். ட் ற் என்பன த் என்பதன் மாற்று வடிவங்களாம். இகரமே இறந்த காலம் காட்டுவது. இன் என்பது சாரியையாக வருவது.

அடங்கு + இ + (இன்) ஆன் — அடங்கினன்
ஓடு + இ + (இன்) ஆன் — ஓடினன்

நன்னூலார் இதன் தோற்றத்தை மறந்து சொல்லைப் பிரித்துப் பகுதி விகுதி போக எஞ்சியது இடைநிலை என்ற கருத்தில் இன் என்பதை இடை நிலையாகக் கொள்வர்.* இகரமே இறந்த காலம் காட்டும் இடை நிலையாகும்.

நிகழ்வும் எதிர்வும்

சங்க காலத் தமிழில் நிகழ்காலம் காட்டும் தனியமைப்பு இருந்ததில்லை. பழந் தமிழில் நிகழ்ச்சி முடிந்த ஒன்று நிகழ்ச்சி முடியாத ஒன்று என்ற இரு வகைப் பகுப்பே

---

* தடறவொற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலந் தருந்தொழில் இடைநிலை — நன்னூல் 142.

இருந்தன. முடிந்த நிகழ்ச்சியை இறந்த காலம் எனவும் முடியாத நிகழ்ச்சியை நிகழ்வு எதிர்வு என்ற பொதுவியல் பைக் குறிப்பதாகவும் கொண்டனர். "தமிழ்ச் செய்யுளில் நிகழ் காலம் அநேகமாக வழங்கப் படுவதில்லை. கல்வெட்டு களில் நிகழ்கால அமைப்பை நான் காணவில்லை" என்கிருர் கால்டுவெல்.*

பேச்சு மொழியிலும் நிகழ்கால இடைநிலைகள் விட்டே பேசப்படுகின்றன என்பர். வேகுகிறது என்பதற்கு மாருக வேகுது என்றே பேசுவர். வருகிறது என்பதற்கு வருது என்றே வழங்குவர். எனினும் தற்கால வழக்கில் கிறு கின்று என்பன நிகழ்கால இடை நிலைகளாகக் கொள்ளப் படுகின்றன. ஆநின்று என்பதையும் நிகழ்கால இடை நிலையாகநன்னூலார் கூறுவர்.† இவை பிற்கால வளர்ச்சியே.

இவையும் பால் காட்டும் சிறப்பு விகுதிகட்கு முன்னர் வினையடிச் சொற்களோடு சேர்கின்றன.

செய் + கின்று + ஆன் — செய்கின்ருன்
செய் + கிறு + ஆன் — செய்கிருன்
செய் + ஆநின்று + ஆன் — செய்யா நின்ருன்

இந்த மூன்று அமைப்புகளும் நிகழ்காலத்தையே உணர்த்துகின்றன.

வழக்கமாக நிகழும் வினையை நிகழ்கால வாய்பாட்டால் உணர்த்துவது முறையாகும் என்பர்.‡

---

* The present tense is seldom used in Tamil poetry and I have never found it in inscriptions — Caldwell, p. 494.

† ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை. — நன் சூ. 143.

‡ முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

— தொல். சொல். சூ. 240.

மலை நிற்கும்
ஞாயிறு இயங்கும்
திங்கள் இயங்கும்

என்பவை சேனாவரையர் காட்டும் எடுத்துக் காட்டுகள் ஆகும்.

நினக்குத் துணை நான் இருக்கிறேன்.
நிலம் கிடக்கிறது.
மலை நிற்கிறது.

முதலிய எடுத்துக்காட்டுகள் நன்னூல் உரை காட்டும்.

சுனைப்பூண் குவளைச் சுரும்பார் கண்ணியன்
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும் *

இதில் பெயரும் என்பது வழக்கமாக வருதலைக் குறிக்கும்.

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே — நன். 383.

சில சமயங்களில் எதிர்காலச் சொல்லாலும் வழக்க நிகழ்ச்சியைக் குறிப்பிடுதல் உண்டு.

அவன் இங்கேதான் வருவான்
இங்கேதான் உண்பான்

கிறு கின்று : இப்பொழுது வழக்கில் இருக்கும் கிறு கின்று என்பவற்றைப் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த வீர சோழிய உரையாசிரியரே முதன் முதலில் காட்டுவர். இது நன்னூலுக்கு முன் வழங்கிய நூலாகும்.

கின்று : இவ்வழக்குப் பிற்காலத்து நூலாகிய பரிபாடலில் முதன் முதலில் வழங்குகிறது. 'சேர்கின்ற கண்கவின்'† என்ற தொடரில் முதன் முதலில் காணப்படுகிறது.

ஆகின்று போகின்று என்பவற்றின் திரிபாக இந்த கின்று அமைந்திருக்கலாம் என்று கருதுவர்.

---

* குறுந்தொகை, 320.
† பரிபாடல் 22 வரி 34—35

நகை ஆகின்றே தோழி * — ஆகின்று போகின்று என்ற இறந்தகால வினைமுற்றுகள் நிகழ் காலத்தையும் உணர்த்தத் தொடங்கிப் பிறகு கின்று என்பது நிகழ்கால இடை நிலையாக நிலைபேறு அடைந்துவிட்டது என்று கருதுவர். †

'ஆகின்றே தோழி' என்ற தொடர், அமைப்பால் இறந்த காலமாயினும் வழக்கால் நிகழ்காலமே உணர்த்து கிறது. 'நகையாகின்றே தோழி' என்ற பகுதியில் அத் தொடர் நிகழ் காலத்திலேயே அமைந்துள்ளது. இவ்வாறு பலவிடங்களில் தூங்கின்று விளங்கின்று முதலிய தொடர் கள் நிகழ்காலப் பொருளில் வந்து, பிறகு அச்சொல் நிகழ் காலத்தில் நிலை பெற்றுவிட்டது என்று கருதப்படுகிறது.

கிறு என்பது கின்று என்பதன் திரிபாகும். இறந்த காலம் தகரத்தில் அமைவதும் இகரத்தில் அமைவதும் அன் இன் என்ற சாரியைகள் பெற்று வழங்கின.

ஆகு + இ + இன் + து — ஆகின்று

நடந்தன்று — அன்பெற்றது

இன்பெற்றுக் 'கின்று' என்று அமைந்த அமைப்பே நிகழ்காலத்தை உணர்த்துகிறது எனக் கொள்ளக் கிடக் கிறது.

ஆ நின்று : இதில் ஆ+நின்று—இரண்டு அமைப்புகள் உள்ளன. இதில் உள்ள ஆ, செய்யா என்பதன் ஈற்று நிலை. செய்யா என்பது இறந்தகாலத் தொடர்ச்சியைக்காட்டுவது. இது நிகழ்காலத்துக்கு அருகாமையில் உள்ளது. இறந்த

---

* குறுந்தொகை, 248.

† பரிபாடலிலும் கலித்தொகையிலும் பையத் தலைகாட்டி உலக வழக்கினைப் பெரிதும் பின்பற்றும் திருக்குறளிலும் சிலப்பதிகாரத்தும் மிக மிக உள் நுழைந்து பல்லவர் காலத்தில் இவை நிலைபேறு எய்திவிட்டன எனலாம்.
— தெ. பொ. மீ. கலைக்களஞ்சியம் தமிழ் பக் 476.

காலத்துத் தொடர்நிகழ்ச்சி நிகழ்காலத்தைக் காட்டுவதும் இயல்பே.

செய்யா என்ற வாய்பாட்டின் ஈற்று ஆகாரமும் நின்று என்ற தனிச் சொல்லும் சேர்ந்த அமைப்பாக இது கொள்ளக் கிடக்கிறது.

ஐங்குறு நூற்றில் ஆ நின்று என்ற தொடர் வந்துள்ளது.* வாரா நின்றுன் என்பது வாரா (வந்து) நின்றுன் என்ற பொருளினது. இதைப்போன்ற கூட்டுச் சொல்லால் ஆ நின்று என்பது அமைந்திருக்கவேண்டும் என்று கருதுவர். நின்று என்பது நில் என்ற அடிச் சொல்லினின்று தோன்றிய தனிச் சொல்லாகும்.

ஐங்குறு நூற்றுப் பாடலின் உரையாசிரியரும் இத் தொடருக்கு நிகழ்காலப் பொருளே உணர்த்துகின்றுர்.

'நீர் என் ஆயத்தோர்க்கு வாரா நின்றனன் என்பது உரைமின்' என்பது அவர்தரும் விளக்கமாகும்.

செய்யும்

வடிவால் பெயரெச்சத்திற்கும் வினைமுற்றுக்கும் வேறுபாடு இல்லை. இடம் நோக்கியே இது பெயரெச்சமா வினைமுற்ரு என்று உணரவேண்டி யுள்ளது.

செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவி †
நிகழுங் காலத்துச் செய்யும் என் கிளவி ‡

என இதனைப் பெயரெச்சமாகவும் முற்ருகவும் கூறக் காண்கிறேம்.

---

* கவிழ்மயிர் எருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரநனி வாரா நின்றனள் என்பது
முன்னுற விரைந்தநீ ருரைமின்
இன்னகை முறுவலென் னுயத் தோர்க்கே — 397

† தொல். சொல். சூ. 238.

‡ " சூ. 227.

அவன் செய்யும் — முற்று
செய்யும் தொழில்— பெயரெச்சம்

சொல் அமையும் முறையே இதன் இயல்பைக் காட்ட வல்ல தாகும்.

தொல்காப்பியர் பலவின் படர்க்கைக்கும் ஒன்றன் படர்க்கைக்குமே இது வரும் என்பர்.* நன்னூலாரும் அதே கருத்தைத் தெரிவிப்பர்.†

எதிர்கால வினை

கால இடை நிலைகள் இல்லாமல் விகுதிகளே குறிப்பாக எதிர்காலம் காட்டிய முறை ஒருவகை. கால இடை நிலைகள் தெளிவாக அமைந்து காலம் காட்டுவன மற்றொரு வகை.

1. விகுதிகள் காலங் காட்டுவன

இதுவே மிகப் பழைய அமைப்பாகும். பால் காட்டும் விகுதிகளே குறிப்பாக எதிர்காலத்தையும் உணர்த்தி வந்தன.

தன்மை ஒருமை — அறிகு
தன்மைப் பன்மை — அறிகும், அறிகம், அறிதும்
முன்னிலை ஒருமை — அறிதி
முன்னிலைப்பன்மை — அறிதிர்
படர்க்கை ஒருமை }
படர்க்கைப்பன்மை } — அறியும்
படர்க்கைப் பலர்பால்— அறிப, அறியுமார்

இவை சங்ககால அமைப்புகளாகும். இவை இக் காலத்தில் வழக்கிழந்து விட்டன.

---

* தொல். சொல். சூ. 227

† நன்னூல். சூ. 384

2. இடைநிலைகள் காலங் காட்டுவன

இவை குறிப்பாக அல்லாமல் தெளிவாகக் காலம் காட்டுவன ஆகும். வ, ப அல்லது ப் ப் சேர்ந்து எதிர்காலம் உணர்த்தும். வ ப பெறுவன தன்வினையாகும்; ப்ப் பெறுவன பிறவினையாகும்.

உணர் + வ் + ஏன் -- உணர்வேன் — 'வ்'

உண் + ப் + ஏன் — உண்பேன் — 'ப்

வகரம் வரும் இடத்தில் பகரம் வருவதில்லை. பகரம் வரும் இடத்தில் வகரம் வருவதில்லை. ன ண முன் பகரமும், உயிர் முன்னும் இடை யொலிகள் முன்னும் வகரமும் ப் ப் என இரண்டு பகரமும் வருதல் உண்டு.

சேர்ப்பேன், பார்ப்பேன்,

எடுப்பேன், கடிப்பேன், தடுப்பேன்.

தனிப் பகரம் வருவது இல்லை.

கடிப்பேன் என்பது ஒரு பொருளையும் கடிவேன் என்பது மற்றொரு பொருளையும் தருகிறது.

அமைவேன் அமைப்பேன் என்பன முறையே தன்வினை யாகவும் பிறவினையாகவும் வருகின்றன.

இவற்றுள்ளேயே மற்றொரு வகை உள்ளது. அடிச் சொல்லோடு 'கு' சேர்ந்து பிறகு வகரம் சேர்வது. மெல் லமைப்புப் பெற வெறும் குகரமும் வல்லமைப்புப் பெற 'க்கு'வும் சேர்கின்றன.

அறி + கு + வ் + ஏன் — அறிகுவேன் (மெல்லமைப்பு).

துற + க்கு + வேன் — துறக்குவேன் (வல்லமைப்பு).

இவ்வாறு குகரம் பெறுவன சிறுபான்மைய. இவை தற்காலத்தில் வழக்கு இழந்து விட்டன.

தன்வினை, பிறவினை, இயக்குவினை

செய்வானின் செயல் செய்பவனையே சார்வது தன்வினை (*Intransitive*) ஆகும். செய்வானின் செயல் பிறரையோ பிறவற்றையோ சார்வது பிறவினை (*Transitive*) ஆகும். செய்வானின் செயல் பிறவற்றைச் சார்வதும் அச் செயல் பிறரைக் கொண்டு இயற்றப்படுவதும் ஆகிய நிகழ்ச்சியை உணர்த்துவது இயக்குவினை (*Causative*) ஆகும்.

சாத்தன் சேர்கிறான் — தன்வினை.
சாத்தன் சேர்க்கிறான் — பிறவினை.
சாத்தன் சேர்ப்பிக்கிறான் — இயக்குவினை.

இம் மூன்றையும் இலக்கணக்காரர் தன்வினை பிறவினை என்ற இரண்டினுள் அடக்கிக் கூறுவர்.

தன்வினை பிறவினை யாதல் :

பொதுவாக மென்மை வடிவம் தன் வினையையும் வன்மை வடிவம் பிறவினையையும் உணர்த்துகின்றன.

தன்வினை	பிறவினை
திருந்துவான்	திருத்துவான்
அமைவான்	அமைப்பான்
அடங்குவான்	அடக்குவான்
சேர்கிறான்	சேர்க்கிறான்

இவற்றை நோக்கினல் கால இடை நிலைகளோ ஈற்று நிலைகளோ வன்மை வடிவம் பெறுவதால் பிறவினை வடிவங்கள் அமைகின்றன என்று கூறலாம்.

1. கால இடை நிலைகள் வன்மை வடிவம் பெறல்

தன்வினை	பிறவினை
சேர்கிருன்	சேர்க்கிருன்
சேர்வான்	சேர்ப்பான்
சேர்ந்தான்	சேர்த்தான்

2. பகுதியின் ஈறு வன்மை வடிவம் பெறல்

ஏவல் :

தன்வினை		பிறவினை
அடங்கு	—	அடக்கு
பெருகு	—	பெருக்கு

வினைமுற்று

பெருகினன்	—	பெருக்கினன்
அடங்குகிருன்	—	அடக்குகிருன்
அடங்குவான்	—	அடக்குவான்
ஆடுகிருன்	—	ஆட்டுகிருன்
ஆடுவான்	—	ஆட்டுவான்
மாறுகிருன்	—	மாற்றுகிருன்
மாறுவான்	—	மாற்றுவான்
மாறினன்	—	மாற்றினன்

இவற்றின் சிறப்பியல்பு இவற்றைச் சாரும் கால இடைநிலைகள் வலிப்பு வடிவம் பெறுவதில்லை என்பதாகும்.

விதி விலக்குகள்

மேலே காட்டிய அமைப்புகள் சில இடங்களில் மாறி வருதலும் உண்டு. அவை பின்வருமாறு :

1. மிகப் பழங்காலத்தில் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான வடிவம் இருந்துள்ளது. இது சங்க காலத்திலும் தொடர்ந்து அமைந்துள்ளது.

அசைஇ — தான் அசைதலுக்கும் பிறரை அசைத்தலுக்கும் பொதுவாக வருவது. இதற்கு அடுத்த வளர்ச்சியில் தன்வினைக்கு ஒரு வடிவமும் பிறவினைக்கு ஒரு வடிவமும் நிலைபெறத் தொடங்கின எனலாம்.

தன்வினை	பிறவினை
அசையும்	அசைக்கும்
அசைந்து	அசைத்து

இவற்றை நோக்க அசைஇ என்பது போன்ற வடிவம் பொதுவான பழைய வடிவம் எனலாம்.

2. சில அடிச்சொற்கள் வன்மை வடிவம் பெறுவதில்லை. அவை வரும் இடத்தாலேயே தன்வினையா பிறவினையா என்று உணரப்படும். செய்து, பெய்து, கொய்து — இவை இருவகை வடிவ அமைப்பைப் பெறுவதில்லை. இடம் நோக்கியே தன்வினையா பிறவினையா என்பது உணரப்படும்.

3. எடு, பழு — இவை மெல்வடிவங்களே பெறுவதில்லை.

எடுத்தேன்,	எடுக்கிறேன்,	எடுப்பேன்
பழுத்தது,	பழுக்கிறது,	பழுக்கும்.

இவை வல்லமைப்புப் பெற்றிருந்தாலும் இவற்றைப் பிறவினை என்று கூறவியலாது. இவை செய்வானின் வினையாகவே உள்ளது. மற்றவற்றின் செயலைக் குறிப்பவை அல்ல.

4\. எழுது, வா என்பன தன்வினையாகவே அமையும்.

நான் எழுதினேன் — எழுத்தினேன் என வருவது இல்லை.

நான் வந்தேன் — பிறவினை இல்லை

அழுதேன் — அழுத்தேன் என வருவதில்லை.

இயக்குவினை

அழுதேன் என்பது அழுத்தேன் என ஆவது இல்லை; அழுவித்தேன் என வருகிறது. நடந்தேன் நடத்தேன் என ஆவதில்லை; நடத்தினேன் என வரும். இவ்வாறு வன்மை வடிவம் பெறுதன இகர ஈறு பெற்றுப் பிறவினை யாகின்றன. பழைய வினைகளிலும் அசைஇ என்பது பிற வினைக்கும் பொதுவான வடிவமாக இருந்துள்ளது. எனவே இகரம் பெறுதல் இப் பிறவினையின் அடுத்த வளர்ச்சி யாகும். இந்த இகரமே வி என மாறிவிட் டிருக்கவேண்டும். இந்த 'வி' நிலைபேறு பெற்ற பிறகு பிறவினை என்பது நுட்ப வேறுபாடு பெற்று இயக்குவினையாக வழங்கத் தொடங்கிவிட்டது எனலாம்.

பிறவினை வடிவங்களே முதன் முதலில் இயக்கு வினையை உணர்த்தின. இப்பொழுதும் பேச்சு வழக்கில் 'சேர்க்கிறேன்' என்பது பிறவினையாகவும் இயக்குவினை யாகவும் வழங்கல் காண்கிறோம். வி என்பதன் மாற்று வடிவமே பி என்பதாகும்.

என் வரவு அறீஇ.*— இதில் பிறவினையாக வந்துள்ளது.

என்கண் இடும்பை **அறீஇயினேன்**† இயக்குவினைப் பொருளில் வந்துள்ளது; அறிவித்தேன் என்ற பொருளில் உள்ளது. எனவே அறீஇ என்பதே அறிவி என்று ஆகி இருக்கவேண்டும். வி யின் மாற்று வடிவம் பி யாகும். வி

---

* புறம் 398. † கலி 140.

வரும் இடத்தில் பி வருவதில்லை. ண ன முன் பியும் உயிர் இடை முன் வியும் ப்பி யும் வருகின்றன.

உண்பித்தேன் தின்பித்தேன் — ண ன முன் பி

நடப்பித்தேன் சேர்ப்பித்தேன்—உயிர் இடைமுன் ப்பி

அழுவித்தேன் சேர்வித்தேன் — உயிர் இடைமுன் வி

வி பி வருவன பொதுவாக இயக்கு வினையாகவே வருகின்றன. வன்மை வடிவு இல்லாத இடத்து இவை பிறவினையாகவும் வருகின்றன.

அழுவிக்கிறேன் — பிறவினையாகவும் இயக்குவினை யாகவும் வரும்.

எழுதுவிக்கிறேன் — ,,

ஏனைய இடங்களில் இவை இயக்குவினையாகவே வருகின்றன.

இவை பிற்காலத்துத் தோற்றமாகும். கலி, பரிபாடல் பதிற்றுப்பத்து முதலிய பிற்கால இலக்கியங்களிலேயே இவை இடம் பெற்றுள்ளன.

கற்பித்தான் * பிறப்பித்தோன் † கொடுப்பித்து ‡

---

* கலி. 149 † பரி. 3—72. ‡ பதிற்றுப்பத்து 6—வது பாடல்.

வினைப் பொருள்கள்

———

வினைப் பொருள்கள் (*moods*)

வினைகளை அவை உணர்த்தும் பொருளுக்கேற்ப அவற்றை வகைப்படுத்திக் காண்பர். வினைநிலை யுரைத்தல், ஏவல், வியங்கோள், நிபந்தனைப் பொருள் முதலிய பொருளமைப்புகளை வினைகள் பெற்று வரும். அப் பொருள்களுக்கு ஏற்ப வடிவத்திலும் சிற்சில மாறுதல் களைப் பெறும்.

வினைநிலை யுரைத்தல் (*indicative mood*)

செயல் இன்னது என்று தெரிவிப்பது வினைநிலை யுரைத்தல் ஆகும். வந்தான் வருகிறான் வருவான் என் பவை இந்தப் பொருளமைப்பைச் சாரும். இந்த அமைப்பு வினையினின்றே வினையின் வேறு பல பொருள்களும் அவற் றிற்கேற்ற வடிவ அமைப்புகளும் அமைகின்றன.

தமிழில் வினைநிலை யுரைத்தல் என்ற பொருளேயன்றி அதிலேயே நுட்ப வேறுபாடோடு குறிப்புவினையாக அமைபவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் பொருண்மை சுட்டல் என்று தனித்துக் காட்டுவர்.

ஆவுண்டு, அவன் கரியன் முதலியன இவ் வகையைச் சாரும்.

ஏவற்பொருள் *(Imperitive mood)*

(1) வினையடிகளே ஏவலாக வருவன ஒருவகை. இவை ஒருமையிலேயே வரும். எந்த வினையடிச் சொல்லும் முன்னிலை ஒருமையில் ஏவலாக அமையும்.

நட, வா, மடி, சி, போ, உண் முதலியன இவ் வகையைச் சாரும்.

(2) மற்றொருவகை வினையடியோடு இ அல்லது ஐ அல்லது ஆய் சேர்ந்து ஏவலாக அமையும்.

இ நேராக வினையடியோடு சேர்வன :

ஊக்கு + இ — ஊக்கி*
காட்டு + இ — காட்டி†
தேற்று + இ — தேற்றி‡

இவ்வாறு வருவது அருகிய வழக்காகும்.

நேராக அடிச் சொல்லோடு சேராமல் துணை எழுத்தோடு வருதல் உண்டு.

போ + த் + இ போதி
கேள் + த் + இ — கேள்தி — கேட்டி
காண + த் + இ — காண்தி — காண்டி
வரு + த் + இ — வருதி

இவையே பெரும்பான்மை வழக்கு.

வினையடியோடு ஐ சேர்ந்து வருதல்

ஐ :—வந்தை, கண்டை, காண்டை, உரைத்தை.

கடம்பூண்டு ஒருகால் நீ வந்தை.

ஆய் :—கேளாய், கொள்ளாய்.

கேளாய் எல்ல தோழி. §
சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய். ||

---

* கலி. 37 † கலி. 147 ‡ கலி. 73 § நற்றிணை 61 || நற்றிணை 39

வினையடியோடு மோ, மே, மதி சேர்ந்து ஒருமையில் வருதல்

அறிமோ, அறிமே, அறிமதி.

வினையடியோடு மின் உம் சேர்ந்து பன்மையில் வருதல்

அறிமின், அறியும்.

மோ, மதி, மே, மின் உம் என்று சேர்ந்து அமைபவை தற்காலத்தில் வழக்கு இழந்துவிட்டன.

வியங்கோட் பொருள் (*optative mood*).

தமிழில் ஒரே அமைப்பு ஏவலாகவும் வியங்கோளாகவும் வருதல் உண்டு. வியங்கோளினை மரியாதை ஏவல் என்றும் குறிப்பர். ஏவலுக்கும் வியங்கோளுக்கும் அமைப்பில் பொதுவாக வேறுபாடு இல்லை. எனினும் உணர்த்தும் பொருள் புலப்பாட்டால் வேறுபாடு உளது. ஏவல் முன்னிலையாருக்கு இடும் கட்டளையாகவோ வேண்டுகோளாகவோ அமையும். வியங்கோள், வாழ்த்தல் வைதல் விரும்பல் முதலிய பொருள்களில் வரும்.

நீ செய்க — ஏவலாக அமைகிறது

நீ வாழ்க — வியங்கோளாக அமைகிறது.

தொல்காப்பியனார் வியங்கோள்வினை படர்க்கை யிடத்திற்கு மட்டும் உரியது என்பர்.* நன்னூல் எல்லா இடங்களையும் குறிப்பிடும்.† சங்க காலத்தில் சில தன்மையிடத்திலும் முன்னிலையிலும் இடம் பெற்றுள்ளன. யர், இய என்பன சேர்ந்து சங்க காலத்தில் வியங்கோளாக வந்துள்ளன. நன்னூலார் க ய ர இவற்றை வியங்கோள விகுதிகளாகக் குறிப்பர்.

---

* முன்னிலை தன்மை யாயி ரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி — தொல். சூ. 226.

† கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப — நன். சூ. 338.

யர் : யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவள்.*— தன்மை

இய : மன்னிய பெரும நீ நிலமிசையானே.†—முன்னிலை

நிபந்தனை வினை : *(Conditional mood or Subjunctive mood)*

இன், இல், ஆல், கால், ஏல், ஆயின் என்பன சேர்ந்து நிபந்தனை வினை அமைகிறது.

இன் : வரின் தருவேன்

இல் : வரில் தருவேன்

ஆல் : கேட்டால்

கால்: நினையுங்கால்

ஏல் : விடுவாயேல்
துறப்பாயேல்

ஆயின்: அது நன்கு அறிந்தனை யாயின் பொது நோக்கு
ஒழி புலவர் மாட்டே‡

போதினும் என்ற அமைப்பு : (*Concessive mood*)

நிபந்தனை வினையமைப்போடு உம்சேர்ந்தால் போதினும் (*even though*) என்பது போன்ற அமைப்பு உண்டாகிறது.

ஒருநாள் பிரியினும் உய்வு அரிது §
கனலி தென்திசைத் தோன்றினும் ||

செயல் எஞ்சு வினை (*The infinitive mood*)

இவை அகர ஈறு அல்லது இய, இயர் என்பன சேர்ந்து அமைவன. இய இயர் என்பன சங்க கால வழக்கு கள். அகர ஈற்று வழக்கும் சங்க காலத்தில் உண்டு. இதுவே தற்காலத்தில் பெரு வழக்கினதாக உள்ளது.

* குறு. 49   † புறம் 6   ‡ புறம் 121   § நற். 202 || புறம் 397

இய : வறுங்கை காட்டிய வாயல்கனவின். 1

இயர்: தொல்கவின் பெரிஇயர் உவக்கும் தோழி. 2

அ : ஒசிய. 3 துமிய. 4 மடிய. 5.

இவற்றைச் செய என்ற வாய்பாட்டு வினை எச்சமாகக் கொள்வர்.

மழை பெய்ய நெல் விளைந்தது
நெல் விளைய மழை பெய்தது
கோழி கூவப் பொழுது விடிந்தது

இவற்றை முறையே இறந்த காலப் பொருளிலும் எதிர்காலப் பொருளிலும் நிகழ்காலப் பொருளிலும் வந்தன என்பர். 6

---

1. அகம் 39 2. குறு. 367 3. அகம் 78 4. அகம் 68
5. அகம் 269 6. நன்னூல் உரை சூ. 344.

குறிப்புவினை

தமிழ் வினைகளைத் தெரிநிலை வினை என்றும் குறிப்பு வினை என்றும் இருவகையாகக் காண்பர். குறிப்புவினை என்பது பெயர் வடிவினதாகக் காணப்படுகிறது. என்ருலும் இதற்குள்ள சிறப்பியல்புகளைத் தொல்காப்பியனுர் விளக்கி இவற்றை வினை என்றே குறிப்பிடுவர்.

தொல்காப்பியனுரின் விளக்கம்

வினை செயல் பற்றிப் பிறப்பது ஒரு வகை. பொருள் தன்மை சுட்டலாகிய குறிப்புப் பற்றிப் பிறப்பது மற்ருெரு வகை. தொல்காப்பியனுர் கீழ்க்காணும் பொருள் தன்மைகளாகிய குறிப்புக்களின் அடிப்படையில் அவை பிறக்கும் என்பர்.

கச்சினன் — ஆறும் வேற்றுமை உடைமைப் பொருள் பற்றிய குறிப்பு.

நிலத்தன் — ஏழாம் வேற்றுமை இடப் பொருள் பற்றிய குறிப்பு.

பொன்னன் — உவமப் பொருள் பற்றிய குறிப்பு.

கரியன் — பண்புபற்றிய குறிப்பு.

அல்லன், இல்லன் — அன்மை இன்மை தெரிவிக்கும் குறிப்புக்கள்

உண்டு — உண்மை தெரிவிக்கும் குறிப்பு.

இக் குறிப்புக்கள் உடைமை, இடம், உவமை, பண்பு முதலிய தன்மைகளின் அடிப்படையில் அமைபவை. இக் குறிப்புக்களின் அடிப்படையில் தோன்றும் வினைகளைக் குறிப்புவினை என்று குறிப்பிடுகின்றார். இதுவே அவர் விளக்கமாகும்.

ஆங்கிலத்தில் நல்ல பையன் என அடை தன்மையை விளக்குகிறது. தமிழில் குறிப்புவினையே தன்மை விளக்கும் தன்மையது. அவன் **நல்லன்**, நிலம் **உடையான்** இவை பொருளின் தன்மையைச் சுட்டுகின்றன.

அவர், வினைகளை வினைபற்றி வருவது ஒருவகை எனவும் மேலே காட்டிய குறிப்புக்களைக் காட்டுவன ஒரு வகை எனவும் இருவகையாகப் பிரித்துக் காட்டுவர்.

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச் சொல் —201

என்பது அவர் பிரித்துக் காட்டும் வகையமைப்பாகும்.

அவர் கருத்துப்படி மேற்காட்டும் குறிப்புச் சொற்களையும் மற்றைய செயல் உணர்த்தும் சொற்களையுமே அவர் வினைச் சொற்கள் என்று கொள்கின்றார் என்பது அறிய முடிகிறது. வினை இருவகையாகப் பிரிவதற்கு இதுவே அடிப்படையாகும். காலம் தெளிவாக உணர்த்தலும் உணர்த்தாமையும் அவ்வளவு அடிப்படையானது அன்று. காலமொடு வருதல் இரண்டிற்கும் உள்ள பொதுத் தன்மையாகும். குறிப்பொடு காலம் காட்டல் இரண்டிற்கும் உள்ள பொதுத் தன்மையாகவே தொல்காப்பியனார் கருதுவர்.

வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் —198

என்று கூறும் குறிப்பு இருவகை வினைகளுக்கும் பொதுவான செய்தியாகும்.

குறிப்பொடு காலம் கொள்ளுதல் இருவகை வினைக்கும் பொதுவான செய்தியாகும். எனினும் குறிப்பு வினை குறிப்பாகவே காலம் காட்டும். தெளிவாகக் காலம் காட்டாது. செயல்வினை குறிப்பாகவும் காட்டும்; சில இடத்துத் தெளிவாகவும் காட்டும் என்பதாம். எனவே குறிப்புவினை குறிப்பாகக் காலம் காட்டுதல் அதன் அடிப்படை இலக்கணம் ஆகாது. அது அதன் துணையிலக்கணம் ஆகும். இதனையே தொல்காப்பியனார்,

அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்*

என்று கூறி விளக்குவர்.

வினைக்குறிப்பு அமைவதற்குக் காரணமான குறிப்புப் பொருள்கள் இவையே என்பதை இச் சூத்திரத்திற்குச் சேனாவரையர் கூறும் விளக்கம் காட்டுகிறது.

"அப் பகுதிக் காலங் குறிப்பாற் றோன்றுமெனவே, அப் பொருள் பற்றி வினைக்குறிப்பு வருமென்றவாறாம்." †

எனவே செயல் பற்றி வருவதை வினை என்றும் குறிப்புப்பற்றி வருவதைக் குறிப்பு என்றும் தொல்காப்பியனார் விளக்கக் காண்கிறோம்.

உரிச்சொல்லுக்கு இலக்கணம் கூறுமிடத்தும் இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி என்று விளக்கம் தருகின்றார். உரிச்சொற்கள் இந்த மூன்று அடிப்படையிலேயே தோன்றும் என்பர். அதே போல வினைகளும் வினை, குறிப்பு என்ற அடிப்படையிலேயே தோன்றும் என்பது ஈண்டு அவர் தரும் விளக்கமாகும்.

---

* தொல்—சொல் — 213.

† ,, உரை.

'குறிப்பினும் வினையினும் தோன்றி'

அதனால் வினைகள் குறிப்புப்பற்றி அமைவன ஒருவகை, செயல்பற்றி அமைவன ஒருவகை என அறியக்கிடக்கிறது.

'நல் பையன்' என்று பெயரடையாக ஆங்கிலத்தில் இரு சொற்கள் வருமிடங்களில் தமிழில் 'நல்லன் எனப் பண்புக் குறிப்பை வெளிப்படுத்தி இச்சொல் அமைகிறது.

நிலத்தன் — நில முடையானைச் சிறப்பிக்க இடப் பொருள் குறிப்பில் வந்துளது. ஆங்கிலத்தில் பண்பை உணர்த்தும் பெயரடையாக வரும் அமைப்பிற்கு நிகராக இக் குறிப்பு வினைகள் பால் விகுதி பெற்ற கூட்டமைப் பாக வந்துள்ளன. நல் + அன் — நல்லன்.

எனவே வினைகள் செயலை உணர்த்துவன ஒருவகை, பொருள் தன்மையை (பண்பு, இடம், உடைமை) உணர்த்து வன ஒருவகை என ஆகின்றன. அதனால்தான் ஆசிரியர் தொல்காப்பியனார்,

'குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றி'

என்று கூறக் காண்கின்றோம்.

அவன் நல்லன் — பொருட் பண்புத் தன்மையை உணர்த்துகிறது.

அவன் வந்தான் — செயலை உணர்த்துகிறது.

இதுவே இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு என லாம். குறிப்பு என்பது உடைமை, இட உரிமை, உவமை, பண்பு முதலிய பொருள் தன்மைகளைக் கொண்டு விளங்கு வது என்பது அவர் தரும் விளக்கமாகும்.*

குறிப்புவினை வேறு பெயர் வேறு

செயல் வினைக்கும் குறிப்பு வினைக்கும் உள்ள வேறு பாடு கால விளக்கத்தால் ஏற்பட்டது அன்று; குறிப்பு

---

* தொல். சொல். சூ. 213.

வினையும் காலம் காட்டுவதேயாகும். அது பொதுவாக நிகழ்காலத்தைக் குறிப்பதாகும். குறிப்பு வினைக்கும் பெயருக்கும் உள்ள வேறுபாட்டை அறிவதற்கு முன் பெயருக்கும் வினைக்கும் உள்ள வேறுபாட்டை அறிதல் நலம். பெயருக்கும் வினைக்கும் உள்ள வேறுபாடு — வினை காலம் காட்டும், பெயர் காலம் காட்டாது என்பனவாகும். வேற்றுமை ஏற்பது பெயர்; வேற்றுமை ஏலாதது வினை. இவையே பெயருக்கும் வினைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளாம். *

எந்தச் சொல்லும் வேற்றுமை ஏற்றுவிட்டால் அது உடனே பெயர் வகையில் கொள்ளப்படும். அவன் வந்தான் (செயல் காட்டும் வினை); வந்தானைக் கண்டேன் (வினையாலணையும் பெயர்).

வருதல் நல்லது (தொழிற் பெயர் — எழுவாய் வேற்றுமையாய் விளங்குதல் பற்றி).

அவன் நல்லன் (பண்புக்குறிப்பை உணர்த்தும் வினை—வேற்றுமை ஏற்கவில்லை.)

நல்லன் அவன் (குறிப்பு வினையாலணையும் பெயர் — எழுவாய்ப் பொருளில் வந்துள்ளமை பற்றி).

ஒரு வடிவம் பயனிலையாவதால் பெயர் வினை என்ற வேறுபாடு உண்டாவதில்லை.

அவன் வந்தான் — வினைப்பயனிலை

அது வீடு — பெயர்ப்பயனிலை

அவன் நாடன் — குறிப்புவினைப் பயனிலை.

எழுவாய் ஆவதாலேயே பெயர் எனப்படுகிறது. வேற்றுமை கொள்ளுதலை எந்தச்சொல் அடைந்தாலும்

---

* வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் —தொல். 198.

அது பெயராகவே கொள்ளப்படுகிறது என்பது அறியக் கிடக்கிறது. பயனிலையாக வருவதில் தமிழில் கட்டுப்பாடு இல்லை. பெயர், வினை, வியங்கோள், வினா முதலியன பெயர்ப்பயனிலையாக வரும் என்பர்.

எனவே இது பயனிலையாக வருவதால் வினைக் குறிப்பு என்பது இல்லை. வினை யெனப்படுவது வேற்றுமை கொள்ளாது என்பது தெளிவாக வற்புறுத்தப்படுகிறது. அதனால் எந்த வடிவமும் வேற்றுமை கொண்டால் அது பெயராகி விடுகிறது.

வினை காலம் தெளிவாக உணர்த்தவேண்டும் என்று தொல்காப்பியனார் வற்புறுத்தவில்லை.

நல்லன் (குறிப்புவினை)
வாரான் (எதிர்மறை)

இரண்டும் காலம் தெளிவாகக் காட்டவில்லை.

அதனால் காலம் பற்றிப் பிரிக்கப்படும் தெரிநிலை என்ற அமைப்பைத் தொல்காப்பியத்தில் காணவியலாது. பிற்காலத்தில் செயல்வினைகள் தெளிவாகக் காலம் காட்டினமையால் தெளிவாகக் காலம் காட்டுவன தெரிநிலை வினை என்றும், பழைய முறைப்படியே தெளிவாகக் காலங்காட்டத் தக்க இடைநிலைகளைப் பெறாமல் இயங்கிய குறிப்பு வினைகளைக் குறிப்பாகக் காலம் காட்டுதல் என்ற அடிப்படையில் குறிப்பு வினை என்றும் பிரித்து உணரத் தொடங்கினர்.

தொல்காப்பியர் காலத்தில் பொதுவாக எல்லா வினைகளுமே குறிப்பாகக் காலங் காட்டும் தன்மைய என்பதைத் தொல்காப்பியனார் விளக்கம் காட்டுகிறது.

---

* தொல். சொல். சூ. 66. நன். சூ. 295.

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே *

என்பது செயல்வினைக்கும் குறிப்புவினைக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட விளக்கமாகும். இச் சூத்திரங்களைத் தொடர்ந்து படித்தால் குறிப்பால் காலங் காட்டுவதால் குறிப்புவினை என்ற பெயர் அமையவில்லை என்பதும் இரண்டு வினைகளுமே குறிப்பாகக் காலம் காட்டின என்பதும் குறிப்புப் பொருள் பற்றி அமையும் வினை குறிப்புவினை என்பதும் செயல் பற்றி அமைவது செயல் வினை என்பதும் அவர் காட்டும் விளக்கம் என்பது அறிய முடிகிறது.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் †

காலந் தாமே மூன்றென மொழிப ‡

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே §

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம் 卐

செயல் பற்றிப் பிறக்கும் வினையைத் தெரிநிலை வினை என்றும் குறிப்புப் பற்றிப் பிறக்கும் வினையைக் குறிப்பு வினை என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுவர். பிற்காலத்தில் காலம் தெளிவாக அறியப்படும் இயல்பு பற்றி அவற்றைத் தெரிநிலை என்றும் குறிப்பாலேயே காலம் அறியப் படும் தன்மைவினையைக் குறிப்புவினை என்றும் கொண்டு விட்டனர்.

தொல்காப்பியர் கொண்ட கருத்துக்கு மாறாகக் காலம் உணர்த்தல் பற்றி வகைப்படுத்தி உரையாசிரியர்கள்

* தொல். சொல். சூ. 200 † 198 ‡ 199 § 200 卐 201

பொருள் கொண்டனர். அவ் உரையாசிரியர்களைப் பின் பற்றி நன்னூலாரும் இவ்வமைப்பையே விவரித்துக் கூறு கின்றார். அதனால் அவர் காலத்து வினையமைப்பை ஒட்டி,

> செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
> செய்பொருள் ஆறும் தருவது வினையே. — நன். 320.

என்று தெரிநிலை வினைக்கு இலக்கணம் தரக் காண்கின் றோம்.

> பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
> வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே —நன். 321.

என்று வினைக் குறிப்பை விளக்குகின்றார்.

நன்னூலாரின் பிரிவு, காலம் தருவது காலம் காட் டாதது என்ற அடிப்படையில் அமைந்ததாகும். இது தொல்காப்பியனார் காட்டும் விளக்கத்திற்கு முற்றிலும் மாறிவிட்டது எனலாம். தொல்காப்பியர் கூறும் அடிப் படை உரையாசிரியர்களின் உரைப் பெருக்கால் மறைந்து விட்டது என்பது அறியக் கிடக்கிறது.

எனவே வினை என்பது வெறும் புடை பெயர்ச்சியை மட்டும் உணர்த்துவது அன்று; பொருளினது தன்மை யையும் சுட்டுதலாகும். இப்பொருள்தன்மையைச் சுட்டு தலையே ஆசிரியர் தொல்காப்பியனார் வினைக் குறிப்பு என்பர்.

இவற்றை, பெயர்ப்பயனிலையாக வருபவை எவை என்ற இடத்தில் தெளிவாக விளக்கக் காண்கின்றோம்.

வினை நிலையுரைத்தல் என்பது புடை பெயர்ச்சி வினை யாகும். பொருண்மை சுட்டல் என்பது பொருட்டன்மையைச் சுட்டும் குறிப்புவினை யாகும் என்பதை நன்கு காட்டுகிறார்.

> வினைநிலை யுரைத்தல்: ஆ வந்தது — செயல்வினை
> பொருண்மைசுட்டல்: ஆ உண்டு — குறிப்புவினை

எதிர்மறைவினை

தமிழில் எதிர்மறை என்பது ஒரு தனி வகையன்று. எல்லா வினைகளுமே உடன்பாடு எதிர்மறை என இயங்கும். அதனால் எதிர்மறை என்பது வினையின் ஒரு பிரிவு என்று கொள்வதை விட அது வினையின் ஒருவகை அமைப்பு என்று கொள்ளலாம். ஒரு நாணயத்தின் இரண்டு பகுதிகளைப் போன்றவை உடன்பாடும் எதிர்மறையும் எனலாம். உடன்பாட்டு வினைகளுக்கு ஏவல் வியங்கோள் நிபந்தனை போன்ற பொருளமைப்புகள் இருப்பது போலவே எதிர்மறைக்கும் உண்டு.

எதிர்மறை விகுதிகள் :

ஆ, அல், இல்.

'ஆ வே எதிர்மறைக் கண்ணதாகும்' என்பர் தொல்காப்பியனார். இந்த ஆகாரம் அமைவதாலேயே எதிர்மறைப் பொருள் உண்டாகிறது.

மலைவன் — உடன்பாடு ; மலையான் எதிர்மறை
அணிவன் — ,, ; அணியான் ,,
செய்வன் — ,, ; செய்யான் ,,

இவற்றுள் அன் சேரும் பொழுது உடன்பாட்டுப் பொருளே உண்டாகிறது ; ஆன் சேரும் பொழுதே எதிர்மறைப் பொருள் உண்டாகிறது.

உணரான், வாரான், உணரேம், வாரேம், வாரார் — இவை எதிர்மறை.

வார் + ஆ + அன் — வாரான் (அகரம் கெட்டது *dissimilation*) மலேயன், உணரேம் முதலியவற்றுள் ஆகாரம் இருப்பதில்லை. அதற்கு மாருக அதன் நெடில் வடிவம் அவ் வினைகளில் அமைகிறது.

இந்த ஆகாரத்தை அகரம் என்றும் கொள்வர்.* அப்பொழுது ஆ கெடுதல் என்று கூறத் தேவையில்லை.

வார் + அ + அன் — வாரான்
மலை + அ + அன் — மலையான்
வார் + அ + என் — வாரேன்

இந்த அகரம் அல் என்பதன் முதலொலியாக உள்ளது.

இந்த ஆகார விகுதிபெறும் எதிர்மறைவினை அமைப்புகள் காலம் உணர்த்துவதில்லை. குறிப்பு வினையைப் போல இவையும் குறிப்பாகவே காலம் உணர்த்துகின்றன. இந்த ஆகாரம் பெறும் எதிர்மறை வினைகள் காலம் தெளிவில்லா வினைகளோடு இயைவதால் இவையும் காலம் காட்டுவதில்லை. அவை வாரான், போகான் என அமைவதாயிற்று. அவை காலம் உணர்த்த நாள் உணர்த்தும் சொற்களை முன் பெறவேண்டுவதாயிற்று. இன்று வாரான், நாளை போகான் என அமைகின்றன. இவை பொதுவாக நிகழ்வையும் எதிர்வையும் உணர்த்தும்.

ஆ சேரும் எதிர்மறை வினைகள் முற்ருகவும் வரும்; எச்சமாகவும் வரும். பண்புச் சொற்களோடு வாராமை போகாமை என வரும்.

---

* தெலுங்கில் அகரம் எதிர்மறை காட்டுகிறது.

சேயனு — செய்யேன்

கன்னடம் : பாளது (வாழாது) — அகரம் எதிர் மறைப் பொருள்.

வாராத பையன் — பெயர் எச்சம்
வாராது இருப்பான் — வினை எச்சம்
அவன் வாரான் — முற்று [பெயர்
வாராமை — பண்பு அல்லது தொழிற்
வாராதிருத்தல் — தொழிற் பெயர்
வாரானைக் கண்டேன் — வினையாலணையும் பெயர்

அல்: அல் இவ்வாறு எல்லா அமைப்புகளோடும் வருவதில்லை. இவை முற்றாகவே வரும். அறியலன், அறியலள், அறியலம், அறியலர் என வரும். அறியலது என ஒன்றன் பாற்கு வருவதில்லை. மேலும் இவை அன், அள், அர், அ முதலிய குறுகிய பால் விகுதிகளோடேயே சேர்கின்றன. ஆன் ஆள் ஆர் போன்ற நெடிய உயிர்களை முதலிற் கொண்டுள்ள விகுதிகளோடு வருவதில்லை.

இல்: அல், ஆ என்பன அடிச்சொற்களோடு அல்லது பகுதிகளோடு சேர்ந்து எதிர்மறைப் பொருள் உணர்த்துகின்றன.

செய் + ஆ + ஆன் — செய்யான்
போகு + ஆ + ஆன் — போகான்
அறி + அல் + அன் — அறியலன்
போகு + அல் + அன் — போகலன்

இவை சேரும் வினைகள் காலம் குறிப்பாகவே காட்டும்.

இல் என்பது கால இடைநிலைகள் சேர்ந்துள்ள வினையமைப்போடு சேர்கின்றது. பகுதியும் இடைநிலையும் சேர்ந்த பிறகே இஃது இடம் பெறுகின்றது. இந்த இல் சேர்ந்த பிறகு கால விகுதி அமைகிறது.

வந்த் + இல் + அன் — வந்திலன்
போகு + இல் + அன் — போகிலன்
வருகின்று + இல் + அன் — வருகின்றிலன்
வருகு + இல் + அன் — வருகிலன்

ஈண்டு 'கு' அமைந்து எதிர்காலம் உணர்த்துகிறது. அதனால்தான் அங்கே இல் இடம் பெறுகிறது. இந்தக் ககரம் பழைய காலத்தில் எதிர்மறை உணர்த்தியது ஆகும்.

அதனால் இல் என்பது சேரும் வினைகள் காலம் தெளிவாகக் காட்டும் எனலாம். இதனை அல் என்பதைப்போல எதிர்மறை விகுதி என்று கொள்வதைவிடத் தனிச் சொல்லாகவே கொள்வது பொருந்தும்.

ஏவற்பொருளில் எதிர்மறை

ஏவல் வினையோடு அல் சேர்வதால் ஏவற்பொருளில் எதிர்மறை அமைகிறது.

அஞ்சல் — ஏவல் எதிர்மறை

குறுகல் — ,,

வியங்கோட் பொருளில் எதிர்மறை

இந்த அல் என்பதனோடு க அல்லது இயர் அல்லது மார் சேர்கிறது.

அறியல் + க — அறியற்க

மருல் + இயர் — மருலியர்

பாடல் + மார் — பாடன்மார்

எச்சவினைகளில் எதிர் மறை

உணரா, உணராத — பெயரெச்சம்.

உணராது, உணராமல் — வினை எச்சம்.

செயப்பாட்டுவினை

செய்வினை செயப்பாட்டு வினை :

ஆங்கிலத்தில் செய் வினை (*Active voice*) செயப்பாட்டு வினை (*passive voice*)) என இருவகை அமைப்புகள் உள்ளன. செயப்படு பொருளுக்குச் சிறப்புத் தரும் நோக்கத்தாலும், கருத்தா தெரியாத நிலையிலும், கருத்தாவை அறிவிக்க வேண்டாத நிலையிலும் செயப்பாட்டு வினையமைப்புகளே மொழியில் இடம் பெறுகின்றன.

'நான் இந்த வீட்டைக் கட்டினேன்' —

'இந்த வீட்டை நான் கட்டினேன்' என்று சொல்லும் பொழுது செயப்படு பொருளுக்குச் சிறப்பு உண்டாகிறது. தமிழில் ஒருவகை வினைமாற்றமும் செய்யாமல் செயப்படு பொருளை முதலில் வைக்க முடிகிறது.

'இந்த வீடு நான் கட்டியது' என்பதில் செயப்படு பொருளை முன் வைப்பது மட்டுமன்றி அதனை எழுவாயாகவும் அமைக்க முடிகிறது. இதனையே தொல்காப்பியனார்,

> செயப்படு பொருளைச் செய்தது போலத்
> தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே *

என்பர்.

ஆங்கிலத்தில் செயப்படு பொருளை முதலில் வைத்து அதற்குச் சிறப்புக் கொடுக்க 'இரு' என்ற பொருளையுடைய துணை வினைகளை முன்னர் அமைக்க வேண்டியுள்ளது.

---

* தொல். சொல். 246.

This house has *been* built by me.
This house *was* built by me
This house *is being* built by me
This house *is* built by me

இவற்றுள் செயப்பாட்டு வினை யமைக்க 'be' beeing என்ற பொருளை யுடைய துணைவினைகள் வினைக்கு முன்னர் வருகின்றன. ஆங்கில வாக்கியங்கள் செயப்பாட்டுப் பொருளில் அமைதல் மிகுதி.

செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்துமாறு

1. தமிழில் சில துணைவினைகள் வினைகளுக்குப் பின்னால் நிற்பதாலும் செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்த முடிகிறது; தொழிற் பெயர்களுக்குப் பின்னும் இத்துணை வினைகள் நின்று இப் பொருளை உணர்த்துகிறது.

வந்து ஆயிற்று; முடிந்து போயிற்று; கோயில் கட்டி ஆயிற்று; கட்டல் முடிந்தது; செய்தல் ஆயிற்று.

2. ஆங்கிலத்தில் '*by*' என்ற அமைப்பால் செயப்படு பொருள் சிறப்புறுதல் போலத் தமிழிலும் 'ஆல்' என்ற உருபு சேர்ந்து செயப்பாட்டுப் பொருள் சிறக்கிறது. இவ்வாறு சில தொடர்களே அமையும்.

அது என்னால் உடைந்தது.
அது என்னால் ஆகியது.
அது அவனால் முடிந்தது.

3. துணைவினைகள் இன்றியே பெயரெச்சமும் வினையாலணையும் பெயர்களும் செயப்பாட்டுப் பொருளை உணர்த்துகின்றன.

எழுதின நூல் வேண்டும் — பெயரெச்சம்
அச்சு அடித்த நூல் வேண்டும் — பெயரெச்சம்
சொன்னது போதும் — வினையாலணையும் பெயர்
இயேசு என்பவர் — வினையாலணையும் பெயர்

4. உண் என்ற பொருளை உடைய துணைவினை சேர்வதால் இச் செயப்பாட்டுப் பொருள் அமைகிறது.

கொலை யுண்டான்

அடி யுண்டான்

இதுவும் பெயர்களோடு சேர்கிறது. கொலைக்க உண்டான் அடிக்க உண்டான் என்று வினையோடு சேர்வதில்லை.

5. அதேபோலப் படு என்ற துணைவினை சேர்வதால் இச் செயப்பாட்டுப் பொருள் அமைகிறது.

வெட்கப்பட்டான், அடிபட்டான், உதைபட்டான்.

இவற்றுள்ளும் படு என்பது பெயரைச் சார்ந்தே வந்துள்ளது. படு என்பது வினைகளோடும் சேர்ந்து வருதல் உண்டு.

அடிக்கப்பட்டான்

உதைக்கப்பட்டான்

என வரும்.

படு என்பதன் அமைப்பு :

படு என்பது தனிஉருபு இல்லை; என்றாலும் வழக்கு மிகுதியால் தனி உருபுபோல இசைக்கிறது. அதனால் செயப்பாட்டு வினையமைப்புத் தனியே இருப்பது போலக் காணப்படுகிறது. அத்தகைய வினையமைப்புத் தமிழுக்குப் புறம்பானது; ஆகையால் இதுவெறுக்கப்படுகிறது என்பர். அதிலும் இது, 'அடிபட்டான், உதைபட்டான்' என்பன போல பெயரோடு வரும்பொழுது, வினை உருபு போல அமைவதில்லை; தெளிவாகத் துணைவினை என்றே கொள்ளப் படுகிறது. இவை, அடியுண்டான் உதையுண்டான் போன்ற அமைப்பு ஆகும். அடிக்கப்பட்டான் உதைக்கப்பட்டான் என்ற அமைப்புகளில் 'படு' என்பது செயப்பாட்டு உருபு

Acc. 16158
T-307,

போல அமைகிறது. அதனால் இது மிகுதியாக வெறுக்கப் படுகிறது என்பர்.*

இந்தப் படு என்பது உருபு அன்று; துணைவினையே ஆகும் என்ற கருத்தில் அதன் பொருளை அறிஞர் கால்டு வெல் விளக்குவர்.

'அவன் அடிபட்டான்' என்றால் அடியை அனுபவித் தான் என்ற பொருளாகும் என்பர். அதனால் படு என் பதற்கு அனுபவித்தல் என்ற பொருள் உளது என்பர். உருபாக இருந்தால் அதற்கு என்று தனிப் பொருள் இருக்கக் காரணம் இல்லை.

அவன் இருக்கப்பட்டவன்
நன்றாய்ச் சாப்பிடப்பட்டவன்

என்ற தொடர்களில் படு என்பது தொடர்ச்சிப் பொருளையும் தருகிறது என்பர். அதனால் படு என்பது சேர்வதால் இது ஒரு தொடராக (*phrase*) அமைகிறதேயன்றி ஒரு தனிவினையமைப்பாக அமைவதில்லை என்று காட்டுவர். இந்தப் படு என்பது பழ் + து என்பதன் சேர்க்கையாக இருக்கலாம். அழ் + து — அடு என்று ஆவதைப் போல பழ் + து — படு என்று ஆகியிருக்கலாம். பழ் என்பதே இதன் அடிச்சொல் எனலாம். 'அழல்' — என்பது அழ்+ அல் என அமைந்துள்ளது. இந்த அழ் தனியாகக் கொண்டு அதனோடு து சேர்வதால் அடு என்று அமையக் காணலாம். படுதல் பழகுதல் பழையதாகிப் போதல் என்ற பொருள் உள்ளது. மரம் பட்டுவிட்டது என்றால் மரம் பழையதாகி விட்டது என்பது பொருளாகிறது.

---

* Nothing Sounds more barbarous to the Dravidian ear than the unnecessary use of padu as a passive auxiliary. It is only when combined with nouns that its use is thoroughly allowable. — Caldwell, p. 467.

படு என்பது செயப்பாட்டு வினையின் உருபு அன்று

இந்தப் படு என்பது துணைவினை யாயினும் இது செயப்பாட்டுப் பொருளைத் தரும் உருபைப் போல் வழக்குப் பயிற்சியால் கருதப்படுவதால் இவ்வமைப்பு வெறுக்கப்படுகிறது என்பர் அறிஞர் கால்டுவெல். வடமொழியில் செயப்பாட்டு வினை என்ற தனிவினை அமைப்பு உளது. ய (*ya*) என்ற உருபு சேர்ந்து செயப்பாட்டு வினை அமையும் என்பர். வினைப்பகுதியோடு செயப்பாட்டு உருபாகிய 'ய' சேர்ந்து பிறகு பால் விகுதிகள் பெற்று வடமொழிச் செயப்பாட்டு வினை அமையும் என்பர். இதே போன்று செயப்பாட்டு வினைக்கு என்று தனி அமைப்புகள் பழைய இந்தோ ஐரோப்பிய மொழிகளில் உண்டு என்பர். இவற்றை நோக்கத் திராவிட மொழிகளில் தனியமைப்பு இல்லை என்று காட்டுவர்.* தனியமைப்பு இல்லையெனினும் செயப்பாட்டு வினைப் பொருள்களை மேலே காட்டியவாறு மொழி உணர்த்தும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

படு என்பதன் வழக்கு

இது தனி வினையுருபு போலத் தோன்றுவதால் இது சேராமல் வேறு வகையாகச் செயப்பாட்டுப் பொருளை உணர்த்தலே தமிழ் மொழியின் சிறப்பியல்பு எனக்காட்டுவர்.

'இந்த வீடு என்னால் கட்டப்பட்டது' என்பதைவிட 'இந்த வீடு நான் கட்டியது' என்ற வழக்கே சிறப்புடையது என்பர்.

இந்தப் படு என்ற வழக்கு மிகப் பிற்காலத்து வழக்கு என்றும் முற்காலத்தில் இது வழக்குப் பெறவில்லை

---

* The Dravidian verb is entirely destitute of a passive voice, properly so called, nor is there any reason to suppose that it ever had a passive.
— Caldwell, p. 463.

என்றும் கூறுவர். இக்கருத்து அவ்வளவு பொருந்துவதாக இல்லை. இந்தப் படு என்பது சேர்ந்து செயப்பாட்டு வினைப் பொருள் தருவது பழைய வழக்கேயாகும்.

'எழுத் தெனப்படுப அகரமுதல் னகர இறுவாய். 1
உள வெனப்பட்ட ஒன்பதிற் றெழுத்தே. 2
மெய்த் தலைப்பட்ட வழக்கொடு சிவணி. 3
'சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' 4
'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' 5
'அகந் தூய்மை வாய்மையாற் காணப் படும்' 6
செயப்படு பொருளைச் செய்தது போல 7

எனவே படு என்ற துணைவினை சேர்ந்து செயப்பாட்டுப் பொருள் தருதல் பழைய வழக்கேயாம் என்று கொள்ளக் கிடக்கிறது. இது மொழியின் இயல்பான வழக்கும் ஆகும் என்று கொள்ளல் அமையும். பெயரோடு படு வருதல் சிறப்பு ஆகும்; வினையோடு வருதல் அவ்வளவு சிறப்பில்லை என்று கூறலாம். படு என்பது துணைவினையாக அல்லாமல் தனிவினையாகவே வருதலும் உண்டு.

'கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி'
'மரங்கள் பட்டு விட்டன'
'பட்ட மரங்களும் தளிர்க்கும்'

---

1. தொல். எழுத்து. 2. 271. 3. 172. 4. திருக்குறள் 412
5. 49 6. 298 7. சொல். 246

ஒலிக்குறிப்புச் சொற்கள்

சொல்லுக்கும் ஒலிக்கும் நெருங்கிய தொடர்பு உளது என்று கூற வியலாது. எனினும் ஒரு சில சொற்கள் ஒலிக்குறிப்பின் அடிப்படையில் அமைந்துள்ளன. தொல்காப்பியனார் உரிச்சொற்களின் பிறப்பைப்பற்றிச் சொல்லும் பொழுது இசை பண்பு குறிப்பு ஆகிய இவற்றின் அடிப் படையில் உரிச் சொற்கள் பிறக்கும் என்பர். அவற்றுள் இசை என்புதில் ஒலிக்குறிப்புச் சொற்களும் அடங்கும் எனலாம். அடிச் சொற்கள் பண்பு பற்றி அமைவன ஒரு வகை; பல்வேறு பொருள் பற்றி அமைவன ஒருவகை; இசை பற்றி (ஒலிபற்றி) அமைதல் மற்றொருவகை. இந்த மூன்றும் வகையைச் சார்வன ஒலிக்குறிப்பு அடிச் சொற் கள் எனலாம். கம், துடும், ஒல், தண், திக் முதலியன ஒலிக் குறிப்பு அடிச்சொற்கள் எனலாம். இவற்றின் அடிப்படை யில் கமழ், துடி, ஒலி, தண்மை, திகைப்பு முதலிய ஒலிக் குறிப்புச் சொற்கள் அமைந்துள்ளன. கம் — கமழ்; துடும் — துடி; ஒல் — ஒலி; தண் — தண்மை; திக் — திகைப்பு.

சில ஒலிக்குறிப்புகள் ஒலிக்குறிப்புகளாகவே இயங்கு தல் உண்டு; சில முழுச்சொற்களாக அமைந்து வினையாக வும் பெயராகவும் இயங்குதல் உண்டு. ஒலிக் குறிப்பாக இயங்கும்பொழுது ‘என்று’ ‘என’ என்ற வினைச் சொற் களைத் துணையாகக் கொண்டு இயங்கும். முழுச் சொற்க ளாக அமைபவை இவற்றைத் துணையாகக் கொள்ளாமல் இயங்கும்.

ஒலிக்குறிப்பாக இயங்குவன

காடே கம் மென்றன்று
ஒல்லென ஒலித்தது.
கொக்கூ என்றது கோழி
துட்கு என்றது என் தூய நெஞ்சம்.

முழுச் சொற்களாக இயங்குவன

கமழ்ந்தது, ஒலித்தது; கூவியது, திடுக்கிட்டது — இவை வினைச் சொற்கள்.

கமழ், ஒலி, கூவுதல், திடுக்கிடு, காக்கை, கிலுகிலுப்பை, குயில், தட்டு, கும்மாளம், தெத்துவாய் — இவை பெயர்ச் சொற்கள்.

இரட்டித்து வருவன

சில ஒலிக்குறிப்புகள் இரட்டித்து நின்று 'என்று' 'என' என்பவற்றைத் துணையாகக் கொண்டு வினையாக இயங்கும்.

தடதட என்று தட்டினன்
மடமட என்று பேசினன்
குடுகுடு என ஓடினன்

கீழ்வருவன என்று என என்பவற்றின் துணையின்றி வினையாகவும் பெயராகவும் இயங்கும் :

படபடத்தது ; துடிதுடித்தது — வினை
படபடப்பு ; துடிதுடிப்பு — பெயர்

இவ்வாறு பெயராகவும் வினையாகவும் இரட்டித்து வரும் பெயர் வினைகளை இரட்டைக்கிளவி என்பர்.

ஒலிநய அமைப்பு

உணர்த்தும் கருத்துக்களுக்கேற்ப வல்லொலிகளும மெல்லொலிகளும் பேச்சில் அமைதல் இயற்கை. கரடு முரடு, சுளுவு நெளிவு, விறுவிறுப்பு, புளிப்பு, கசப்பு, முறுக்கு, குழல், யாழ் முதலியன பொருளுக்கும் உணர்வுக்கும் ஏற்ப ஒலிகள் பெற்றுள்ளன.

செய்யுளிலும் புலவர்கள் உணர்வுக்கும் கருத்துக்கும் ஏற்ப வல்லொலி மெல்லொலிகள் அமைப்பர்.

> அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
> இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே — சிலம்பு.

வல்லொலிகள் கண்ணகியின் கடுஞ் சினத்தைக் காட்டு கின்றன.

> அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
> வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள் — கம்பர்.

சூர்ப்பனகையின் மெல்லிய நடையை மெல்லொலிகள் உணர்த்துகின்றன.

குழந்தை மொழி

குழந்தை மொழியில் ஒலிக்குறிப்புச் சொற்கள் மிகுதி எனலாம். பூனையைக் குறிக்க 'மியாவ் மியாவ்' என்றும் நாயைக் குறிக்க 'வள் வள்' என்றும் கோழியைக் குறிக்கக் 'கொக் கொக்' என்றும் குழந்தை சொற்களைப் படைக்கின்றது. குழந்தை படைக்கும் ஒலிக் குறிப்புச் சொற்களைக் கொண்டே பிறரும் குழந்தைகளோடு உரையாடுகின்றனர். எனினும் குழந்தை மொழியில் வழங்கும் இவ் ஒலிக்குறிப்புச் சொற்கள் பொதுமொழியில் நிலைபெறுவதில்லை.

எதிரொலிச் சொற்கள் *(echoing words)*

சொற்களின் எதிரொலிகள் வேறு சொற்களாக அமைந்து இனமான பொருள் உணர்த்தல் தமிழ் மொழி

உண்டு. இவற்றை எதிரொலிச் சொற்கள் என்பர். அவற்றுள் சில :

வண்டி கிண்டி, சோறு கீறு, தண்ணி கிண்ணி, வீடு கீடு, கந்தல் கிந்தல் — இவை தனியாக நின்று பொருள் உணர்த்தா. முதற் சொல்லைத் தொடர்ந்தே பொருள் உணர்த்தும்.* நெடிலுக்கு நெடிலும் குறிலுக்குக் குறிலும் இன ஒலிகளாக வருகின்றன.

இவ்வாறு 'கி' அல்லது 'கீ' என்று தொடங்கும் இன ஒலிச் சொற்களே யன்றி வேறு வகையாகவும் இனச் சொற்கள் அமைதல் உண்டு.

வம்பு தும்பு, ஒட்டை ஒடைச்சல், சாக்குப் போக்கு, பாக்கி சாக்கி, கொஞ்ச நஞ்சம், அடி தடி, அக்கம் பக்கம், மிச்சம் மீதி, கங்கு கரை, தங்கு தடை, பேச்சு மூச்சு, எக்க சக்கம், கிட்ட தட்ட — இவற்றுள் பெரும்பாலும் பொருள் உணர்த்தும் சொற்களே பின் தொடர்கின்றன.

சில சொற்கள் இனப் பொருளை உணர்த்தாமல் மிகுதிப் பொருளை உணர்த்த எதிரொலிச் சொற்களாக அமைதலும் உண்டு : பச்சைப் பசேல் ; கன்னங் கரேல் ; வெள்ளை வெளேல் ; சின்னம் சிறு ; தன்னம் தனி ; புத்தம் புதிது ; வெட்டை வெளி ; நட்ட நடு ; பட்டப் பகல் ; தட்டுத் தடை.†

---

* கிம்பளம் என்ற சொல் மட்டும் தனித்து நின்று குறுமொழியாகப் பொருள் உணர்த்துகிறது.

† இவற்றை Stylistic or rhetorical reduplication என்று குறிப்பர் அறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை. Tamil - Literary and Colloquial, p. 38.

தொடரியல்

சொற்கள் தொடர்ந்து அமையும் அமைப்பைத் தொடரியல் என்பர். சார்பு வடிவங்கள் (*bound forms*) உரிமை வடிவங்களோடு (*free forms*) இயைந்து சொல்லாகும் இயல்பைச் சொல்லியலில் ஆராய்வர். முழுச் சொற்களின் தொடர்ச்சியையே தொடரியலில் ஆராய்வர்.

தொடரியல் வகை

தொடரியலை மூன்று வகையாக ஆராய்வர். அவை பின்வருமாறு :

1. தொடர் அமைப்பு (*Construction*).
2. தொடர்முறை (*Order*).
3. தொடர் இயைபு (*Concord or agreement*).

தொடர் அமைப்பு

சொற்கள் தனி மொழியாக நின்று பொருள் உணர்த்தல் உண்டு. அதனை அடுத்துவரும் அண்மைச் சொல் அப்பொருளை இடச்சார்போடு உணர்த்திப் பொருள் புலப்படுத்துகிறது. சிறப்பாக ஒரு சொல்லுக்கு உண்டாகும் தொடரிலக்கணப் பொருள் அண்மைச் சொல்லாலேயே ஏற்படுகிறது எனலாம். சில இடங்களில் தனிச்சொற்களின் இலக்கணமும் அண்மைச் சொற்களால் தெளிவு அடைகின்றது. 'நீ கொல், கொல் யானை, அது கொல், கொல்லென்று சிரித்தான்' — இவற்றுள் கொல் என்பது

ஏவல் வினையாகவும், வினையடியாகவும், இடைச் சொல்லாகவும் ஒலிக் குறிப்பாகவும் அமைய அண்மைச் சொற்களே காரணமாகின்றன. அதனால் அண்மைச் சொற்களால் இலக்கண அமைப்புத் தெளிவு பெறுகிறது என்று கூறலாம். அதனால் தொடரியல் அமைப்பால் இலக்கணச் சிறப்பு உண்டாகிப் பொருள் விளக்கம் ஏற்படுகிறது எனலாம். அண்மைச் சொற்களோடு இயையும் அமைப்பைத் தொடரியல் அமைப்பு என்பர்.

'பெரிய அரசன் நாடு புரந்தான்' என்ற தொடரில் பெரிய என்பது அரசன் என்பதைத் தழுவியும் நாடு என்பது புரந்தான் என்பதைத் தழுவியும் ஒரு சொல் நீர்மையாக நின்று மீண்டும் அவை ஒன்றை ஒன்று தழுவிப் பொருள் புலப்பாடு தருகின்றன. இவ்வாறு தழுவ அமையும் அண்மைச் சொல்லை அண்மை நிலை (*Immediate constituent*) என்பர். பெரிய என்ற சொல்லின் அண்மை நிலை அரசன் என்பதாகும். நாடு என்பதன் அண்மை நிலை புரந்தான் என்பதாகும். மீண்டும் பெரிய அரசன் என்பது ஒரு சொல் நீர்மையாக இயைந்து நாடு புரந்தான் என்ற தொகுதியை அவாவி முடிகின்றது. அப்பொழுது 'பெரிய அரசன்' என்ற தொகுதியின் அண்மை நிலை 'நாடு புரந்தான்' என்பதாகும். இவ்வாறு எந்த நீண்ட தொடரும் தகுதி பற்றியும் அவாய்நிலை பற்றியும் அண்மை நிலைகளாக அமைந்து இறுதியில் இரண்டு அண்மைநிலைத் தொகுதிகளாக நின்று முடியும். இவ்வாறு முடியும் அமைப்பியலைத் தொடர்நிலை அமைப்பு என்பர்.

அண்மைத் தொகுதிகளாக அமையும் சொற்கள் அடுத்தே நிற்கவேண்டும் என்ற நியதி இல்லை. பெரும்பாலும் அடுத்து விளங்கும்; சிறுபான்மை வேறு வகையாகவும் நிலைபெறும்.

இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்
பரல் அவல் அடைய இரலை தெறிப்ப

எனக் கொண்டு கூட்டாக அமைவன தகுதி பற்றியும் அவாய்நிலை பற்றியும் அண்மை நிலைகளாக (*Immediate constituents*) அமைந்து தொடர்கின்றன.

இவ்வாறு அண்மை நிலைகளைப் பெற்று அமையும் அமைப்பையே தொடரியல் அமைப்பு என்பர். இவ்வாறு தொடரும் பொழுது அவை தொடரும் இயல்புக்கேற்ப இலக்கணப் பொருள் சிறக்கின்றது. அவ்வாறு சிறக்கும் பொருளை வேற்றுமைப் பொருள் எனவும் அல்வழிப் பொருள் எனவும் தமிழ் இலக்கண நூல்கள் குறிக்கும். வேற்றுமைப் பொருள்பற்றித் தொடரும் தொடர்களை வேற்றுமைத் தொடர் என்றும் ஏனையவற்றை அல்வழித் தொடர் என்றும் கூறுவர். தமிழ் மொழியின் தொடரியலில் இவ்விரு பிரிவுகள் அடிப்படையானவை. அதனால் தான் தொல்காப்பியனார் கிளவியாக்கத்தில் அல்வழித் தொடரையும் அதனை அடுத்து வரும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய இயல்களில் வேற்றுமைத் தொடரையும் ஆராயக் காண்கின்றோம்.

வேற்றுமைத் தொடர் அல்வழித்தொடர் என்ற பகுப்பே தமிழ்த் தொடரியலின் அடிப்படையாகும். இவற்றின் விளக்கத்தை நன்னூலார் கீழ்வரும் சூத்திரத்தால் எடுத்துக் காட்டுவர்:

வேற்றுமை ஐம்முதல் ஆறும் ; அல்வழி
தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈரெச்சம் முற்று இடைஉரி
தழுவு தொடர் அடுக்கு என ஈர் ஏழே. —நன். சூ. 152.

சொற்கள் இயையும்பொழுது உண்டாகும் ஒலி மாறுதல்களும் இவ்விரு பொருள்களின் அடிப்படையிலேயே

அமைகின்றன. சொற் புணர்ப்பு ஒலி மாறுதல்களுக்கு வேற்றுமை அல்வழித் தொடரமைப்புகள் காரணமாகின்றன.

மெய்யுயிர் முதலீ ரும்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளின் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே. *

தொடர் முறை (order)

இது தொடரியலின் இரண்டாவது நிலையாகும். தொடரும் முறையில் ஒருவகை ஒழுங்கு ஒவ்வொரு மொழிக்கும் அமைந்திருக்கிறது. அந்த ஒழுங்குமுறை அவ்வம் மொழியின் சிறப்பியல்பாகும். தமிழ் மொழியில் சொற்கள் தொடரும் அமைப்பில் ஓர் ஒழுங்குமுறை உள்ளது.

அவற்றுள் சில பின்வருமாறு :

1. எழுவாய் முதலிலும் முற்று முடிவிலும் வருதல்— பொன்னன் வந்தான்.

2. பெயரெச்சம் பெயருக்கு முன் வருதல் — வந்த பையன்.

3. எண் அடை பெயருக்கு முன் வருதல் — ஏழு மாங்காய்.

4. வினை எச்சம் வினைக்கு முன் வருதல் — வந்து போனான்.

5. வேற்றுமை உருபு ஏற்கும் பெயர்ச்சொற்கள் வினைக்கு முன் வருதல் — வீட்டில் இருந்தான்.

6. அடை முதலும் முதல் பின்னும் வருதல் — செந்தாமரை.

* நன். சூ. 151.

7. அடை சினை முதல் எனத் தொடர்ந்து வண்ணச் சினைச்சொல் அமைதல் — செங்கால் நாரை, பெருந்தலைச் சாத்தன்.
8. சுட்டுக்கிளவி இயற்பெயர் வழியே வரல் — சாத்தன், அவன் வந்தான், சாத்தி வந்தாள், அவட்குப் பூக்கொடுக்க.
9. இயற்பெயர் பின்னரும் சிறப்புப் பெயர் முன்னரும் வருதல் — ஆசிரியர் சாத்தனர்.
10. செயப்படுபொருள் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் வருதல் — அவன் மரம் வெட்டினன்.

தொடர் முறையின் ஒழுங்கு

'அவன் மரம் வெட்டினன்'— இத்தொடரில் மரம் என்பது செயப்படுபொருள் என்பது அது வந்துள்ள இடநியதியால் தெரிகிறது. வேற்றுமை உருபுகள் இன்றியும் இடநியதியால் வேற்றுமைப் பொருள் புலப்படுகிறது. அதனல் இடநியதி (*word order*) என்பது தமிழ் மொழியின் தொடரியல் அடிப்படை எனலாம்.

முறை மாறல்

மேலே காட்டிய இடநியதியும் தொடரும் முறையும் மாறியும் தொடர்கள் அமைதல் உண்டு. (*1*) செய்யுளிலும், (*2*) உரைநடையில் புதுமை உண்டாக்குமிடத்தும், (*3*) உணர்வுபடச் சொல்லுமிடத்தும் வழக்கமான முறை மாறி அமைதல் உண்டு. மேலே காட்டிய எல்லாத் தொடர்களும் மாறும் என்பதற்கு இல்லை. அவற்றுள் சிலவே மாறும் இயல்பின.

இவ்வாறு முறை மாறி அமையினும் 'எழுவாய் செயப்படுபொருள் பயனிலை' என்ற அமைப்பே திராவிட மொழிகளின் தொடர்நிலை அமைப்புமுறை எனலாம். ஆங்கிலத்

தில் 'எழுவாய் பயனிலை செயப்படுபொருள்' என்பதே பொதுவான நியதியாகும். வடமொழியில், உரைநடையி லும் செய்யுளிலும் சொற்களை அனுவயப்படுத்திப் பொருள் கொள்ளுதலே பெரும்பான்மை மரபு ஆகும். இதனைக் கொண்டுகூட்டு அமைப்பு என்பர். தமிழில் ஆற்றொழுக் காகப் பொருள் கொள்ளத்தக்க தொடரமைப்பு அமைந் துள்ளது.

பால் திணை இயைபு (*concord*)

ஓர் இலக்கணச்சொல் மற்றோர் இலக்கணச் சொல் லோடு தொடருமிடத்து இரண்டுக்கும் பால் திணையில் ஒற்றுமை (*agreement*) எதிர்பார்க்கப்படுதல் உண்டு. இவ் வொற்றுமை இயைபையே பால்திணை இயைபு (*concord*) என்பர்.*

தமிழ் மொழியில் எழுவாய்த் தொடர், விளித்தொடர் ஆகிய இவற்றிலேயே எழுவாய்க்கும் பயனிலைக்கும் பால் திணை இயைபு எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய எச்சத் தொடர்களில் அடையாக வரும் பெயரெச்சத்திற்கும் பெயருக்கும், வினை எச்சத்திற்கும் வினைமுற்றுக்கும் இயைபு எதிர்பார்ப்பது இல்லை.

'நல்ல பெண்'

'நல்ல பையன்'

'நல்ல பையன்கள்'

என்றே அமையும். தழுவும் பெயருக்கு ஏற்பப் பெயரடை கள் மாறுவது இல்லை. இந்தி மொழியில் இயைபு எதிர் பார்க்கப்படுகிறது; அதனால் அவை மாறும் இயல்பின.

* By concord we mean the fact that a secondary word (adjective or verb) is made to agree with the primary word (substantive so subject) to which it belongs. — Jesperson, Language, p. 335.

அச்சி லட்கி
அச்சா லட்கா
அச்சே லட்கே

ஆங்கில மொழியிலும் மலையாளத்திலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இயைபு அமைவதில்லை. ஆங்கிலத்தில் படர்க்கை ஒருமையில் மட்டும் நிகழ்காலத்தில் பால் இயைபு அமைகிறது: *He comes*— இது மொழியின் பழையநிலை என்பர்.

பொதுவாக, பால் திணை இயைபு இல்லாமல் அமைவதே மொழிக்கு நன்மை என யெஸ்பர்ஸன் குறிப்பர். வளர்ச்சியுள்ள மொழியில் இவ்வியைபு மிகையாகக் கருதப் படுகிறது என்பர்.*

தமிழ் இலக்கண நூல்கள் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இயைபை வற்புறுத்தும்.

வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம் மரபினவே.

என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார்.†

இவ்வாறு பால்திணை இயைபு வேண்டப்படுவதால், மொழியில் சில இடர்ப்பாடுகள் நேர்கின்றன; சில வழுக்கள் ஏற்படுகின்றன. அவற்றிற்கு அமைதி கூற வேண்டிய நிலையும் அவை அமையுமாறும் விளக்க வேண்டியுள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு :—

உயர்திணையும் அஃறிணையும் விரவி வரும்பொழுது முடிக்கும் வினை அமைப்பதில் இடர் உண்டாகிறது; அவ்விடரை நீக்கச் சில அமைதிகள் கூறப்படுகின்றன.

---

* The clumsy repetitions known under the name of concord have become superfluous. — Jesperson, p. 364.

† தொல். சொல். 11.

1. அவனும் அவளும் வந்தனர் — இத் தொடர் பொதுச் சொல் கொண்டு முடிகிறது.

2. பால் மயக்குறும் ஐயக்கிளவியைப் பன்மையில் கூறுவர்.

ஆண்மகனோ பெண்மகளோ தோன்றுபவர்.
ஒன்றோ பலவோ செய் புக்கன.
ஒருவனோ பலரோ கள்வர்.

இவை சில சமயத்தில் பொதுச் சொல்லால் முடிவதும் உண்டு.

ஆணோ பெண்ணோ தோன்றும் உருவம்.
ஒன்றோ பலவோ செய்புக்க பெற்றம்.

3. வியங்கோள் வினை, அஃறிணையும் உயர்திணையும் விரவிவரப் பயனிலையாக வரும்.

ஆவும் ஆயனும் செல்க.*

4. தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் விரவி வரும்பொழுது உயர்திணை முடிபு கொள்ளும்.

யானும் என் எஃகமும் சாறும்.†

(றும் தன்மைப் பன்மை வினை விகுதி)

5. செய்யுளில் திணைகள் மயங்கிவருமிடத்து அஃறிணை முடிபும் கொள்ளும் என்பர்.‡

வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை ஆறும்
குறுகார் அறிவுடை யார்.

---

* வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.
— தொல். சொல். 45.

† தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி யென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.
— சொல். 43.

‡ பலவயி னானுமெண் ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.
— தொல். 51.

6. இவை சில சமயத்தில் உயர்திணை கொண்டு முடிதலும் உண்டு.

மூத்தார் இளையார் பசுப் பெண்டிர் என்று இவர்கட்கு.

பால்திணை இயைபு வேண்டா வினைகள்

மொழியில் பயின்று வரும் 'வேறு' 'உண்டு' 'இல்லை' என்ற இந்த மூன்று சொற்களில் பால்திணை இயைபு எதிர்பார்க்கப்படுவதில்லை. இவை ஐம்பால் மூவிடத்திற்கு வரும் என்று நன்னூலார் கூறத் தக்க அளவிற்கு இச் சொற்கள் பொதுமை பெற்றுவிட்டன.* அல்ல என்ற சொல்லும் இக் காலத்தில் இயைபு வேண்டாமல் வழங்கப்படுகிறது என்று கூறலாம்.

வியங்கோள் வினை நன்னூலார் காலத்தில் எல்லா இடத்துக்கும் பாலுக்கும் அமைந்தன.† இருதிணைக்கும் பொதுவாக வரும் வினைகள் என்று தன்மை, முன்னிலை, வியங்கோள், வேறு, இல்லை, உண்டு, பெயரெச்சம், வினை எச்சம் என்ற இவற்றைக் குறிப்பர். இவை இருதிணைக்கும் பொதுவாக வருவன என்று குறிப்பர். தன்மை முன்னிலையில் மட்டும் ஒருமை பன்மை வேண்டப்படுகிறது பெயரெச்ச வினையெச்சங்களில் பால் திணை இயைபு வேண்டப்படுவதில்லை எனலாம்.

வந்த பையன்	— பெயரெச்சம்	—உயர்திணை
வந்த மாடு	— ,,	அஃறிணை
வந்து போனான்	— வினையெச்சம்	—உயர்திணை
வந்து போயிற்று—	,,	அஃறிணை

* வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன. நன்னூல் — 339.

† கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. — நன். 338.

இவற்றில் பால்திணை இயைபு எதிர்பார்க்கப்படுவது இல்லை. அதனால்தான் மொழி எளிமையாக இருக்கிறது எனலாம். இவை தமிழ்த் தொடர் இயைபின் சிறப்பியல்புகள் எனலாம்.

மொழியின் பழையநிலை

மொழியின் பழைய நிலையிலும் பால்திணை இயைபு வேண்டா நிலையே இருந்து வந்தது என்பர். மலையாள மொழி போன்ற அமைப்பே இருந்திருக்கவேண்டும் என்பர். அக்காலத்தில் பெயரே பயனிலையாக இருந்திருக்கும் என்றும், முற்று அக்காலத்தில் பால்சிறப்பு விகுதிகள் பெறுமல் இயங்கி இருக்கும் என்றும் கருதுவர்.

செய்து பொன்னன்
செய்து அவன்
செய்து அது

என இயங்கி இருக்கவேண்டும். செய்து அவன் என்பதே செய்தான் என்றும், செய்து அது என்பதே செய்தது என்றும் இணைந்து அமைந்திருக்க வேண்டும் என்று கருதுவர். இவ்வாறு இணைந்த வடிவங்கள் வழக்குப் பெறவே மேலும் புதிய எழுவாய் வேண்டப்பட்டு அவன வந்தான் போன்ற வடிவங்கள் மொழியில் இடம் பெறலாயின. இத்தகைய இயைபுகள் மொழியில் நிலை பெறவே இலக்கண நூல்களும் அவ் வியைபு அமைப்பை வற்புறுத்தின எனலாம். பிற்காலத்தில் மலையாள மொழியில் இறுதிப் பால்விகுதிகள் இன்றி வினைகள் இயங்கின. இவை மலையாளம் தனியாகப் பிரியுங்காலத்தில் விளங்கிய மக்களின்பேச்சு மொழி அமைப்பு எனலாம். எனவே, மக்கட் பேச்சு மொழி இயைபு இன்றியே வழங்கிய காலமும் இருந்திருக்க வேண்டும் என்பது மலையாள அமைப்பால் கொள்ளக் கிடக்கிறது.

எழுவாய்த் தொடர்

மேலே காட்டிய தொடர்களுள் எழுவாய் பயனிலை கொண்டு முடியும் தொடர் ஒருவகையாகும். எழுவாய் பயனிலை கொண்டு முடியும் தொடரமைப்பு எழுவாய்த் தொடராகும். இதனையே வாக்கியம் என்பர்.

'அவன் வந்தான்' என்ற அமைப்பு வேறு தொடரை அவாவாமலே தனித்து இயங்க வல்லதாகும். 'நல்ல பையன்' என்ற தொடர் வேறு அண்மைநிலையை அவாவி நிற்கும். பிறிது ஒன்றை அவாவாமல் முடியும் தொடரையே வாக்கியம் என்பர். இதனையே எழுவாய்த் தொடர் என்றும் கூறுவர்.*

'சாத்தா வா' என்னும் விளித்தொடரும் பிறிது ஒன்றை அவாவாமல் இயங்க வல்லதாகும். அதனால் அதனையும் வாக்கியம் என்பர். 'சாத்தா வா' என்பது 'நீ வா' என்ற அமைப்பைப் போன்றதாகும். 'சாத்தா நீ வா' என்ற அமைப்பு இதுவாகும்.

இந்த எழுவாய்த் தொடர் முடிவு பெறுவதற்குப் பய னிலை இன்றியமையாதது ஆகும். எழுவாய் இல்லாமலும் தொடர் அமையும்; பயனிலை இன்றி எந்தத் தொடரும் முடிவு பெறாது. அதனால் இதனைப் பயனிலைகொண்டு

* The sentence is the chief unit of speech. It may be defined quite simply as a minimum complete utterance.

— Simeon Potter, Modern Linguistics, p. 104.

முடியும் அமைப்பு (*predicative construction*) என்பர். இவை பொதுவாக ஒரு செய்தியும் அதன் விளக்கமும் என்ற அமைப்பைப் பெறுகின்றன.*

தமிழில் பயனிலையாக வருவது செயல்வினை (தெரிநிலை வினை) மட்டும் அன்று. குறிப்புவினை, ஏவல்வினை, வியங்கோள், வினைப் பெயர், பண்புப் பெயர், ஏனைய பொதுப் பெயர் முதலானவையும் பயனிலையாக வரும் என்பர்.

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே. †

பொருண்மை சுட்டல் — ஆ உண்டு; சாத்தன் உளன் (இதனை வினைக் குறிப்புப் பயனிலை என்று கூறலாம்).

ஆ செல்க — வியங்கொள வருதல்
ஆ கிடந்தது — வினைநிலையுரைத்தல்
சாத்தன் யாவன் — வினாவொடு முடிதல்
ஆ கருப்பு — பண்பு கொள வருதல்
ஆ பல — பெயர் கொள வருதல்

இப் பயனிலை அமைப்புகளைக் கொண்டு எழுவாய்த் தொடரை வினா வாக்கியம், செப்பு வாக்கியம், ஏவல் வாக்கியம், வியங்கோள் வாக்கியம், வியப்பு வாக்கியம் எனப் பல வாறாகப் பிரித்து உணரலாம்.

---

* The most general characterization of predicative constructions is suggested by the terms "topic" and "comment" for their i c s : (Immediate constituents) the speaker announces a topic and then says something about it. — Hocket p. 201.

† தொல். சொல். 66.

அவன் யார்?	— வினா வாக்கியம்
அவன் ஆசிரியன்	— செப்பு வாக்கியம்
தமிழ் வாழ்க!	— வியங்கோள் வாக்கியம்
நீ செய்.	— ஏவல் வாக்கியம்
ஆ! என்ன விந்தை!	— வியப்பு வாக்கியம்

தமிழ் வாக்கிய அமைப்பின் சிறப்பியல்புகளைத் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டுகின்றார். அவற்றுள், சிறப்பாகச் செப்பு வினா முதலிய தொடர்கள் எவ்வாறு அமையும் என்பதையும், பால்திணை இயைந்து அமையுமாறு எங்ஙனம் என்பதையும் வேறு சில தொடர், அமைப்புகளையும் நன்கு தெளிவுபடுத்துகிறார். அவற்றுள் சில பின்வருமாறு :

1. வினையும் பெயரும் பால்திணை இயைபு பெற்றே வரும்.*

2. செப்பும் வினாவும் வழுவாமல் கூற வேண்டும்.†

3. வினா வாக்கியம் விடைப் பொருளில் விளங்கினால் செப்பாகக் கொள்ளப்படும்.‡

4. நேராக விடையமையாமல் குறிப்பாக அமைந்தாலும் செப்பாகவே கொள்ளப்படும்.

சோறு உண்டாயோ என்று கேட்புழி 'வயிறு குத்தும்' எனினும் 'நீ உண்' எனினும் தக்க விடையாகவே கொள்ளப்படும்.§

---

* வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே. — சூ. 11.

† செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல். — சூ. 13.

‡ வினாவும் செப்பே வினாவெதிர் வரினே. — சூ. 14.

§ செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான. — சூ. 15.

T. 3071

5. செஞ்ஞாயிறு, வெண்திங்கள் என இனச் சுட்டு இல்லாமலும் அடைகள் செய்யுளில் வரும்.*

6. இயற்கைப் பொருளை இன்ன தன்மையது என்று கூறல் வேண்டும் என்பர். நிலம் வலிது; நீர் தண்ணிது; தீ வெய்து—இவற்றிற்கு ஆக்கக் கிளவி தேவை இல்லை என்பதாம்.†

7. செயற்கைப் பொருளை ஆக்கச் சொல் கொடுத்துக் கூறுக என்பர்.‡ அந்த ஆக்கச் சொல்லைக் கூறுங்கால் காரணத்தை முற்கூறி அதன் பிறகே ஆக்கச் சொல்லைக் கூறவேண்டும் என்பர்.§

'நீர் கலத்தலால் நிலம் மெலிது ஆயிற்று.'

'எண்ணெய் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின'

வழக்கினுள் காரணமின்றியும் ஆக்கக் கிளவி வரும் என்பர்.

'மயிர் நல்ல வாயின' 'பயிர் நல்லவாயின.'1

8. வண்ணச் சினைச்சொல் அடை சினை முதல் என்ற முறை பெற்று வரும் என்பர்.2

செங்கால் நாரை, கோழ் இலை வாழை.

---

* இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

† இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளர்த்தல்.

‡ செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

§ ஆக்கந் தானே காரண முதற்றே.

1 ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

2 அடைசினை முதலென முறைமூன் று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல். — தொல். கிளவியாக்கம்.

9. தருதல் வருதல் என்ற சொற்கள் முன்னிலையையும் தன்மையையும் சாரும் என்பர். கொடுத்தல் செல்லுதல் என்ற சொற்கள் படர்க்கை இடத்தையே சாரும். *

எனக்குத் தந்தான்; என்னிடம் வந்தான் — தன்மையைச் சார்ந்தது.

நினக்குத் தந்தான்; நின்னிடம் வந்தான் — முன்னிலையைச் சார்ந்தது.

அவற்குக் கொடுத்தான் — படர்க்கையைச் சார்ந்தது.

அவன்கட் சென்றான் — படர்க்கையைச் சார்ந்தது.

10. இனைத்து என்று அறியப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் எண்ணிக்கையின்கண் உம்மை கொடுத்து அத்தொடரை அமைக்க வேண்டும் என்பர். †

'பன்னிருகையும் பாற்பட வியற்றி' — சினைக்கிளவி எண்ணுங்கால் உம்மை கொடுத்துக் கூறப்பட்டது. 'முரசு முழங்குதானை மூவரும் கூடி'— முதற்கிளவி எண்ணுங்கால் உம்மை பெற்று வழங்குகிறது.

11. உலகத்தில் இல்லாப் பொருளைக் கூறுங்காலும் உம்மை கொடுத்துக்கூறல் மரபு என்பர். ‡—பவளக்கோட்டு

---

* செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப. — 28.
அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயி ரிடத்த — 29.
ஏனை இரண்டும் ஏனை இடத்த — 30.

† இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும். — 33.

‡ மன்னாப் பொருளும் அன்ன வியற்றே. — 34.

நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை; குருடு காண்டல் பகலும் இல்லை.

12. சுட்டுப்பெயர் பின்னரும் இயற்பெயர் முன்னரும் கிளத்தல் மரபாகும் என்பர். செய்யுளில் முன்னும் கிளக்கப்படும் என்பர்.*

---

* இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர். — தொல். 38.

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே. — தொல். 39.

பெயரடையும் வினையடையும்

ஆங்கில மொழியமைப்பைப் போன்று பெயரடை (*adjective*) என்றோ வினையடை (*adverb*) என்றோ தனி யமைப்புத் தமிழிலும் இல்லை ; ஏனைய திராவிட மொழி களிலும் இல்லை. பெயரைச் சிறப்பிக்கும் அடைகள் பல்வேறாகத் தமிழில் உள்ளன. அதேபோல வினையைச் சிறப்பிக்கும் அடைகளும் சில உள. இவ்வாறு தொடரும் தொடரமைப்பை அடைத் தொடரமைப்பு (*attributive construction*) என்பர்.

பெயரடைகள் வருமாறு

1. பண்பு அடிச்சொற்கள் பெரும்பாலும் பெயரடை களாக விளங்குகின்றன. இவை தொடரும் அமைப்பைப் **பண்புத்தொகை** என்பர். இவையே சங்க இலக்கியத்தில் பயின்று வழங்குகின்றன :

இன்துணை, வன்கை, நல்யாழ், பெருவழி, தூமடி, சேவடி, கூடெயிறு.

2. இந்தப் பெயரடைகள் தொடரும் பொழுது வண் ணம், சினை, முதல் என்ற அமைப்பில் தொடர்தல் மிகுதி யாக உள்ளன :

கோழ்இலை வாழை, கருங்கால் ஓமை, செஞ்செவி எருவை, சுடர்ப் பூந்தாமரை, புகர்முக வேழம், திரிமருப்பு இரலை, வறுங்கை வம்பலர்.

3. பண்பாக வரும் அடிச்சொற்கள் பெயர் அடைக ளாக வருதலேயன்றிச் செயல் அடிச்சொற்களும் பெய

ரடைகளாக அமைகின்றன. செயல் வினையடி அடையாகத் தொடரும் அமைப்பை வினைத்தொகை என்பர்.

கொல் களிறு, வரு புனல், ஆய் தொடி, ஓடு குதிரை.

4. பிற்காலத்தில் பண்பு அடிச்சொற்கள் அகரஉருபு பெற்றுப் பண்பு அடையாக அமைந்துள்ளன.

நல்வழி-பழைய வழக்கு ; நல்ல வழி-பிற்கால வழக்கு ; தீ நெறி-தீய நெறி.

நல்ல பையன், கெட்ட பையன், தீய நெறி, தூய நெறி— அகரத்திற்கு முன்னால் ஒலித்துணையாக இகரம் சேர்ந்து 'இய' என்று அமைந்து சேர்தல் மிகுதி.

நெடிய வழி, இனிய துணை, வலிய கை, கூரிய பல், அழகிய பெண்.

5. முழுப்பெயர்ச் சொற்களே பெயர்களுக்கு முன்னால் நின்று பெயரடைகள் ஆகின்றன. பொன்வளையல், மட்குடம், தீப்பெட்டி, தெருக்கூத்து, மதிமுகம், சாரைப் பாம்பு — இவற்றை வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகை என்று பொருள் கொள்ளும் இயல்புக்கு ஏற்பக் கொள்வர்.

6. ஆறும் வேற்றுமைத் தொகையாக வருவன பெயரடைகளாக அமைகின்றன :

வீட்டு வாசல், காட்டுப்பசு, மரக்கிளை.

அடைகளாக அமையும் இவ் ஆறும் வேற்றுமைத் தொகைகள் இரட்டிப்பைப் பெறுகின்றன.

வீடு + வாசல்	—	வீட்டு வாசல்
காடு + பசு	—	காட்டுப் பசு
செம்பு + அடர்	—	செப்படர்
செம்பு + தகடு	—	செப்புத் தகடு

7. பெயரெச்ச வினைகள் பெயரடைகளாக அமை கின்றன :

வந்த பையன், சொன்ன கதை, நின்ற குதிரை, வருகிற நாள், செய்யும் வேலை.

8. ஆன, ஆகிய முதலிய துணைச் சொற்கள் பெயர்க ளோடு அமைந்து பெயரடைகள் ஆகின்றன.

கருப்பான பையன், வெளுப்பான துணி, பயங்கரமான செய்தி, அழகான பெண்.

9 எண்ணுப் பெயர்கள் அடைகளாக வரும் இயல் பின. அப்பொழுது அவ்வடைகள் பெரும்பாலும் அடிச் சொற்களோடு நெருங்கிய தொடர்புடைய வடிவங்களாக விளங்கும்; சில முழு வடிவமும் அடைகளாக நிற்றல் உண்டு.

ஒருநாள், ஓரிரவு, இரு வழி, ஈரிருவர், இரண்டு நாள், மூன்று பேர், நான்கு கால், ஐந்து விரல், அறுநூறு, ஆறு பேர், ஏழு நாள், எழுபது, எட்டு நாள், எண்பது.

10. மூவிடப் பெயர்களும் முன்னின்று பெயரடைக ளாக நிற்கும். இவை நெடுமுதல் குறுகுகின்றன. என்வீடு, எம்வீடு, எங்கள் வீடு, தன்கதை, தம்புகழ், உன்வீடு, உம் வீடு, உங்கள் வீடு — இவற்றை ஆறன் தொகை என்பர்.

11. சுட்டின் அடியாகப் பிறக்கும் படர்க்கைப் பெயர் களும் பெயரடைகளாக வரும். இவை ஒருவித மாறுதலும் அடைவதில்லை — 'அவன் வீடு' 'அவள் கணவன்' — இவற்றை ஆறன் தொகையாகக் கொள்வர்.

வினையடைகளாக வருவன (*adverbs*)

(1) ஆக என்ற துணைச்சொல்லைப் பெற்றுப் பெயர்ச் சொற்கள் வினையடைகளாக வருகின்றன.

செய்வதாகச் சொன்னான்

வேகமாக ஓடினான்

(3) சுட்டுக்களின் அடிப்படையில் அமையும் பெயர்கள் வினையடைகளாக அமைகின்றன :

அத்தனை உடைத்தான், இத்தனை எடுத்தான்,
எத்தனை இருக்கின்றன, அங்குப் போனான்,
இங்கு வந்தான், அவ்வளவு வாங்கினான்,
இவ்வளவு எடுத்தான்.

(5) பண்புப்பெயர்ச் சொற்கள் முன்னின்று வினையடையாக அமையும். அவையும் ஆக என்ற துணை வினையைப் பெற்று வருதல் மிகுதி.

செம்மையாகச் சொன்னான்
உண்மையாக நடந்தான்
கருமையாக இருந்தது
அன்பாகப் பேசினான்

(4) பண்பு அடியாகத் தோன்றும் வினைக்குறிப்பு வடிவங்கள் முன்னின்று எச்சமாக நின்று வினை அடையாதல் உண்டு.

நன்று சொன்னான்
சிறிது கேட்டான்

(5) பெயரெச்சங்கள் பெயரடைகளாக அமைதலைப் போல வினையெச்சங்களும் வினையடையாக நிற்கின்றன.

வரச் சொன்னான், செய்யச் சொன்னான்,
செய்து வந்தான், செய்யப் போவான்.

(6) பின் முன் என்ற சொற்கள் வினையடைகளாக வருகின்றன.

அவனுக்குப் பின் வந்தான்
இவனுக்கு முன் வந்தான்

(7) நிபந்தனை அமைப்புடைய வினையெச்சங்களும் வினை யடைகள் ஆகின்றன.

வரில் தருவேன்
வந்தால் தருவேன்

ஒப்புமை அடைகளும் உயர்வு அடைகளும்

ஆங்கிலத்தில் ஒன்றை ஒன்று ஒப்புமைப்படுத்தி அமையும் ஒப்புமை அடைகள் (*comparative adjectives*) '*er*' என்ற விகுதியையும், சிறப்பு உயர்வு அடைகள் (*superlative adjective*) '*est*' என்ற விகுதியையும் பெற்று இயங்குகின்றன. வட மொழியிலும் இவற்றைப் போலவே தனி விகுதிகள் உள்ளன.

தமிழில் உவம உருபுகள் ஒப்புமைப்படுத்தும் பெயர் களோடு பொருந்துவதால் இப் பெயரடைகள் ஒப்புமைப் பொருளையும் உயர்வுப் பொருளையும் அடைகின்றன. சில இடத்தில் இவ் உவம உருபுகள் மறைந்தும் நிற்கின்றன. உவம உருபுகளின் பொருள்களைச் சில தனிச் சொற்களும் தந்து உவமச் சொல்லுருபுகளாக அமைகின்றன.

ஒப்புமைப் பொருள்

அவனின்	இவன்	பெரியன்.
அதனின்	இது	சிறந்த நூல்.
அதை விட	இது	சிறந்த நூல்.
அதைக் காட்டிலும்	இது	சிறந்த நூல்.
அதைப் பார்க்க	இது	உயர்ந்த நூல்.

உயர்வுப் பொருள்

உயர்வுப் பொருளில் வரும் பெயர்கள் உம்மை பெற்று வருதல் மிகுதி.

'அவர்கள் எல்லோரினும் இவன் சிறந்த மாணவன்'

ஏழாம் வேற்றுமை உருபுகள் பெற்றும் இப்பெயர்கள் அமைதல் உண்டு.

அம் மரங்களில் இது பெரிய மரம்.
அந்த வீடுகளில் இது உயரமானது.

வினையடைகளும் ஒப்புமைப் பொருளிலும் உயர்வுப் பொருளிலும் இவ்வாறே வருகின்றன.

அவனின் இவன் மிக நல்லன்.
அவனைவிட இவன் நன்றாக நடக்கிறான்.
அவனைக் காட்டிலும் இவன் நன்றாக உண்பான்.
அவர்கள் அனைவரிலும் இவன் நன்றாக உழைப்பான்.

அடைகள் பலவாக வருதல்:

அடைகள் பல நின்று பொருளைச் சிறப்பித்தல் உண்டு.

அவன் மிக நல்ல பையன் (பெயரடை).
மிக நன்றாகச் செய்தான் (வினையடை).
மிக நல்ல வீணை தடவி (பெயரடை)

சங்க இலக்கியத்தில் அடைகள் அடுக்கி வருதல் மிகுதி.

அஞ்சுடர் நெடுங் கொடி	(அகம் 11)
சாயல் இன் துணை	(,, 13)
கொம்மை அம் பசுங்காய்	(,, 15)
ஒண்சுடர் நல் இல்	(,, 7)
நெடும் பெருங் குன்றம்	(,, 4)

அடைகள் இரட்டித்துப் பொருளைச் சிறப்பித்தல் உண்டு.

மீமிசை, சரிநிகர் சமானமாக வாழ்வம் (பாரதி), மென் மெல இயங்கி, மெல்ல மெல்லச் சொன்னான், சொல்லிச் சொல்லிப் பார்த்தான்.

வினை யெச்சங்களும் பல தொடர்ந்து வினைமுற்றைச் சிறப்பிக்கின்றன.

ஆடி ஓடிப் பாடி நாடித் தேடி வந்தான்.

பல அடைகள் சினையைச் சிறப்பித்து அவை மீண்டும் முதலைச் சிறப்பித்தல் சங்க இலக்கிய அமைப்பாகும்.

'பல்லிருங் கூந்தல் மெல்லியல் மடந்தை'*

'காண்பின் செவ்வாய் அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை.' †

பெயரடைகள் வினை ஆதல்

பெயரடைகளாக வரும் பண்பு அடிச் சொற்களோடு பால் விகுதிகள் சேரும் பொழுது அவை குறிப்பு வினைகள் ஆகி விடுகின்றன. அடிச் சொற்களில் செயல் உணர்த்தும் வினை அடிச் சொற்களும் பண்பு உணர்த்தும் பெயர் அடிச் சொற்களும் உள்ளன. வினை அடிச் சொற்கள் நின்று பெயரைச் சிறப்பித்தால் அத்தொடரை வினைத்தொகை என்பர். பெயரடிச் சொற்கள் நின்று பெயரைச் சிறப்பித்தால் அவற்றைப் பண்புத்தொகை என்பர்.

வருபுனல், உண்கண், கொல்களிறு, உறுபுனல், தாக்கு அணங்கு — வினைத்தொகை.

குறுமகள், ஒண்சுடர், நல்வழி, இன்சிலை, செங்குலை, சிறார், அந்தீங்கிளவி, இருவானம் — பண்புத்தொகை.

இவற்றுள் வினையடியாக உள்ள அடைகள் வினையாகவும் அமையும், பெயராகவும் அமையும்; வினையாக அமையுங்கால் தெரிநிலை வினையாக அமையும். பண்பு அடியாக விளங்குபவை பெயராக அமையும்; வினையாக அமையுங்கால் குறிப்பு வினையாகவே அமையும்.

---

* அகம் 43. † 2 அகம் 3.

புனல் வருகிறது — வினையடி — தெரிநிலை வினை
களிறு கொல்லும் — வினையடி — தெரிநிலை வினை
மகள் குறியள் — பண்பு அடி— குறிப்பு வினை
வழி நல்லது — பண்பு அடி— குறிப்பு வினை

இவை அடையாகுங்கால் திணைபால் காட்டுவதில்லை. வினையாகுங்கால் திணைபால் உணர்த்தும்.

எச்சவினைகள்

பெயரடைகளாக வரும் வினைகளைப் பெயரெச்சம் என்றும் வினையடையாக வரும் வினைகளை வினைஎச்சம் என்றும் கூறுவர் :

செய்த பையன் — பெயரெச்சம்
செய்து வந்தாள் — வினை எச்சம்

இவற்றுள் குறிப்புவினை அடையாகுங்கால் வடிவு மாறுவதில்லை.

விறலினன் வழுதி — பெயரெச்சம்
நன்று சொன்னான் — வினை எச்சம்
சிறிது கேட்டான் — ”

தெரிநிலை வினைகள் அடையாகுங்கால் காலம் காட்டும். குறிப்பு வினைகள் அடையாகுங்கால் காலம் காட்டுவதில்லை.

தொடரமைப்பில் எச்சவினைகள்

இரண்டு தனியமைப்புள்ள தொடர்களை ஒரே தொடராக அமைக்க இவ் வெச்ச அமைப்புகள் பெரிதும் தமிழில் பயன்படுகின்றன. பல வாக்கியங்களை ஒன்றாக இணைக்க இவை தமிழில் அமைகின்றன. ஆங்கிலத்தில் இணைப்பு இடப் பெயர்களைக் கொண்டு வாக்கியங்களைத் தொடர்பு படுத்து மிடத்தில் தமிழில் எச்ச வினைகள் தொடர்புபடுத்து கின்றன.

'சாத்தன் வீட்டுக்குச் சென்றான்' 'அவன் சோறு உண்டான்' என்ற இரு தொடர்கள் எச்சவினை அமைப்பால் ஒரே வாக்கியத் தொடராகிறது. சாத்தன் வீட்டுக்குச் சென்று சோறு உண்டான். வீட்டுக்குச் சென்ற சாத்தன் சோறு உண்டான்.

ஆங்கிலத்தில் *who, which, when* என்று இணைப்பு இடப் பெயராக (*relative pronoun*) வரும் அமைப்புத் தமிழில் இல்லை. அவற்றிற்கு மாறாக எச்ச வினைகளும் வினையாலணையும் பெயரும் வருகின்றன.

I saw the man who came

வந்த மனிதரைப் பார்த்தேன்

வந்தவரை நான் பார்த்தேன்

எனத் தமிழில் அமைகின்றன.

வேற்றுமைத் தொடர்

வேற்றுமைத் தொடர்

சொற்கள் ஒன்றனோடு ஒன்று தொடரும் பொழுதே வேற்றுமைப் பொருள் உண்டாகிறது. அதனால் வேற்றுமையைப் பற்றிய ஆராய்ச்சி தொடர் மொழிக்கண் செய்யப்படும் ஆராய்ச்சியாகும். தொல்காப்பியனார் சொல்லியலை ஆராயுமிடத்து முதற்கண் தொடரிலக்கணத்தை ஆராய்ந்து பிறகே சொற்களின் இயலைத் தனித் தனி ஆராய்வது மிகப் பொருத்தமாக உள்ளது. பேசும் பேச்சு, தொடரால் அமைவது. நீண்ட பேச்சுத் தொடரே இயல்பான அமைப்பாகும். அதுவே முழுப் பொருளும் உணர்த்துவதாகும். சொல், எழுத்து என்ற பாகுபாடுகளெல்லாம் மொழி ஆராய்வோரின் படைப்பே யாகும். மொழி என்பது தொடர்ந்து அமையும் பேச்சொலி எனலாம். அதனாற்றான் தொடரியலுக்குச் சிறப்புக் கொடுத்துத் தொல்காப்பியனார் தம் இலக்கணத்தில் முதற்கண் அதனை ஆராய்கின்றார் எனலாம். இவ்வமைப்பியலை தெய்வச்சிலையார் நன்கு வெளிப்படுத்துகின்றார் :

‘ அல்வழித் தொடர் கிளவியாக்கத் துள்ளும் வேற்றுமைத் தொடர் வேற்றுமை யோத்துள்ளும் வேற்றுமை மயங்கியல் விளிமரபு என்பனவற்றுள்ளும்...... உணர்த்தினர் என்று கொள்க.’

வேற்றுமைக்குக் காரணம் அண்மை நிலைகளே.

சொற்கள் வேற்றுமைப் பொருள் பெறுவதற்குக் காரணம் அவற்றைத் தொடரும் அண்மை நிலைகளே

(*immediate constituents*) எனலாம். இந்த அண்மைநிலைகளின் விளக்கத்தைத் தனிச் சொற்களாலும் வாய்பாடுகளாலும் தொல்காப்பியனார் காட்டுகின்றார் எனலாம். அவர் காலத்து வழங்கும் மொழிவழக்கை ஆராய்ந்து, வேற்றுமை அமைந்துள்ள தொடர்களை வாய்பாட்டு அமைப்பால் குறிப்பிடக் காண்கின்றோம். இவ்வாய்பாட்டு அமைப்புகளால் வேற்றுமைப் பொருள் தோன்றக் காரணமாயிருக்கும் அண்மை நிலைகளை உணர்த்தக் காண்கின்றோம்.

குறியீடு

தொல்காப்பியனாரும் நன்னூலாரும் வேற்றுமையை உருபுகள் கொண்டே குறியிட்டு வழங்கியுள்ளனர். ஈற்றில் வரும் உருபுகளைக் குறியீடாக வைத்துள்ளனர். உருபுகளைக் குறியீடாக வைத்ததோடல்லாமல் அவற்றை 'இரண்டாகுவது' 'மூன்றாகுவது' என்று எண்முறை பற்றியும் குறிப்பிடுவர். வேற்றுமைகட்கு இவ்வாறு எண்முறை பற்றிக் குறியீடு வழங்குதல் வடமொழியைப் பின்பற்றியது என்றும் அவ்வாறு வடமொழியைப் பின்பற்றித் தமிழ்வேற்றுமைகட்குப் பெயர்கள் இட்டது தவறு என்றும் அறிஞர் கால்டுவெல் குறிப்பிடுவர்; மேலும் தமிழில் வேற்றுமைகள் பலவாக இருக்க அவற்றை எட்டு என வடமொழியை ஒட்டி அடக்கி அமைத்தது தவறு என்றும் கூறுவர்.

பெயரோடு சேரும் ஒவ்வோர் உருபும் ஒவ்வொரு வேற்றுமையாக வேண்டும் என்றும், உணர்த்தும் பொருளுக்கேற்ப வேற்றுமைகளின் தொகை அமைய வேண்டும் என்றும் குறிப்பர்.*

---

* The imitation of Sanskrit in this particular was certainly an error; for whilst in Sanskrit there are eight cases only, the number of cases in Tamil, Telugu & c., is almost indefinite. Every postposition annexed to a noun constitutes, properly speaking, a new case; and therefore the number of cases depends upon the requirements of the speaker and the different shades of meaning he wishes to express. — Caldwell, p. 254.

உருபுகள் அறிகுறிகளே

தொல்காப்பியனர் வேற்றுமை உருபுகளைக் குறியீடாக வழங்கினலும் அவைபற்றி வேற்றுமைப் பொருளை வகைப் படுத்தியதாகத் தெரியவில்லை. பொருளே வேற்றுமைக்கு அடிப்படையாகும் என்பதை,

யாதன் உருபிற் கூறிற் ருயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்*

என்ற சூத்திரத்தால் வற்புறுத்தக் காண்கின்ருேம். வேற்றுமை உருபுகள் வெறும் அறிகுறிகள் (*markers*) ஆகும். மதிமுகம் என்பதும் மதிபோலும் முகம் என்பதும் உவமப் பொருளில் பொருந்தும் தொடர்களாகும். 'போலும்' என்பது இல்லாவிட்டாலும் மதிமுகம் என்பது உவமத்தொடரே யாகும். அதே போல 'மரம் வெட்டினன்' என்ற தொடரில் 'ஐ' என்ற உருபு இல்லாவிட்டாலும் அது வேற்றுமைப் பொருள் தொடரே யாகும். எனவே வேற்றுமைப்பொருள், சொற்கள் தொடரும் தொடர்பால் உண்டாவதன்றி உருபுகளால் நேர்வது அன்று. உவம உருபு உவமப் பொருளை அறியத் துணை செய்வது போல ஐ என்பதும் வேற்றுமைப் பொருளை உணர நிற்கும் அறிகுறியாகும்.

வேற்றுமைப் பொருள்கள்

தொல்காப்பியனர் வேற்றுமைப் பொருள்கள் இவை எனக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தனிச் சொற்களைக் கொண்டும் வாய்பாடுகளைக் கொண்டும் காட்டுவர். அவர் காட்டும் பொருள்களை உரையாசிரியர்கள் தெளிவு படுத்துவர். வேற்றுமைப் பொருள்களின் விளக்கத்தை தெய்வச்சிலையாரின் உரை நன்கு தெளிவுபடுத்துகிறது :

* சூ. 590.

'ஒரு பொருளை ஒருகால் வினைமுதல் ஆக்கியும், ஒருகாற் செயப்படு பொருளாக்கியும், ஒருகாற் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க' — என்பர்.

தொடரும் அண்மைச் சொற்கள் நிலைத்துள்ள சொற்களுக்கு இப்பொருள் தருகின்றன எனலாம். நன்னூலார் இப்பொருள்களைப் பலவாறாக விரித்துக் கூறுவர். வேறு சில உருபுகளையும் அவர் குறிப்பிடுவர். அவர் காலத்து வழங்கிய சொல்லுருபுகள் சிலவற்றையும் உடன் குறிப்பிடுவர். தமிழில் வெறும் உருபுகளாக நிற்பவை சில; சொல்லுருபுகளாக நிற்பவை சில எனலாம். ஐ, கு, ஆல், இன் முதலியன சொற்றன்மை இழந்து வெறும் உருபுகளாக நிற்பவை; உடன், கொண்டு, உடைய, இருந்து, உள், கண் என்பன பொருள் தன்மை கொண்டுள்ள சொல்லுருபுகளாம். சொற்களே ஒரு காலத்தில் நின்று அவை பொருள் தன்மை இழந்து ஐ, கு, ஆல், இன் என உருபுகளாக அமைந்துவிட்டன. தொல்காப்பியனார் குறிப்பிடும் ஏழுன் உருபுகள் பலவும் அண்மைச் சொற்களாக நின்றவையே என்பதும் அவை பிற்காலத்தில் உருபுகளாக அமைந்து விட்டன என்பதும் கொள்ளக் கிடக்கின்றன. உருபுகள் முதலிய இடைச் சொற்களும் முழுச் சொற்களாகப் பொருள் விளக்கி நின்றவையாகும்.

எழுவாய்த் தொடர்

எழுவாய் வேற்றுமை உருபு பெறாமல் இயங்குவது தமிழ் மொழியின் சிறப்பியல்பாகும்.* இச்சிறப்பினை ஆசிரியர் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டுவர்:

---

* எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினை பெயர் வினாக் கொளல் அதன் பயனிலையே. — நன். 295.

'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே' — 96
என்று குறிப்பர்.

பெயர்ச் சொல் பயனிலை கொள்ளும்பொழுதே அது எழுவாய் எனப்படுகிறது. அதனல் எழுவாயின் அண்மை நிலை பயனிலையாகும் எனலாம். பயனிலையாக வருவன இவை என்பர் தொல்காப்பியனர் :

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்என்று
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

ஐ என் வேற்றுமை

ஐ என்ற பெயரையுடைய இவ்விரண்டாம் வேற்றுமை, வினையையும் வினைக்குறிப்பையும் அண்மை நிலைகளாகக் கொண்டு முடியும் என்பது அறியக் கிடக்கிறது. இவ்விரண்டு அண்மை நிலைகளின் அடிப்படையிலேயே அதன் பொருளும் தோன்றும் என்பர்.

இரண்டாகுவதே, ஐ யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலிற் ருேன்று மதுவே — தொல். 66.

இவ்வாறு அடுத்து வரும் வினைச்சொற்களை வாய்பாடு வகையான் எடுத்துக் கூறுவர் :

காப்பு, ஒப்பு, ஊர்தல் இழைத்தல் முதலிய சொற்களை வாய்பாடாக எடுத்துக் கூறுவர்.

பின் தொடரும் வினைச் சொற்களால் நிலைமொழி செயப்படு பொருள் உணர்த்தும் சொல்லாகிறது. இச் செயப்படு பொருள் ஆக்கப்படு பொருளாகவும் அழிக்கப்படு

* தொல். சூ. 72.

பொருளாகவும் அடையப்படு பொருளாகவும் துறக்கப்படு பொருளாகவும் ஒப்புமையாக அமைக்கப்படும் பொருளாகவும் அமையும் நிலைமையை நன்னூலார் காட்டுவர்.*

இரண்டாம் உருபு வெளிப்படாமல் தொகையாகவே வழங்கல் பெரும்பான்மை. தொடர்களில் ஐயம் உண்டாகுமிடத்து ஐ வெளிப்பட்டே வரும்.

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

— புறம். 192.

ஐ வெளிப்பட்டு நிற்கிறது.

பேச்சுத் தமிழிலும் மலையாளத்திலும் எ என்பது உருபாகும். இது ஐ என்பதன் திரிபாகும். மலையாளத்தில் பழைய வழக்கு, அகரம் இரண்டன் உருபாக வழங்கல் என்பர் அறிஞர் குண்டர்ட்.† கன்னடத்தில் அம் பழைய உருபாகும். அன்னு என்பது புதிய வழக்காகும். தெலுங்கில் னு, னி என்பன இரண்டன் உருபுகளாம். இகரத்தைத் தொடர்ந்து னி என்பதும் ஏனைய இடத்து னு என்பதும் தெலுங்கில் அமைகின்றன. இண்டினி (வீட்டை), பிட்டனு (குழந்தையை).

மூன்றும் வேற்றுமை

இதனைத் தொல்காப்பியனார் ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி என்பர். நன்னூலார் ஆல் வேற்றுமை என்று குறிப்பர். ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி வினைமுதல் (கருத்தா), கருவி இவற்றைப் பொருளாகச் சார்ந்து வரும் என்று தொல்காப்பியனார் குறிப்பர்.

---

* இரண்டாவதன் உருபு ஐயே ; அதன்பொருள்
ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல்,
ஒத்தல், உடைமை ஆதி யாகும். — சூ. 296.

† Caldwell, p. 272.

மூன்று குவதே,
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே *

எனக் குறிப்பர்.

நன்னூலார், ஆல், ஆன், ஓடு, ஒடு என்பவற்றை உருபாகக் குறிப்பர். இவ் உருபுகள் அவை ஏற்கும் சொற்களைக் கருத்தா, கருவி, உடன் நிகழ்வு என்ற பொருள்களைப் பெறுமாறு செய்யும் என்பர்.

தொல்காப்பியர் காலத்தில் ஒடு என்ற உருபு கருவிப் பொருளுக்கும் வந்துள்ளது எனக் கொள்ளக் கிடக்கிறது. நன்னூலார் ஒடு வென்ற உருபை உடனிகழ்ச்சிப் பொருளுக்கும், ஆல் என்ற உருபைக் கருவிப் பொருளுக்கும் என வேறுபடுத்திக் காட்டுவர். †

தெலுங்கில் 'தோடு' என்பது குறைந்து தோ என்று ‡ கருவிப் பொருளுக்கும் உடனிகழ்ச்சிப் பொருளுக்கும் பொதுவாக வருகிறது. 'ராயிதோ' — கல்லால்; 'தானிதோ' — அவனோடு; சேத என்ற சொல்லுருபும் கருவிப் பொருளுக்கு வருகிறது. சேத (கையால் என்ற பொருளினது) நிப்பு சேத (நெருப்பால்). பழங்கன்னட உருபு இம் என்பர். மலையாளம் தமிழைப்போல ஆல் உருபு பெற்றுள்ளது. கொண்டு என்ற சொல்லுருபும் தமிழில் உள்ளது. தெலுங்கில் 'தோடு' என்ற சொல் லுருபும் வருதல் உண்டு. இது உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். இது தமிழில் உள்ள தோழமை என்ற சொல் லோடு தொடர்பு உடையதாகும். தமிழிலும் மலையாளத்தி

---

* தொல். சொல். சூ. 74.

† மூன்று வதனுருபு ஆல்ஆன் ஓடுஒடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள். — நன். சூ. 297.

‡ In Telugu conjunctive case-sign is todu, of which to is an abbreviated form. — Caldwell, p. 279.

லும் ஒடு ஒடு என்பன உடனிகழ்ச்சி உருபுகளாகும்; உடன் என்பது சொல்லுருபாக அமைந்துள்ளது. கன்னடத்தில் 'ஒடனே' என்ற சொல்லுருபு உள்ளது.

நான்கன் வேற்றுமை

இதனைத் தொல்காப்பியனார் 'கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' என்பர். அது எல்லாப் பொருளையும் ஏற்றல் தன்மை உடையது என்று அவர் குறிப்பர். 'எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே' என்பதால் எல்லா வகையான பொருளுக்கும் உரிமையாகி வரும் என்று பொருள் கொள்ளக் கிடக்கிறது.

> நான்கா குவதே,
> குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே

என்பது சூத்திரம். எப்பொருளையும் கொள்ளும் என்பதற்குக் கொடைப் பொருள் என்று உரையாசிரியர்கள் கொண்டு நான்கற்குக் கொடைப் பொருளே சிறந்தது என்பர்.

'அந்தணற் காவைக் கொடுத்தான்' எனச் சேனாவரையர் விளக்கம் தருவர்.

நன்னூலார், நான்காவது பல பொருள்களைக் கொள்ளும் எனக்காட்டுவர்.

நான்கன் உருபாகிய 'கு' திராவிட மொழிகள் பலவற்றோடு நெருங்கிய தொடர்பு பெற்று விளங்குகிறது. பொஹிஸ்தன் அட்டவணையில் உள்ள நான்கன் உருபு வடிவோடு திராவிட மொழியின் நான்கன் உருபு வடிவத்தை ஒப்புமைப் படுத்திக் காண்பர் அறிஞர் கால்டுவெல். அதனால்

---

* நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவு அதுவாதல்
பொருட்டு முறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே. — நன். 298

சித்திய மொழிகளோடு திராவிட மொழிகட்கு உள்ள உறவைக் காட்டி வற்புறுத்துவர். அட்டவணையில் உள்ள உருபு இக்கி அல்லது இக்க என்பர்.*

மலையாளம் 'க்கு'; தெலுங்கு முன் உயிர் இயல்புக்கேற்ப கு அல்லது கி,† பழங்கன்னடம் கெ (*ge*) அல்லது கெ (*ke*), புதுக்கன்னடம் கெ (*ke*) அல்லது க் கெ உருபுகளாம்.

ஐந்தன் வேற்றுமை

ஐந்தாவதன் உருபு இன் என்பர் தொல்காப்பியனார். 'இதனின் இற்று இது' என்ற வாய்பாடு பெற்று வரும் என்பர். இவ்வாய்பாடே இதன் அண்மைச் சொல்லையும் விளக்கும்.

> ஐந்தா குவதே,
> இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி,
> இதனின் இற்று இது என்னும் அதுவே.

இதனின் இற்று என்று அமையும் தொடரால் அமையும் பொருள்களே இதன் பொருள்களாகும். இவற்றை நன்னூலாரின் சூத்திரம் விரித்துக் காட்டுகிறது. இன் என்ற உருபின் திரிபே இல் ஆகும். ஆனால் நன்னூலார் இன் இல் என்பவற்றை ஐந்தன் உருபுகள் என்பர்.‡

'இதனின் இற்று இது' என்னும் அமைப்பாலேயே ஐந்தன் பொருள் அமைகிறது என்பர் தொல்காப்பியனார். அவர் அண்மைச் சொற்களாக, வண்ணம் வடிவு அளவு முதலியவைபற்றி வரும் பல சொற்களையும் எடுத்துக் கூறுவர். இவற்றைக் கொண்டு நன்னூலார் நீங்கல் ஒப்பு

---

* Caldwell, p. 66.

† பிட்டகு (குழந்தைக்கு) இண்டிகி (வீட்டிற்கு).

‡ ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே. — 299.

எல்லே ஏதுப்பொருள்கள் ஐந்தாவது வேற்றுமைக்கு உரியன என்பர்.

கன்னடத்தில் இம் என்பது ஐந்தன் உருபாகும். தெலுங்கில் இன் என்பது உருபாக உள்ளது. 'ஊரினிஞ்சி வச்சினுடு, (ஊரினின்று வந்தான்) என்பது தெலுங்கு அமைப்பாகும். மலேயாளம் இன் என்ற உருபைப் பெற்றுள்ளது.

ஆறன் வேற்றுமை

இதனை அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி என்பர் தொல்காப்பியனுர். தற்கிழமை பிறிதின் கிழமைப் பொருளைப் பெற்று 'இதனது இது' என்ற தொடரமைப்பைப் பெறும் என்பர்.

> ஆறு குவதே,
> அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
> அன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

நன்னூலார் ஒருமைக்கு என வேறு உருபும் பன்மைக்கு என வேறு உருபும் பிரித்துக் காட்டுவர். அது ஆது ஒருமைக்குரியன என்பர். பன்மைக்கு அ உரியது என்பர். பொருள் தற்கிழமை, பிறிதின் கிழமை என்றே கூறுவர்.

சங்ககாலத்தில் ஆறன் உருபுகள் பெரும்பாலும் தொகையாகவே வந்துள்ளன. மூவிடப் பெயர்களோடும் அவை தொகையாகவே ஆறன் பொருளில் அமைந்துள்ளன.

'என் மகன்' 'நின் மகன்'—இக்காலத்தும் தொகையாகவே வருதல் பெரும்பான்மை. 'இன்' என்ற சாரியை மட்டும் நின்றும் ஆறன் பொருள் உணர்த்தல் உண்டு.

---

* ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் — நன். 300.

'நிழலின் சாயல், வீட்டின் முற்றம், நாற்காலியின் கால்.' தமிழில் அகர உருபு பயின்று வழங்குவதன்று. இலக்கியத்தில் அருகி வழங்குகிறது.

நுன சீறடி நோவ நடந்து செலேல்*

அகரம் ஆறன் பொருளில் வந்துள்ளது. இதனை ஒருமைக்கு வந்துள்ளது என்பர். பன்மைக்கே வந்துள்ளது என்று கொள்ளல் பொருந்தும்.

பிற இன மொழிகளில் அகரம் உருபாக வருதல் பெரும்பான்மை. கன்னடத்தில் அகரம் ஆறன் உருபாகும். துளுவிலும் அகரமே உருபாக உள்ளது என்பர். இம் மொழிகளில் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக அகரம் உருபாகின்றது. தெலுங்கில் பன்மை விகுதியோடு அகரம் பொருந்துகிறது.

வார்ல — (லு + அ) அவர்களுடைய.

மலையாளத்தில் றெ தெ என்பன ஆறன் உருபுகள் என்பர். அவை இன்றெ அல்லது இந்தெ என வரும் என்பர். இவை இன் சாரியையோடு சேர்ந்து இயங்குவன வாகும்.

ஏழன் வேற்றுமை

ஏழாம் வேற்றுமையைக் 'கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' என்பர் தொல்காப்பியனார். வினை நிகழும் இடம் நிலம் காலம் ஆகிய இடப் பொருள்களின் அடிப் படையில் தோன்றும் என்பர். எனவே இவை இடப் பொருள் ஏற்கும் என்பதாயிற்று.

ஏழா குவதே
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

---

* சிந்தாமணி கேமசரி. 206.

வினைசெய் இடத்தின் நிலத்திற் காலத்தின்
அனைவகைக் குறிப்பிற் றேன்று மதுவே.*

தட்டுப் புடைக்கண் வந்தான், மாடத்தின் கண் இருந்தான், கூதிர்க்கண் இருந்தான் எனச் சேனுவரையர் காட்டுவர்.

இவற்றின் அண்மைச் சொற்களாக வருபவை இவை எனத் தொகுத்துக் கூறுகின்றார்.

கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்கால் அயல்புடை தேவகை எனு அ
முன்னிடை கடைதலை வலமிடம் எனு அ
அன்ன பிறவும் அதன்பால என்மனர்.†

இவை வேற்றுமை உருபுகள் அல்ல என்றும் அண்மைச் சொற்களேயாகும் என்றும் சேனுவரையர் உரை வற்புறுத்தும். நன்னூலார் இவற்றை உருபுகளாகக் கொள்வர்.

தெலுங்கில் லோ என்பது ஏழன் உருபாக வருகிறது. இது தமிழ் உள் என்பது இடம் மாறி லோ என்று ஆகியது. பழங்கன்னடம் ஒள் (தமிழ் உள் என்பதன் திரிபு) என்ற உருபைக்கொண்டு விளங்கியது. புதுக்கன்னடம் அல்லி அல்லது இல்லி என்ற உருபைப் பயன்படுத்துகிறது. அல்லி என்பது அந்த இடம் என்ற பொருளையும் இல்லி என்பது இந்த இடம் என்ற பொருளையும் உணர்த்தும் சொற்களாக இருக்கவேண்டும் என்பர் அறிஞர் கால்டுவெல்.

அத்து என்ற சாரியை சேர்ந்து ஏழாவதன் பொருளை உணர்த்தும். அத்து என்பதை அடுத்துப் பெயர் வந்தால் ஆறன் பொருளாகிய உடைமைப் பொருளையும் வினை வந்தால் ஏழன் பொருளாகிய இடப்பொருளையும் உணர்த்துகிறது.

---

* சொல் 81.

† தொல். சூ. 82.

மரத்துக்கிளை — ஆறன் பொருள்

மரத்து இருந்தான் — இடப்பொருள்; ஏழன் பொருள்.

ஏழாம் உருபாகிய கண், அத்து இன் என்ற சாரியை களையும் பெற்றுவரும்–மரத்தின் கண் இருந்தான். சாரியை மட்டும் நின்று அதே பொருள் உணர்த்தல் உண்டு — பூமியின் கண் இருந்தான்; பூமியின் இருந்தான்.

எட்டாம் வேற்றுமை

இது எழுவாயைப் போல் வேற்றுமை உருபு ஏற்ப தில்லை. விளிக்கும் பொழுது அசை யழுத்தம் (*stress*) உண்டாதல் இயல்பு. இவ் அசை யழுத்தத்தால் ஈறு அழிதலும், ஈற்றில் உயிர் அமைதலும், அயல் நீடலும் எழு தல் இயற்கை. ஈற்று மெய்யை எடுத்துக்கூற முடியாது. அதனால்தான் அதனை அடுத்துள்ள உயிர் நீள்கின்றது.*

அன்னய் — அன்னாய்

தந்தய் — தந்தாய்

நமர்கள் — நமர்காள்

தோழன் — தோழா

ஈற்று மெய் கெடாமல் உயிர் பெற்று நீளல் உண்டு.

மகன் — மகனே!

மகள் — மகளே!

தம்பி — தம்பீ, நம்பி — நம்பீ — ஈறு நீண்டது.

விளிவேற்றுமை படர்க்கையோரைத் தன் முகமாக அழைப்பது.† அதனால் இது பெரும்பாலும் முன்னிலைக் குரிய பால் விகுதிகள் பெற்று விளியாக அமைகின்றது.

---

† The vocative is formed merely by affixing or suffixing some signs of emphasis, or in certain instances by suffixing fragments of the personal pronouns — Caldwell, p. 306

* நன். 303.

சான்ருர் — சான்றிர்
மடவார் — மடவீர்

முன்னிலைப் பலர்பால் விகுதி பெற்றன.

சாரியைகள் வரல்

பெயர்களுக்கும் வேற்றுமை உருபுகட்கும் இடையில் சாரியைகள் வருதலும் உண்டு. இவ்வாறு வரும் சாரியைகளைத் தொல்காப்பியர் காட்டுவர். இவை உருபுகளும் சொற்களும் ஒன்று சேர்வதால் உண்டாகும் ஒலி இயைபு மாறுதல்களாகத் தொல்காப்பியனுர் கொள்வர். அதனுல் தான் இவற்றை எழுத்ததிகாரத்தில் குறிப்பிடுகின்ருர் எனலாம்.

அவைதாம்,
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே *

வடமொழியும் தமிழும்: சில வேறுபாடுகள்

வடமொழியில் எழுவாய்வேற்றுமை உருபு ஏற்கும் என்பர். தமிழ் மொழியில் எழுவாய் பெயர் வடிவமாகவே விளங்குவது. மற்ருெரு வேறுபாடு: ஒருமை பன்மைகட்கு ஏற்ப உருபுகள் வடமொழியில் அமையும்; தமிழில் ஒருமை பன்மைக்கேற்ப உருபுகள் தனித்தனியாக அமைவதில்லை. ஆறன் வேற்றுமையிலும் ஒருமை பன்மை உருபுகள் என்றிருந்தாலும் அவை நிலை மொழி ஒட்டி அமைபவையல்ல; வருமொழியின் ஒருமை பன்மை அமைப்பை ஒட்டி அமைவதாகும். வடமொழியில் ஒவ்வொரு வேற்றுமை உருபுக்கு ஏற்பப் பெயர் வடிவங்கள் மாறும். தமிழில் பெயர் வடிவங்கள் மாறுவதில்லை.

---

* எழுத்து 120.

பொருளியல்

மொழி இரண்டு கூறுகளை உடையது. ஒன்று சொன்மை வெளிப்பாடு; மற்றொன்று பொருண்மை வெளிப்பாடு.* சொன்மை வெளிப்பாடாவது ஒலி, சொல், தொடர் என்ற அமைப்புகளைப் பெற்று இயங்குவது. பொருண்மை வெளிப்பாடாவது சொற்களும் தொடர்களும் பொருளை உணர்த்தல் ஆகும். இதனையே தொல்காப்பியனார்,

> பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லி னாகும் என்மனார் புலவர் †

என்று கூறுவர். எல்லாச் சொற்களும் பொருளைக் குறிப்பனவாகும்.‡

அவ்வாறு பொருள் உணர்த்தும் தன்மையை ஆராயும் இயலைப் பொருளியல் (*semantics*) என்பர்.

பொருள் உணர்த்துமாறு

சொற்கள் தனியாக இருக்கும்பொழுது அவற்றிற்குப் பொருள் உணர்த்தும் ஆற்றல் முழுவதும் இல்லை; அவற்

* Language operates with two kinds of material. One of these is sound............The other is ideas............These two, insofar as they concern linguists, may conveniently be labelled **expression** and **content**.
— Gleason, p. 2.

† தொல். சொல் சூ. 156.

‡ எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. சூ. 255.

றைச் சிந்திப்பவன் தக்கவகையில் பயன்படுத்தும் பொழுதே அவை பொருளைச் சரியாக உணர்த்துகின்றன. பல சூழ்நிலைகளுக்கும் கருத்துகளுக்கும் பொதுவாக அமையக்கூடிய சொற்கள் இடம் ஒட்டியே தெளிவாகப் பொருளை உணர்த்தும். எனவே, சொல் அமைப்பும், தொடர்நிலை அமைப்பும், அவை அமையும் சூழ்நிலையும் பொருள் உணர்வுக்குக் காரணமாகின்றன எனலாம். ஒலியன்கள் குறைவாக இருந்தும் இடம் நோக்கி மாற்றொலிகளாக அமையுமாறு போலச் சொற்கள் குறைவாக இருந்தாலும் இடம் நோக்கிப் பல வகைப்பட்ட பொருள் நுட்பங்களை உணர்த்துகின்றன எனலாம். எனவே பொருள் தெளிவிற்குச் சூழ்நிலை அடிப்படையாகும். *

வெளிப்படையும் குறிப்பும்

சொற்கள் பொருள் உணர்த்தும் பொழுது சில வெளிப்படையாக உணர்த்தும்; சில குறிப்பாக உணர்த்தும். சில சொற்கள் சூழ்நிலை யின்றியும் பொதுவான பொருளைப் பெற்று இயங்கும். அது பல சூழ்நிலைகளில் பயின்று ஒரு பொது அமைப்பைப் பெற்று விளங்குவதாகும். அதனை வெளிப்படைப் பொருள் என்பர்.

சூழ்நிலை மாற்றத்தால் வெளிப்படைப்பொருள் மாறி வேறு ஒரு பொருளை உணர்த்துவதையே குறிப்புப் பொருள் தருவது என்பர். அவ்வாறு குறிப்புப்பொருள் வேறு ஒரு பொருளாயினும் அது வெளிப்படைப் பொருளோடு தொடர்பு பெற்றே விளங்கும் எனலாம்.† சிறப்பாக ஆகு பெயராக வருபவை குறிப்புப் பொருள் தருவனவாகும்.

* It is the context which determines the value of the word.

— Vendreys, Language, p. 180.

† The remarkable thing about these variant meanings is our assurance and our agreement in viewing one of the meanings as normal (or central) and the others as marginal (metaphoric or transferred).

— Bloomfield.

ஒன்றன் பெயரால் அதற்கு இயை பிறிதை உரைப்பது ஆகுபெயர் என்று கூறும் இலக்கணம், பொதுவாகக் குறிப்புப் பொருள் தரும் சொற்களுக்குப் பொருந்தும் எனலாம். இவ்வாறு சொற்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் உணர்த்தும் என்ற உண்மையைத் தொல்காப்பியரும் நன்னூலாரும் உணர்த்தக் காண்கின்றோம்.*

அவற்றுள் குறிப்பாகப் பொருள் உணர்த்துவன பலவாகும். அவற்றுள் ஆகுபெயர் அன்மொழித் தொகை முதலியன அடிப்படையாகும். அணிகளாகக் கொள்ளப்படும் உருவகம், சிலேடை (இரட்டுற மொழிதல்), பிறிது மொழிதல், வேற்றுப் பொருள் வைப்பணி முதலியன குறிப்பாகப் பொருள் உணர்த்தும் எனலாம்.

பொருள் அமைப்பு

சொற்களுக்குப் பொருள் அமைப்பு அவை பெறும் வழக்குப் பற்றியே அமைகின்றன. ஒரு சொல்லுக்கு இன்ன பொருள்தான் உரியது என்பது வெறும் அமைப்பால் மட்டும் அமைவதன்று. அவை பேச்சு வழக்கில் ஆட்சி பற்றி அமைவனவாகும். இவ்வழக்கை இயல்பு வழக்கு என்றும் தகுதி வழக்கு என்றும் பிரித்துக் காண்பர்.† தொன்று தொட்டு இயல்பாகப் பழக்கத்தில் அமையும் பொருள்அமைப்பை இயல்பு வழக்கு என்றும் தகுதிபற்றி இவ்வாறு வழங்கினால் அமைவு பெறும் என்று செயற்கையாக வழங்கும் வழக்கைத் தகுதி வழக்கு என்றும் கூறுவர். தகுதி வழக்கு என்பது குறிப்பாகவே பொருள் தருவது எனலாம்.

---

* தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.

— தொல்காப்பியம், சொல். 157.

'வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.' — நன். சூ. 259.

† தகுதியும் வழக்கும் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே. — தொல். சொல். 17.

இலக்கணம் உடையது, இலக்கணப் போலி, மரூஉ ஆகிய இம் மூன்றையும் இயல்பு வழக்கு என்றும், இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகிய இம் மூன்றையும் தகுதி வழக்கு என்றும் நன்னூலார் பிரித்துக் காட்டுவர்.

சிறப்பு வழக்குகள்

மொழியில் பொதுவாக இயற்சொற்களைக் கொண்டு மொழி வழங்கி வருதல் இயல்பு. இவ்வாறு அன்றிப் பேசுவோர் தம் மனப் போக்கிற்கும் இயல்புக்கும் ஏற்றவாறு அதே பொருளை உணர்த்த வெவ்வேறு வகையாகச் சொற்களை ஆளுதல் உண்டு. இதனைச் சிறப்பு வழக்குகள் எனலாம். அவற்றுள் சில பின்வருமாறு:—கற்றோர் பேச்சு; குறு மொழி; குழந்தை மொழி.

கற்றோர் பேச்சு

கற்றோர் பேச்சு மற்றோர் பேச்சை விட மாறி இயங்கும் இயல்பைக் காணலாம். சிறப்பாக இலக்கிய மொழிச் சொற்களைக் கலந்து பேசுவதே சிறப்பு என்று வழக்கிறந்த சொற்களுக்கு வாழ்வளித்து அருகிய சொற்களை வழங்குவர்; இலக்கியச் சொற்களாகிய திரி சொற்களைப் பெரிதும் வழங்குவர். ஒரு சாரார் வடமொழிச் சொற்களைக் கலந்து பேசுவர். இவ்வாறு பேசுவதாலும் எழுதுவதாலும் அவர்கள் நடை களைப்பையும் சலிப்பையுமே தரும் என்பர் அறிஞர் புளூம்பீல்டு. †

---

* இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉவென் றாகும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாகும் வழக்கியல். — நன். 267.

† He who uses too many learned forms is a stilted speaker or a tiresome writer. — Bloomfield, p. 153.

குறுமொழி

சிலர் சுவையும் புதுமையும் தோன்றக் குறுமொழியால் (*slang*) பேசுவர். பழக்கமான சொற்களை விட்டுப் புதுச் சொற்களைப் படைத்துப் பேசவேண்டும் என்ற ஆர்வமே இக்குறுமொழிப் படைப்புக்குக் காரணமாகின்றது. சிறப்பாக இவை உருவக அமைப்போடு விளங்குபவை எனலாம். பழகி விட்டால் அவை மீண்டும் பொதுமொழியாகி விடுகின்றன. இவையும் குறிப்புப் பொருள் தருவனவே எனலாம்.

மாமியார் வீடு (சிறை), காக்காய் பிடிக்கிறான், பந்தம் பிடிக்கிறான் (ஈழவழக்கு), கயிறு திரிக்கிறான் முதலிய சொற்கள் இவ்வகையைச் சாரும். சிறப்பாக, ஏமாற்றுதல் என்ற கருத்தைத் தெரிவிக்க எல்லா மொழிகளிலும் குறுமொழி வழக்குகள் மிகுதியாக உள்ளன என்பர். தமிழில் கம்பி நீட்டுகிறான், குல்லாய் போடுகிறான், காடை காட்டுகிறான், காது குத்துகிறான் முதலிய பல சொல்வழக்குகள் உள்ளன.

குழந்தை மொழி

பொதுமொழியில் பொதுச்சொற்கள் இருக்க எளிமை கருதித் தனி வழக்குகள் குழந்தை மொழியில் உள்ளன. ஒரு சில அசைகளே மீண்டும் மீண்டும் அமைதல் குழந்தை மொழியின் சிறப்பியல்பாகும். தாத்தா, மாமா, அப்பா, அம்மா முதலிய சொற்கள் குழந்தைகளின் படைப்பு என்றும் கருதுவர்.

சொற்களைக் குறைத்தும் திரித்தும் வழங்கல் குழந்தை மொழியின் சிறப்பியல்பு ஆகும். சோற்றைச் சோச்சி என்றும் பாலைப் பாச்சி என்றும் வழங்கும். ஒலிக்குறிப்புச் சொற்களால் பொருள்களைக் குறிப்பிடுதலும் குழந்தை மொழியின் தனியியல்பு எனலாம்.

உணர்ச்சிப் பொருள்

சொற்கள் பொதுவாகக் கருத்தின் அறிகுறி என்பர். விஞ்ஞானம், கணிதம், பொறியியல் முதலிய கலைகளில் அவை வெறும் அறிகுறிகளேயாகும். இலக்கியம், பேச்சு, செய்தி முதலிய துறைகளில் உணர்வு கலவாமல் மொழி யமைவதில்லை. *

அந்த உணர்வுப் பொருளைக் குரல்ஒலியாலும் பேச் சொலியில் அமையும் ஏற்றத்தாழ்வு அசைவுகளாலும் மொழி வெளிப்படுத்தல் ஒருபுறம் இருக்க மொழியின் தொடர்அமைப்புகளில் சில மாற்றங்களும் தனியியல்பு களும் அமைந்து உணர்வுப் பொருளை மொழி வெளிப்படுத்து கின்றது. அவற்றுள் சில பின்வருமாறு :

சொற்களின் ஈற்றில் இடைச்சொற்கள் சேர்வதால் அவை உணர்வை வெளிப்படுத்துகின்றன. அதனால் வியப் புப்பொருள் உண்டாகிறது.

அவனா! செய்தான்; ஆ! அப்படியா!

சிறப்பாக 'ஏ' சேர்வதால் சொல் உணர்வை மிகுதியாக வெளிப்படுத்துகிறது.

'கோவையிலே பட்டப் பகலிலே நடு வெய்யிலிலே கடு மையான சிறையிலே செக்கிழுத்தார்வீரர் வ.உ.சிதம்பரனார்.'

சொல் தொடரும் முறையை மாற்றுவதாலும் உணர்வு தோன்றுகிறது.

சிதம்பரனார் செக்கிழுத்தார் — உணர்வு குறைவு
செக்கிழுத்தார் சிதம்பரனார் — உணர்வு மிகுதி

ஒரே கருத்துள்ள சொற்கள் மீண்டும் வருவதால் உணர்வு மிகுகிறது.

---

* Apart from technical and especially Scientific language, which by definition is outside ordinary life, the expression of an idea is never free from emotional tinge. — Vendreys, Language, p. 138.

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே

இதில் மூன்று சிறப்புகள் இருக்கின்றன. ஒரு பொருள் உடைய சொற்கள் (சரி, நிகர், சமானம் என்பன) மீண்டும் வரல், நாட்டில் வாழ்வம் என்ற முறை மாறி வாழ்வம் இந்த நாட்டில் என அமைதல், ஈற்றில் ஏ சேர்ந்து நாட்டிலே என அமைதல் இம்மூன்று சிறப்புகளால் உணர்வுப் பொருள் மிகுகின்றது.

அதே சொற்களை மீண்டும் மீண்டும் சொல்வதாலும் அவைகளை மிகுதியாகக் கூறுவதாலும் உணர்வு மிகுதி யாகிறது.

பாம்பு பாம்பு — அச்ச உணர்வை உணர்த்துகிறது.

'**அப்பப்பா** சொல்லி முடியாது' — வியப்பு உணர்வு வெளிப்படுகிறது.

'ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்.'

அவல உணர்வை மிகுதிப்படுத்துகிறது.

மிக மிகப் பெரிது; மிகமிகக் கொடிது. அடை அடுக்கி வருவதால் பெருமை உணர்வை உண்டாக்குகிறது.

சொற்பொருள் மாற்றம்

சொற்கள் பொதுவாகச் சூழ்நிலையை ஒட்டிப் பொருள் உணர்த்துகிறது. இயல்பான பொருளினின்று துணைப் பொருளை உணர்த்துதல் உண்டு. சில இடத்துத் துணைப் பொருளே அடிப்படையான பொருள் என்று குறிப்பிட்ட சூழ்நிலையில் அச்சொல்லைக் கேட்பவர் உணர்கின்றனர். அப்பொழுது துணைப் பொருளே அதன் இயற்கையான பொருள் என்று உணரப்படுகிறது. அதனால் சொற்கள் தம் இயல்பான பொருளை இழந்து புதுப் பொருளை உணர்த்தத் தொடங்குகின்றன.

ஒரு சொல் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மிகுதியாக வழங்கும் பொழுது அச் சூழ்நிலையோடு அச் சொல் பெரிதும் தொடர்பு கொள்கிறது. அதனால் அச் சொல் அச் சூழ்நிலைக்கு உரிய சொல்லாக அமைந்து விடுகிறது. தன் இயல்பான பொருள் தன்மையை இழந்து அச் சூழ்நிலையோடு தொடர்புடைய பொருளுக்கு உரிமையாகி விடுகின்றது.

எனவே பொருள்மாற்றம் ஏற்படுவதற்குத் துணைப் பொருள் (*marginal meaning*) நிலைபெறுவதும் சூழ்நிலைத் தொடர்பால் ஒன்றற்கே உரிமையாவதும் அடிப்படைக் காரணங்கள் எனலாம். இவ்வாறு பெறும் பொருள்மாற்றங்களையே சிறப்புப் பொருட்பேறு, பொதுப் பொருட்பேறு உயர் பொருட்பேறு, இழி பொருட்பேறு, நுண் பொருட்பேறு, பருப் பொருட்பேறு எனப் பலவாறாக வழங்குவர்.

சிறப்புப் பொருட்பேறு

பல பொருள்களுக்குப் பொதுவாக வழங்கும் ஒரு சொல் ஒரு பொருளையே குறித்தலைச் சிறப்புப் பொருட்பேறு என்பர். பொன், இழவு, புல், நெய் முதலியன இத்தகையன. பல பொன்களுக்குப் பொதுவாக அடை பெற்று வழங்கிய பொன் என்ற சொல் செம்பொன்னை உணர்த்துகிறது. இழவு என்பது இழத்தல் பல இருக்கச் சாவு ஒன்றனைப் பெரிதும் குறிக்கிறது. அது மீண்டும் இப்பொழுது தொல்லை என்ற பொருளைக் குறிக்கவும் வழங்குகிறது. 'அது பெரிய இழவாகப் போய்விட்டது.' புல் என்பது புறக் காழ் உடையன பலவற்றையும் உணர்த்தி வந்தது. இப்பொழுது தரைப்புல்லை மட்டும் உணர்த்துகிறது. நெய் என்பது எல்லாவற்றையும் குறித்து வந்த ஒன்று. அது நெய்யை மட்டும் குறிக்கிறது.

பொதுப் பொருட்பேறு

சிறப்புப் பொருளை உணர்த்தும் சொல் பொதுப் பொருளை உணர்த்துவதைப் பொதுப் பொருட்பேறு என்பர். எண்ணெய், மரம், மரக்கால், கறி என்பன இத் தகையன. எள்நெய் ஒன்றையே குறித்து வந்த சொல் எல்லாவகையான நெய்களையும் (*oil*) குறிக்கின்றது. மண் எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் என்ற வழக்குகள் வழங்கி எண்ணெய் என்பது பொதுச் சொல்லாகி விட்டது. அகக்காழ் உடையது மரம் என்று தொல்காப்பி யர் காலத்தில் வழங்கப்பட்டது. இப்பொழுது அகக்காழ் இல்லாத பனைமரம் தென்னைமரம் முதலியவற்றையும் இச் சொல் உணர்த்தும். மரக்கால் என்பது மரத்தால் செய்யப் பட்ட அளவுக் கருவி. இது இப்பொழுது ஏனைய பொருளால் செய்யப்படும் அளவுக் கருவிகளையும் உணர்த்துகின்றது. கறி என்பது மிளகை உணர்த்திய சொல்; இப்பொழுது உண்ணுங் கறி பலவற்றையும் உணர்த்தி வருகிறது.

உயர் பொருட்பேறு

பிள்ளை, பாப்பா, களிப்பு, மகிழ்வு என்பன உயர்பொருள் களைப் பெற்றுவிட்டன.

பிள்ளை : *அஃறிணையில் கிளிப்பிள்ளை, அணிற்பிள்ளை முதலியவற்றை உணர்த்தி வந்த சொல் மக்களின் மகவை உணர்த்திப் பிறகு ஒரு சில இடங்களில் மகனை மட்டும் உணர்த்துகின்றது; ஒரு சில இடங்களில் மகளை மட்டும் உணர்த்துகின்றது. இப்பொழுது சாதிஉயர்வைக் குறிக் கும் சொல்லாகச் சிறப்புப்பெயராக வழங்குகிறது.*

பாப்பா : *பார்ப்பு (பறவைக் குஞ்சு) என்ற சொல் பாப்பா எனக் குழந்தையை உணர்த்தி அது ஒரு சிலரின் இயற் பெயராகவும் வழங்கத் தொடங்கிவிட்டது.*

களிப்பு, மகிழ்ச்சி: கள் மகிழ் என்பன கள்ளை உணர்த்திய சொற்கள். கள்ளுண்டு மகிழும் நிலைமையை உணர்த்திய சொற்கள் பொதுவான மனமகிழ்ச்சியை உணர்த்தத் தொடங்கிவிட்டன. களிப்பு என்பது இலக்கியச் சொல்லாகவும் மகிழ்ச்சி என்பது பொதுச் சொல்லாகவும் வழங்குகின்றன.

இழி பொருட்பேறு

நாற்றம், காமம், குப்பை முதலியன இழிபொருளில் வழங்கத் தொடங்கிவிட்டன. ஈழநாட்டில் மட்டும் நாற்றம் என்பது உயர் பொருளையே உணர்த்துகிறது. குப்பை என்பது குவையாக இருப்பது ஒன்றனைக் குறித்துவந்த சொல், தெருவில் குவித்துவைக்கும் உதவாத பொருள்களின் குவியலைக் குறிக்கிறது.

நுண் பொருட்பேறு

ஆகு பெயர்களாக அமைபவை பல, நுண்பொருட்பேற்றினை அடைந்துள்ளன. தலை, அரை, கால், நோக்கம் முதலியன நுண் பொருட்பேறு அடைந்து இருக்கின்றன. தலை என்பது உறுப்பை உணர்த்திவந்த சொல் சிறப்பு என்ற பொருளை உணர்த்துகிறது. இடுப்பை உணர்த்திவந்த அரை என்ற சொல் அரை என்ற அளவினை உணர்த்துகிறது; அதேபோல கால் என்பது எண் அளவை உணர்த்துகிறது. நோக்கம் என்ற சொல் பார்வையை உணர்த்திவந்து பிறகு குறிக்கோளை உணர்த்தத் தொடங்கியுள்ளது.

பருப் பொருட்பேறு

விருந்து என்ற சொல் விருந்தினரைக் குறிக்கின்றது. வறுவல், முறுக்கு என்னும் தொழிலை உணர்த்தும் சொற்கள் பருப்பொருள்களை உணர்த்துகின்றன.

சொல்வழக்கு மாற்றம் (*altered terms*)

சொற்களுக்குப் புதுப் பொருள் உண்டாதல் ஒருவகை. பொருள்களைக் குறிக்கப் புதுச் சொற்கள் அமைதல் மற்றொரு வகை. பழைய சொற்கள், வழக்கு மிகுதியால் பல பொருளுக்கும் உரிமையாகி விடுவதால் நுட்பமான கருத்துக்களை விளக்கப் புதுச் சொற்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. கலைஞர்கள் புதிய சொற்களைப் படைப்பதில் ஆர்வம் உடையவர்கள். அவர்கள் படைக்கும் சொற்களை மக்கள் உடனே ஆள்வதில் ஆர்வம் கொள்ளுகின்றனர். அதனால் மொழியில் சொற்கள் புதிதாகத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

சொற்கள் நிலையானவை அல்ல; அவ்வப்பொழுது மாறிக்கொண்டே இருக்கும். புதிய வழக்குகள் தோன்றல் மொழியின் இயற்கையாகும். சங்ககாலச் சொற்கள் பல மறைந்துவிட்டமை இதற்குச் சான்று ஆகும். இரலை, கடுவன், இசினோர், பாயுந்து, கேட்குந்து, என்மனார், வளி முதலிய சொற்கள் வழக்கிழந்து விட்டன.

ஒரு பொருள் பல சொற்கள் இருந்தால் அவை சிறப்புப் பொருள்களைக் குறிக்க நிலைபேறு பெறுவது மொழி மரபாகும். அதனால், நாளடைவில் ஒரு பொருள் பல சொற்கள் மறைந்து விடுதல் மொழியின் இயல்பாகும் எனலாம்.

பல பொருள் ஒரு வடிவச்சொற்கள் இருந்தால் அவை ஒரு பொருளையே உணர்த்தி அமைய ஏனைய பொருள்களை உணர்த்தும் இயல்பு மறைந்துவிடுகின்றது. அளி — அளித்தல், வண்டு என்ற பொருள்களை உணர்த்தி வந்துள்ளது. இப்பொழுது அளித்தலை மட்டும் உணர்த்துகிறது.

சொல்லமைப்பு மாறல் *(altered forms)*

புதிய சொற்கள் மொழியில் இடம் பெறுவதோடு பழைய சொற்கள் புதிய வடிவோடு விளங்குதலும் உண்டு. வருகிறான் போகிறான் என்ற நிகழ்கால வினைவடிவங்களைச் சங்க இலக்கியத்தில் காணமுடியாது. ஆனால், இவை முற்றிலும் புதுமையானவை என்றும் கூற முடியாது. பழைய சொற்களின் சில மாற்றங்களே இவை எனலாம்.

பொழுது என்பது போது எனவும், உருண்டை என்பது உண்டை எனவும் மாறியுள்ளன. சிறு சொற்கள் மறைந்துவிடாமல் ஆக்க விகுதிகள் பெற்றுப் பிற்காலத்தில் வழங்குதல் தமிழ் மொழியில் காணப்படும் சிறப்பியல்பாகும்.

ஆர்	—	ஆர்வம்
கார்	—	கருப்பு
வெண்மை	—	வெளுப்பு
வனம்	—	வனப்பு
துயில்	—	தூக்கம்
முயல்	—	முயற்சி
ஆடல்	—	ஆட்டம்

எனவே, மொழியில் சொற்களுக்குப் புதுப் பொருள் தோன்றுவதைப் போலவே புதுச் சொற்களும் புதுச் சொல்லமைப்புகளும் மொழியில் மாறி அமைதல் இயல்பாக உள்ளது. அதனால், மொழியின் இலக்கணமும் காலந்தோறும் மாறிக்கொண்டே இருக்கிறது என்பதை நன்னூலார், தம் நூலின் புறநடையில் காட்டியிருப்பது பெரிதும் பொருந்துகிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே *

* நன். சூ. 462.

திசை வழக்குகள்

பேச்சு வழக்கில் வேறுபாடு

தனிமனிதர் பேச்சில் ஒருவர் பேசும் பேச்சுக்கும் மற்றொருவர் பேசும் பேச்சுக்கும் எப்பொழுதும் சிறு வேறுபாடுகள் இருந்துகொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு தனிமனிதரின் பேச்சைத் தனியாகக் குறிப்பிட்டால், அதனைத் தனிவழக்கு (*idiolect*) என்பர். ஒருவருக்கு மேற்பட்டவர் பேசும் மொழியைப் பேச்சுவழக்கு (*dialect*) என்பர். இருவர் பேசும் மொழியில் சிறிது வேறுபாடு காணப்படுகிறது என்றால் பலர் பேசும் மொழியில் பெரிய வேறுபாடுகள் காண்பது இயல்பாகும். அதிலும், இடத்துக்கு இடம் மக்கள் பேச்சுத் தொடர்பு குறைவதால் மொழியிலும் வேறுபாடு காணப்படுகிறது. அதேபோலச் சாதிப் பிரிவுகளாலும் வாழ்க்கை நிலையாலும் தனித்துப்பிரிந்து வாழ்வதால் பேச்சு வழக்குகளில் மாறுபாடுகள் காணப்படுகின்றன.

சிறப்பாகப் படித்தவர்கள் பலரோடும் பழக வாய்ப்பு இருப்பதால் அவர்கள் பேச்சில் வேறுபாடுகள் குறைவு. கிராமங்களில் பெரிய நகரங்களோடு தொடர்பு கொள்ளாமல் தனித்து வாழ்வதால் கிராமமக்கள் பேச்சில் தனியியல்பு காணப்படும். ஓரிடத்துக் கிராமமக்கள் பேச்சிற்கும் வேறு இடத்துக் கிராமமக்கள் பேச்சிற்கும் பெருத்த வேறுபாடு காணப்படும். படித்தவர்கள் ஓரிடத்திலிருந்து

மற்றோர் இடத்திற்குச் சென்று பழகும்பொழுது இந்தப் புதுமைகளைக் கண்டு வியப்பும், ஒருவரை ஒருவர் திருத்த வேண்டும் என்ற ஆர்வமும் முயற்சியும் கொள்கின்றனர். சில சமயங்களில் ஒருவர் பேசுவதை மற்றொருவர் ஙகையாடிக் குறைவாக மதிப்பதும் இயல்பாகிறது. இவ்வாறு எள்ளுவது மொழி ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு வகையாக இயங்கும் என்ற உண்மையை அறியாத குறையினலாகும். இந்தத் தனியியல்பை ஆராயும் இயலைத் திசைவழக்கியல் (*dialectology*) என்பர்.

திசை வழக்கும் இனமொழியும்

இவ்வாறு பிரிந்து இயங்கும் தனி வழக்குகள் பொது மொழியோடு பெரும்பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் அமையும். அவையே பொதுமொழியோடு சிறுபான்மை ஒத்துப் பெரும்பான்மை வேறுபட்டுவிட்டால் அவை தனி மொழிகளாக அமைந்துவிடுகின்றன. இவ்வாறு அமைபவற்றை இனமொழிகள் என்பர். இவ்வாறு இனமொழிகளாகத் திசை வழக்குகள் ஆகாமல் ஒற்றுமை அமைப்பை உண்டாக்குவது இலக்கிய மொழியாகிய பொது மொழியாகும்.

திசை வழக்கு மாறுதல்கள்

ஓரிடத்திற்கும் மற்றோர் இடத்திற்கும் மொழி, ஒலித் திரிபாலும், சொல்லாட்சியாலும், சொல்லுக்குக் கொள்ளப் படும் பொருள்மரபாலும், வாக்கியஅமைப்பாலும் மாறுபடுகிறது.

ஒலித்திரிபு : உயிரொலிகள்

ஒலித்திரிபுகட்கு அடிப்படையான காரணம் சில இடங்களில் வாய்அங்காப்பு மிகுதியும் சில இடங்களில் இதழ்குவிவு மிகுதியுமாக இருப்பதால் எனலாம். தமிழ் நாட்டில் அங்காப்போடு ஒலிக்கும் ஒலிகள் ஈழநாட்டில் இதழ்

குவிவோடு ஒலிக்கப்படுகின்றன. ஆம் என்பது ஓம் என ஒலிக்கப்படுகிறது. 'காப்பி' என்பதைக் 'கோப்பி' என ஒலிக்கின்றனர்.

இந்த அகரம் ஒகரமாக ஒலித்தல் ஈழநாட்டுப் பேச்சு இயல்புக்கும் தமிழ்நாட்டுப் பேச்சுமுறைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடாகும். இந்த மாறுதலேயன்றி உயிரொலிகள் இடத்துக்கு இடம் மாறி அமையும்.

இ - எ ஆக மாறும்

இலை — எலை ; இழவு - எழவு ; விறகு - வெறகு.

இ — உ : மிளகு - மொளகு ; தவிடு - தவுடு ; செவிடு - செவுடு ; புதிது - புதுசு.

உ — ஒ : உடல் - ஒடல் ; உதை - ஒதை ; உரல் - ஒரல் ; உலகம் - ஒலகம் ; உயர்த்தி - ஒசத்தி.

உயிர் இடம் பெயரல் : எனக்கு - னேக்கு ; உனக்கு - ஞேக்கு.

முதல் நீளல்

துகள் — தூள், அகப்பை — ஆப்பை,
தொகுப்பு — தோப்பு, அகத்துக்கு — ஆத்துக்கு,
அகமுடையான் — ஆம்படையான்,
பொழுது — போது.

மெய்யொலித் திரிபுகள்

ழ : தமிழுக்கே உரிய சிறப்பு ழகரம் இடத்துக்கு இடம் மாறி ஒலிக்கிறது. சென்னைப் பகுதியில் பொது வாக ழகரம் சரியாக ஒலிக்கப்படுகிறது. கீழ்த்தர வாழ்க்கை நிலையில் உள்ளவர்களே அதனை ய வாகவும் ஸ வாகவும் ஒலிப்பர். வாழபழம் - வாயபயம் ; இழுத்துக்கொண்டு - இஸ்துகுனு.

சிதம்பரத்தில் ழகரத்தை ஷகரமாக ஒலிப்பர்; விழா — விஷா. திருநெல்வேலிப் பகுதிகளில் ழகரம் ளகரமாக ஒலிக்கப்படுகிறது. ஈழத்தில் ழகரம் ளகரமாகவே ஒலிக்கப்படுகிறது. ஈழத்தில் பொருள் வேறுபாடு புலப்படுத்த மட்டும் இந்த ழகரம் வரிவடிவில் பயன்படுகிறது. ஒலிவடிவில் வேறுபாடு இல்லாமல் போய்விட்டது.

ற: றகரத்திற்கும் ரகரத்திற்கும் ஒலிநுட்ப வேறுபாடு பேச்சு மொழியில் அற்று வருகிறது எனலாம். படித்தவர் ஒருசிலர் இந்நுட்பம் அறிந்து பேசுகின்றனர். ஈழத்தில் றகரம் ட (t) கரமாகவே ஒலிக்கப்படுகிறது. இதுவே தொல்காப்பியர் காலத்து ஒலியும் ஆகும் எனக் கருதுவர். ஒன்று என்பதை ஒன்டு(t) வாக ஒலிப்பர்.

றகரம் பேச்சு மொழியில் தகரமாகவும் மாறுகிறது. பற்று வரவு - பத்து வரவு; காற்றடிக்குது - காத்தடிக்குது.

இடையின ஒலிகள் உகரம் பெறுதல்

சொல்	— சொல்லு;	கல்	— கல்லு
கள	— கள்ளு;	கண்	— கண்ணு
மண்	— மண்ணு;	பெயர்	— பேரு
மோர்	— மோரு;	பாழ்	— பாழு

க - வ: பாகற்காய் — பாவக்காய், மகள் - மவள், பகல் - பவல்.

ச: ச பலவாறாக ஒலிக்கப்படுகிறது. பச்சை என்பதிலேயே அதன் பழைய ஒலி உள்ளது. நீட்டிக்கும் (இரட்டிக்கும்) இடத்தில் மட்டும் அதன் இயல்பான ஒலி உள்ளது. ஏனை இடங்களில் அது பலவாறு ஒலிக்கப்படுகிறது.

சோறு - என்பது ஈழத்தில் தன் இயல்பான ஒலியோடு ஒலிக்கப்படுகிறது; தமிழ் நாட்டில் சேரிகளிலும் சரியாக ஒலிக்கப்படுகிறது. ஏனையோர் ஸோரு என்றே ஒலிப்பர்.

சாமான் என்பது ஸாமான் ஜாமான் என ஒலிக்கப் பெறும். சரிகை என்பதும் ஸரிகை ஜரிகை என ஒலிக்கப் பெறும்.

த - ச: மைத்துனன் - மச்சான்; வைத்து - வச்சி; மாதம்-மாசம்; பெரிது-பெரிசு; வயது-வயசு; சிறிது-சிறிசு.

ன்ற — ண்ண: ஒன்று - ஒண்ணு, கன்று - கண்ணு.

ந்த் - ஞ்ச் - ஐந்து - அஞ்சி, தெரிந்து - தெரிஞ்சி.

ய - ஸ: பையன்கள் - பசங்க; கயம் - கஸம்.

த - ர: விதை — விரை.

சொல்லாட்சி

இடத்துக்கு இடம் சொல்லாட்சியில் வேறுபாடு உள்ளது.

உவன் உது உவ்விடம் முதலிய பழைய இலக்கியச் சொற்கள் தமிழ் நாட்டில் வழக்கு இழந்துவிட்டன. ஈழ நாட்டில் அவை சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்ட இடத்தைக் குறிக்கும். உவ்விடம் என்பது உங்கள் இடம் போன்ற பொருளைத் தருகிறது. கடுவன் என்ற சொல் ஆண் இனத்தைக் குறிக்க ஈழத்தில் வழங்குகிறது. 'கடுவன் நாய்' என்பர்.

சென்னையில் 'கொசுறு' என்ற சொல் கூடக்கொடுத்தல் என்ற பொருளில் வழங்குகிறது. அது பிறபகுதிகளில் வழங்குவதில்லை. தேங்காய் மேல்ஓட்டைக் கொட்டாங்குச்சு என்பர். இதுவும் பிறபகுதிகளில் வழங்குவது இல்லை. கோவை சேலம் முதலிய பகுதிகளில் இதனைத் 'தொட்டு' என வழங்குவர்; திருநெல்வேலியில் 'சிரட்டை' என வழங்குவர். கொசுவைக் குறிக்க 'நுளம்பு' என்ற சொல் ஈழத்தில் வழங்குகிறது. புத்தகத்தின் மூடு அட்டை அட்டை என்று தமிழ் நாட்டிலும் மட்டை என ஈழத்திலும் முறையே வழங்குவர். கதைத்தல் (அளவளாவல்) அவ

தானித்தல் (கவனித்தல்) காணும் (போதும்) வண்டி (தொந்தி) பகடி (கிண்டல்) எனச் சிறப்புவழக்குகள் ஈழத்தில் உள்ளன.

சொற்பொருள் வேறுபாடு

இடத்துக்கு இடம் சொற்களின் பொருள் வேறுபடுதலும் உண்டு.

மேடை

திருநெல்வேலியில் மாடிவீட்டைக் குறிக்கும்; பிற பகுதிகளில் பேச்சு மேடையைக் குறிக்கும்.

பந்தல்: அமங்கல நிகழ்ச்சிக்குப் போடப்படும் பந்தலையே இச்சொல் செட்டிநாட்டுப் பகுதிகளில் (புதுக்கோட்டை) குறிக்கும்; காவணம் என்பதே மணப்பந்தலைக் குறிக்கும்.

வருத்தம்: துன்பம் என்ற பொருளையுடைய வருத்தம் என்னும்சொல் ஈழநாட்டில் நோய்வாய்ப் படுதலைக் குறிக்கும். தமிழ் நாட்டில் நோய் என்ற பொதுச்சொல் நோய்வாய்ப் படுதலைக் குறிக்கும்.

வினை வடிவங்களில் திரிபு

பொதுவாகப் பெயர்ச்சொற்கள் இடத்துக்கு இடம் திரிபு அடைவதை விட வினைச்சொற்களே ஒலித் திரிபு பெறுகின்றன.

இருக்கிறது — இருக்குது, இருக்கு, கிது எனப் பல வாறுகத் திரியும்.

வருகிறன் — வரான், வாரான் எனத் திரியும்.

அவர்கள்: அவங்க, அவாள், அவக எனத்திரிபு பெறும். இவை வினையிற்றில் பால்விகுதி போல் இணைந்து அமைகின்றன. வருவாங்க, வருவாள், வருவாக என அமைகின்றன.

செய்நான்: சேஞ்சான், செஞ்சான்.

சிறப்பாகத் துணைவினைகள் சேர்வதில் இடத்திற்கு இடம் மாறுபாடுகள் உள்ளன.

செய்துவிட்டு வந்தேன் — வடஆர்க்காடு

செய்துபோட்டு வந்தேன் — கோவை

அங்கனே வச்சிப் பார்த்தேன் — மதுரை

கோவையில் 'ங்க' என்பதைச் சொல்தோறும் சேர்த்துக் கூறுவர்.

இலக்கியத்தில் பயிலும் திசைவழக்குகளை இலக்கண உரையாசிரியர்கள் பிரித்துக் காட்டுவர். அவற்றுள் சில பின்வருமாறு :

வழக்கு		பொருள்		வழங்கும் நாடு
பெற்றம்	—	பசு	—	தென்பாண்டி நாடு
சொன்றி	—	சோறு	—	,,
தள்ளை	—	தாய்	—	குட்டநாடு
அச்சன்	—	தந்தை	—	குடநாடு
கையர்	—	வஞ்சர்	—	கற்கா நாடு
கிழார்	—	தோட்டம்	—	வேணாடு
பாழி	—	சிறுகுளம்	—	பூழிநாடு
செய்	—	வயல்	—	பன்றிநாடு, அருவாநாடு
கேணி	—	சிறுகுளம்	—	,,
எகின்	—	புளி	—	அருவா வடதலை
எலுவன்	—	தோழன்	—	சீதநாடு
இகுளை	—	தோழி	—	,,
வெள்ளம்	—	நீர்	—	மலைநாடு
ஆய்	—	தாய்	—	புனல்நாடு

கொடுந்தமிழ்நாடு இவை என ஒரு தனிப்பாடல் உரைக்கும்:

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா அதன்வடக்கு — நன்றுய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண் !

திசைவழக்குகள் அருகல்

இலக்கியத்தில் சில குறிப்பிட்ட சொற்களுக்கே வாழ்வு அளிப்பதால் பேச்சு மொழியில் வழங்கும் பல சொற்கள் காலப்போக்கில் மறைந்து விடுகின்றன. பழைய திராவிட மொழியில் பேச்சுவழக்கில் பல இடங்களிலும் வழங்கிய திசைச் சொற்களைப் புலவர்கள் எடுத்தாளாமையால் அவை திசைச்சொற்களாகவே நின்றுவிட்டன. அத் திசைச் சொற்கள் அந்த அந்த இடத்து வழக்குச் சொற்களாக வழங்கிப் புதிய கிளைமொழிகளாகக் கிளைத்துவிட்டன. அவ்வாறு கிளைத்தனவே தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகள் பல ஆகும். சில தெலுங்குச் சொற்களும் கன்னடச்சொற்களும் தமிழில் இல்லை. ஆனால், அவை திராவிடச் சொற்கள் என்பது வேறு பல திராவிட மொழிவழக்குகளினின்று அறியப்படுகின்றது.*

நன்னூலார் கருத்து

தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து வழக்குகளை இயற்சொல் என்றும் பன்னிரு நிலத்து வழக்குகளைத் திசைச் சொற்கள் என்றும் குறிப்பிடுவர். நன்னூலார் பன்னிரு நிலத்தும் வழங்கும் சிறப்புச் சொற்களையே யன்றிப் பிற மொழிச் சொற்களையும் திசைச்சொல் என்று குறிப்பிடுவர். தெலுங்கு கன்னடம் முதலிய பிறமொழிச் சொற்களுள் தமிழில் இடம் பெறுவனவற்றைத் திசைச்சொற்கள் என்று குறிப்பிடுவர்.

---

* தொங்கா (திருடன்), gadda (கழுகு), தோமெ, (கொசு) gaddam (தாடை). dag (இருமல்) போன்ற தெலுங்குச் சொற்கள் தமிழில் இல்லை. இவை கொலாமி மொழியில் காணப்படுகின்றமை அறிஞர் எமனோவின் ஆராய்ச்சியால் வெளிப்படுகின்றன.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப. — 273.

என்று குறிப்பிடுகின்றார்.

பேச்சின் நிலைகள்

இவ்வாறு இடத்துக்கு இடம் திசைவழக்குகள் வேறுபடுவதோடு பேச்சுவழக்கில் பொதுவாக மூன்று நிலைகளைக் காண்பர்: (1) திருந்திய பேச்சு (*cultivated speech*), (2) கிராமியப் பேச்சு (*folk speech*), பொது மொழி (*common speech or standard language*). திருந்திய பேச்சு என்பதற்குக் கற்றோரின் பேச்சையும் மேடைப் பேச்சையும் குறிப்பிடலாம். கிராமியப் பேச்சு என்பது தனிச்சிறப்புகளோடு திரிபுகள் பெற்று வழங்கும் கிராமமக்கள் பேச்சு எனலாம். பொதுமொழி என்பது இவ் விரண்டிற்கும் இடைப்பட்ட தன்மையுடைய ஒன்று எனலாம். இவை சமுதாயத்தில் காணப்படும் மக்களின் பொதுப் பேச்சுநிலைகள் எனலாம்.

சிலர் வீட்டுப்பேச்சுகளில் தனிவகைச் சொற்களை ஆள்வர். அகத்துக்கு என்பதன் முதல்நீள்வு ஆகிய ஆத்துக்கு என்ற தமிழ் இயற்சொல் திசைவழக்குப் போல வழங்குகிறது. எலுவ என்பதின் திரிபாக எலே! என்று குறிப்பர். வடமொழிப் பற்றின் காரணமாக ஒருசிலர் சோறு என்பதை விட்டு சாதம் எனவும் வழங்குவர். கோயில்களில் சில தனிச்சொற்களை வடமொழிப் பற்றால் வழங்குவர். பிரசாதம, அபிஷேகம், ஜலம், புஷ்பம், தீபார்த்தனை, உற்சவம், திவ்யம் போன்ற சொற்களை வழங்குவர். ஆங்கிலம் படித்தவர் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவது ஒரு தனிவழக்காக அமைகிறது. இந்துஸ்தானி ஆட்சி மொழியாக வழங்கியதால் அச்சொற்களும் மக்களின்

பேச்சில் திசைவழக்குகளாக (*dialectical peculiarities*) அமைந்து விட்டன. தயார், நாஸ்தா, பைசல், பட்வாடா, அசல் முதலிய சொற்கள் சிலர் பேச்சில் தனிவகையாக இடம் பெறுகின்றன. வடமொழிப் பயிற்சி யுடையார் பேசும் தமிழ்ப்பேச்சில் மூச்சொலிகளையும் (*aspirates*) உரசொலிகளையும் (*fricatives*) அதிகம் சேர்ப்பர்.

இலக்கியப் பேச்சும் மக்கள் பேச்சும்

'வர்ரான்' என்றாலே வருவது உணர்த்தப்படும். வருகிறான் என்பது நீண்ட ஒலி. இலக்கியப் பேச்சு இலக்கண அமைப்புக் கெடாமல் காக்கிறது. பேச்சு மொழி எவ்வளவு தேவையான ஒலிகள் போதுமோ அவ்வளவு ஒலிகளைக் கொண்டு இயங்குகிறது. இலக்கியமொழி தேவைக்கு மீறிய ஒலிகளைப் பெற்று விளங்குகின்றது. பேசும்பொழுது வாயின் அசைவும், குரலின் ஏற்றத்தாழ்வும், கைச்செய்கையும், சூழ்நிலையும், சொல்லும் சந்தர்ப்பமும்,பேசும் ஒலிகட்குத் துணை செய்கின்றன. அதனால் குறைந்த ஒலிகள் போதும். எழுதும் இலக்கிய மொழியிலும் மேடைப் பேச்சிலும் வானொலிப் பேச்சிலும் இத்தகைய சூழ்நிலைகள் இருப்பது இல்லை; அதனால் அங்கே ஒலிகள் மிகுதியாக வேண்டியுள்ளது. அதனால் முழுவடிவங்களைக் கொண்டு பேச வேண்டியுள்ளது.

மேலும் பேசும்பொழுது கருத்துவேகம் மிகுதி. அதனால் சொற்சிதைவுகளைப் பற்றிப் பொருட்படுத்துவதில்லை. தேவைக்கு மீறிய ஒலிகள் சில சமயத்தில் வெறுப்பை உண்டாக்கிவிடும். அதனால் பேச்சில் தேவைக்கு வேண்டிய அளவே ஒலிக்கப்படுகின்றன. இலக்கிய மொழியில் தேவைக்குமேல் மிகுதியான ஒலிகள் அமைகின்றன.

அதனல் இலக்கியமொழிதான் உயர்ந்தது பேச்சு மொழி தாழ்ந்தது என்று கூறுவது தவறு. சூழ்நிலைக் கேற்ற வகையில் மொழிவடிவம் அமைதல் இயற்கை யாகும். குறைந்த வடிவம் பேச்சு வடிவம்; முழுவடிவம் இலக்கியப்பேச்சு வடிவம். எப்பொழுதும் தேவைக்கு மீறிய ஒலிகள் இருப்பது மொழியின் இயல்பாகும். அமைதியான சூழலில் குறைந்த ஒலிகள் போதும்; கூச்சல் மிகுந்த இடத்தில் மிகுந்த ஒலிகள் தேவை. மொழி, தேவைக்கு மீறிய ஒலிகளைக் கொண்டே இயங்கும். இதை மிகைபடக் கூறல் (*redundancy*) என்பர்.

மேலும், யாவரும் உணரக்கூடிய முழுவடிவங்களை இலக்கியம் போற்ற வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் பல இடத்துப் பேச்சு மொழிகளுள் ஒற்றுமை உணர்வை உண்டாக்க முடியும். இலக்கிய மொழி, வேற்றுமைகட்கு இடையே யாவரும் போற்றும் ஒற்றுமை அமைப்பைப் பெற்றுள்ளது. பல இடத்துப் பேச்சாளர்கள் தம் தனிப் போக்கை மறந்து ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளப் பலருக்கும் விளங்கக்கூடிய வகையில் சிதையாமல் இலக்கிய வடிவம் அமைந்துள்ளது.

பிறமொழிச் சொற்கள்

தொல்காப்பியனுர் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் ஆகிய இவற்றையே செய்யுட் சொற் களாகக் குறிப்பிட்டனர். அதனுல் இலக்கியத்தில் அக் காலத்தில் பிறமொழிச் சொற்களும் கலந்தன என்பது அறியக் கிடக்கிறது. தமிழ்நாட்டின் மூன்று எல்லைகளும் கடலால் சூழப்பட் டிருந்தமையாலும் வடவேங்கடம் வட வெல்லையாகக் கொள்ளப்பட்டமையாலும் வடக்குத் திசை ஒன்றே தமிழ்மொழி வழங்காத இடமாக இருந்திருத்தல் வேண்டும். அதனுல் வடமொழி என்பது தமிழ் அல்லாத பிறமொழிச் சொற்களைக் குறித்தன என்று கொள்ளுதல் பொருந்தும். எனவே வடசொல் என்பது சமஸ்கிருதத் தையே யன்றி ஏனைய வடநாட்டுப் பிராகிருத மொழிகளையும் குறித்தன எனக் கொள்ளுதல் பொருந்தும்.

நன்னூலார் வடசொல் என்பதனை வடமொழிக்கே கொண்டு திசைச்சொல் என்பதில் பிறமொழிச் சொற்களை யும் உடன்சேர்த்து அமைப்பர்.

பிறமொழிச் சொற்களை ஏற்றல்

பிறமொழிச் சொற்களை ஏற்கும் பொழுது தேவைக்காக ஏற்றல் ஒருபுறம் இருக்கப் பிறர் மதிப்பைத் தேடி ஏற்ற வையே பெரும்பாலும் எனலாம். தாம் உயர்வாக மதிக்கும் இனத்தாரும் தனிப்பட்டவரும் பேசும் மொழி வழக்கைப்

பின்பற்றிப் பேசுதல் உலக வழக்காக உள்ளது.* சிறப்பாக ஆட்சி மாற்றங்கள் ஏற்படும் பொழுது ஆளுவோரின் சொற்களை ஏற்றல் இயல்பாகி விடுகிறது.

வடமொழியாளரின் இலக்கியத்தைப் போற்றியதன் காரணமாக வடசொற்கள் பல தமிழில் புகுந்துவிட்டன. சிறப்பாகப் பல்லவர் காலத்தில் பல வடசொற்கள் தமிழில் இடம் பெற்றுவிட்டன. அவை பெரும்பாலும் பிராகிருத வழியாக வந்தவை என்பர். சோழர் காலத்தில் வட சொற்களே நேராகக் கலக்க ஆரம்பித்துவிட்டன.

ஆட்சிச் செல்வாக்கால் இந்துஸ்தானி சொற்களும் ஆங்கிலச் சொற்களும் தமிழில் கலந்துள்ளன. ஆங்கிலச் சொற்கள் தமிழில் மிகுதியாகப் புகுந்துள்ளன. தமிழ்ச் சொற்களைக் கலந்து ஆங்கிலம் பேசுவதில்லை. பிறமொழிகளைப் பேசும் பொழுது பிழையில்லாமல் பேச வேண்டும் என்ற எண்ணம் அமைகிறது. தாய் மொழி பேசும் பொழுது அதன் தூய்மையைப் பொருட்படுத்துவதில்லை. இவற்றால் ஒரு நாட்டு மொழியில் பிற மொழிச் சொற்கள் கலக்கின்றன. ஒரு சில அரிய சொற்களே பிற நாட்டு மொழியில் இடம் பெறுகின்றன.†

எதிர்ப்புணர்ச்சி

பிறமொழிச் சொற்களும் பிறமொழியும் ஒரு நாட்டில் புகுவதால் அந்த நாட்டின் இயல்பான மொழியின் மீது பிறமொழி ஆதிக்கம் செலுத்துவதோடு பிறமொழியாளர் அம் மக்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தும் மனப்பான்மையும்

* People emulate those whom they admire, in speech pattern as well as in other respects. — Hocket, p. 404.

† It is not the foreign language a nation learns that turns into a mixed language, but its own native language becomes mixed under the influence of a foreign language. — Jespersen, p. 208.

உடன் வளர்கிறது. நாட்டுச் சொற்களும் நாட்டு மொழியும் குறைவாக மதிக்கப்பட்டு விடுகிறது. நாளடைவில் ஒரு மொழிக்கு உரிய இயற்சொற்கள் இருக்கின்ற இடம் தெரியாமல் மறைந்துவிடுகின்றன. புதிய பிறமொழிச் சொற்கள் மொழியில் இடம் பெறுவதால் பழைய இயற்சொற்கள் அழிந்துவிடுகின்றன. இதுவே பிறமொழிச் சொற்களை ஏற்பதால் உண்டாகும் பெரிய தீமை எனலாம். கற்றவர், பொது மக்களைவிட உயர்ந்தவராக மதிக்கப்படல் வேண்டும் என்ற மனப்பான்மையால் பிறமொழி இலக்கணத்தையும் சொற்களையும் கலந்து எழுதத் தொடங்கிவிடுகின்றனர். மக்கள் உள்ளம் அறிந்து அவர்கள் வாழ்விற்காக எழுதும் எழுத்தாளர்கள பிறமொழிக் கலப்பை எதிர்ப்பது இயல்பாகிறது. பிறமொழி ஆதிக்கத்தை எதிர்ப்பது மொழியின் இயற்கையாக அமைகிறது.

தமிழின் தனிப்போக்கு

திராவிட மொழிகளில் தமிழ் நீங்கிய ஏனைய மொழியினர் தம் மொழியில் எவ்வளவு வடசொற்கள் கலக்கின்றனவோ அவ்வளவும் அந்த மொழிக்குச் சிறப்பு எனக் கருதினர். தமிழ்ப் புலவர்கள் வட மொழிச் சொற்கள் எவ்வளவு குறைகின்றனவோ அவ்வளவும் நடைக்கு உயர்வு எனக் கொள்கின்றனர்.

> வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமே

என்ற இச் சூத்திரம் தமிழ் ஒலி மரபைப் பெரிதும் காத்து வந்துள்ளது எனலாம்.

தேவையான கலப்பு

மொழியின் தேவையை ஒட்டிப் பிறமொழிச் சொற்கள் கலத்தல் உண்டு. இவை நீங்கிவிட்டால் மொழியில் கருத்

துணர்த்தும் வளம் குறைந்துவிடும். புதுப்புது நிகழ்ச்சிகளும் செய்திகளும் பொருட் படைப்புகளும் உலகில் பல இடங்களில் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அந்த இடங்களிலேயே அச் சொற்களும் உடன் பிறக்கின்றன. கருத்துவளம் நோக்கி அச்சொற்களை ஏற்றுத்தான் ஆக வேண்டியுள்ளது. டீ (தேயிலை) என்ற சொல் சீனவிலிருந்தும், காபி (*coffee*) அரேபியாவிலிருந்தும், சாக்கலேட் மெக்ஸிகோவிலிருந்தும் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் புகுந்த சொற்கள் என்பர். அறிவுத் துறையில் பல சொற்கள் உலகப் பொதுச்சொற்கள் ஆகிவிட்டன. *Algebra, zero, cipher* முதலிய கணிதவியற் சொற்கள் அரபிய நாட்டுச் சொற்கள் என்பர். *Piano, solo* (இசை பற்றியவை) *bank, balance* (வணிகம் பற்றியவை) இதாலிய நாட்டுச் சொற்கள் எனக் குறிப்பர்.

கலவாதன

எண்ணுப் பெயர்கள் மூவிடப் பெயர்கள் விகுதிகள் முதலியன பிறமொழியில் இருந்து பொதுவாகக் கொள்வதில்லை என்பர். எனினும் சில எண்ணுப் பெயர்களும் இலக்கண அமைப்புகளும் மொழியில் புகுந்துவிடுகின்றன. தமிழில் உள்ள ஆயிரம், லட்சம் என்பன வடமொழிச் சொற்களே. கோடி என்பது இந்துஸ்தானி சொல். வீட்டுக்காரன் அகத்துக்காரி முதலியவற்றில் 'காரன்' என்பதில் உள்ள 'கார்' வடமொழி அமைப்பே. முட்டாள் தனம், பெருத்தனம், குடித்தனம் முதலியவற்றில் உள்ள (தனம்) வடமொழி அமைப்பு என்பர். அவை தன்மை என்பதன் திரிபாகக் கொள்ளல் பொருந்தும். தன்மை என்பதில் உள்ள தன் என்பதும் அம் விகுதியும் சேர்ந்த அமைப்பாகவும் கொள்ளலாம்.

---

* Jespersen, p. 209.

இரட்டைப்பதம்

சில சொற்கள் வடமொழியினின்று பிராகிருத மொழியில் சென்று திரிபுபெற அத்திரிபு பெற்ற வடிவம் மீண்டும் தமிழில் வழங்கும்பொழுது அதனை 'இரட்டைப்பதம்' என்பர். விண்ணப்பம், நடனம், விச்சை முதலியன இத்தகையன என்பர்.

மணிப்பிரவாளம்

மணியும் பவழமும் கலந்த காட்சிபோல வடமொழியும் தமிழும் கலந்த கலப்புநடை சமண நூல்களிலும் வைணவ பிரபந்த விரிவுரைகளிலும் வழங்கின. அவற்றை மணிப்பிரவாளநடை என்பர். 'ஸ்ரீ புராணம்' என்ற சமண நூல் இந்நடையில் அமைந்துள்ளது.

இந்துஸ்தானி சொற்கள்

அன்றாட நிகழ்ச்சிகளுக்குரிய இந்துஸ்தானி சொற்கள் பல பேச்சு மொழியில் வழங்குகின்றன. இவை அம்மொழி பேசுவோருடன் பழகியதால் வழங்குபவை எனலாம். இவை அரபியச் சொற்களும் பாரசிகச் சொற்களும் எனலாம். அங்காடிச் சொற்களும் *விளையாட்டுச் சொற்களும் பல இவ்வாறு வழங்குகின்றன. காயலா, ஜவாப், கோலி, குஸ்தி, கலாட்டா, சால்ஜாப்பு, காபரா, அலாதி, நாஸ்தா, அந்தஸ்து, வஸ்தாதி, தயார், பக்கிரி, சபாஷ், சலாம், ஜல்தி, உஷார், டபாய்க்கிறுன் முதலியன அம்மொழி பேசுவோருடன் பழகியதால் புகுந்தவை எனலாம்.

முகம்மதியர் ஆட்சிக் காரணத்தால் ஆட்சிச் சொற்கள் பல தமிழ் மொழியில் புகுந்துள்ளன. முனிசிப்பு, தஸ்தாவேஜி, பைசல், வாய்தா, பட்டுவாடா, ஜமீன், ஜாமீன், கிஸ்தி, கஜானு, நமூனு, அசல், பைசல் முதலியன இத்தகையவாம்.

---

* பாரசீகம் அரபியம் முதலிய மொழிகளில் விளங்கும் இச் சொற்கள் இந்துஸ்தானியில் வழங்குகின்றன.

ஆங்கிலச் சொற்களில் தமிழ்வடிவம்

பல ஆங்கிலச் சொற்கள் தமிழ்ஒலி வடிவம் பெற்றுத் தமிழ்ச் சொற்கள் போல வழங்குகின்றன. வெராந்தா, ஆஸ்பத்திரி, புட்டி, ரயில், வங்கி (*bank*) டம்ப்ளர், சிக்கு (*sick*) தேயிலை (*tea*) ஓட்டல் (*hotel*) முதலியன தமிழ்ச் சொற்கள் போல வழங்குகின்றன.

வடமொழியில் தமிழ்

தமிழ் மொழியில் வடமொழியின் சொற்கள் கலந்துள் ளன என்ற கொள்கையை வற்புறுத்துவோர் வடமொழியில் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன என்ற உண்மையை ஒப்புக் கொள்ள முன்வருவதில்லை. அறிஞர் கால்டுவெல் பல சொற் கள் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றுள்ளமையை எடுத்துக்காட்டி யுள்ளார். இதனை அடுத்துப் பேராசிரியர் டி. பர்ரோ (*T. Burrow*) சம்ஸ்கிருத மொழி (*The Sanskrit Language*) என்ற நூலில் 'சம்ஸ்கிருதத்தில் ஆரியமல்லாத கலப்பு' என்ற தலைப்பில் பல திராவிட மொழிச்சொற்கள் வடமொழியில் புகுந்துள்ளமையைக் காட்டுவர்.* வட மொழியில் கலந்துள்ள திராவிட மொழிச்சொற்கள் பலவற் றைக் காட்டுவர். இவை ஐரோப்பிய மொழிகளில் இல்லை என்றும் வடமொழியாக இந்த நாட்டில் உருப்பெற்ற பிறகே இச்சொற்கள் புகுந்திருக்கவேண்டும் என்றும் குறிப்பிடு வர். அவற்றுள் சில பின்வருமாறு.

அகுரு (அகில்), அனல (அனல்), அர்க (எருக்கு), அலச (அலசு), ஆரபாட்ட (ஆர்ப்பு), உலூக்ஹல (உலக்கை), எட (ஆடு), கங்க, (கொக்கு) கடு, கடின, காகா, கானன (கானம்) கால (கார்), குட (குடம்), குடி, குண்ட

* The most important source of the foreign element in the Sanskrit vocabulary is to be found in the Dravidian languages.

— T. Burrow, The Sanskrit Language p. 379

(குடம்), குந்தல (கூந்தல்), குவலய (குவளை), கூக (கூகை), சதுர (சதுர்), சந்தன (சாந்து), தாமரச (தாமரை), தால (தாழை), தண்ட (தண்டு), நீர (நீர்), பண்டித (பழ் + து), பிடக (தெலுங்கு பிடக - வறட்டி), புன்னக (புன்னை) பல (வலம்), மங்கு (மக்கு), மயூர (மயில்) மல்லிக (முல்லை) மசி (மை), மஹில (மகள்) மாலா (மாலை), மீன (மீன்), முக்தா (முத்து) வல்லீ (வள்ளி) சவ (சா, சாவு), ஹெரம்ப (எருமை).

புதுச்சொல் ஆக்கம்

மொழிக்குச் சொற்கள் தேவையாக இருந்தால் பிற மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுகின்றனர். அவ்வாறு கொள்ளாமல் மொழியின் இலக்கியங்களில் வழங்கிய பழைய சொற்களை அப்படியே ஆண்டும், பொருள் நுட்பத்திற்கு ஏற்றவாறு திரித்தும் கொள்வர்; பழைய சொற்களின் கூறுகளைக் கொண்டு புதுச்சொற்களையும் படைப்பர்.*

தமிழ் மொழிக்குப் பல புதுச்சொற்கள் தேவையாக உள்ளன. இலக்கியத்தில் பொதிந்து கிடக்கும் பல சொற்களைத் தேடித்தொகுத்து அவற்றினின்று புதுக்கருத்துக்களை உணர்த்தும் சொற்களை அமைக்கும் முயற்சி நடைபெறுகிறது. இவ்வகையில் சங்கவிலக்கியம் இராமாயணம், பெரிய புராணம், சிந்தாமணி போன்ற பல இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. ஆட்சிக்கு வேண்டிய சொற்கள் பல கல்வெட்டுகளில் இருந்து கிடைக்கின்றன. ஏனைய மொழிகள் வடமொழியை நாடி அதில் பயிலும் சொற்களைத் தேடிப் படைக்கின்றன. தமிழில் பழைய

* The faculty of Creating new words is probably illusory. This conclusion leads us to the great principle of linguistic evolution according to which languages progress by the transformation of existing elements aud not by Creation. — Vendreys, p. 230.

இலக்கியங்களில் பயிலும் சொற்களை நாடி அவற்றிற்கு வாழ்வு அளித்துப் புதுச் சொற்களைப் படைக்கின்றனர்.

இவ்வகையில் தமிழ், ஒலியாலும் சொல்லாலும், தொடராலும், பொருள் உணர்த்தும் அமைப்பாலும் தனிச் சிறப்பைப் பெற்று வளமுடைய இனிய மொழியாக விளங்குகிறது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம் — இது
உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை. — பாரதியார்.

---

* In addition to the vocabulary of neigbouring countries many languages have a special reservoir from which they can draw at will. This is the reservoir of classical and dead languages.

— Vendreys, p. 228.

T. 3071

தமிழ் இணைகள்

accent - ஒலியழுத்தம்
adjective - பெயரடை
adverb - வினையடை
affricate - இரண்டிட ஒலி
agent noun - காரணப் பெயர்
agglutinative - ஒட்டு நிலை
allomorph - மாற்று வடிவம்*
allophone - மாற்றொலி
alveolar - அண்பல் ஒலி
analogy - ஒப்புமை ஆக்கம்
anaptyxis - உயிர் தோன்றல்
aspirate - மூச்சொலி
assimilation - ஓரினமாதல்
bilabial - இதழொலி
bound form - சார்பு வடிவம்
causative - இயக்கு வினை
cluster - இணைப்பொலி
co-articulation - துணை முயற்சி
comparative linguistics - மொழி ஒப்பியல்
complementary distribution - இடமாற்றம்
compound verb - கூட்டு வினை
concord - இயைபு
conditional mood - நிபந்தனை வினை
consonant - மெய்யொலி
construction - அமைப்பு
continuant - தொடரொலி
dental - பல்லினம்
dentalization - பல்லினச் சாயல் பெறல்
descriptive analysis - மொழி விளக்க வியல்
diphthong - கூட்டொலி
dissimilation - வேறு இனமாக மாறலும் குன்றலும்
enunciative addition - ஒலி நயச் சேர்க்கை
etymology - பிறப்பியல்

---

* இடச் சூழ்நிலையால் மாறுவதும் ஒரே இடத்தில் மாறி வருவதும் மாற்று வடிவம் என்பர். மாற்றுப் பொருளசை என்பதைவிட பொருளசை மாற்று வடிவம் என்பது பொருந்தும். சுருங்கச் சொன்னால் மாற்றுவடிவம் என்பது ஏற்ற சொல்லாகும்.

flap - வருடொலி
free form - உரிமை வடிவம்
fricative - உரசொலி
formative - ஆக்க உருபு
glottis - குரல் வழி
haplalogy - அசை கெடல்
hiatus - விட்டிசை
historical linguistics-மொழி வரலாறு
immediate constituent - அண்மை நிலை
imperitive mood - ஏவற் பொருள்
indicative mood - வினைநிலை யுரைத்தல்
infinitive mood - செயல் எஞ்சு வினை
inflexional stage - பிணைப்பு நிலை
intransitive verb - தன்வினை
intonation - வாக்கிய ஒலி யழுத்தம்
isolative - தனி நிலை
juncture - பிரித்திசைத்தல்
labialization - இதழ்ச்சாயல் பெறல்
labio dental - பல்லிதழினம்
larynx - குரல் வளையிடம்
lateral - பிரிவளி ஒலி
linguistics - மொழியியல்
metathesis - ஒலி இடம் பெயரல்
minimal pair-உறழ்வு இணை
morpheme - பொருளசை
morphology - பொருசை யியல் அல்லது சொல்லியல்
morphophonemic changes - புணர்ப்பு ஒலித் திரிபுகள்
mood - வினைப் பொருள்
nasal - மூக்கொலி
nasalization - மூக் கொலிச் சாயல் பெறல்
optative - வியங்கோள்
palatal sound-இடையண்ண ஒலி
palatalization - அண்ணச் சாயல் பெறல்
participial noun – வினை யாலணையும் பெயர்
pitch - குரல் அழுத்தம்
pharynx - குரல் வளை மேற் பகுதி
phonetics - ஒலியியல்
phonetic script-மொழி ஒலிக் குறியீடு
phoneme - ஒலியன்
phonemics - எழுத்தொலியியல்
phonemic pattern - ஒலிமரபு
phonemic script - எழுத் தொலிக் குறியீடு

redundancy - மிகைபடக் கூறல்
reflexive pronoun - தற்சுட்டுப் பெயர்
relative pronoun - இணைப்பு இடப் பெயர்
retroflex-நாமடிஒலி அல்லது வளை நா ஒலி
retroflexion - நாமடிச் சாயல் பெறல்
resonant - நெகிழ்வொலி
root - அடிச் சொல்
semantics - பொருளியல்
sememe - பொருட் கூறு
sentence-எழுவாய்த் தொடர் அல்லது வாக்கியம்
sound symbolism - ஒலிக் குறிப்புச் சொல்
stem - வினையடி அல்லது பகுதி
stop - தடையொலி
stress - அசை யொலி அழுத்தம்
strong form - வன்மை வடிவம்
subjunctive - நிபந்தனை வினை
substitute - மாற்றுப் பெயர்
suctional sound-உள்ளிழுப்பு ஒலி
suspicious pairs - ஐய உறழ்வுகள்
syncope - உயிர் கெடல்
syntax - தொடரியல்
tension - முறுக்கு
transliteration-மொழிமாற்றி எழுதுதல்
transitive verb - பிறவினை
trill - உரப் பொலி
uvular - உள் நா ஒலி அல்லது உள் அண்ண ஒலி
velar sound - பின்னண்ண ஒலி
velic-பின் அண்ணத் தடை நார்
velum - பின்னண்ணம்
verbal derivative-வினையடிப் பெயர்
verbal noun - தொழிற் பெயர்
vocal chord - குரல் நார்
voiced sound - ஒலிப்பு ஒலி
voiceless sound - ஒலிப்பில் ஒலி
vowel - உயிரொலி
vowel harmony - ஓரின உயிராதல்
weakform - மென்மை வடிவம்
word order - தொடர் முறை

DRAVIDIAN LANGUAGES :

Literary Languages :—Tamil, Malayalam, Telugu and Kanarese, Non-literary Dravidian languages Spoken in various parts of India :

(i) Southern : Tulu, Coorg, Toda, Kota.

(ii) Central : (*a*) Kolami—Naiki ;
(*b*) Parji, Ollari, Poya ;
(*c*) Gondi, Konda ;
(*d*) Kui—Kuuvi.

(iii) Northern : (*a*) Kuurkh, Malto ;
(*b*) Brahui.

— T. Burrow, The Sanskrit Language, p. 376.